# ஸ்ரீகலாவின்

# மாசிலா நேசம்...



## நூல் குறிப்பு

- நூல் தலைப்பு — மாசிலா நேசம்
- ஆசிரியர் — ஸ்ரீகலா
- மொழி — தமிழ்
- முதற் பதிப்பு — டிசம்பர், 2014
- உரிமை — ஆசிரியருக்கு
- தாளின் தன்மை — 11.6 K.g. வெள்ளைத் தாள்
- நூலின் அளவு — 1 × 8 கிரவுன்
- அச்சு எழுத்து — 11 புள்ளிகள்
- மொத்தப் பக்கங்கள் — 316
- பைண்டிங் — சாதா அட்டை

**விலை: ரூ. 140.00**

வெளியிடுவோர் **அறிவு நிலையம் பதிப்பகம்**
எண். 32/107, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.

கணினி அச்சு மாதா பிரிண்டர்ஸ், சென்னை - 69.
செல் : 8939427929

அச்சிட்டோர்: கே.வி.எஸ். ஆப்செட், சென்னை - 14.

# மாசிலா நேசம்

## முகவுரை

அன்புத் தோழமைகளே,

'மாசிலா நேசம்' இந்தக் கதையை வலைத் தளத்தில் படித்து, என்னுடன் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்ட உங்களை மகிழ்விக்கவென இது புத்தக வடிவில் அறிவு நிலையம் பதிப்பகம் மூலமாக வெளிவந்திருக்கிறது.

என் மேல் நம்பிக்கை கொண்டு, என் கதையைப் பிரசுரிக்க உடனே ஒத்துக்கொண்ட அறிவு நிலையம் பதிப்பகத்தாருக்கு எனது கோடி நன்றிகள்.

காதலித்துக் கைப்பிடித்த கணவன், குடும்பத்தார் சதியால் தன்னை விட்டு விலகிச் சென்று விடுவானோ என்ற பயத்தில் மன அழுத்தத்துக்கு ஆளாகிய நாயகியை, நாயகன் தன் மாசிலா நேசத்தால் அவளை எவ்வாறு அதிலிருந்து மீட்கிறான்... தன் காதலை அவளுக்கு எவ்வாறு உணர்த்துகிறான் என்பதைக் கதையில் படித்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

உங்கள் கருத்துக்களை... அது நிறையாக இருந்தாலும் சரி, குறையாக இருந்தாலும் சரி... எனது மின்னஞ்சலுக்குத் தெரியப்படுத்துங்கள். உங்கள் கருத்துக்களே எனது எழுத்துக்கான தூண்டுகோல்... உற்சாகம் எல்லாம்!

என் எழுத்துக்களை உளி என்னும் உங்கள் கருத்துக்களால் செம்மையாகச் செதுக்கும் சிற்பியான என் வாசகர்களாகிய உங்கள் கருத்துக்களுக்காக ஆவலுடன் காத்திருக்கும்...

உங்கள்,

**ஸ்ரீகலா**

srikalastories@hotmail.com

# மாசிலா நேசம்

## 1

சென்னை நகரத்தின் மையத்தில் இருந்த அந்தத் தனியார் மருத்துவ மனையில் தன் காரை அவசரமாக நிறுத்தி விட்டு வேகமாக உள்ளே சென்றான் ஸ்ரீரஞ்சன். இல்லை, இல்லை. ஏறக்குறைய ஓடினான் என்று சொல்வதே பொருந்தும்.

ஏனெனில் அங்கே அனுமதிக்கப்பட்டு இருப்பது அவன் அருமை மகள் அல்லவா?

அதுவும் அவள் அவனின் உயிர். கால்கள் அதன் போக்கில் விரைந்து சென்றன.

மனமோ, ஏன் இப்படி, என்ன நடந்தது என்ற கேள்விகளில் சிக்கித் தவித்தது.

அவனின் எல்லாக் கேள்விகளுக்கும் பதில் அவன் மனைவியின் இடத்தில்தான் இருக்கிறது. அவளை நினைக்கும்போதே... என்னவானது அவளுக்கு என்ற மற்றொரு கேள்வியும் எழுந்தது.

ஏனெனில் அவளும் பொறுப்பைத் தட்டிக் கழிக்கும் தாய் கிடையாது. மகளை அவள் எப்படிக் கண்ணும் கருத்துமாகப் பார்த்துக் கொள்வாள் என்பது அவனுக்குத் தெரியும். அம்மா என்பதை விட அவள் மகளுக்கு நல்ல தோழி. எங்கு நடந்தது தவறு?

அறை வாசலில் காத்துக் கொண்டிருந்த மைத்துனன் அர்ஜுன் கண்ணில் பட்டான். வேகமாக அவன் அருகில் வந்தான். அர்ஜுனும் மருத்துவன்தான். இதய மாற்றுச் சத்திர சிகிச்சை நிபுணன். இந்த மருத்துவ மனையில்தான் அவனும் பணிபுரிகிறான்.

"அர்ஜுன்! என்னடா நடந்தது? எங்கே விது? எப்படி இருக்கிறாள்?" ஸ்ரீரஞ்சனின் கேள்விக்கு மருத்துவனான அர்ஜுனால் கூடப் பதில் சொல்ல முடியவில்லை.

"வா ரஞ்சன்."

அருகில் இருந்த அறைக்குள் அழைத்துச் சென்றான் அர்ஜுன்.

அறைக்குள் நுழைந்த ரஞ்சன் கண்களுக்கு அவனின் ஐந்து வயது மகள் விதுஷிகா மட்டுமே தெரிந்தாள்.



அவன் உள்ளே வந்ததும் உடல் விரைத்துத் தாயின் பின்னால் மறைந்த அவன் மனைவி ஜனனி கூட அவன் கண்களுக்குத் தெரியவில்லை.

உடலில் எந்த அடியும் படவில்லை. அப்படி அடி பட்டதற்கான எந்த அறிகுறியும் இல்லை. பின் எதற்கு இந்த மருத்துவமனை வாசம்?

ஆனால் கண்மூடிப் படுத்திருந்த மகள் ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பது போல் தெரிந்தது. மெல்ல விதுஷிகாவின் தலையை வருடிக் கொடுத்தவனின் கண்களில் நீர் தளும்பியது.

எப்பொழுதும் சுறுசுறுப்புடன், காலில் சக்கரம் கட்டியது போல் ஓடிக் கொண்டிருக்கும் மகளுக்கா இந்த நிலைமை என்று எண்ணும்போதே அவனின் மனம் வலித்தது.

'மகளை இந்த நிலைமையில் தள்ளி விட்டு இவள் வீட்டில் என்ன செய்து கொண்டிருந்தாள்?'

மனைவியின் மேல் ஒட்டுமொத்தக் கோபமும் திரும்பியது. எங்கே அவள் என்று நிமிர்ந்தபோது, சௌதாம்பிகை, அதாவது அவள் அம்மாவின் பின்னால் ஜனனி மறைந்திருப்பது தெரிந்தது.

மருமகனின் பார்வை மகள் மேல் விழுந்ததும், சௌதாம்பிகை அங்கிருந்து ஒதுங்கிக் கொண்டார்.

"என்ன ஆச்சு?"

ஜனனியின் அருகில் ஆத்திரத்துடன் வந்தவன், கோபத்துடன் அவளை உலுக்கினான்.

ஜனனிக்கு மகளை மருத்துவ மனையில் சேர்க்கும் போதே தெரியும். கணவன் கேட்கப் போகும் கேள்விக்கு அவளிடம் பதில் கிடையாது என்று.

ஆனால் இன்னும் பத்து நாட்கள் கழித்துத்தான் இந்தக் கேள்வி வரும் என்று எதிர்பார்த்தாள்.

ஏனெனில் வெளிநாடு சென்றவன் திரும்பி வர, இன்னும் பத்து நாட்கள் இருந்தன.

அதற்குள் எப்படி வந்தான்?

அவளின் கேள்விக்கும் விடை தெரியவில்லை.

அவன் அவளை உலுக்கியதில் உடல் வலித்ததை விட அவன் பார்வையில் அடிபட்ட மனம் இன்னமும் வலித்தது.

"இப்ப சொல்லப் போறியா என்ன?"

குரலை உயர்த்தியவன் அடிப்பதற்குத் தன் கையை யும் தன்னையும் அறியாமல் உயர்த்தி இருந்தான்.

ஜனனியின் கண்களில் மிரட்சி கண்டுதான், அவன் செய்ய இருந்த காரியத்தின் வீரியம் அவனுக்கும் புரிந்தது.

மனைவியை அணைப்பதற்கும், கொஞ்சுவதற்கும் மட்டுமே பயன்பட்ட கைகள் இன்று அவனையும் அறி யாமல் அடிப்பதற்கும் ஓங்கி விட்டதே!

"ச்சே..."



தன் மீதே கோபம் கொண்டவனாய்க் கைகளைக் கீழே போட்டான்.

"மாப்பிள்ளே... விதுக்கு நீங்க எப்படி அப்பாவோ... அது மாதிரி ஜனனி அவள் அம்மா. உங்களுக்கு இருக்கும் அதே வருத்தம் அவளுக்கும் இருக்கும். தயவு செய்து கொஞ்சம் பொறுமையா இருங்க."

சௌதாம்பிகையின் இறைஞ்சலான குரலில் ஸ்ரீரஞ்சனுக்கு என்ன தோன்றியதோ, கோபத்தைக் கை விட்டவனாய் மேற்கொண்டு எதுவும் பேசாமல் ஜனனியை முறைத்தான்.

அதன் பின் அர்ஜுனை அழைத்துக் கொண்டு வெளியேறினான்.

ஸ்ரீரஞ்சன் வெளியேறியதும், ஜனனி தன் சக்தி எல்லாம் வடிந்தாற்போல் அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தாள். மனம் முழுவதும் குழப்பம்.

அடுத்து என்ன செய்யப் போகிறோம்? அதை எல்லாம் விடக் கணவனை எப்படி எதிர்கொள்ளப் போகி றோம்? எல்லா யோசனையும் தலையை அழுத்த லேசாகத் தலைவலி அழையா விருந்தாளியாய் எட்டிப் பார்த்தது.

கண்களை மூடிக் கொண்டவள் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது.

அவளின் கண்களில் ஒரு துளிக் கண்ணீர் எட்டிப் பார்த்தாலும் துடித்துப் போய் அவளை அணைத்து

ஆறுதல் படுத்தும் கணவனின் அணைப்பில் நெகிழ்ந்து இருந்த அந்த நொடியை நினைத்து மனம் ஏங்கியது.

"ஏன்டி... என்னதான் நடந்தது? சொல்லித் தொலையேன்... இந்தப் பிஞ்சு இப்படி ஓய்ஞ்சு போய்ப் படுத்திருக் காளே..."

சௌதாம்பிகை தன் ஆதங்கத்தை வார்த்தையில் வெளிப்படுத்தினார்.

"என்ன நடந்தது?"

நினைக்கும்போதே ஜனனியின் உடல் தூக்கி வாரிப் போட்டது. அவளின் புகுந்த வீட்டினர் கண் முன் வந்து போயினர்.

மனிதர்களா அவர்கள்... அரக்கர்கள். அந்த அரக்கர்கள் மத்தியில் தன் கணவன் மட்டும் எப்படித் தேவனாகப் பிறந்தான் என்று எண்ணியவள் இதழில் ஒரு விரக்திப் புன்னகை மலர்ந்தது.

அவனும் கொஞ்சம் கொஞ்சமாக அரக்கனாக மாறிக் கொண்டுதானே இருக்கான். முன்பு எல்லாம் அவளின் கண்களின் மொழி வைத்தே அவளின் மனதைக் கணிக்கத் தெரிந்தவன், இன்று அவள் வாய்மொழியாய்த் தன் வேதனைகளைக் கூறும் போதும் செவியெடுக்காதது ஏன்?

திருமணமாகி ஆறு ஆண்டுகள் ஆகிவிட்டன. இனி, இவள் தேவையில்லை என்ற அலட்சியமா? இல்லை, அவனை விட்டால் வேறு கதி அவளுக்குக் கிடையாது என்கிற ஆண் அகந்தையா?



அர்ஜுனுடன் வெளியில் வந்த ஸ்ரீரஞ்சன், "அர்ஜுன், நீயாவது சொல்லு. விதுவுக்கு என்ன ஆச்சு?" கேட்கும்போதே அவனின் தொண்டை அடைத்தது.

"விதுவுக்கு ஒண்ணுமில்லை. லேசா பிட்ஸ் வந்திருக்கு. வேற ஒண்ணுமில்லை. இப்ப கொஞ்சம் மயக்கத்தில் இருக்கா. இன்னும் கொஞ்ச நேரத்தில் கண் முழிச்சுடுவா. டோன்ட் வொர்ரி ரஞ்சன்!" - மைத்துனனாய் அந்த மருத்துவன் ஆறுதல் வார்த்தை கூறினான்.

"பிட்ஸ் விதுவுக்கு வந்ததே கிடையாதே. அவளுக்கு எப்படி?"

ரஞ்சனின் கேள்விக்குப் பதில் என்ன சொல்வது என்று தெரியாமல் விழித்தான் அர்ஜுன்.

அதற்குள் சௌதாம்பிகை ஆபத்பாந்தவனாய் (வளாய்)க் காப்பாற்றினார்.

"விது கண் முழிச்சுட்டா."

சொன்னதும்தான் தாமதம் ஸ்ரீரஞ்சன் காற்றை விட வேகமாய் உள்ளே நுழைந்தான்.

"விதுக் குட்டி... செல்லம்! எப்படிடா இருக்கீங்க? அப்பாவை எப்படிப் பயமுறுத்திட்டீங்க, தெரியுமா?" மகளைக் கட்டி அணைத்து முத்தமழை பொழிந்தான்.

"அப்பா...!" - கூவலுடன் விதுஷிகா தந்தையின் கழுத்தைக் கட்டிக் கொண்டாள்.

"எப்போப்பா யு.எஸ்.ல இருந்து வந்தீங்க?"

கேட்டபடியே ஸ்ரீரஞ்சனின் கன்னத்தில் தன் பிஞ்சு இதழைப் பதித்தாள்.

அவனும் பதிலுக்கு அவளைத் தன்னுடன் இறுக அணைத்துக் கொண்டான். இனி எந்த ஒரு துன்பம் அவளை நெருங்குவதற்கும் விட மாட்டேன் என்பது போல் இருந்தது, அந்த அணைப்பு.

இதை எல்லாம் ஏக்கத்துடன் ஜனனியால் பார்வை யாளராய்ப் பார்க்க மட்டும்தான் முடிந்தது. அவள் கணவனைப் போல் மகளை உரிமையுடன் அள்ளி அணைக்க அவளால் முடியவில்லை.

ஏனெனில் ஒன்றும் அறியாத குழந்தையைப் போய் கொஞ்சமும் இரக்கமில்லாமல் அடித்திருக்கிறாளே!

தாய் என்ற சொல்லுக்கே அர்த்தமில்லாததாய் ஆக்கி விட்டாளே அவள்.

மகள் தன்னை மன்னிப்பாளா? ஏக்கத்துடன் மகளைப் பார்த்தாள் ஜனனி.

"ஹாஸ்பிடல்ல சேர்ற அளவுக்கு விதுக்குட்டிக்கு என்னடா ஆச்சு?"

தகப்பனின் கேள்விக்குத் தாயைப் பயத்துடன் பார்த்தாள், விதுஷிகா.

அதை விடப் பயத்துடன் ஜனனி கணவனையும், மகளையும் மாறி மாறிப் பார்த்தாள். தாயின் முகத்தில் இருந்து என்ன கண்டாளோ மகள்... அவளை அருகில் வரும்படி அழைத்தாள்.



ஜனனி அருகில் வந்ததும் அவளைக் கட்டிப் பிடித்துக் கொண்டு முத்தமழை பொழிந்தாள்.

"அம்மா, சாரிம்மா... விது இனிமேல் இப்படிப் பண்ண மாட்டா. தெரியாமப் பண்ணிட்டேன்."

செய்யாத தவறுக்குக் கூட மன்னிப்புக் கேட்கும் மகளின் உயர்ந்த மனது தனக்கு இல்லையே என்று மனதுக்குள் வெட்கியவளாய், விதுஷிகாவை அள்ளி அணைத்து முத்தமழை பொழிந்தாள்.

"நீங்கதான் செல்லம் என்னை மன்னிக்கணும். இந்த அம்மாவை மன்னிப்பீங்களா?"

மனைவியும் மகளும் ஒருவருக்கொருவர் மன்னிப்புக் கேட்டுக் கொண்டிருப்பதைப் புரியாமல் பார்த்துக் கொண் டிருந்தான் ஸ்ரீரஞ்சன்.

"ரஞ்சன், என் கூட வா." – அர்ஜுன் அவனை அழைத்துச் சென்றான்.

அன்று ஞாயிற்றுக் கிழமை என்பதால், மருத்துவ மனையில் அவ்வளவாகக் கூட்டம் இல்லை.

ஒதுக்குப் புறமாக இருந்த நாற்காலியில் அமர்ந்த அர்ஜுன், ஸ்ரீரஞ்சனையும் அமரச் செய்தான்.

"ஆர்த்தி, ஆகாஷ் எங்கே?"

"வீட்டுக்குப் போய் இருக்கா. சமைச்சு எடுத்துட்டு வருவா. ஆகாஷும் கூடப் போயிருக்கான்."

ஆர்த்தி அர்ஜுனின் மனைவி. ஆகாஷ் அவன் மகன்.

அடுத்து என்ன பேசுவது என்று இருவருக்கும் தெரிய வில்லை. ஆனால் இருவருக்கும் மனதில் கேள்வி மட்டும் நிறைய இருந்தது.

அர்ஜுனே அந்த மௌனத்தைக் கலைத்தான்.

"நீ வர இன்னும் பத்து நாள் ஆகும்னு ஜனனி சொன்னாளே..."

"அப்படித்தான் பிளான் பண்ணியிருந்தேன். என்னால் ஜனனியையும், விதுவையும் பிரிஞ்சிருக்க முடியல. ரொம்பக் கஷ்டமா இருந்தது. அதான் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் வேலையை முடிச்சிட்டு வந்துட்டேன். வந்து பார்த்தா..."

அதற்கு மேல் ஸ்ரீரஞ்சனால் பேச முடியவில்லை.

ஸ்ரீரஞ்சன் தன் மனைவி மீதும், மகள் மீதும் வைத் திருக்கும் பாசம் கண்டு அர்ஜுனின் மனம் நிறைந்தது.

"என்னதான் நடந்தது... நீயாவது சொல்லேன், அர்ஜுன்...?"

வேறு வழியே இல்லை. சொல்லித்தான் ஆக வேண்டும் என்று நினைத்த அர்ஜுன் பெருமூச்சொன்றை இழுத்து விட்டான்.

"அங்கே... அதாவது உங்கள் வீட்டில் என்ன நடந்தது என்று எனக்கு முழு விவரமும் தெரியவில்லை.



ஆனால் விதுவின் இந்த நிலைக்கு ஜனனிதான் காரணம். ஏன்னா... அதை அவளே சொன்னாள்."

"அவளை என்ன பண்றேன் பாரு...."

ஆத்திரத்துடன் எழுந்தான் ஸ்ரீரஞ்சன். மகள் மேல் அவன் வைத்திருந்த அன்பு, பாசம் அவன் தன் மனைவி மேல் வைத்திருந்த காதலை மறைத்தது.

"ரஞ்சன்! இப்ப ஆத்திரப்படுவதற்கு நேரம் இல்லை. யோசிச்சு முடிவெடுக்க வேண்டிய நேரம்."

அவனின் கையைப் பிடித்து நாற்காலியில் மீண்டும் அமர வைத்தான்.

ஸ்ரீரஞ்சனுக்கு என்ன செய்வது என்று தெரிய வில்லை. தலையை இரு கைகளாலும் தாங்கிக் கொண்டு அப்படியே அமர்ந்திருந்தான்.

அவனின் நிலை அர்ஜுனுக்குப் பரிதாபமாக இருந்தது.

"ரஞ்சன், நான் சொல்றதை மிகக் கவனமாக் கேளு. இது உனக்கு அதிர்ச்சியாக் கூட இருக்கலாம்."

அர்ஜுன் சொன்னதைக் கேட்டு என்ன என்பது போல் பார்த்தான் ஸ்ரீரஞ்சன்.

"ஜனனிக்கு மைண்ட்ல டிப்ரஷன் ஏற்பட்டிருக்கு. அதாவது மன அழுத்தம் ஏற்பட்டிருக்கு."

ஸ்ரீரஞ்சன் திகைப்புடன் அர்ஜுனைப் பார்த்தான்.

# 2

அர்ஜுன் சொன்னதைக் கேட்டு அப்படியே அதிர்ச்சியில் உறைந்தான் ஸ்ரீரஞ்சன்.

அர்ஜுனுக்கோ தங்கை கணவனின் மனவேதனை புரியத்தான் செய்தது. மெல்ல அவன் தோளில் தட்டிக் கொடுத்து ஆறுதல் படுத்தினான்.

"எப்படி ஜனனிக்கு டிப்ரஷன்னு சொல்ற? அவளைப் பார்த்தா அப்படித் தெரியலியே?"

"எனக்கும் முதல்ல தெரியலை. நேத்து அவ நடந்துகிட்ட விதம் ஒருவேளை அப்படி இருக்குமோன்னு சந்தேகமா இருக்கு. நேத்து நைட் பூராவும் தூங்கவே இல்லை.

"சரி. விதுக்கு இப்படி ஆனதில் ஒரு மாதிரி இருக்கானு நினைச்சா... அவகிட்ட கூடப் போகல. ஜன்னல் வழியே எதையோ வெறிச்சுப் பார்த்துட்டு இருக்கா. ஏதாவது பேசினா சொன்னதையே சொல்றா.

"சில சமயம் படபடப்பா இருக்கா. அவளால எந்த ஒரு விசயத்திலும் கான்சன்ட்ரேட் பண்ண முடியல. இவ்வளவு நாளா அவள் இப்படி இருந்தது இல்லை. இந்த தடவைதான் என் கண்களுக்கு வித்தியாசமா படறா. இது என் அனுமானம்தான். எதுக்கும் சைக்கியாட்ரிஸ்ட் கிட்ட கவுன்சிலிங் கூட்டிக்கிட்டுப் போகலாம்."

அர்ஜுன் அவனின் சந்தேகத்தைக் கூறியவன், "ரஞ்சன், அங்கே... அதாவது உங்க வீட்டில் ஜனனி எப்படி இருப்பாள்? அவளோட நடவடிக்கை ஏதும் உனக்கு வித்தியாசமா தெரிந்ததா?"



"இல்லையே அர்ஜுன். அப்படி வித்தியாசம் தெரிஞ்சிருந்தா உன்கிட்ட சொல்லி இருக்க மாட்டேனா?" - உதட்டைப் பிதுக்கினான் ஸ்ரீரஞ்சன்.

ஸ்ரீரஞ்சன் சொன்னதைக் கேட்டு அர்ஜுனுக்குக் குழப்பம்தான் மிஞ்சியது.

மருத்துவனான தான்தான் தேவையில்லாமல் குழம்புகிறோமோ என்று அவன் மேலேயே அவனுக்குச் சந்தேகம் உண்டானது.

எதற்கும் ஸ்ரீரஞ்சனின் மனநிலை எப்படி இருக்கிறது என்பதை அறிந்து கொள்வோம் என்று எண்ணியவன்... அவனிடம், "ரஞ்சன், ஜனனிக்கு இந்த மாதிரிப் பிரச்சனை இருப்பதாகத் தெரிந்தால் நீ..." அதற்கு மேல் அர்ஜுன் எப்படிக் கேட்பது என்று தெரியாமல் இழுத்தான்.

"ச்சே... ச்சே... என்ன சொல்ற அர்ஜுன். அவள் என் மனைவி. அவளைப் போய் நான் வெறுத்து ஒதுக்குவேனா? இப்பக் கூட விதுவுக்கு என்னமோ என்கிற பயத்திலதான் என்னையும் அறியாமல் கையை ஓங்கிட்டேன்.

"அம்மா கூட ஒரு குழந்தையைப் பத்து மாசம் தான் சுமப்பா. ஆனால் நான் என் ஜனனியைப் பத்து வருசமா இங்கே சுமந்துட்டு இருக்கேன்."

ஸ்ரீரஞ்சன் தன் நெஞ்சைச் சுட்டிக் காட்டினான்.

"அதான் எனக்குத் தெரியுமே. இருந்தாலும் ஒரு அண்ணனா அதைக் கேட்டேன். சாரிடா."

உடனே தன் வார்த்தைக்கு மன்னிப்புக் கேட்டுக் கொண்டான் அர்ஜுன்.

"ஜனனியைப் பற்றிக் கவலையை விடு. அவளை நான் பார்த்துக்கிறேன். ஆனால் ஏன் இந்த மனக் குழப்பம் அவளுக்கு வந்ததுன்னுதான் தெரியலை..."

அர்ஜுனிடம் சொல்லிய ஸ்ரீரஞ்சன் கடைசி வரியைத் தனக்குத் தானே கேட்டுக் கொண்டான்.

"சரி, அர்ஜுன். விது எப்படி இருக்கா? பயப்படற மாதிரி ஒண்ணும் இல்லையே? அவளுக்கு என்னாச்சு?"

மகளின் மேல் அக்கறை கொண்ட தகப்பனாய் வினவினான்.

"விதுக்குப் பயப்படற மாதிரி ஒண்ணும் இல்லை. கண் முழிச்சதும் நல்லா ஆயிடுவா. இதுவரை கோபப் படாத, அடிக்காத அம்மா திடீர்னு கோபப்பட்டு அடிச்சது அவளுக்கு அதிர்ச்சியா இருந்திருக்கும். சில குழந்தை களுக்கு இது மாதிரி ஆகறது உண்டு. நீ கவலைப் படும்படி ஒண்ணும் இல்லை ரஞ்சன். எல்லா ரிபோர்ட்ஸும் நார்மல்.

"நீயே இப்படி உட்கார்ந்தா எப்படி? ஜனனியைக் கொஞ்சம் யோசிச்சுப் பாரு. நேத்துத் தனியாளா இங்கே ஹாஸ்பிடல்ல விதுவைச் சேர்த்து ரொம்பக் கஷ்டப்பட்டு இருக்கிறாள்.

"இங்கே ஹாஸ்பிடலில் சேர்த்ததுக்கு அப்புறம் தான் எனக்கே ஜனனி போன் பண்ணினா. நானும் ஏன்



விதுவை அடிச்சன்னு கேட்டுப் பார்த்துட்டேன். பதிலே பேச மாட்டேங்கிறா. என் செல்லத்தை நான் அடிச்சிட்டே னேன்னு ஒரே அழுகை..."

ஜனனி விதுஷிகாவை அடித்தாளா? ஸ்ரீரஞ்சனால் நம்ப முடியவில்லை.

அவன் ஜனனி கோபப்பட்டே பார்த்தது இல்லை. இதில் அவள் அடித்திருக்கிறாள் என்பது அவனுக்குமே அதிர்ச்சிதான்.

விது லேசாகக் கீழே விழுந்தால் கூட அவளை விட அழுது ஆர்ப்பாட்டம் செய்யும் ஜனனியா அவளை அடித் தாள்?

'அவள் மகளை அடிக்கும் அளவுக்கு அங்கு வீட்டில் என்ன நடந்தது?

அங்கு இருந்தவர்களும் இதைப் பற்றி ஒன்றும் தன்னிடம் சொல்லவில்லையே!

"ஜனனியா... என்னால் நம்ப முடியலையே!" என்று தன் நம்பிக்கையின்மையைத் தெரிவித்தவன், "அம்மா, அப்பாவுக்குக் கூடத் தெரியாதா?" ஆற்றாமையுடன் ஒலித்தது ஸ்ரீரஞ்சன் குரல்.

"கேட்டேன்... சொல்ல வேண்டாம்னு ஒரே அழுகை. என்ன செய்றதுன்னு தெரியாம முழிச்சப்பதான் நீயே போன் பண்ணின..."

அர்ஜுன் அவனுக்குத் தெரிந்ததைக் கூறினான்.

"சரி. நாம அப்புறம் பேசலாம். விதுவோட டிஸ்சார்ஜ் பத்திக் கேட்டுட்டு வர்றேன். நீயும் வர்றியா?"

அர்ஜுன் ஸ்ரீரஞ்சனைப் பார்த்துக் கேட்டான்.

"இல்லை. நீயே பார்த்துக்கோ..." என்று பதில் கூறியவன், பணத்தை எடுத்துக் கையில் வைத்தான்.

"என் மருமகளுக்கு நான் செய்ய மாட்டேனா?"

சிறு கண்டிப்புடன் கேட்டபடி அர்ஜுன் அந்தப் பணத்தை ஸ்ரீரஞ்சன் கையிலேயே மீண்டும் கொடுத்தான்.

"ப்ளீஸ், அர்ஜுன். என் மகளுக்கு நான் செய்றேன், ப்ளீஸ். அப்பாவா என் உணர்வு உனக்குப் புரியும்னு நினைக்கிறேன்."

"ம்... புரியுது." மறுக்காமல் பணத்தை வாங்கிக் கொண்டு அர்ஜுன் சென்றான்.

அர்ஜுன் சென்றதும் கண் மூடி அப்படியே அமர்ந்திருந்தான் ஸ்ரீரஞ்சன்.

'விதுவை ஜனனி ஹாஸ்பிடலுக்குத் தூக்கிக்கிட்டு வரும்போது கூடவா வீட்டில் உள்ளவர்கள் கவனிக்க வில்லை? ஏன் இந்த அக்கறை இல்லாத் தன்மை? மற்றவர்களை விட்டு விடலாம். அம்மா, அப்பாவுக்குக் கூடவா ஏன் என்று கேட்கத் தோணவில்லை?' - மனதுக்குள் எழுந்த கேள்விக்கு விடை தெரியாமல் விழித்தான் ஸ்ரீரஞ்சன்.

காலையில் நடந்த காட்சி அவன் மனதில் ஓடியது.



சென்னை விமான நிலையத்தில் இருந்து வீட்டிற்கு வரும்போதே அவனுக்கு எவ்வளவு பரபரப்பாக இருந்தது.

எதிர்பாராமல் தன்னைப் பார்க்கும்போது கண்களை அகல விரித்துத் தங்கள் மகிழ்ச்சியை வெளிக்காட்டும் மனைவியையும், மகளையும் அந்தக் கணமே பார்க்கத் துடித்தது, அவன் மனம். உற்சாகத்துடன் உள்ளே நுழைந்தவனை வீட்டில் உள்ள மற்ற உறுப்பினர்கள்தான் எதிர் கொண்டார்கள்.

தந்தை தனசேகர், தாய் மல்லிகா, தம்பி ஸ்ரீகாந்த், அவன் மனைவி காவ்யா, அவனின் மகன் ஆஷிஷ், தங்கை ஸ்ரீமதி என எல்லோரும் வரவேற்பு அறையில் அமர்ந்து அரட்டை அடித்துக் கொண்டிருந்தனர்.

எல்லோரும் அங்கு குழுமியிருந்தது அவனுக்குமே சந்தோஷம்தான். ஆனால் அங்கு அவன் மனைவியும், மகளும் இருந்திருந்தால் கூடுதல் சந்தோஷமாக இருந் திருக்கும்.

"ரஞ்சி, எப்படிடா இருக்க?"

மல்லிகா மகனைப் பார்த்ததும் ஓடி வந்தாள். அதன் பின் ஒவ்வொருத்தரும் அவனைப் பற்றி விசாரித்த வர்கள்... அதன் பின் அவர்கள் கவனம் அவன் வாங்கி வந்த பொருட்கள் மீது சென்றது.

"காபி எடுத்துட்டு வரவா?" - அக்கறையுடன் கேட்ட தாயிடம்,

"வேண்டாம்மா..." என்றவன்,

"கதிரண்ணா... இந்த ப்ளூ கலர் சூட்கேஸை மேலே என் ரூமில் கொண்டு போய் வைங்க."

வேலையாள் கதிர் பெட்டியைத் தூக்கிக் கொண்டு பின்னே வர, மனைவியையும் மகளையும் பார்க்கும் ஆவலில் ஸ்ரீரஞ்சன் இரண்டிரண்டு படிகளாகத் தாவி ஏறினான். அங்கு கூடியிருந்தவர்கள் ஒருவருக்கொருவர் பார்த்துக் கொண்டனர்.

கதிர் பெட்டியை வைத்து விட்டுப் போனதும், அறையை நோட்டம் விட்டான். எங்கும் ஜனனியோ, விதுவோ இருக்கும் அடையாளம் தெரியவில்லை.

பால்கனியில் போய்ப் பார்த்தான். அம்மாவுக்கும் மகளுக்கும் பிடித்தமான இடம் அது. அங்கும் இல்லை. குளியலறை என எல்லா இடமும் தேடிப் பார்த்தும் இல்லை.

நேரே கீழே வந்தவன் அம்மாவிடம் கேட்டான். "ஜனனி, விது எங்கேம்மா?"

"எனக்கென்னப்பா தெரியும்? அவள்தான் யார் கூடவும் ஒட்ட மாட்டா. உனக்கே தெரியும், உன் வைஃப் எப்பவும் தனிமை விரும்பின்னு. ஏன் ரூமில் இல்லையா?"

பதிலுக்கு அவனைக் கேள்வி கேட்ட அம்மாவை எரிச்சலுடன் பார்த்தவன் அங்கிருந்து வெளியேறினான்.

வெளியில் வந்தவன் மனைவியின் அலைபேசிக்கு அழைத்தான். அது அணைக்கப்பட்டு இருந்தது. எதற்கும் இருக்கட்டுமே என்று அர்ஜுனுக்குப் போன் செய்தான்.



அர்ஜுன் சொன்ன செய்தியோ அவன் காதில் இடியாக விழுந்தது. அதை விட உள்ளே இருந்தவர்கள் சிரித்துப் பேசியது எரிச்சலை உண்டு பண்ணியது.

என்ன மனிதர்களோ என்று விரக்தியுடன் நினைத் தவன், மகளின் ஞாபகம் வர, மருத்துவ மனைக்கு விரைந் தான்.

"ரஞ்சன்..."

அர்ஜுனின் குரலில், தன் யோசனையில் இருந்து வெளி வந்தவன் என்ன என்பது போல் பார்த்தான்.

"இப்ப வேணும்னாலும் டிஸ்சார்ஜ் பண்ணிக் கூட்டிக் கொண்டு போகலாம்னு சொல்லிட்டாங்க. நான் ஆர்த்திக்குப் போன் பண்ணிச் சாப்பாடு எடுத்துட்டு வர வேண்டாம்னு சொல்லிடறேன்." அலைபேசியை எடுத்துக் கொண்டு நகர்ந்தான் அர்ஜுன்.

ஸ்ரீரஞ்சன் மகள் இருந்த அறைக்குள் நுழைந்தான். மருமகனின் வரவு கண்டு சௌதாம்பிகை அறையை விட்டு வெளியே செல்ல ஆயத்தமானார்.

ஜனனி தன்னைக் கணவனுடன் தனியே விட்டு வெளியே செல்லும் அம்மாவைப் பரிதாபமாகப் பார்த்தாள். அதை எல்லாம் கண்டு கொள்ளாமல் சௌதாம்பிகை வெளியேறினார்.

கணவன் அருகில் வருவது தெரிந்து, அவனுக்கு முதுகு காட்டி அமர்ந்தவள்... மகளை இறுகப் பற்றிக் கொண்டாள்.

விதுவும் தாய் மடியில் தலை சாய்த்துத் தந்தையைப் பார்த்தாள். மகளின் பார்வை கண்டு அருகில் வந்து அமர்ந்தான்.

தந்தையைக் கண்டதும் அவனின் மடியில் தஞ்சம் புகுந்தாள் மகள். மடியில் படுத்திருந்த மகளின் முடியை ஆதரவாகக் கோதிக் கொடுத்தான்.

அவனின் வருடலில் இருந்த சுகமோ இல்லை தந்தை வந்து விட்டான் என்ற நிம்மதியோ விதுவை மீண்டும் நித்திரையில் ஆழ்த்தியது.

விது தூங்கியது அறிந்ததும் ஶ்ரீரஞ்சனின் பார்வை ஜனனியைப் பார்த்தது.

அவன் பார்ப்பது தெரிந்தும் ஜனனி மறந்தும் தலை நிமிரவில்லை.

அதைப் பார்த்தவன் இதழில் புன்னகை பூத்தது.

அவன் அவளைக் காதலிக்கும்போதும் இப்படித் தான் அவனைப் பார்த்தும் பாராதது போல் தலை குனிவாள். அதை எண்ணியவன் முகம் அன்பில் கனிந்தது.

"குட்டிம்மா..."

ஶ்ரீரஞ்சனின் குரலில் விலுக்கென்று நிமிர்ந்தாள் ஜனனி.

ஶ்ரீரஞ்சனின் அழைப்பைக் கண்டும் அவனிடம் வராமல் மீண்டும் தலையைக் குனிந்து கொண்டாள், அவன் மனைவி ஜனனி.



முன்பு எல்லாம் அவன் அழைத்ததும் ஓடி வந்து, அவன் கைகளில் சரண் புகும் அவன் ஜனனி என்ன ஆனாள்? கேள்வியுடன் அவளைப் பார்த்தான்.

அவள் அவனைப் பார்த்தால்தானே! அவன் பார்ப்பது அவளுக்குப் புரியும்.

மகளின் தூக்கம் கெடாத வண்ணம் தன் கையை நீட்டி மனைவியைத் தன் அருகில் இழுத்தான்.

அவனின் செய்கை கண்டு அவள் உடன்பட மறுத்தாள்.

திமிறியவளை மகளைக் காண்பித்து, "ஷ்..." என்று சொன்னவன் மீண்டும் அவளைத் தன் அணைப்பில் கொண்டு வந்தான்.

ஜனனி தன்னால் முடிந்த மட்டும் அவனைப் பலம் கொண்டு தள்ளினாள்.

ஆனால் அவனின் அணைப்பு அவளின் முயற்சி எல்லாவற்றையும் ஒன்றுமில்லாததாய்ச் செய்தது. அவனின் அணைப்பில் கொஞ்சம் கொஞ்சமாகப் பலம் குறைந்து தொய்ந்தவள் கண்ணீர் பெருக அவன் மார்பில் முகம் புதைத்தாள்.

ஶ்ரீரஞ்சனின் கரங்கள் அவளின் தலையை ஆறுதலாய் வருடின. மடியில் படுத்திருக்கும் மகளுக்கும் மார்பில் சாய்ந்திருக்கும் மனைவிக்கும் அதிக வித்தியாசம் இல்லை.

இவள் ஒரு வளர்ந்த குழந்தை என்றெண்ணியவன் மனதில் அவ்வளவு நேரம் இருந்த மனக் கிலேசம் மறைந்து நிம்மதி வந்தது.

"ரஞ்சன்..." என்றழைத்தபடி கதவைத் தட்டிக் கொண்டு உள்ளே நுழைந்தான் அர்ஜுன்.

அண்ணனின் வருகை தெரிந்து கணவனிடம் இருந்து அவசரமாக விலகினாள் ஜனனி.

அவர்கள் நிலையைப் பார்த்த அர்ஜுனின் மனதில் நிம்மதி ஏற்பட்டது. இனி ரஞ்சன் பார்த்துக் கொள்வான் என்ற நம்பிக்கை வந்தது.

"ஓ.கே. ஜனனி, விதுவை வீட்டுக்குக் கூட்டிட்டுப் போகலாம்னு சொல்லிட்டாங்க."

அர்ஜுனின் பேச்சில் ஜனனியின் உடல் அதிர்ந்தது. ஆனாலும் ஒன்றும் பேசாமல் எல்லா உடைமைகளையும் எடுத்து வைத்தாள். சௌதாம்பிகையும் கூடச் சேர்ந்து அவளுக்கு உதவினார்.

"சரி அர்ஜுன். நாங்க கிளம்பறோம்..." என்று தூங்கிக் கொண்டிருந்த மகளைப் படுக்கையில் கிடத்தியவன், "நான் போய்க் காரை எடுக்கிறேன். நீ விதுவுடன் வா..." - மனைவியிடம் கூறினான்.

"எங்கே போறோம்?"

ஜனனியின் கேள்வியில் அவளைப் புரியாமல் பார்த்த ரஞ்சன், "ஏன் நம்ம வீட்டுக்குத்தான்..." என்றான்.



"இல்லை. நான் அங்கே வர மாட்டேன். அண்ணா, நீங்களாவது சொல்லுங்க, அண்ணா..." அர்ஜுனின் கரம் பிடித்துக் கதறியவள் அப்படியே மயங்கிச் சரிந்தாள்.

## 3

**ஸ்ரீ**ரஞ்சன் வீட்டிற்குள் நுழையும்போதே வெறுமை தாக்கியது.

மனைவியையும் மகளையும் மாமியார் வீட்டில் விட்டு விட்டு அவன் மட்டும் இங்கே தனியாய் வந்து இருக்கிறான். திருமணமாகி இந்த ஆறு வருடங்களில் அவர்களிடையே ஏற்பட்ட முதல் பிரிவு.

அறைக்குள் வந்தவனுக்கு அவர்கள் இல்லாத தனிமை மனதைத் தாக்க... உடை மாற்றக் கூட மனம் இல்லாமல் அப்படியே படுக்கையில் விழுந்தான்.

பக்கவாட்டில் பார்வை செலுத்தியவன் கண்களுக்கு ஜனனியும், விதுவும் படுத்திருப்பது போல் தோன்றியது. வேதனை தாங்க முடியாமல் கண்களை இறுக மூடிக் கொண்டான்.

மூடிய கண்களுக்குள் ஜனனி மயங்கிச் சரிந்த காட்சியே ஓடியது.

அர்ஜுன் ஜனனியைத் தூக்கும் முன் ஸ்ரீரஞ்சன் பாய்ந்து சென்று அவளை மடியில் தாங்கினான்.

ஜனனியைப் பரிசோதித்த மருத்துவர் அவள் மீண்டும் குழந்தை உண்டாகி இருப்பதைத் தெரிவித்தார்.

ஸ்ரீரஞ்சன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. எல்லாம் அவன் மனைவி அவனுடன் வர மாட்டேன் என்று மீண்டும் ஆரம்பிக்கும்வரை நல்லாதான் இருந்தது.

எவ்வளவோ வற்புறுத்தியும் ஜனனி அவள் தீர்மானத்தில் பிடிவாதமாக இருந்தாள்.

"ஜனனி மனசில் என்ன இருக்குன்னு தெரியலை. அதுவும் இந்த மாதிரி இருக்கும் சமயத்தில் அவள் மனசு கஷ்டப்படும்படியா நடந்துக்க வேண்டாமே! கொஞ்ச நாள் அவள் மனம் அமைதி அடையும்வரை எங்க கூட இருக் கட்டும்." - சௌதாம்பிகை கேட்டுக் கொண்டபோது, ஸ்ரீரஞ்சனால் மறுக்க முடியவில்லை.

ஆனால் அர்ஜுனிடம் புலம்பித் தள்ளி விட்டான். "என்ன அர்ஜுன், இவள் பேசுறது கொஞ்சமாவது நியாயமா? அவளையும் குழந்தையையும் பிரிஞ்சு என்னால் இருக்க முடியுமா? இப்படி முட்டாள்தனமாப் பேசறாளே... அவளை மட்டும் பார்க்கிறா. என்னைக் கொஞ்சமும் யோசித்துப் பார்க்கிறாளா?

"இவளும் விதுவும் இல்லன்னா... எல்லாம் இருந்தும் நான் அநாதைதான். அதை ஏன் உன் தங்கை புரிந்து கொள்ள மாட்டேங்கிறா?"

கண்ணீர் மல்கக் கேட்டவனைப் பார்க்க, அர்ஜுனுக்கும் பரிதாபமாகத்தான் இருந்தது.

"எல்லாம் சரியாப் போகும் ரஞ்சன்..." அதைத் தவிர அவனாலும் வேறு ஏதும் கூற முடியவில்லை.



காயம்பட்ட மனம் பழைய நினைவுகளை மருந்தாக எண்ணித் தன் மனக் காயத்தைப் போக்க விழைந்தது.

முதல் முதலாகத் தன்னவளைக் கண்ட தருணம்... அவன் நெஞ்சில் பசுமையாக இன்றும் நினைவில் இருந்தது.

அன்று பார்த்த அவளின் உருவம் கல்லில் செதுக்கிய சிற்பம் போல் அழியாமல் இன்றும் அவன் மனதில் உள்ளது.

அதுவே ஜனனி மீது அவன் வைத்திருக்கும் எல்லையில்லாக் காதலுக்குச் சாட்சி.

மனம் மீண்டும் அந்த நாட்களுக்குச் செல்ல எண்ணியது. அவனின் நினைவுகள் பத்து வருடங்களுக்கு முன் சென்றன.

**ஸ்ரீ**ரஞ்சன் குடும்பம் பரம்பரைப் பணக்காரக் குடும்பம். அதனால் என்னவோ இயற்கையிலேயே அவன் வீட்டார் அனைவர்க்கும் பணச்செருக்கு உண்டு. இதில் தப்பியிருந்தது அவனும், அவன் தகப்பனாரும் மட்டுமே.

ஆனால் தனசேகர் தன் மனைவிக்குப் பயந்து எதையும் வெளிக்காட்டுவது இல்லை.

ஸ்ரீரஞ்சன் யாருக்கும் பயப்படுவது இல்லை. மனதில் பட்டதைப் பட்டென்று சொல்லி விடுவான். தாத்தாவிற்குப் பிறகு அவன் தந்தையை விட அவன் தொழிலுக்கு வந்த இந்த மூன்று ஆண்டுகளில் நன்றாகப் பார்த்துக் கொண்டான்.

இன்ன தொழில்தான் என்று இல்லை. எல்லாத் தொழிலிலும் கால் பதித்து, அதில் வெற்றியும் பெற்ற தாலோ என்னவோ அவனின் தொழில் விஸ்தரிப்பு எல்லையில்லாமல் பரந்து விரிந்து கொண்டே போனது.

அவன் சம்பாதிக்கும் பணத்திற்குப் பயந்தே வீட்டில் எல்லோரும் அவனை மதிக்க ஆரம்பித்தனர். ஏனெனில் வீட்டில் சம்பாதிக்கும் ஒரே ஆண் பிள்ளை அவன் மட்டுமே!

அவன் தம்பி ஸ்ரீகாந்த் தாயைக் கொண்டு பிறந்து இருந்தான். ஆடம்பரப் பிரியனான அவன் பணம் செல வழிப்பது எப்படி என்று பார்த்தானே ஒழிய, அதை எப்படிச் சம்பாதிப்பது என்று அவனுக்குக் கொஞ்சமும் தோன்ற வில்லை.

அம்மா மல்லிகாவோ இன்னமும் மேல். அவருக்கு வேண்டியது மாதம் ஒரு தொகை. மகனிடம் இருந்து அதை வாங்கி விடுவார். அதற்குப் பின் அவருக்குக் கவலை ஏது?

அவளுக்கு வேண்டியது பணம் மட்டுமே. மகனின் முன்னுக்கு மட்டும் பாசமாக இருப்பது போல் ஓிரண்டு வார்த்தை பேசுவதோடு சரி. அவ்வளவுதான்.

ஸ்ரீரஞ்சனும் இதை எல்லாம் பெரிதாக எடுத்துக் கொள்வது இல்லை. யார் யாரோ அனுபவிக்கிறார்கள். அதை அவன் தாயும் கூடப் பிறந்தவனும் அனுபவித்து விட்டுப் போகிறார்கள் என்று எண்ணி விட்டு விட்டான்.



ஏனெனில் அவனை மாதிரிப் பணக்கார வர்க்கத்தில் இது எல்லாம் சகஜம். அதனால் என்னவோ அவனுக்கும் பெரிதாக ஒன்றும் எதிர்பார்ப்பில்லை.

அவன் தொழிலில் வெற்றி பெறுவது ஒன்று மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு ஓடிக் கொண்டிருந் தான். இந்த மாதிரியான சூழ்நிலையில் தான் அவன் ஜனனியைச் சந்தித்தான். அவனுக்கு அப்பொழுது இருபத்து நான்கு வயதிருக்கும்.

காலை நேரத்துப் போக்குவரத்து நெரிசலில் மாட்டிக் கொண்ட ஸ்ரீரஞ்சனுக்கு எரிச்சலாக இருந்தது. அலுவல கத்தில் முக்கியமான கூட்டம் ஒன்று இன்று இருந்தது. நேரம் கடந்து கொண்டிருந்தது.

என்ன செய்வது என்று தெரியாமல் இருந்த வனுக்குத் தன் புறம் இருந்த கதவின் கண்ணாடியில் யாரோ தட்டும் ஒலி கேட்டுத் திரும்பிப் பார்த்தான். ஒரு பெண் நின்று கொண்டிருந்தாள். அவள் முகம் தெரிய வில்லை.

'ஏதாவது டொனேசனா இருக்கும். இவர்களுக்கு இதே வேலையாப் போச்சு...' என்று எண்ணியவன், திட்டுவதற்காகக் காரின் கண்ணாடியை இறக்கினான். அவன் கண்ணாடியை இறக்கியதும், அவன் புறம் குனிந்த அந்தப் பெண்ணின் முகம் பார்த்தவன் அசந்து போனான்.

மாசு மருவில்லாத முகம் என்று சொல்வார்களே, அப்படிப்பட்ட முகம் அது.

அவள் சிரிக்கும்போது விழுந்த கன்னத்துக் குழியில் அந்த நொடி அவன் விழுந்தான்.

"சார், ஆதரவு இல்லாத முதியவர்களுக்கு நிதி திரட்டுறோம். நீங்க ஏதாவது உதவி பண்ணுங்களேன்."

அவன் முன் நீட்டிய பெட்டியில் அவனையும் அறியாமல் அவன் கை ஆயிரம் ரூபாய்த் தாளை எடுத்துப் போட்டது.

ஏதோ பத்தோ நூறோ போடுவான் என்று எண்ணியவள், அவன் ஆயிரம் ரூபாயைப் போட்டதும் மகிழ்ச்சியில், "தேங்க் யூ சார்!" என்று பல முறை சொல்லியவள், அவனிடமிருந்து எந்தப் பதிலும் வராததால் குழப்பத்துடன் அவனைப் பார்த்தவள், அவனைத் திரும்பத் திரும்பப் பார்த்தபடி சென்றாள்.

ஸ்ரீரஞ்சன் அவள் அழகில் தடுமாறியவன், பின் சுதாரித்துக் கொண்டு அவளைப் பற்றி எப்படித் தெரிந்து கொள்வது என்று எண்ணிக் கொண்டிருக்கும்போதுதான் அவள் கழுத்தில் தொங்கிக் கொண்டிருந்த அவள் கல்லூரியின் அடையாள அட்டையைப் பார்த்தான்.

அவள் நன்றி கூறியது அவன் காதில் விழுந்தாலும் காரியமே கண்ணாக அவளின் பெயர், முகவரி, எந்த ஆண்டு படிக்கிறாள் என்ற முழு விவரமும் அறிந்த பின்தான் அவன் நிமிர்ந்தான்.

புரியாத பார்வை பார்த்துக் கொண்டு சென்ற அவளைப் பார்த்தவன் மனம் சிறகில்லாமல் வானத்தில்



பறந்தது. ஆம். அவன் அப்பொழுதே அந்தக் கணமே முடிவு செய்து விட்டான், அவள்தான் தன் வாழ்க்கைத் துணைவி என்று.

"ஜனனி..."

அவள் பெயர் உச்சரிக்கும்போதே புது உற்சாகம் ஏற்படுவதை உணர்ந்தான். அன்றைய உற்சாக மன நிலையில் நடக்கவிருந்த கூட்டம் நல்லபடியாக நடந்து பெரிய வியாபார ஒப்பந்தம் கையெழுத்தாகியது.

அதைக் கூட அவன் தன் தேவதையைச் சந்தித்த தனால்தான் என்று எண்ணினான்.

அன்று மாலையே அவள் கல்லூரி சென்று அவளைப் பின் தொடர்ந்தான். பொறியியல் கல்லூரியில் முதலாம் ஆண்டு படித்துக் கொண்டிருந்தாள்.

அடுத்து வந்த நான்கு ஆண்டுகளும் அவளைப் பின்தொடர்ந்தான். ஆனால் காரில் இல்லை. அவள் செல்லும் பேருந்தில் தான்.

அவன் செய்யும் செயல் அவனுக்கே பைத்தியக் காரத்தனமாகப் பட்டாலும், அவளைப் பின் தொடர்வதை அவனால் விட முடியவில்லை. அவனின் சந்திப்பிற்காக ஆயிரம் பேர் காத்திருக்க... அவனோ ஜனனியின் கடைக்கண் பார்வைக்கு ஏங்கி நின்றான்.

ஏனோ காலையில் அவள் முகம் பார்த்துத் தொடங்கும் தினம்... முடியும்போதும் அவள் முகம் பார்த்து முடிவதில் அவனுக்கு ஏதோ ஒரு நிம்மதி, சந்தோஷம்.

எதிலும் வேகம், வேகம் என்று பறப்பவன் ஜனனி விசயத்தில் அதாவது காதலில் காட்டிய பொறுமை சற்று அதிகம்தான். அதை அவன் உணர்ந்தும் இருந்தான். ஆனால் இருவருக்கும் வயது இருக்கிறது.

அதிலும் முக்கியமாக ஜனனி படிப்பு முடிக்க வேண்டி இருப்பதைக் கருத்தில் வைத்துத்தான் இந்த அமைதி காத்தான்.

காலையும் மாலையும் அவளுக்குக் காவலனாய்த் தினமும் அவளுடன் செல்லத் துவங்கினான். ஆனால் அதை ஜனனி தான் உணர்ந்தாள் இல்லை.

ஒரு வருடம் சென்றும் தன்னைத் திரும்பியும் பார்க்காதவள் இனி மேலும் பார்ப்பாளா என்ற சந்தேகத்தில் ஒரு நாள் அவள் அமர்ந்திருந்த இருக்கைக்கு அருகில் இருந்த காலி யிடத்தில் வந்து அமர்ந்தான்.

திகைத்து அவனைப் பார்த்தவளை நோக்கிப் புன்னகைத்தவன், "ஹாய் ஜனனி. என் பெயர் ஸ்ரீரஞ்சன். உன்னுடன் கொஞ்சம் பேசணும்." - தைரியமாகச் சொன்னவனை ஆச்சரியமாகப் பார்த்தாள்.

"நீங்க யாருன்னே தெரியாது. இது எல்லாம் எனக்குப் பழக்கம் இல்லை..." என்று திடமாக மறுத்தவளை நிதானமாகப் பார்த்தான்.

"ஜஸ்ட் ஃபைவ் மினிட்ஸ். நான் சொல்றதைக் கேட்டுட்டுப் போயிடு. உனக்குப் பிடிக்ககலைன்னா நான் உன் பின்னே வர மாட்டேன்..." என்றவனின் பேச்சில்



என்ன கண்டாளோ அடுத்த பேருந்து நிலையத்தில் அவனுடன் சேர்ந்து இறங்கினாள்.

அருகில் இருந்த பழச்சாறு கடைக்கு உள்ளே சென்று அமர்ந்த போதும், ஜனனி அவன் முகம் பார்த்து அமரவில்லை. அங்கும் இங்கும் சுற்று முற்றும் பயத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவள் கண்களில் தென்பட்ட மருட்சி கூட அவனைக் கவர்வதாய் இருந்தது.

சிறிது நேரம் அவளை ரசித்து விட்டு, அதன் பின் அவளிடம் பேசத் தொடங்கினான்.

"ஜனனி, ஐ லவ் யூ."

பளிச்சென்று எந்த வித மேல் பூச்சும் இல்லாமல் சொன்னவனைத் திறந்த வாய் மூடாமல் திகைப்புடன் பார்த்தாள் ஜனனி.

"எஸ் ஜனனி. இந்த ஒரு வருசமா உன்னை ஃபாலோ பண்றேன்."

'ஒரு வருசமாவா ஃபாலோ பண்றான்? நான் எப்படிக் கவனிக்காமல் விட்டேன்?' குழப்பத்துடன் அவனைப் பார்த்தாள்.

"உனக்கு உன் படிப்பைத் தவிர வேறு எதுவும் கண்ணில் தெரியாதோ?" கேலியாகக் கேட்டவன், "அதான் என்னையும் நீ கவனிக்கல..." என்றான்.

"சரி. அது எல்லாம் விடு. உன் பதில் என்ன?"

"எனக்கு என்ன சொல்றதுன்னு தெரியல. எதுக்கும் அண்ணா கிட்டேயும் அம்மா கிட்டேயும் பேசுங்க. அவங்க விருப்பம்தான் என் விருப்பம்."

ஜனனியின் பதிலில் ஸ்ரீரஞ்சனின் தன்னகங்காரம் மடிந்து வீழ்ந்தது.

அழகு, பணம், படிப்பு எல்லாம் இருக்கும் தன்னிடம் மயங்காத பெண்ணும் உண்டோ என்று இருந்த அவனின் இறுமாப்பு மண்ணைக் கவ்வியது.

இதோ கண் முன் இருக்கிறாளே என்று எண்ணிய வனுக்கு அவளின் மேல் உள்ள காதல் இன்னும் அதிக மானது.

அவனுக்குமே அவனை மட்டும் விரும்பும் பெண்தான் வேண்டும். அவன் பணத்தையோ, இல்லை அந்தஸ்தையோ விரும்புகிறவள் வேண்டாம்.

"கட்டாயம் உன் படிப்பு முடிந்த பின் வீட்டில் வந்து பேசுவேன். அப்பொழுது நீ என்னை மறுக்காமல் மணந்து கொள்வாயா?"

"அதைப் பிறகு பார்ப்போம்..." என்றவள், அதற்கு மேல் அவனுடன் பேசாமல் எழுந்து சென்று விட்டாள்.

ஆனாலும் விடாமல் அவளைப் பின்தொடரத்தான் செய்தான். அது நாள்வரை அவனைக் கவனிக்காதவள், அதன் பிறகு அவனைக் கவனிக்க ஆரம்பித்தாள்.

அவளின் பார்வை உணர்ந்து இவன் சிரித்தாலோ, இல்லை பதில் பார்வை பார்த்தாலோ தலையைக் குனிந்து



கொள்வாள். அவளின் இந்தச் செயலை அவனுமே ரசிக்கத்தான் செய்தான்.

ஒரு வழியாய் ஜனனி படிப்பு முடிந்ததும் அவள் அண்ணனிடமும், அம்மாவிடமும் முதலில் பேசிச் சம்மதம் வாங்கிய பின் தன் வீட்டில் ஜனனி பற்றிப் பேச்சை ஆரம்பித்தான். முதலில் கோபப்பட்ட மல்லிகா, மகனின் பிடிவாதம் கண்டு இறங்கி வந்தார்.

இதோ, திருமணம் முடிந்து ஆறு வருடங்கள் ஆகி விட்டன. மனம் ஒத்த தம்பதியாகத்தான் இது நாள் வரை வாழ்ந்து வந்திருக்கின்றனர். அதற்குச் சாட்சியாய் விதுஷிகா.

ஸ்ரீரஞ்சனாவது காதலித்துத் திருமணம் முடித்ததால் அவளிடம் உயிரையே வைத்திருந்தான். ஆனால் ஜனனி, திருமணத்திற்குப் பின்தான் அவனை நேசிக்க ஆரம் பித்தாள்.

ஆனால் அவள் காட்டிய அன்பு, நேசம் அவன் காட்டியதை விடப் பல மடங்கு அதிகம். சும்மாவே அவளிடம் அதிகக் காதல் உள்ளவன் இன்னமும் அவளிடம் ஒன்றிப் போனான்.

அதனால்தான் தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்று கவனிக்காமல் விட்டு விட்டானோ?

அவள் ஏதாவது சொல்லும்போது அவளைத் தன் அணைப்பில் இறுக்கி அவளின் அருகாமையில் மயங்கு பவன், ஜனனி என்ன சொல்ல வருகிறாள் என்று காது

கொடுத்துக் கேட்காமல் விட்டு விட்டானோ? இப்பொழுது புலம்பி என்ன பயன்?

நடந்து முடிந்தவற்றை நினைத்தவனுக்கு இனி மேல் என்ன செய்யப் போகிறோம் என்ற கேள்வியே அவன் முன் பூதாகரமாக நின்றது.

ஜனனியின் இந்த மன மாற்றம் எதனால்? தான் வெளிநாடு சென்ற பின் வந்ததா? இல்லை, அதற்கு முன்னமே இருந்து அவன் கவனிக்காமல் விட்டு விட்டானா? யோசித்தவனுக்கு விடைதான் தெரியவில்லை.

எது எப்படி இருந்தாலும் அவனின் அன்பால், நேசத்தால் அவன் ஜனனியை மாற்ற முடியும் என்றே நம்பினான்.

ஆனால் அடுத்து வந்த நாட்களில் அந்த நம்பிக்கையை அவநம்பிக்கையாய் மாற்றினாள், அவனின் இனிய நல்லாள்.

## 4

“ஜனனி, பகலுக்குத் தேவையானதை எல்லாம் சமைச்சு வைச்சுட்டேன். இந்த மாதிரிச் சமயத்துல வாய்க்கு ருசியாப் புளிப்பா சாப்பிடணும் போல இருக்கும். புளிக் கரைசல் பண்ணி வச்சிருக்கேன். மறக்காம சாப்பிடு.”

அர்ஜுனின் மனைவி ஆர்த்தி, அதாவது ஜனனியின் அண்ணி அலுவலகத்துக்குக் கிளம்பிக் கொண்டே, ஜனனியிடம் பேசிக் கொண்டிருந்தாள்.



ஆர்த்தி பத்திரிகைத் துறையில் வேலை பார்க்கிறாள். நிருபராகச் சேர்ந்து இன்று பெண்களுக்கான பிரத்யேக இதழில் துணை ஆசிரியராக இருக்கிறாள்.

“ம்... சரி, அண்ணி. நீ போயிட்டு வா.” புன்னகைத்தபடி பதில் அளித்தாள் ஜனனி.

இருவரும் ஒத்த வயதினர். அதனால் அண்ணி என்று அழைத்தாலும் வா, போ என்றே பேசிப் பழகி விட்டாள் ஜனனி.

“குட். எப்பவும் இப்படித்தான் சிரிச்சுக்கிட்டே இருக்கணும்.”

ஜனனியிடம் கூறியவள், “அத்தை நான் கிளம்பறேன்...” என்று சௌதாம்பிகையிடமும் விடைபெற மறக்கவில்லை.

“ஜனனி, நான் விதுவையும் ஆகாஷையும் கீழே இருக்கிற பார்க்குக்குக் கூட்டிட்டுப் போறேன். நீ ரெஸ்ட் எடுக்கணும்னா ரெஸ்ட் எடு...” என்ற சௌதாம்பிகை மகளைப் பார்த்தார்.

சரியென்று தலையசைத்த ஜனனியைப் பார்த்த அந்தத் தாய்க்கு வேதனையாக இருந்தது. அவள் அருகில் சென்று ஆதரவாகத் தலையைத் தடவிக் கொடுத்தார்.

“ஜனனி, மனசைப் போட்டுக் குழப்பிக்காதே. மனசைச் சந்தோஷமா வச்சாத்தான் வயித்தில் இருக்கிற குழந்தை ஆரோக்கியமா இருக்கும். என்ன... நான் சொல்றது புரியுதா?”

"அம்மா, நல்லாவே புரியுது." தாயின் கரத்தை எடுத்துக் கன்னத்தில் வைத்தபடி புன்னகைத்தாள் ஜனனி.

"விது, ஆகாஷ்! நாம கீழே இருக்கிற பார்க்குக்குப் போய் விளையாடலாமா?"

சௌதாம்பிகை கேட்டதும்தான் தாமதம் இரு சிட்டுகளும் பாட்டியுடன் விளையாட ஓடி விட்டனர்.

அவர்கள் போவதைப் புன்னகையுடன் பார்த்துக் கொண்டிருந்தவள், அம்மா சொன்னது ஞாபகம் வந்து, தன் வயிற்றைத் தடவிப் பார்த்தாள்.

தன் உயிரில் கலந்த மன்னவனின் உயிரை இரண்டாம் முறையாகத் தாங்கி இருப்பதில் அவள் மனம் பெருமிதப்பட்டது.

அந்நேரம் பார்த்துக் கீழே சென்ற பிள்ளைகளின் சந்தோஷக் கூக்குரல் கேட்டுப் பால்கனி பக்கம் வந்தாள்.

ஜனனி படுக்கையறையின் பால்கனிக்குச் சென்று பிள்ளைகள் விளையாடுவதை எட்டிப் பார்த்தாள்.

ஆகாஷ், விதுவை விட மூன்று வயது சின்னவன். அவனுக்கு ஈடு கொடுத்து விளையாடும் மகளைப் பார்க்கும்போது சந்தோஷமாக இருந்தது.

விதுஷிகா பள்ளிக்கு விடுமுறை எடுத்திருக்கிறாள். நாளையில் இருந்து பள்ளிக்கு அனுப்ப வேண்டும் என்று எண்ணியவளுக்கு, அதன் பின் என்ன என்ற கேள்வியே பிரதானமாக இருந்தது.



இப்படியே இங்கேயே இருந்துவிட முடியுமா என்று ஒரு எண்ணம் தோன்றும் போதே... அதற்காக அங்கே போகத் தன்னால் முடியுமா என்ற மற்றொரு எண்ணமும் எழுந்தது.

என்ன இருந்தாலும் அதுதானே உன் வீடு... மனச்சாட்சி அவளைக் கேட்ட போதும், இல்லை இல்லை. அவளைப் போலச் சாமானியப் பெண்ணுக்கு ஏற்ற வீடு அது இல்லை.

மனம் கூக்குரலிட, அதற்கு மேல் தாளாமல் ஓடிச் சென்று படுக்கையில் விழுந்தாள்.

எவ்வளவு சந்தோஷத்துடன் ஆரம்பித்த மணவாழ்வு கடைசியில் இப்படி ஆகிவிட்டதே என்று கழிவிரக்கம் தோன்றி, இன்னமும் மனதை வாடச் செய்தது.

வேதனையில் இருந்தவளின் மனதில் அழையா விருந்தாளியாய் மனம் கவர்ந்தவனின் நினைவுகள்.

மனதில் கணவனின் நினைவுகள் அவள் அனுமதி யில்லாமல் ஊர்வலம் வரத் துவங்கின.

ஸ்ரீரஞ்சனை ஒரு மழைக் கால மாலைப் பொழுதில்தான் சந்தித்தாள் ஜனனி.

வழக்கம் போல் மாலை கல்லூரி விட்டதும் பேருந்தில் தன் வீடு நோக்கிப் பயணம் செய்து கொண் டிருந்தாள்.

வெளியில் பெய்து கொண்டிருந்த மழைச் சாரலை ரசித்தபடி இருந்தவள், தன் அருகில் அமர்ந்திருந்த

பெண்மணி எழுந்து சென்றதைக் கூடக் கவனிக்க வில்லை.

திடீரென்று, "ஹாய்..." என்று அவள் காதருகில் கேட்ட குரலில் திடுக்கிட்டவள் திரும்பிப் பார்த்தாள்.

யாரோ ஒரு புதியவன் தன் அருகில் அமர்ந்திருப் பதைப் பார்த்தாள்.

அவனை இதற்கு முன் பார்த்ததற்கான ஞாபகம் இல்லை. யாரவன் என்ற கேள்வி மனதில் எழுந்தது.

அதற்குள் அவனே தன்னை அறிமுகப்படுத்தியவன், அவளிடம் பேச வேண்டும் என்றதும் ஒரு நிமிடம் குழப்பமாக இருந்தது. அதனாலேயே மறுத்தாள்.

ஆனால், அவனோ அவளிடம் பேசுவதிலேயே குறியாக இருக்க... இதற்கு மேல் அங்கு இருப்பவர் களுக்குக் காட்சிப் பொருளாக வேண்டாம் என்ற எண்ணத்தில்தான் அவனுடன் போகச் சம்மதித்தாள்.

ஆனால், ஸ்ரீரஞ்சன் காதலிப்பதாகச் சொன்னதும் அவள் ஒரு நிமிடம் திகைத்து விட்டாள். அவளுக்கு இந்தக் காதலில் எல்லாம் நம்பிக்கை இல்லை.

அதனாலேயே அம்மாவிடமும் அண்ணனிடமும் பேசச் சொல்லி விட்டு அங்கிருந்து சென்று விட்டாள்.

அதன் பின்னும் தன் பின்னே மூன்று ஆண்டுகள் தொடர்ந்தவனைக் கண்டு மனதில் பயம்தான் எழுந்தது. அவள் படிப்பு முடியும் தறுவாயில் தைரியமாக அவள்



சொன்னது போல் அவள் வீட்டாரிடம் வந்து பெண் கேட்டவனைக் கண்டு இன்னமும் பயம் வந்தது.

"ஹாய், ஐ அம் ஸ்ரீரஞ்சன். உங்க தங்கையை நான்கு வருடமாக் காதலிக்கிறேன். அவள்தான் படிப்பு முடிந்தவுடன் வீட்டில் பேசச் சொன்னாள்."

ஸ்ரீரஞ்சன் அர்ஜுனிடம் பேசியதைக் கேட்ட ஜனனி வாயடைத்துப் போனாள். அவளும் அவனைக் காதலிப்பது போல் அல்லவா இருக்கிறது அவன் சொல்வது!

ஸ்ரீரஞ்சன் சொன்னதைக் கேட்டதும், அர்ஜுன் தங்கையை முறைத்தான். "காலேஜ் போறேன்னு லவ் பண்ற வேலைதான் பார்த்தியா?"

"ஐயோ... இல்லண்ணா... அவர் பொய் சொல் றாரு..."

கண்களில் நீர் மல்கத் தங்கை கூறியதும், அர்ஜு னுக்கும் தான் அவசரப்பட்டுக் குற்றம் சாட்டி விட்டோமோ என்று இருந்தது.

"உங்க தங்கை மேல் எந்தத் தப்பும் இல்லை..." என்று அவசரமாக மறுத்த ஸ்ரீரஞ்சன் தனக்கும் அவ ளுக்கும் இடையில் நடந்த உரையாடலைக் கூறினான்.

தங்கை மேல் தப்பு இல்லை என்றதும், அர்ஜுனுக்குக் கொஞ்சம் மனம் நிம்மதியாக இருந்தது.

"இந்தாங்க... இது என் விசிட்டிங் கார்ட். என் மேல் முழு நம்பிக்கை இருந்தால் உங்க தங்கையை எனக்குத் திருமணம் செய்து கொடுங்க."

"நம்பிக்கை வராவிட்டால்..." - சிரித்தபடி கேட்டான், அர்ஜுன்.

"நம்பிக்கை வரும்வரை காத்திருப்பேன்."

ஸ்ரீரஞ்சன் குரலில் இருந்த உறுதி அர்ஜுனை அசைத்துப் பார்த்தது.

ஸ்ரீரஞ்சன் கொடுத்த அவனின் அறிமுக அட்டையைப் பார்த்தான். பார்த்தவன் கண்கள் ஆச்சரியத்தில் அதில் நிலைகுத்தி நின்றன.

ஸ்ரீரஞ்சனை நேரில் பார்த்தது இல்லை. ஆனால் அவன் தொழில் வளர்ச்சியை அர்ஜுன் கேள்விப்பட்டு இருக்கிறான். அந்த ஸ்ரீரஞ்சன் இவன்தானா? அர்ஜுனால் நம்ப முடியவில்லை.

"சார் நீங்க..." வார்த்தை வராமல் தடுமாறினான், அர்ஜுன்.

"அர்ஜுன், ரெண்டு பேருக்குமே ஒரே வயதுதான் இருக்கும். சும்மா நீ, வா என்றே பேசு..." என்று சொன்னவன் தானும் ஒருமைக்குத் தாவினான்.

"சார், நீங்க நாங்க நினைச்சுக் கூடப் பார்க்க முடியாத உயரத்தில் இருக்கீங்க. நாங்க சாதாரண ஆட்கள். இது சரிப்பட்டு வரும்னு தோணல."

அண்ணனும் தங்கையும் எந்த விசயத்தில் ஒன்றாக இருக்கிறார்களோ இல்லையோ... இதில் ஒன்றாக ஒற்றுமையாக இருக்கிறார்கள் என்று நினைத்துக் கொண்டவன் மனதில் சிரித்துக் கொண்டான்.



"எல்லாம் சரி வரும் அர்ஜுன். உன் தங்கையின் அன்பு எல்லாவற்றையும் சரி பண்ணும். யோசிச்சு முடிவு பண்ணுங்க."

கம்பீரமாகக் கூறிவிட்டுக் கண்களால் இவளிடம் விடைபெற்றான்.

ஜனனியோ செய்வது அறியாமல் அப்படியே உறைந்து நின்றாள்.

"அர்ஜுன், எனக்கு என்னமோ சரின்னு தோணுது. அந்தப் பையனுக்கு ஜனனி மேல் வந்த காதல் வெறும் உடல் கவர்ச்சி என்றால் இந்த நான்கு ஆண்டுகளில் அவன் வேறு பெண் தேடியிருக்கக் கூடும். ஏனெனில் விருப்பம் இல்லாப் பெண் பின்னாடி ஒருவன் நாலு வருசம் சுற்ற மாட்டான்.

"எனக்கு இந்தப் பையன் மேல் நம்பிக்கை இருக்கு. எல்லாத்தையும் விட ஜனனி மேல் அவனுக்குக் காதல் இருக்கு. நீ சம்மதம்னு சொல்லு." - சௌதாம்பிகை கூறியதும், அர்ஜுனுக்கும் சரி என்றே பட்டது.

"இருந்தாலும் அவங்க ரொம்ப வசதியானவங்கம்மா." - கொஞ்சம் தயங்கத்தான் செய்தான்.

"அர்ஜுன், அவங்க வசதிக்கு நாம இல்லைனாலும், நாமளும் ஒன்றுமில்லாதவங்க கிடையாது. ஓரளவுக்கு எல்லாம் செய்துதான் அனுப்புவோம்."

சௌதாம்பிகை பதிலில் அர்ஜுனுக்கு மனதில் இருந்த கிலேசம் மறைந்து நிம்மதி வந்தது.

அம்மாவும் அண்ணனும் ஜனனியிடம் பேசியபோது, அவள் ஸ்ரீரஞ்சனைத் திருமணம் செய்ய மறுத்தாள். இருவருக்குமே அதிர்ச்சியாகத்தான் இருந்தது.

வேறு வழியின்றி அர்ஜுன், ஸ்ரீரஞ்சனிடம் ஜனனி யின் முடிவைக் கூறினான்.

இந்த மாதிரி ஒரு பதிலை ஸ்ரீரஞ்சன் எதிர் பார்க்கவில்லை. அர்ஜுனிடம் ஜனனியைச் சந்திக்க வேண்டும் என்று மட்டும் கூறிச் சம்மதம் வாங்கினான்.

"நீதானே சொன்ன... உங்க அம்மா, அண்ணன் சரின்னு சொன்னா உனக்கும் சம்மதம்னு. இப்போ ஏன் மாத்திப் பேசற?"

தன் அறையில் தன்னையே கேள்வி கேட்கும் ஸ்ரீரஞ்சனைக் கண்டு ஜனனிக்கு எரிச்சலாக வந்தது.

ஆம். தனிமையில் ஜனனியைச் சந்திக்க விரும்பிய ஸ்ரீரஞ்சன் அவளை அவளின் அறையிலேயே எதிர் கொண்டான்.

"இல்லை. இது சரிப்பட்டு வராது." அவனை நிமிர்ந்து பாராமல் ஜனனி பதில் பேசினாள்.

"அதான் ஏன்? ஒரு காரணமாவது சொல்லு."

"ஒரு காரணம் என்ன... ஆயிரம் இருக்கு. எனக்குக் கணவனா வரப் போறவர் ரொம்ப வசதியானவரா இருக்கணும்னு நான் எதிர்பார்க்கல. அதாவது உங்களை மாதிரி. நார்மல் வசதியா இருந்தாலும் நிம்மதியான



வாழ்க்கை வேண்டும். அது உங்க மாதிரிப் பணக்காரங்க கிட்ட கிடையாது. உங்க வாழ்க்கை முறை வேற. என் வாழ்க்கை முறை வேற.

"உங்களைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா என் உணர்வுகளை மறைத்து உங்க ஸ்டேட்டஸ்க்காக வாழ வேண்டி யிருக்கும். என்னால் போலியான வாழ்க்கை வாழ முடியாது. என்னை என் வழியில் போக விடுங்க."

ஜனனி கூறியதும், ஸ்ரீரஞ்சனுக்கு மனதில் இருந்த கலக்கம் மறைந்தது. இதற்குத்தானா பெண்ணே என்னை வேண்டாம் என்று சொன்னாய் என்று அவளைப் பார்த்தான்.

தலையைக் குனிந்திருக்கும் அவளை அள்ளி அணைத்துக் கலக்கம் வேண்டாம் பெண்ணே என்று ஆறுதல் அளிக்கத் துடித்த மனதை முயன்று அடக்கி னான்.

"இவ்வளவுதானா? நான் என்னமோ ஏதோன்னு நினைச்சேன். சரி, என்னைக் கல்யாணம் பண்ணிக் கிட்டாலும் உன் விருப்பத்தில் யாரும் குறுக்கிட மாட்டோம். என்னையும் சேர்த்துத்தான் சொல்றேன். இங்கே உன் அம்மா வீட்டில் இருப்பது போல் நீ இருக்கலாம்..." என்றவன், அவள் அருகில் வந்து,

"உன் உணர்வுகளுக்கு, விருப்பத்திற்கு மதிப்புக் கொடுக்காமலா நான்கு வருடங்கள் காத்திருந்தேன். ஜனனி, என் கண்ணைப் பாரு. அதில் இருக்கும் காதல்

உனக்குப் புரியலையா? ப்ளீஸ் ஜனனி, என்னை நிமிர்ந்து பாரு."

ஸ்ரீரஞ்சனின் குரலில் இருந்த ஏதோ ஒன்று ஜனனியை அசைத்துப் பார்த்தது. மெல்லத் தலையை நிமிர்த்தி அவனைப் பார்த்தாள்.

"உனக்கு என்னைப் பிடிக்கலையா?" - அவளின் உதாசீனத்தைத் தாங்கிக் கொண்டு, மனதில் எழுந்த வலியுடன் ஸ்ரீரஞ்சன் அவளைப் பார்த்து வினவினான்.

அவன் கண்களிலும், குரலிலும் இருந்த காதலும், அது மறுக்கப்பட்டதால் எழுந்த வலியும் கண்டு ஜனனி திகைத்துப் போய் அவனைப் பார்த்தபடி அப்படியே அசையாமல் நின்றாள்.

## 5

ஸ்ரீரஞ்சனின் குரலில் இருந்த வலி, வேதனை ஜனனியின் மனதைச் சிறிது அசைத்துப் பார்த்தது. அவளையும் அறியாமல் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

இவ்வளவு நாளில் அவனை அவன் முகத்தை அவள் கவனித்துப் பார்த்தது இல்லை.

இன்றுதான் அவனை ஊன்றிக் கவனித்தாள். சற்றுக் கருமையான நிறம்தான். ஆனாலும் அவனின் கம்பீரம் குறையவில்லை. முகத்தில் இருந்த அறிவுக் களை அவன் அறியாமல் பேசவில்லை என்று சொல்லாமல் சொல்லியது.



அதிலும் அவன் கண்களில் இருந்த காதல் அந்த நிமிடம் அவளின் மனதையும் தடம் புரளச் செய்தது. இவன் எந்த விதத்தில் குறைவு? தனக்காக நான்கு வருடம் காத்திருக்கிறான். தன்னை விட அழகிகள் இல்லையா என்ன?

அதுவும் இவனைப் போன்ற பணக்கார வர்க்கத்தில் அழகிகளுக்கா பஞ்சம்? பின் எதைக் கண்டு தன்னைக் காதலித்தான்?

யோசித்தவளுக்கு விடைதான் தெரியவில்லை.

"எனக்குக் கொஞ்சம் யோசிக்கணும். கொஞ்ச நாள் டைம் குடுங்க."

"என்ன... இன்னும் டைமா? ஏற்கெனவே நான்கு வருடங்கள் காத்திருந்தாச்சு. இப்பவே எனக்கு இருபத்தெட்டு வயசு. இன்னமும் காத்துட்டு இருக்கணும்னா நான் கிழவனாகி விடுவேன்."

ஸ்ரீரஞ்சன் ஜனனியின் மன மாற்றத்தை உணர்ந்தே குதூகலமாகப் பேசினான். அவனின் தொழில் அனுபவத்தில் எத்தனை பேரைப் பார்வையால் எடை போட்டு இருப்பான். அவனுக்கா ஜனனியின் மனநிலை தெரியாது?

ஜனனியின் முகத்தில் மாறி மாறித் தோன்றிய உணர்வுகளை வைத்தே அவள் மனதை ஸ்ரீரஞ்சன் ஓரளவு யூகித்து விட்டான்.

"குட்டிம்மா..." - ஜனனியின் கைகளைப் பிடித்துக் கொண்டான் ஸ்ரீரஞ்சன்.

அவனின் 'குட்டிம்மா...' என்ற அழைப்பில் அப்படியே உருகிப் போய் நின்றிருந்தாள்.

ஸ்ரீரஞ்சன் என்ன என்பது போல் புருவம் உயர்த்தி வினவினான்.

என்ன... என்ன என்று தன்னைப் பார்த்தவளுக்கு அப்பொழுதுதான் புரிந்தது.

அவன் தான் பிடித்திருந்த அவள் கையை விட்டும், தான் இன்னமும் கையை அப்படியே வைத்துக் கொண்டு நின்றிருப்பது தெரிந்தது.

முகம் வெட்கத்தில் சிவக்கத் தலையைக் குனிந் தாள்.

"சீக்கிரம் கல்யாணத்திற்கு நாள் பார்க்கச் சொல் லவா?" என்று அவளிடமே கேட்டு, அவளின் சரி என்ற தலையசைவைச் சம்மதமாக வாங்கினான்.

"தட்ஸ் குட்." அவள் கன்னம் தட்டி விடைபெற்றான்.

முதல் முதலாய் அவனின் மெல்லிய தீண்டல் அவள் உயிர்வரை ஊடுருவிச் சென்றது.

அடுத்து வந்த முகூர்த்தத்தில் அவர்களின் திருமணம் நடந்தது.

அடுத்த நாளே ஸ்ரீரஞ்சன் தேனிலவுக்கு என்று அவளை ஒரு மாதம் வெளிநாடு கூட்டிச் சென்று விட்டான். அவனின் அன்பில், நேசத்தில் ஜனனி தன்னையே மறந் தாள்.



அவளும் பதிலுக்குத் தன் காதலைக் காட்டத் தவற வில்லை. இது ஜென்ம ஜென்மமாய் ஏற்பட்ட பந்தம் என்று இருவருக்குமே தோன்றியது.

தேனிலவு முடிந்து வந்த கொஞ்ச நாட்களிலேயே அவள் கருவுற்றிருப்பது தெரிய வந்தது.

ஸ்ரீரஞ்சன் தான் தந்தையாகப் போகும் செய்தியில் இன்னும் மகிழ்ந்தவன்... ஜனனியைத் தன் அன்பால் திக்குமுக்காடச் செய்தான்.

விதுஷிகா பிறந்து வளர வளரத்தான் ஜனனிக்குச் சுற்றுப்புறம் ஞாபகம் வந்தது.

அவர்களின் வாழ்வுமுறையோடு அவளால் ஒத்துப் போக முடியவில்லை.

அதிலும் சிறிய மருமகள் வந்ததும் ஏற்பட்ட வேறுபாட்டில் ஜனனி மனம் நொந்து போனாள்.

ஆனால் இந்த வேறுபாடு எல்லாம் ஸ்ரீரஞ்சன் காட்டிய காதலில், அன்பில் முற்றிலும் அவளுக்கு மறந்து மறைந்து போனது. அவன் அன்பின் முன் மற்ற உறவுகள் தந்த மனக் கசப்புகள் கூட அவளைப் பாதிக்கவில்லை.

ஆனால்... ஆனால்.... ஆறு வருட பந்தம் எப்பொழுது எந்நேரம் கை நழுவிப் போய் விடுமோ என்ற எண்ணமே அவள் மனதை ஆக்கிரமித்தது.

அவள் அருமைக் கணவன் மனதிலும் அப்படி ஒரு எண்ணம் இருக்கிறதோ? அதனால்தான் அவர்கள் அந்த அளவுக்குப் பேசினார்கள்.

அவளுக்கு அவனின் சொத்து சுகம் ஏதும் வேண்டாம். அவன் மட்டுமே... அவன் அன்பு, காதல் மட்டுமே போதும்.

அவன் இல்லாத ஒரு வாழ்க்கையை அவளால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

ஜனனியின் மனதில் அவனைப் பற்றித் தவறான எண்ணம் ஓடுவது கூடத் தெரியாமல் அந்த அன்புக் கணவன் அவளின் அருகாமைக்காக அங்கு ஏங்கிக் கொண்டிருக்கிறான்.

ஸ்ரீரஞ்சன் அவளின் மனதைப் புரிந்து கொள் வானா? இல்லை... ஜனனி அவனைப் புரிந்து கொள் வாளா?

"மிஸ்டர் ஸ்ரீரஞ்சன்... உங்க மனைவிக்கு ஏற்பட் டிருக்கிற டிப்ரஷன் ஆரம்ப கட்டம் என்பதால் விரைவில் குணப்படுத்தி விடலாம். அவங்க மனசுல ஏதோ ஒரு எண்ணம் அழுத்தமாப் பதிஞ்சு அவங்களைக் குழப்புது. அதை வெளியில் சொல்லாமல் மனதுக்குள்ளே வைச் சிருக்கிறதாலதான் இந்தப் பிரச்சினை.

"மனதில் அழுத்தம் கூடக் கூடச் சில சமயம் அது கோபமாக் கூட வெளிப்பட வாய்ப்பு இருக்கு. அடுத்தடுத்து கவுன்சிலிங் கூட்டிக்கிட்டு வாங்க. அவங்க மனநிலையை மாற்ற முடியும்னு நினைக்கிறேன். அவங்க கன்சீவா வேற இருக்காங்க. இந்த மாதிரிச் சமயத்தில மெடிசின் எடுக்கவும் கூடாது. அதனால அவங்க மனசை அவங்களுக்குப் பிடிச்ச மாதிரி டைவர்ட் பண்ணுங்க.



"பிடிச்ச விஷயங்களில் மனதைச் செலுத்தும்போது மனதில் எழும் கவலை, கோபம் இது எல்லாம் தள்ளிப் போக... சில சமயம் வராமல் போகவும் வாய்ப்பிருக்கு. இது எல்லாத்தையும் விட நீங்க அவங்ககிட்ட அன்பா நடந்துக்குங்க. அன்பை விட பெஸ்ட் மெடிசின் உலகத்துல எங்கும் கிடையாது. அதிலும் இந்த மாதிரி மனம் சார்ந்த பிராப்ளத்துக்கு அதுதான் சிறந்த மருந்து.

"இதை நான் ஏன் உங்ககிட்ட சொல்றேன்னா... உங்களைப் பத்தி அவங்க கிட்ட பேசும்போது அவங்க முகத்தில் சந்தோஷமும் கலக்கமும் ஒரே சமயத்தில் தோன்றியது. அதனால பிரச்சினை நீங்க சம்பந்தப் பட்டதாகக் கூட இருக்கலாம்.

"இது என் யூகம்தான். அதனால அவங்களை அன்பாப் பார்த்துக்கோங்க. முக்கியமா இந்த மாதிரி நேரத்தில் பொறுமை ரொம்ப அவசியம். அவங்களை ரொம்பப் பொறுமையா ஹேண்டில் பண்ணுங்க. ஆல் த பெஸ்ட் ஸ்ரீரஞ்சன்."

மனநல மருத்துவர் கூறிய வார்த்தைகள் ஸ்ரீரஞ் சனின் காதுகளில் ஒலித்துக் கொண்டிருந்தன.

காரை ஓட்டியபடி அருகில் அமர்ந்திருந்த மனைவி யைப் பார்த்தான்.

ஜனனியோ அவன் முகத்தை மறந்தும் திரும்பிப் பார்த்தாள் இல்லை. வெளியில் வேடிக்கை பார்ப்பது ஒன்றே முக்கியம் என்பது போல் வெளிப்புறம் பார்த்துக் கொண்டு வந்தாள்.

ஜனனியை மனநல மருத்துவரிடம் ஆலோசனை கேட்க அழைத்துச் செல்ல வேண்டும் என்று நினைத்திருந்த ஸ்ரீரஞ்சன் கொஞ்ச நாள் கழித்துக் கூட்டிச் செல்லலாம் என்று முடிவு செய்திருந்தான்.

அதற்குள் ஜனனியே அர்ஜுனிடம் தான் மருத்துவர் ஆலோசனை கேட்க வேண்டும் என்று கூறியதும், அர்ஜுன் உடனே ஸ்ரீரஞ்சனிடம் தெரிவித்து விட்டான். அண்ணன் மருத்துவத் துறையில் இருந்ததாலோ என்னவோ ஜனனி மனநல மருத்துவரிடம் செல்வதைத் தவறாக நினைக்கவில்லை.

மாறாகத் தன் குழம்பிய மனது சீராக வேண்டும் என்றே விரும்பினாள்.

"குட்டிம்மா... நம்ம வீட்டுக்குப் போகலாமா?" – ஸ்ரீரஞ்சன் மென்மையாகத்தான் கேட்டான்.

"வேண்டாம்... வேண்டாம். எங்க அம்மா வீட்டுக்குப் போகலாம்."

உடல் பதற வார்த்தைகள் நடுங்கப் பேசியவளைப் புரியாமல் பார்த்தான்.

என்னவாயிற்று இவளுக்கு என்ற யோசனையுடன் ஜனனியைப் பார்த்தான். அவள் அம்மா வீட்டிற்குச் சென்று ஐந்து நாட்கள் ஆகிவிட்டன. விது கூட அங்கிருந்து தான் பள்ளி செல்கிறாள்.

இவனும் அடிக்கடி அங்கு சென்று வருவதால் விது இன்னமும் இந்தப் பிரிவினையை உணராமல் இருக்கிறாள். அதை அவள் உணரும்போது என்ன செய்யப் போகிறாளோ?



அதற்கு முன் மனைவியைச் சரிப்படுத்த வேண்டும் என்று எண்ணியவன் அர்ஜுனின் வீடு நோக்கிக் காரைச் செலுத்தினான்.

வீட்டிற்குச் சென்றதும் ஜனனி தலை வலியென்று அறைக்குள் சென்று விட்டாள்.

ஸ்ரீரஞ்சன் தான் சௌதாம்பிகை கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொன்னான்.

அர்ஜுன், ஆர்த்தி வேலைக்குச் சென்றிருந்தனர். சிறிது நேரம் அவருடன் பேசியவன் மனைவியின் அறைக்குச் சென்றான்.

விது பள்ளிக்குச் சென்றிருப்பதால் ஜனனியிடம் மனம் விட்டுப் பேச இதுதான் நல்ல சமயம் என்று எண்ணியவன் கட்டிலில் படுத்திருந்தவளை நெருங்கினான்.

ஸ்ரீரஞ்சன் அவளைத் தொடவும் ஏதோ நெருப்பைத் தொட்டவள் போல் விலுக்கென்று எழுந்து அமர்ந்தாள்.

அதை எல்லாம் அவன் கண்டு கொள்ளாமல் அவள் அருகில் நெருங்கி அமர்ந்தான்.

அவளோ அவனிடமிருந்து விலகிக் கட்டிலின் உட்பகுதியில் தள்ளி அமர்ந்தாள்.

அவனோ விடாக் கண்டனாய் மீண்டும் அவளை நெருங்கி அமர்ந்தான்.

மீண்டும் அவனிடமிருந்து விலக எத்தனித்தவளைத் தன் கைவளைவில் நிறுத்தி, "ஜனனி... என்ன இது? ஏன் இப்படி நடந்துக்கிற?"

குரல் என்னவோ தாழ்ந்துதான் இருந்தது. ஆனால் அதில் அடக்கப்பட்ட கோபத்தை அவனுடன் வாழ்ந்த அவளுக்கா தெரியாது.

என்றுமே அவன் கோபத்தை அவள் தாங்க மாட்டாள். அதைத் தாங்கும் சக்தி அவளிடம் இல்லாத தாலோ என்னவோ அவன் கோபப்படும்படி ஒரு நாளும் அவள் நடந்து கொண்டது கிடையாது. அதனாலேயே இன்று அவனின் கோபம் கண்டு அப்படியே அமர்ந் திருந்தாள்.

ஜனனியின் முகத்தில் இருந்த கலக்கம் கண்டு ஸ்ரீரஞ்சனுக்குமே வேதனையாக இருந்தது.

"குட்டிம்மா.... நான் கேட்ட கேள்விக்கு இன்னும் நீ பதில் சொல்லல." நொடிக்குள் தன் கோபத்தைக் கட்டுப்படுத்தியவன் குரலில் அன்பு மட்டுமே வெளிப்பட்டது.

"என்னடா உன் பிரச்சினை? நான் யு.எஸ். போகும்போது கூட நல்லாத்தானே இருந்த. இடைப்பட்ட இந்த இருபது நாளில் என்ன ஆச்சு? அங்கே நம் வீட்டில் யாரும் ஏதும் சொன்னார்களா?"

ஸ்ரீரஞ்சன் அவ்வாறு கேட்டதற்கு ஒரு காரணம் இருந்தது. அவன் வீட்டார்... அதிலும் முக்கியமாக அவன் பெற்றோர் ஜனனி குறித்தோ, இல்லை, அவன் மகள் குறித்தோ எதுவும் கேட்கவில்லை. வீட்டில் இருந்த மருமகள், பேத்தி ஐந்து நாட்களாகக் காணவில்லையே...



அதைப் பற்றி மகனிடம் கேட்டுத் தெரிந்து கொள் வோம் என்ற அக்கறை துளிக்கூட அவர்களுக்கு இல்லை. மருமகள் அவர்களுக்கு வேண்டாம். ஆனால் மகன் வயிற்றுப் பேத்தி வேண்டாமா? என்ன மனிதர்கள் இவர்கள்... என்று முதல் முறையாக அவன் வீட்டார் மீது அவனுக்குக் கோபம் வந்தது.

அதனால்தான் ஜனனியின் இந்தச் செயலுக்கு ஒருவேளை அவர்கள் காரணமாக இருக்கலாமோ என்ற எண்ணத்தில்தான் அவன் அப்படிக் கேட்டதே.

அந்த நிலையிலும் ஜனனியின் மனம் தன் மனதைக் கண்டுபிடித்து விட்ட கணவனை எண்ணிப் பெருமிதப்பட்டது.

அவள் இதுநாள்வரை அவனிடம் அவன் வீட்டார் நடத்தை பற்றி எதுவும் கூறியது கிடையாது.

ஆனாலும் அவர்கள் நடந்து கொள்வதற்கு இவனும் ஒரு காரணகர்த்தா அல்லவா? இவன் இடம் கொடுக்காமல் அவர்கள் அப்படி நடந்து கொள்வார்களா என்ன?

மனதில் அடங்கியிருந்த எண்ணங்கள் மேலே எழுந்து அவள் முகம் இறுகச் செய்தது.

"ப்ளீஸ் சொல்லும்மா... என்னதான் பிரச்சினை? சொல்லு."

"ப்ளீஸ் ஸ்ரீ... இப்போதைக்கு என்னை எதுவும் கேட்காதீங்க."

கண்களில் கண்ணீர் வழிய முகத்தை அவனுக்குக் காட்டப் பிடிக்காமல் திருப்பிக் கொண்டாள் ஜனனி.

ஸ்ரீரஞ்சன் அவளின் 'ஸ்ரீ...' என்ற அழைப்பில் உருகி நின்றான்.

அவன் வந்ததிலிருந்து அவள் ஸ்ரீ என்று அழைக்கவில்லை. இப்போதுதான் அழைக்கிறாள்.

"சரி. நான் உன்னை எதுவும் கேட்கலை. ஆனால் நம்ம வீட்டுக்குப் போகாமல் இங்கேயே இருந்தா எப்படி? எதுவா இருந்தாலும் நம்ம வீட்டுக்குப் போய்ப் பேசலாம். சரியா... போலாமா? ஸ்கூலிலிருந்து விதுவை நான் கூட்டிட்டு வந்துடறேன். என்ன ஓ.கே.வா?"

சின்னக் குழந்தைக்கு எடுத்துச் சொல்வது போல் சொன்னான்.

ஜனனியோ அவன் சொல்வதைக் கேட்டால்தானே, அதைச் செய்வதற்கு. அவளோ தன் மனம் போன போக்கில் பேசினாள்.

"இல்லை. அங்கே நான் வரல. நான் இங்கேயே இருந்திடுறேன்."

"ஜனனி, என் பொறுமைக்கும் ஒரு அளவுதான் உண்டு. நீ ஒண்ணும் சின்னப் பொண்ணு இல்லை. என்னவோ நேத்துதான் கல்யாணம் முடிச்ச மாதிரிப்



பேசாதே. நமக்குத் திருமணமாகி ஆறு வருசம் ஆகுது. இப்பவரைக்கும் அந்த வீட்டில்தானே இருந்த. இப்ப என்ன புதுசா வர மாட்டேன்னு சொல்ற.

"நமக்காக நீ பார்க்க வேண்டாம். நம் குழந்தை விதுக்காக. இதோ உன் வயிற்றில் வளரும் நம் அடுத்த குழந்தை... அதுக்காகவாவது யோசித்துப் பாரு."

"என்னால அங்கே வர முடியாது."

"அப்போ என்ன சொன்னாலும் வர மாட்டே?"

"ம்ஹூம்." தலையை இடமும் வலமுமாய் அசைத்தாள், அவன் மனைவி ஜனனி.

"உன் முடிவு இதுதான் என்றால் நான் சொல்ற தையும் நல்லாக் கேட்டுக்கோ. விதுவை என்னோட நான் கூட்டிட்டுப் போறேன். உனக்கு எப்ப வரணும்னு தோணுதோ அப்ப வா."

"இல்லை. விது என் குழந்தை. அவளை நான் தரமாட்டேன். உங்களுக்குக் குழந்தை வேணும்னா வேற கல்யாணம் பண்ணிப் பெத்துக்கோங்க."

ஜனனி பேசியதைக் கேட்ட ஸ்ரீரஞ்சனுக்கு ஆத்திரம், கோபம் கட்டுக்கடங்காமல் வந்தது. அவளையே கோபத்துடன் உறுத்துப் பார்த்தான்.

அவனின் பார்வை உணர்ந்தோ என்னவோ, ஜனனி மறந்தும் அவனைப் பார்க்கவில்லை. அவனுக்கு வந்த ஆத்திரத்தில் கையை நீட்டி இருப்பான்.

மருத்துவர் சொன்ன அறிவுரையையும், அவளின் தாய்மை நிலையையும் கருத்தில் கொண்டு தன் கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

"விது உனக்கு மட்டும் குழந்தை இல்லை. எனக்கும் குழந்தைதான். அப்புறம் என்ன சொன்ன... வேற கல்யாணம் பண்ணிக்கணுமா? உன் அட்வைஸுக்கு ரொம்ப நன்றி. எனக்குத் தேவைப்படும்போது உன்னிடம் கேட்டுக் கொள்கிறேன்."

முதலில் உறுதியுடன் ஆணித்தரமாகப் பேசியவன் இறுதியில் கேலியில் முடித்தான்.

ஜனனியின் அருகில் வந்து அவளின் முகத்தை ஒற்றை விரலால் நிமிர்த்தியவன்,

"இன்னும் இரண்டு நாள் டைம் தர்றேன். அதுக்குள்ளே யோசித்து நம்ம வீட்டுக்கு வர்ற வழியைப் பாரு. இல்லை, விதுவை நான் கூட்டிக் கொண்டு போக யாரும் தடை சொல்ல முடியாது. என்ன புரிஞ்சதா?"

அவனின் கேள்வி புரிந்தாலும் விடை தெரியாத சிறுமியாய் மலங்க மலங்க விழித்தாள் ஜனனி.

அவளின் கலக்கம் கண்டு ஆறுதல் சொல்லத் துடித்த கைகளை வலுக்கட்டாயமாக பேண்ட் பாக்கெட்டில் நுழைத்துத் தன் உணர்வுகளை அடக்கியவன், ஒரு கணம் நின்று அவளை உற்றுப் பார்த்து விட்டு அறையை விட்டு வெளியேறினான்.



## 6

"அர்ஜுன் உன்கிட்ட கொஞ்சம் பேசணும்ப்பா..." – சௌதாம்பிகை மகனின் அறை வாயிலில் நின்று கொண்டு கேட்டார்.

அர்ஜுனும் ஆர்த்தியும் பார்க்கும் வேலை நேரம் காலம் பாராமல் பார்க்கும் வேலை. அதனால் என்னவோ சௌதாம்பிகை இருவரின் தனிமையில் அநாவசியமாக நுழைவது இல்லை. முடிந்தால் ஆகாஷையும் தன்னுடன் வைத்துக் கொள்வார். அந்த அளவிற்கு இங்கிதம் தெரிந்தவர்.

"அத்தை! நீங்க பேசிக்கிட்டு இருங்க..." என்றபடி, தாய்க்கும், மகனுக்கும் தனிமை கொடுக்க எண்ணி, அறையிலிருந்து வெளியேற எத்தனித்தாள் ஆர்த்தி.

"நீயும் இரும்மா. உனக்குத் தெரியாமல் ஒரு ரகசியமும் கிடையாது."

இதுதான் வாழ்க்கையின் சூட்சமம். வீட்டிற்கு வாழ வந்த மருமகளிடம் நீ வேறு, நாங்கள் வேறு என்று வேற்றுமை காண்பிக்கும்போதுதான் அவர்களின் மனதிலும் வேற்றுமை ஆரம்பிக்கும்.

சௌதாம்பிகை அதை நன்கு உணர்ந்ததாலோ என்னவோ, எந்த ஒரு விசயத்திலும் ஆர்த்தியிடம் கலந்து ஆலோசிக்காமல் செய்வதில்லை.

ஆர்த்தியும் அதைப் புரிந்து கொண்டவளாய்ப் புகுந்த வீட்டு ரகசியத்தைத் தன் பிறந்த வீட்டில் கூடக் கூறியதில்லை.

"அர்ஜுன், ஜனனி இங்கே வந்து ஐந்தாறு நாட்கள் ஆகிவிட்டன. அங்கேயும் போக மறுக்கிறாள். அவள் மனசில் என்ன இருக்குன்னு தெரியலை. அவளை நினைச்சாக் கலக்கமா இருக்கு." மனதின் வேதனையை மகனிடம் கூறிப் புலம்பினார்.

"அம்மா, கவலைப் படாதீங்க. ரஞ்சன் பத்தி உங்களுக்கு நல்லாத் தெரியும். இங்கே ஜனனியை விட்டு வச்சிருக்கான் என்றால், ஏதாவது காரணம் இருக்கும். அவன் ஜனனியை நம்மை விட நல்லாப் பார்த்துப்பான். நாளைக்கு எதுக்கும் அவனைப் போய்ப் பார்க்கிறேன்."

"அத்தை, நான் வேணும்னா ஜனனியிடம் பேசிப் பார்க்கட்டுமா?" ஆர்த்தி கேட்டதும்,

"தாராளமாச் செய்ம்மா... நீ அவளுக்கு நல்லதுதான் செய்வேனு எனக்குத் தெரியாதா?" - சௌதாம்பிகை தன் சம்மதத்தை அளித்தார்.

சௌதாம்பிகை சென்றதும், ஆர்த்தி நேரே ஜனனியின் அறைக்குச் சென்றாள். அங்கு சென்று பார்த்தபோது ஜனனி தூங்கியிருந்தாள்.

மனதின் அலுப்பு உடலை அழுத்துகிறது போல. அதான் இவ்வளவு விரைவாக உறங்கி விட்டிருக்கிறாள்.

முன்பு ஜனனியும் ஸ்ரீரஞ்சனும் வந்தால் இரவு பன்னிரண்டு மணி வரை அரட்டைக் கச்சேரி களை கட்டும். ஆனால் இப்பொழுது....?

அவளையும் அறியாமல் அவளிடமிருந்து பெருமூச்சு வெளிப்பட்டது.



ஜனனியின் தூக்கம் கலையாமல் அவளுக்குப் போர்த்தி விட்டவள், அப்பொழுதுதான் அதைப் பார்த்தாள்.

எடுத்துப் படித்தவள் மனமோ கனமானது. அதை அப்படியே கணவனிடம் கொண்டு வந்து காண்பித்தாள்.

அதைப் படித்து விட்டு அர்ஜுனும் யோசனையில் ஆழ்ந்தான்.

இரவு மணி பத்து.

ஸ்ரீரஞ்சன் வீட்டில் அவன் வருகைக்காக வழி மேல் விழி வைத்துக் காத்திருந்தாள் திவ்யா. முதலில் திவ்யா யார் என்று சொல்லி விடுகிறேன்.

ஸ்ரீரஞ்சனின் தம்பி ஸ்ரீகாந்தின் மனைவி காவ்யாவின் தங்கைதான் இந்த திவ்யா. அதாவது மல்லிகாவின் தம்பியின் மகள்தான் இந்தக் காவ்யாவும் திவ்யாவும்.

மல்லிகாவின் மனதில் தன் தம்பியின் இரு மகள்களையும் மருமகளாக்கிக் கொள்ள வேண்டும் என்று ஆசை இருந்தது. அது நிராசையானது ஸ்ரீரஞ்சனின் காதலால்.

வேறு வழியின்றி அவன் காதலுக்குச் சம்மதித்தவர், தம்பியின் மூத்த மகளை இரண்டாவது மகனுக்குத் திருமணம் முடித்து எப்படியோ தம்பியின் ஒரு மகளை யாவது தன் மருமகளாக்கிக் கொண்டார்.

அக்காவின் திருமணத்தின்போது கூட ஸ்ரீரஞ்சன் மீது திவ்யாவிற்கு ஈர்ப்பு இருந்ததில்லை.

அப்பொழுது அவளுக்குப் பத்தொன்பது வயது. அதிலும் அவன் திருமணமாகி ஒரு குழந்தைக்குத் தகப்பன் என்றபோது பெரிதாக அவனைப் பற்றி அவள் நினைக்க வில்லை.

ஆனால் கடந்த ஒரு வருடமாக அவன் மீது காதல் கொண்டு தவிக்கிறாள். ஸ்ரீரஞ்சன் மீது அவள் காதல் கொண்ட தருணத்தை அவள் இப்பொழுது நினைத்தாலும் உடல் சூடேறும்.

காவ்யாவின் குழந்தை ஆஷிஷ் பிறந்தபோது, திவ்யா இங்கு வந்திருந்தாள். அப்படித் தங்கியிருந்த போது ஒரு நாள் காலைப் பொழுதில் எழுந்தவள் கீழே போக எண்ணித் தன் அறையை விட்டு வெளியில் வந்தாள்.

ஸ்ரீரஞ்சனின் அறையைத் தாண்டித்தான் திவ்யா கீழே செல்ல வேண்டும். எதேச்சையாக அவள் பார்வை லேசாகத் திறந்திருந்த கதவின் மீது படிந்தது. அங்கு கண்ட காட்சி அவளை நிலை தடுமாறச் செய்தது.

அங்கு ஸ்ரீரஞ்சன் படுக்கையில் அமர்ந்த வாக்கில் இருந்து கொண்டே, தன் அருகில் நின்று கொண்டிருந்த மனைவியின் இடையில் கிள்ளினான். எதிர்பாராமல் அவன் செய்த செயலில் அவனை முறைத்துப் பார்த்தாள் ஜனனி.

ஆனால் அவனோ அவளின் கோபத்தைச் சிறிதும் கண்டு கொள்ளாமல் அவளை இடையோடு அணைத்து அவள் வயிற்றில் முகம் புதைத்தான்.



ஜனனியோ சிரித்தபடி அவன் தலை முடியை வருடிக் கொடுத்தாள்.

ஸ்ரீரஞ்சனின் இந்தச் செயலைச் சிறிதும் திவ்யா எதிர்பார்க்கவில்லை. அங்கு அதற்கு மேல் நிற்காமல் தன் அறைக்கு வேகமாகச் சென்றாள்.

கட்டிலில் வந்தமர்ந்தவளுக்குப் படபடப்பு அடங்க வில்லை. ஸ்ரீரஞ்சனை அவள் எப்பொழுதும் கம்பீரமாக ஒருவித அழுத்தத்துடன் தான் பார்த்திருக்கிறாள்.

ஆனால் இன்று இது போல் ஒரு தோற்றத்தில் அவனைப் பார்த்தது இல்லை.

அவனின் கண்களில் வழிந்த காதல் தாபம் எல்லாம் திவ்யாவின் வயதின் தாகத்தை அதிகப்படுத்தியது.

அவளின் தாகத்தைத் தீர்க்க ஸ்ரீரஞ்சனால் மட்டுமே முடியும் என்பதை உணர்ந்தாள்.

அந்தக் கணம் ஜனனிக்குப் பதில் அந்த இடத்தில் தான் இருந்தால்... அந்த நினைப்பே அவளுக்குத் தித்திப் பாய் இருந்தது.

ஏன் இப்படி ஒரு எண்ணம் தோன்றியது என்று மனதில் நினைத்தவளுக்கு ஸ்ரீரஞ்சன் மேல் அவளுக்குக் காதல் வந்துவிட்டது என்பதே விடையாகத் தோன்றியது. முதலில் இருந்தே அவன் மேல் தனக்கு ஈர்ப்பு இருந்திருக்க வேண்டும்.

அதுதான் இப்படி நினைக்க வைத்திருக்கிறது என்று எண்ணியவள் முகம் வெட்கத்தில் சிவந்தது.

ஸ்ரீரஞ்சனுக்கும் அவளுக்கும் இடையில் பன்னிரண்டு ஆண்டுகள் வித்தியாசம். அதிலும் அவன் ஒரு குழந் தைக்குத் தகப்பன் என்ற நினைவு அவளுக்கு அந்த நிமிடம் வரவில்லை.

அதன் பின் அங்கு அடிக்கடி வர ஆரம்பித்தாள். அங்கு வரும்போது எல்லாம் ஸ்ரீரஞ்சன், ஜனனியைக் கவனித்துப் பார்க்க ஆரம்பித்தாள்.

அப்படிக் கவனிக்கும் போதுதான் மல்லிகாவிற்கு ஜனனியின் மேல் இருக்கும் அதிருப்தியைக் கண்டு கொண்டாள்.

அதை மல்லிகாவிடமே கேட்கும்போதுதான் அவரது ஆதங்கம் புரிந்தது.

"என்ன செய்ய திவிம்மா...? உங்க ரெண்டு பேரையும் மருமகளாக்கிக்கலாம்னு நினைச்சேன். நாம ஒண்ணு நினைக்க கடவுள் ஒண்ணு நினைக்கிறாரு. எவளோ ரோட்டில் போற ஒருத்தி இங்கே வந்து அதிகாரம் பண்றதைத்தான் என்னால ஜீரணிக்க முடியலை. இனி என்ன செய்ய முடியும், சொல்லு."

"அத்தை, இப்பவும் ஒண்ணும் கெட்டுப் போயிடல. உங்க மகன் இருக்கிற பர்சனாலிட்டிக்குப் பொண்ணுங்க கியூவில் வந்து நிப்பாங்க."

"அடப் போ திவி... அவன் இன்னும் அந்த ஜனனி மயக்கத்தில் இருக்கான். நானும் என்னலாமோ பண்ணிப் பார்த்துட்டேன். ம்ஹூம். ஒண்ணும் நடக்கல."



அவரும் பல வழிகளில் முயற்சி செய்து தோற்றுப் போனவராய் அலுத்துப் போய்ப் பேசினார். ஜனனியைப் பலவாறு பேசிப் பார்த்தார்.

அப்படியாவது அவள் தன்னிடமும், ரஞ்சனிடமும் சண்டை போடுவாள். அதைச் சாக்காக வைத்து இருவ ரையும் நிரந்தரமாகப் பிரித்து விடலாம் என்று எண்ணி னார்.

ஆனால் அவளோ அவரை எதிர்த்தும் பேச வில்லை. மகனிடமும் சண்டை போடவில்லை. அதைவிட அவர்களின் நெருக்கம் இன்னமும் கூடியது கண்டுதான் அவர் மனம் தாங்கவில்லை.

"மாத்திக் காட்டட்டா..."

கண் சிமிட்டிச் சொன்ன திவ்யாவைக் கண் இமைக் காமல் பார்த்தார் மல்லிகா.

"உன் மனதில் ரஞ்சி மீது..." - மல்லிகா முடிக்காமல் இழுக்க...

திவ்யாவோ வெட்கத்துடன், "ஆம்..." என்று தலையை அசைத்தாள்.

"அப்படி மட்டும் செய்திட்ட... அடுத்த முகூர்த்தத்தில் உனக்கும் ரஞ்சிக்கும் கல்யாணம்." - தம்பியின் மகள் முகத்தைப் பாசத்துடன் நெட்டி வழித்தார்.

"நீங்க மட்டும் கொஞ்சம் என் கூட கோவாப்ரேட் பண்ணுங்க. அப்புறம் பாருங்க. என்ன நடக்குதுன்னு!"

திவ்யாவின் செயலுக்கு அப்பொழுதே மல்லிகா ஒப்புதல் அளித்தார்.

அதற்குக் காவ்யா மற்றும் ஸ்ரீமதி சேர்ந்து திவ்யாவை ஆதரித்தனர். மகளிர் நால்வர் அணி சதி வேலை செய்ய ஆலோசனை நடத்தியது.

ஏற்கெனவே திவ்யாவின் மனதில் பேயாட்டம் போட்டுக் கொண்டிருந்த ஸ்ரீரஞ்சன் மீதான மயக்கம் இப்பொழுது மல்லிகாவின் ஆசிர்வாதத்தில் இன்னமும் அதிகமானது.

திவ்யா அங்கு வரும்போது எல்லாம் ஸ்ரீரஞ்சனிடம் வேண்டுமென்றே பேச்சு வளர்த்தாள். அவனுடன் வெளியில் ஊர் சுற்றக் கிளம்பிச் சென்றாள். அதிலும் முக்கியமாக, விது பள்ளி சென்ற நேரம் பார்த்துதான் அவனுடன் கிளம்பினாள். அதிமுக்கியமாக ஸ்ரீமதியையும் தன்னுடன் கூட்டிச் செல்வாள்.

அப்பொழுதுதானே ஜனனியைத் தவிர்க்க முடியும். ஸ்ரீமதியோ கொஞ்ச தூரம் சென்றதும் வேலை இருப்பது போல் காட்டிக் கொண்டு, அவர்களிடமிருந்து கழன்று கொள்வாள். இதை எல்லாம் அறியாத ஸ்ரீரஞ்சனோ அவளுடன் செல்வான்.

திவ்யாவிற்கும் அவன் தங்கை ஸ்ரீமதிக்கும் ஒரே வயது. அதனாலோ என்னவோ அவன் திவ்யாவை வேறு மாதிரி நினைத்தது இல்லை. அவன் தங்கை மாதிரிதான் நினைத்திருந்தான். அதிலும் அவள் அவன் தாய்மாமன் மகள் வேறு. சிறு வயதிலிருந்து அவன் பார்த்து வளர்ந்தவள். அதனால் அவன் மனதில் எந்தவிதச் சலனமும் இல்லை.



எப்பொழுதோ வரும் திவ்யாவிற்காக அவன் வேலைகள் எல்லாம் ஒதுக்கி வைத்து விட்டு, அவளுக்காக அவளை வெளியில் கூட்டிச் செல்வான்.

ஏனென்றால் சிறியவளான அவள் மனம் கஷ்டப்படுவதை அவன் விரும்பவில்லை.

ஏன் அவன் அம்மாவோ, இல்லை மற்றவர்களோ அழைத்துப் போனால் என்ன என்று கூட அவனால் தவறாக நினைக்க முடியவில்லை. ஆனால் திவ்யாவின் மனதில் இருக்கும் கல்மிஷத்தை அவன் அறிய மாட்டானே.

ஸ்ரீரஞ்சனிடம் திவ்யா நெருங்கும்போது எல்லாம் ஜனனியின் முகம் சுருங்குவதை அவளையும் அறியாமல் கவனித்து வந்தாள் திவ்யா. அது அவளுக்குச் சந்தோஷத்தைக் கொடுத்தது.

ஆனால் ஜனனியை அவளால் நெருங்க முடியவில்லை. ஏனெனில் ஸ்ரீரஞ்சன் அவளுடனே இருந்தான்.

அவன் எப்பொழுது அவளை விட்டுப் பிரிவான் என்று சந்தர்ப்பம் கிடைக்கக் காத்திருந்தாள். அப்பொழுதுதான் ஸ்ரீரஞ்சன் முதன் முறையாக ஜனனியை விட்டு விட்டு வெளிநாடு செல்ல இருக்கிறான் என்ற தகவல் கிடைத்தது. அவன் சென்ற மறுநாளே அவள் தன் அத்தை வீட்டிற்கு வந்து இறங்கினாள்.

திவ்யா வந்து இறங்கியது முதல் ஜனனியின் மனதைக் கலைக்கப் பல விதங்களில் முயன்றுதான் பார்த்தாள். ஆனால் பலன் என்னவோ பூஜ்யம்.

ஜனனியோ ஒன்றும் பேசாமல் தான் உண்டு, தன் வேலை உண்டு என்று இருந்தாள். இடையில் ஒரு நாள் ஜனனி இந்த வீட்டை விட்டுச் சென்று விட்டாள்.

ஏன்... எதனால் என்று திவ்யாவிற்கும் மற்றவர்களுக்கும் தெரியவில்லை. தான் அவளை வம்பிழுக்கும் போது எல்லாம் சும்மா இருந்தவள்... திடீரென்று ஏன் இப்படிச் செய்தாள் என்று திவ்யாவிற்குப் புரியவில்லை.

எப்படியோ எதிரி ஒழிந்தாள் என்று மனதினுள் சந்தோசப்பட்டுக் கொண்டாள்.

அவள் மீது ஸ்ரீரஞ்சனுக்குச் சந்தேகம் வரக் கூடாது என்று ஊருக்குச் சென்றவள் அவன் வெளிநாட்டில் இருந்து வந்திருக்கும் விபரம் கிடைத்து இதோ மீண்டும் இன்று மதியம்தான் தன் அத்தை வீட்டிற்கு வந்திருக்கிறாள்.

இனி ஸ்ரீரஞ்சன் தனக்குத்தான் என்று எண்ணியவள் பலவிதக் கற்பனைகளில் ஆழ்ந்தாள்.

"என்ன மருமகளே... ரொம்பச் சந்தோஷமா இருக்க போலிருக்கு?" மல்லிகாவின் குரலில் கனவிலிருந்து கலைந்தாள் திவ்யா.

"என்ன அத்தை கேட்டீங்க?"

"ஓஹோ கதை அப்படிப் போகுதோ? எந்த ஊரில் டூயட் பாடுனீங்க?"



"ஐயோ அத்தை... சும்மா சும்மா கேலி பண்ணாதீங்க." மல்லிகாவின் பேச்சில் வெட்கத்தில் முகம் சிவந்தாள் திவ்யா.

"எப்படியோ என் மகனைக் கைக்குள் போட்டுக் கொண்டு இந்த வீட்டுக்கு மருமகளா வரப் பாரு. என்ன புரிஞ்சுதா?"

திவ்யா எழுந்து வந்து மல்லிகாவைக் கட்டிப் பிடித்து அணைத்துக் கொண்டு கன்னத்தில் முத்தம் கொடுத்தாள்.

அதற்குள் ஸ்ரீரஞ்சன் கார் வரும் ஒலி கேட்டது.

"திவ்யா, என்னைக் கட்டிப் பிடிச்சி முத்தம் கொடுத்து ஒண்ணும் ஆகப் போறதில்லை. உன் அத்தானைக் கட்டிப் பிடிச்சி முத்தம் கொடுத்தாலாவது ஏதாவது நடக்கும்." மல்லிகா திவ்யாவைக் கேலி பேசினார்.

"ச்சீ... போங்க அத்தை..." என்று வெட்கப்பட்டவள், ஸ்ரீரஞ்சனின் வரவை எதிர்கொள்ளத் தயாரானாள்.

## 7

"ஹாய் திவி, வாட் அ சர்ப்ரைஸ்? எப்போ ஊரில் இருந்து வந்த?"

அந்த நேரத்தில் திவ்யாவைப் பார்த்ததும் ஸ்ரீரஞ்சன் ஆச்சரியத்துடன் அவளை வரவேற்றான்.

"ஹாய் ரஞ்சி அத்தான்... உங்களை எல்லாம் பார்க்காம இருக்க முடியல. அதான் வந்துட்டேன்..."

என்றபடி எழுந்து அவன் அருகில் சென்று தோளோடு அணைத்து வரவேற்றாள் திவ்யா.

மேல்தட்டு வர்க்கத்தில் அதுவும் இப்பொழுது இருக்கும் கணினிக் காலத்தில் அவள் செய்தது அவனுக்கு ஒன்றும் தவறாகத் தோன்றவில்லை. பதிலுக்கு அவனும் அவளை லேசாக அணைத்து விலக்கினான்.

ஒரு நொடிதான் அவனை அணைத்தது என்ற போதும் அவனிடமிருந்து வந்த அவனுக்கே உரிய பிரத்யேக நறுமணத்தில் அப்படியே திவ்யா கிறங்கிப் போய் நின்றாள்.

"ரஞ்சி... சாப்பிட வா."

மல்லிகாவின் குரலில்தான் திவ்யா மயக்கத் திலிருந்து விடுபட்டாள்.

ஸ்ரீரஞ்சன் மல்லிகாவிற்குப் பதில் சொல்லாமல் உணவு மேஜை நோக்கி நடந்தான்.

அவர் என்று தன் மனைவி, மகளைப் பற்றிக் கேட்கவில்லையோ அன்றே அவன் அவரிடம் பேசுவதைக் குறைத்து விட்டான். கேட்கும் கேள்விக்கு மட்டும் பதில் தந்தான். அதை மல்லிகா உணர்ந்தாரா இல்லையா என்று அவனுக்குத் தெரியாது.

அவரிடம் ஜனனி பற்றி விசாரிக்கலாம் என்றால் நிச்சயம் அவன் கேட்கும் கேள்விக்கு அவரிடமிருந்து சரியான பதில் வராது. எதையாவது சுற்றி வளைத்துப் பேசி ஜனனி மேல் தவறு என்று அழகாகப் பதில் சொல்லி



விடுவார். அதை அவன் எத்தனையோ சமயங்களில் கண்கூடாகப் பார்த்திருக்கிறான்.

தனிக்குடித்தனம் போய் விடலாம் என்று பல முறை யோசித்திருக்கிறான்.

ஆனால் வீட்டின் தலைமகனான அவனுக்கும் சில பொறுப்புகள் இருக்கிறது. அதில் முக்கியமானது, தங்கை ஸ்ரீமதியின் திருமணம். அதன் பின்தான் அவன் வேறு ஏதும் யோசிக்க முடியும்.

தன் யோசனையிலேயே இருந்தவன் கால்கள் உணவு மேஜை நோக்கிச் செல்ல...

அவன் பின்னோடு வந்த மல்லிகாவிடம் திவ்யா, "நீங்க போய்ப் படுங்க அத்தை. நான் அத்தானுக்குச் சாப்பாடு எடுத்து வைக்கிறேன்..." என்றவள், ரஞ்சனிடம்,

"பாவம் அத்தை. வயசானவங்க இல்ல... அதான்." அவனிடம் தன் செயலுக்கு விளக்கம் வேறு அளித்தாள்.

ஸ்ரீரஞ்சன் ஒன்றும் பேசவில்லை. புன்னகையுடன் சாப்பிட அமர்ந்தான்.

மல்லிகாவோ ரஞ்சனுக்குத் தெரியாமல் திவ்யாவிடம் கட்டை விரலை உயர்த்திக் காண்பித்துக் கண் சிமிட்டிச் சென்றார். பதிலுக்குத் திவ்யாவும் விரலை உயர்த்திக் காண்பித்தாள்.

"அப்புறம் படிப்பு எல்லாம் முடிஞ்சாச்சு. அடுத்து மேரேஜ்தானா?" உணவை எடுத்து வாயில் வைத்துக் கொண்டே ஸ்ரீரஞ்சன் திவ்யாவிடம் கேட்டான்.

"இப்ப அதுக்கு என்ன அவசரம் அத்தான். கொஞ்ச நாள் ஃப்ரீயா இருக்கேனே..."

"அதென்ன இப்படிச் சொல்லிட்ட. இப்ப பார்க்க ஆரம்பித்தால்தானே சரியாய் இருக்கும். ஸ்ரீமதிக்கு உன் வயசுதான். அலையன்ஸ் பார்த்துட்டே இருக்கோம். செட்டாகிடுச்சுன்னா மேரேஜ் முடிச்சிட வேண்டியதுதான். உனக்கு எப்படி மாப்பிள்ளை வேணும்னு சொல்லு. இதோடு சேர்ந்து பார்க்கலாம்."

"நீங்கன்னா ஓ.கே."

திவ்யா அவளையும் அறியாமல் வாய் தவறிக் கூறி விட்டாள். அடிமனதின் ஆசை வாய் வார்த்தையாய் வெளி வந்துவிட்டது போலும். அவள் கூறியதன் அர்த்தம் புரியாமல் அவளை நோக்கி என்ன என்பது போல் பார்த்தான் ஸ்ரீரஞ்சன்.

"அதாவது உங்களை மாதிரின்னு சொன்னேன், அத்தான்." ஒரு வழியாய்ச் சமாளித்தாள்.

"ஓஹ்... அப்படியா? பார்த்துட்டாப் போச்சு..." என்றவன், உணவில் கவனத்தைச் செலுத்த ஆரம்பித்தான்.

"என்னமோ சாப்பாட்டையே காணாத மாதிரிச் சாப்பிடறதைப் பாரு. பக்கத்திலேயே இவ்வளவு அழகான பொண்ணு இருக்காளே... அவளை சைட் அடிப்போமேன்னு கொஞ்சமாவது நினைப்பு இருக்கா? லூசு லூசு. அந்தக் குண்டுப் பூசணிக்காவை மட்டும் கொஞ்சத் தெரியும். அவளை விட நான் எந்த விதத்தில் குறைஞ்சு இருக்கேன்."



ஸ்ரீரஞ்சன் அவளைக் கண்டு கொள்ளாமல் இருந்ததில் மனதினுள் பொருமித் தள்ளி விட்டாள் திவ்யா.

பின்னே அவனுக்காக அவள் பார்த்துப் பார்த்து அலங்காரம் செய்து கொண்டது எல்லாம் வீண் என்பது போல் இருந்தது அவனின் செய்கை.

கொஞ்சம் பூசினாற் போன்ற அமைப்பை உடைய ஜனனியைக் கண்டு ஜீரோ சைஸில் இருக்கும் திவ்யா அவள் மேல் பொறாமைப் பட்டாள்.

முதலில் இருந்த அதாவது திருமணத்திற்கு முன் இருந்த ஸ்ரீரஞ்சனாக அவன் இருந்திருந்தால் அவன் அவளைப் பார்த்து ரசித்திருப்பான்தான்.

அப்பொழுது அவன் அழகான பெண்களை ரசிக்கத் தான் செய்தான். இல்லை என்று சொல்லி விட முடியாது. எல்லாம் வரைமுறைக்கு உட்பட்டுத்தான் ரசித்தான்.

என்று ஜனனியைப் பார்த்துக் காதலில் விழுந் தானோ அன்று முதல் அவன் மாறித்தான் போனான்.

ஜனனியின் அழகில் மயங்கியவன் கண்களுக்கு வேறு பெண்களின் அழகு கண்ணில் விழவும் இல்லை. கருத்தில் படவும் இல்லை.

இப்பொழுது எல்லாம் ஆண்களைப் பார்க்கும்போது இருக்கும் மனநிலைதான் பெண்களைப் பார்க்கும் போதும் அவனுக்கு இருக்கிறது.

பாவம்... இதைத் திவ்யா உணராததுதான் துரதிர்ஷ்ட மாகிப் போனது.

திவ்யாவின் மனவோட்டத்தை அறியாமல் உண்டு முடித்தவன், கையைக் கழுவிக் கொண்டு வந்தான். "திவி, குட் நைட்."

ஸ்ரீரஞ்சனின் குரலில் நடப்புக்கு வந்தவள், "குட் நைட் அத்தான்..." என்று கூறினாள்.

"அத்தான், வந்ததிலிருந்து பார்க்கிறேன். ஜனனி அக்கா, விதுவைக் காணோமே... எங்கே அவங்க?"

தன் அறைக்குச் செல்ல முயன்றவனைத் தடுத்து நிறுத்தி வேண்டுமென்றே ஒன்றும் அறியாதவள் போல் கேள்வி கேட்டாள்.

"அவள் அவங்க அம்மா வீட்டிற்குப் போயிருக் கிறாள்." கணவன் - மனைவி பிரச்சினையை அவளிடம் கூற அவனுக்கு விருப்பம் இல்லை.

"ஓஹ்... ஏதும் விசேஷமா அத்தான்?" ஒன்றும் அறியாதவள் போல் கேட்டாள்.

"ம்... விசேஷம்தான். நான் இரண்டாம் முறையாக அப்பாவாகப் போகிறேன்."

திவ்யா இதைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. இருவரை ஏதோ சமாளித்தாயிற்று என்று எண்ணிய வளுக்கு மூன்றாவது நபரின் வருகை எதிர்பாராத அதிர்ச்சியை அளித்தது. ஒரு கணம்தான் அதிர்ந்து நின்றாள்.

மறு கணம் தன்னைச் சமாளித்துக் கொண்டு, "கங்கிராட்ஸ் அத்தான்!" என்று அவனை வாழ்த்தினாள்.



"தேங்க்ஸ்..." என்றவன் மனைவி, மகள் ஞாபகத்தில் முகம் கனிந்தவனாய்த் திவ்யாவைக் கூடக் கண்டு கொள் ளாமல் ஏதோ கனவில் நடப்பவன் போல் தன் அறைக்குச் செல்ல மாடியேறினான்.

புன்னகையுடன் சென்றவனை எரிச்சலுடன் பார்த்துக் கொண்டிருந்தவள், அவன் கண்ணிலிருந்து மறைந்ததும் மல்லிகாவின் அறை நோக்கிச் சென்றாள்.

அறைக் கதவு படபடவெனத் தட்டப்படுவதை உணர்ந்து யார் இந்த நேரத்தில்... என்று யோசித்தபடி கதவைத் திறந்தார் மல்லிகா. அங்கு திவ்யா நின்று கொண்டிருப்பதைப் பார்த்தவர் ஆச்சரியப்பட்டார்.

மெல்ல அறைக் கதவை மூடியவர், "என்ன சொல்றான், உன் அத்தான்?" நமட்டுச் சிரிப்புடன் கேட்டார்.

"ம்... சோத்துக்கு உப்பில்லை. சுரைக்காய்க்குப் பருப்பு இல்லைன்னு சொல்றார்."

கோபத்துடன் கூறியவளைப் பார்த்து, "என்னடா ஆச்சு திவி? ரஞ்சி ஏதும் திட்டிட்டானா?" - பரிவுடன் கேட்டார்.

"ஜனனி குழந்தை உண்டாகி இருக்காளாமே... உங்களுக்குத் தெரியுமா?"

மல்லிகாவிற்கு இந்தச் செய்தி புதுசு. உதட்டைப் பிதுக்கியவாறே... இல்லை என்று தலையசைத்தார்.

"ரஞ்சி என்கிட்ட சொல்லவே இல்லை. ஆமாம், அவனுக்கு என்கிட்ட எங்கே பேச நேரமிருக்கு? அவன்

பொண்டாட்டி, புள்ளையைக் கொஞ்சத்தானே நேரம் இருக்கு..." குரலில் ஆற்றாமை நன்கு வெளிப்பட்டது.

"நீங்க கேட்டிருக்க மாட்டீங்க."

"ஆமாம். அதைக் கேட்டு நான் என்ன செய்யப் போறேன்?" - சலித்துக் கொண்டார் மல்லிகா.

"இப்படி இருந்தா அத்தானுக்குச் சந்தேகம்தான் வரும். உறவாடிக் கெடுன்னு கேள்விப்பட்டது இல்லையா? அந்த மாதிரிச் சிரிச்சுக்கிட்டே அவங்களுக்குப் பின்னாடி பள்ளம் தோண்டணும். நீங்க உங்க வெறுப்பை இப்படி வெளிப்படையாக் காட்டினா அத்தானுக்கு நம்ம மேல தான் வெறுப்பு வரும். சந்தேகம் வரும்."

"ஐயோ திவி... உன் மூளை எனக்கு இல்லாமல் போச்சே. இனி, நீ சொல்றபடி நான் கேட்கிறேன்." திவ்யாவை மெச்சிக் கொண்டார் மல்லிகா.

இருவரின் சதியில் ஸ்ரீரஞ்சன் விழப் போகிறானா... இல்லை மீளப் போகிறானா?

படுக்கையில் படுத்த ஸ்ரீரஞ்சனுக்கோ மனைவி மற்றும் மகளின் எண்ணங்கள் மனதில் அலை மோதின. புரண்டு புரண்டு படுத்தவனுக்குத் தூக்கம் வரவில்லை. எழுந்து பால்கனி பக்கம் சென்றவன் அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தான்.

நாளையோடு அவன் ஜனனிக்குக் கொடுத்த இரண்டு நாள் கெடு முடிகிறது. விதுவைத் தன்னோடு கூட்டிக் கொண்டு சென்று விடுவேன் என்று கூறினாலாவது...



அவள் அவனுடன் வேறு வழியின்றி வந்து விடுவாள் என்ற நம்பிக்கையில்தான் அவன் அவ்வாறு கூறியது.

ஏனெனில் ஜனனிக்கு விதுவைப் பிரிந்திருக்க முடியாது என்பது அவனுக்குத் தெரியும். ஏன் அவனை விட்டுக்கூட அவள் இருக்க மாட்டாள்.

ஆனால், இதோ ஐந்தாறு நாட்கள் ஆகியும் அவனைப் பற்றிக் கவலைப்படாமல் இருக்கிறாளே என்று நினைத்தவனுக்கு மனதில் விரக்தி வந்தது.

ஒருவேளை நாளை வர மாட்டேன் என்று சொல்லி விட்டால் என்று நினைக்கும்போதே... இல்லை, அப்படிச் சொல்ல மாட்டாள் என்று இன்னொரு குரல் அவனைச் சமாதானப்படுத்தியது.

மருத்துவர் கூறியது போல் ஜனனியிடம் இரக்கம் காட்டினால், இன்னமும் சுய இரக்கத்தில் நத்தை போல் கூட்டுக்குள் சுருண்டு கொள்வாள். அதனால்தான் அவன் கொஞ்சம் கடுமை காட்டியது.

அந்தக் கடுமைக்கு நிச்சயம் பலன் இருக்கும் என்று நம்பினான்.

அவளை இங்கு கூட்டி வந்து விட்டால் அவன் அருகில் அவள் இருக்கிறாள் என்ற நிம்மதி அவனுக்கும் இருக்கும். அவனின் அன்பில் அவளை எப்படியும் தன் வசம் கொண்டு வந்துவிட முடியும் என்ற நம்பிக்கையும் இருந்தது. அதற்கெல்லாம் அவள் முதலில் இங்கு வரச் சம்மதிக்க வேண்டும்.

ஜனனி சம்மதிப்பாளா என்ற யோசனையில் இருந்தவன் கண்ணில் நிலவு விழுந்தது.

தூரத்தில் தெரிந்த நிலவைப் பார்த்தவனுக்கோ கள்ளங்கபடம் இல்லாத மனைவியின் முகம் ஞாபகம் வந்தது.

நிலவில் ஜனனியின் முகம் கண்டவன் எத்தனை நேரம் அப்படியே பார்த்துக் கொண்டிருந்தானோ தெரியாது. மனதில் கொஞ்சம் கொஞ்சமாக அமைதி பரவியது. அப்படியே அமர்ந்த வாக்கில் தூங்கியும் போனான்.

அலுவலகத்தில் வேலையில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது ஸ்ரீரஞ்சனுக்கு அவன் உதவியாளரிடம் இருந்து அழைப்பு வந்தது.

"சார், உங்களைப் பார்க்க அர்ஜுன் என்பவர் வந்திருக்கார்."

"உடனே அனுப்புங்க..." என்றவன் முகத்தில் சிந்தனை ரேகை படர்ந்தது.

அர்ஜுன் அவன் வேலை நேரத்தில் எப்பவும் வர மாட்டான். என்ன காரணம் என்று யோசித்தவனுக்குக் கிடைத்த ஒரே விடை, அவன் மனைவி ஜனனி.

"ஹாய், அர்ஜுன்! வா... வா. என்ன இந்த நேரத்தில்?"

ஆனால் உள்ளே வந்த அர்ஜுனின் முகமோ குழப்பத்தில் இருந்தது. அவன் ஸ்ரீரஞ்சனின் வரவேற்பைக் கவனிக்கும் மனநிலையில் கூட இல்லை.



அர்ஜுன் ஒன்றும் பேசாமல் தன் பையிலிருந்து ஒரு காகிதத்தை எடுத்து ரஞ்சனிடம் நீட்டினான்.

அர்ஜுனின் குழப்பம் இப்பொழுது ரஞ்சனையும் தொற்றிக் கொண்டது.

கையை நீட்டி அதை வாங்கியவன், அதில் கண்களைப் பதித்தான். அதைப் பார்த்த ரஞ்சனின் இதயம் ஒரு கணம் நின்று துடித்தது.

'உனக்காக
என் ஒரு கன்னத்தில் அறைந்தால்...
மறு கன்னமும் காட்டுவேன்.
உனக்காகச்
சிலுவைகள் சுமப்பேன்.
உனக்காக
என்னையும் தரச் சம்மதமே!
உனக்காக
என் உயிரையும் தரச் சம்மதமே!
உனக்காக
உன்னையே கேட்டால்...?'

இது நிச்சயம் அவன் மனைவி ஜனனியோட கையெழுத்துதான். அந்தக் காகிதம் முழுவதும் ஒன்றின் மீது ஒன்றாக எழுதப்பட்டிருந்த கேள்விக்குறியைப் பார்த்தவனுக்குத் தன் எதிர்காலம் அந்தக் கேள்விக்குறி போல் விடை தெரியாத வினாவாகத் தோன்றி அவன் சிந்தனையை ஸ்தம்பிக்கச் செய்தது.

8

என்ன சொல்வது? என்ன செய்வது என்று தெரியாமல் ஸ்தம்பித்துப் போய் அமர்ந்திருந்த ஸ்ரீரஞ்சனைப் பார்த்த அர்ஜுன், "பின்னாடி திருப்பிப் பாரு ரஞ்சன்..." என்றான்.

அர்ஜுன் சொன்னதும் அவசரமாக அதைத் திருப்பிப் பார்த்தவன் இன்னமும் அதிர்ந்தான்.

'நீ சிரித்தால் நான் சிரிப்பேன்
நீ அழுதால் நான் அழுவேன்
நீ கோபப்பட்டால் நான் புன்னகை கொடுப்பேன்
உன் வருத்தம் என் வருத்தம்
உன் துக்கம் என் துக்கம்
உன் விருப்பம் என் விருப்பம்
உன் கனவு என் கனவு
உன் ஆசை என் ஆசை
உன் ஆசைக்காக உன் விருப்பத்திற்காக
உனக்காக உன்னையே விட்டுக் கொடுப்பேனோ?'

அதன் கீழே ஜன(ரஞ்ச)னி என்று அவன் பெயரையும், அவள் பெயரையும் இணைத்து 'ரஞ்ச' என்ற வார்த்தை மட்டும் இதய வடிவத்திற்குள் எழுதியிருந்தாள் ஜனனி.

அதைப் பார்த்ததும் ரஞ்சன் முகத்தில் லேசாகப் புன்னகை அரும்பியது. அது கொஞ்ச நேரம்தான். அவள் எழுதி இருந்ததன் கருத்து மனதில் பட, முகம் வேதனையில் சுருங்கியது.



"அர்ஜுன், என்ன இது? ஏன் ஜனனி இப்படி எழுதியிருக்கா?"

"ரஞ்சன்... என்னிடம் கேட்டால்...? நீதான் சொல்ல வேண்டும்."

"இவள் இப்படி எழுதும் அளவிற்கு எங்கள் இருவருக்கும் இடையில் எந்தப் பிரச்சினையும் கிடையாது."

"இதைப் பார்க்கும்போது அவள் மனதில் உள்ள வேதனை புரியுது. அவள் கவிதை என்று எழுதி நாங்கள் எல்லாம் பார்த்தது இல்லை. அப்படிப்பட்டவள் தன் மன வேதனையை இப்படி வார்த்தைகளில் எழுதியிருக்கிறாள் என்றால் அதைச் சாதாரணமாக எடுத்துக் கொள்ளவும் முடியாது, ரஞ்சன்." - அர்ஜுனின் குரலிலும் வருத்தம் நிரம்பி இருந்தது.

"ஜனனியை நான் எந்த அளவிற்கு நேசிக்கிறேன் என்று உனக்குத் தெரியும்தானே, அர்ஜுன். அவளை விட்டு விட்டு வேறொரு பெண்ணுடன் நானா? ச்சே... நினைக்கவே அருவருப்பா இருக்கு. ஒரு வேளை ஜனனிக்கு ஏற்பட்ட மனக்குழப்பத்தில் தேவையில்லாமல் இப்படிச் சிந்திக்கிறாளோ?"

"ரஞ்சன், நீ சொல்வது போல் வைத்துக் கொண்டாலும் ஜனனிக்கு இந்த மனக் குழப்பம் எதனால் வந்தது?"

அர்ஜுனின் கேள்வியில் அப்படியே திகைத்து விட்டான் ஸ்ரீரஞ்சன். இதை எப்படி அவன் யோசிக்காமல் போனான்?

"அர்ஜுன், இந்தக் கோணத்தில் நான் யோசிக்கவே இல்லை."

"உன் மீது தப்பு இல்லை என்று எனக்கும் புரிகிறது. ஆனால் இதில் நீயும் சம்பந்தப்பட்டு இருக்கிறாய். நான் சொல்கிறேன் என்று தப்பாக நினைத்துக் கொள்ளாதே. உன் வீட்டில் யாரும்....."

எப்படிச் சொல்வது என்று அர்ஜுனுக்குத் தெரிய வில்லை.

ஸ்ரீரஞ்சன் மட்டுமே அவன் தங்கையை விரும்பித் திருமணம் செய்தவன். ஆனால் அவன் வீட்டாருக்கு இதில் அதிருப்தி இருப்பதை அர்ஜுனே கண்கூடாகக் கண்டிருக் கிறான்.

அதைச் சில சமயம் தன் தங்கையிடம் கேட்டும் இருக்கிறான்.

ஆனால் அவளோ, "அண்ணா, வீணா மனதைப் போட்டுக் குழப்பிக்காதீங்க. நான் இங்கே சந்தோஷமா இருக்கேன். அவர் என்னை நல்லாப் பார்த்துக்கிறார், போதுமா...? அவங்க வீட்டில் உள்ளவர்களுக்கு உள்ள மன வருத்தம் நியாயமானதுதானே.

"அவருக்கு எந்த மாதிரிப் பெண் கொண்டு வர வேண்டும் என்று எவ்வளவு கற்பனை பண்ணியிருப் பாங்க. பாவம். அது நிறைவேறாத வருத்தத்தில் ஏதாவது பேசுவாங்க. அதை நான் கண்டுக்கிறதே இல்லை." சிரித்த முகத்துடன் அவனுக்குப் பதிலைக் கூறி விடுவாள்.



"ரஞ்சன், ஜனனி ஒரு நாளும் உன் வீட்டாரைப் பற்றித் தப்பாச் சொன்னது இல்லை. ஆனால் இந்த அளவுக்கு மன வருத்தப் படுகிறாள் என்றால்... அதான் யோசிக்க வேண்டி யிருக்கு."

தங்கையை அவள் கணவன் தப்பாக நினைத்து விடக் கூடாதே என்று அவசரமாகக் கூறினான்.

"ஜனனியைப் பற்றி எனக்கு நல்லாத் தெரியும். வீட்டில் உள்ளவர்கள் அப்படித் தவறாக நடந்திருக்க வாய்ப்பு இல்லை. திருமணம் முடிந்த புதிதில் அம்மா வுக்குக் கொஞ்சம் ஜனனி மேல் அதிருப்தி இருந்தது என்னவோ உண்மைதான். இப்பவும் அவங்க இப்படி அப்படி நடந்தாலும் நேரிடையா அவகிட்ட எதுவும் பேச மாட்டாங்க. அதிலும் எனக்காக எதுவும் பேச மாட்டாங்க.

"ஜனனியும் மற்றப் பெண்கள் மாதிரி வம்புக்குப் போவது இல்லை. ஆறு வருடம் இல்லாத பிரச்சினை இப்போ வந்திருக்கு என்றால் யோசிக்கவும் வேண்டும். அர்ஜுன், நீ சொன்னது போல் நடந்திருந்தால் நான் பார்த்துக் கொள்கிறேன். ஜனனியை நான் நல்லாப் பார்த்துக் கொள்வேன் என்ற நம்பிக்கை உனக்கு இருக் கிறதுதானே?"

"என்ன ரஞ்சன் உன்னை நம்பாமல் வேறு யாரை நம்பப் போகிறேன்? என் தங்கையை எங்களை எல்லாம் விட நீ நன்றாகப் பார்த்துக் கொள்வாய் என்று எனக்குத் தெரியாதா என்ன?"

"அப்ப சரி, அர்ஜுன். கிளம்பலாமா?"

அர்ஜுனிடம் சொல்லியபடி எழுந்த ஸ்ரீரஞ்சன், மறக்காமல் அந்தக் காகிதத்தை நான்காக மடித்துத் தன் சட்டைப் பையில் வைத்துக் கொண்டான்.

"எங்கே?"

"இதற்கு மேலும் அவளைத் தனியே உங்க வீட்டில் விட்டு வைப்பதில் நியாயம் இல்லை. எந்தப் பிரச்சினை என்றாலும் நான் பார்த்துக் கொள்கிறேன். இன்னைக்கு எப்படியாவது அவளை என்னுடன் கூட்டிக் கொண்டு போகப் போகிறேன்."

ஸ்ரீரஞ்சன் சொன்னதைக் கேட்டு நெகிழ்ந்த மன துடன் அர்ஜுன் அவனுடன் தன் வீட்டிற்குக் கிளம்பினான்.

"அம்மா, ஜனனி எங்கே?"

அர்ஜுன் சௌதாம்பிகையிடம் கேட்டான்.

அப்பொழுதுதான் ஸ்ரீரஞ்சனும் அவனும் வீட்டிற் குள் நுழைந்திருந்தனர்.

"வாங்க மாப்பிள்ளை..." என்று ஸ்ரீரஞ்சனை வரவேற்றவர், மகனிடம், "எப்பொழுதும் போல் அவள் ரூமில்தான் இருப்பாள்."

அவரின் குரலில் கவலை நிரம்பியிருந்தது.

"அத்தை, அவகிட்ட போய் நான் பேசிப் பார்க் கிறேன்."

ஸ்ரீரஞ்சன் ஜனனியின் அறைக்குள் செல்ல எத்தனித்தான்.



"மாப்பிள்ளை, ஜனனி மனசில் ஏதோ கவலை, குழப்பம் இருந்து அவளை வாட்டுது. இங்கே வந்ததில் இருந்து ஏதோ பறிகொடுத்தவள் போல் இருக்கா. உங்களால மட்டும்தான் அவளுக்கு ஆறுதல் அளிக்க முடியும். நீங்க தயவுசெய்து அவகிட்ட கோபமாப் பேசிடா தீங்க."

"அத்தை, நீங்க கவலைப்படாதீங்க. எல்லாம் சரி யாகப் போகும். நான் பார்த்துக்கிறேன்..." என்றவன், அதற்கு மேல் நிற்காமல் ஜனனி அறைக்குள் நுழைந் தான்.

உள்ளே நுழைந்தவனின் கண்கள் தன் மனதிற் கினிய மனையாளைத் தேடின.

அறையைத் தன் கண்களால் ஒரு முறை வலம் வந்தவன், அங்கு அவளைக் காணாது பால்கனி பக்கம் போய்ப் பார்த்தான்.

நினைத்தபடி ஜனனி அங்கேதான் இருந்தாள். சோகச் சித்திரம் போல் தலை கலைந்து இரவு உடையில் அமர்ந்திருந்தவளைப் பார்க்கும்போது மனம் வலித்தது.

"குட்டிம்மா..." ஸ்ரீரஞ்சனின் குரலில் திடுக்கிட்ட ஜனனி திரும்பிப் பார்த்தாள்.

அங்கு ஸ்ரீரஞ்சன் நிற்பதைக் கண்டு நம்ப முடியாமல் கண்களைக் கூடச் சிமிட்டாமல் அப்படியே உறைந்து போய் அமர்ந்திருந்தாள்.

"உள்ளே வா." அவள் கைப் பிடித்து எழுப்பினான், ஸ்ரீரஞ்சன்.

அவன் கையை உதறும் எண்ணம் மனதில் தோன்றினாலும், அதைச் செயல்படுத்த இயலாதவளாய், அவன் சொன்னதைச் செய்தாள்.

அறை உள்ளே வந்தவள்... கணவன் முகம் பார்த்துப் பேசப் பிடிக்காதவளாய், ஜன்னல் பக்கம் தன் பார்வையைச் செலுத்தினாள்.

ஒரு வேளை அவன் முகம் பார்த்தால் தன் வைராக்கியம் கை விட்டுப் போய்விடும் என்று பயந்தாளோ என்னவோ?

ஸ்ரீரஞ்சன் ஜனனியின் பாராமுகம் கண்டு மனதில் வேதனைப்பட்டான்.

ஆனால் இந்தப் பாராமுகம் அவனுக்குக் கொடுக்கும் வேதனையை விட அவளுக்குக் கொடுக்கும் வேதனை அதிகம் என்பது அவனுக்கும் தெரியும்.

அவன் எந்த அளவு அவள் மேல் நேசம் வைத்திருக்கிறானோ, அந்த அளவு நேசம் அவன் மீது அவளுக்குமே இருக்கிறது. ஏன், அதை விட அதிகமாக இருக்கிறது என்றே சொல்லலாம்.

அதனால் அவள் தன் முகம் பாராமல் முகம் திருப்பியதை அவன் கண்டுகொள்ளவில்லை.

"நான் சொன்ன கெடு இன்றோடு முடிந்து விட்டது. உன் பதில் என்ன ஜனனி?"

வேண்டுமென்றே 'ஜனனி'யில் அழுத்தம் கொடுத்துச் சொன்னான்.



அவனின் ஜனனி என்ற அழைப்பில் அவள் உடல் தூக்கி வாரிப் போட்டது.

"நான் அங்கே வரல."

சொன்னதையே சொல்லுமாம், கிளிப் பிள்ளை. அது போல் சொன்னதையே சொன்ன ஜனனியைக் கண்டு எழுந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு,

"சரி, அதுக்கு அப்புறம் உன் இஷ்டம்..." என்றவன், "நான் போகும்போது விதுவை என்னுடன் அழைத்துப் போகிறேன். அதில் எந்த மாற்றமும் இல்லை."

கதவை நோக்கிச் சென்றான்.

"இல்லை. அவள் என் குழந்தை." ஸ்ரீரஞ்சனைப் பார்த்து ஏறக்குறையக் கத்தினாள்.

ஸ்ரீரஞ்சன் அழுத்தமான காலடியுடன் அவள் அருகில் வந்தவன், "அப்படியா! அது எல்லாம் உனக்கு ஞாபகம் இருக்கா? ஆனால், நான் உன் கணவன். அது மட்டும் ஞாபகம் இல்லை. என்ன...?" வேண்டுமென்றே குரலில் சிறிது கோபத்தைக் கூட்டிக் கேட்டான்.

"அது வந்து..."

"நீ என்னுடன் வந்தால் போதும் என்றுதான் நான் சொல்கிறேன். அதற்கு மேல் உன் இஷ்டம். உனக்காக ஆறு நாட்களுக்கும் மேலாக என் பெண்ணைப் பிரிந்து உன்னிடம் விட்டு வைத்திருந்தேன். இதற்கு மேல் என்னால் பிரிந்திருக்க முடியாது. உனக்கு உன் மகள் மேல் பாசம் இருந்தால் அவளுக்காக வா."

தன் பேச்சில் சிறிது இடைவெளி விட்டவன், "சரி, என்ன பேசினாலும் நீ வரப் போவதில்லை. நான் போறேன்..." என்றவன், அவள் ஏதும் சொல்வாளா என்று அவள் முகம் பார்த்தான்.

அவளோ குனிந்த தலை நிமிரவில்லை.

கணவன் சொல்லியது கேட்டு ஜனனிக்கு என்ன செய்வது என்று தெரியாமல், கணவனை நிமிர்ந்து பார்க்கும் தைரியம் இல்லாது குனிந்த தலை நிமிராமல் நின்றிருந்தாள்.

சிறிது நேரம் கழித்தே அறையில் சப்தம் இல்லாததை உணர்ந்தாள். ஸ்ரீரஞ்சன் போய் விட்டான் என்று அவள் மூளைக்கு எட்டியது. ஆனால் மனதுக்கு எட்டவில்லை.

எல்லாம் முடிந்தது என்று எண்ணியவளால் அதற்கு மேல் கால்கள் நிற்க முடியாமல் தரையில் அப்படியே அமர்ந்தாள். கண்களின் கண்ணீரைக் கூடத் துடைக்க முடியாமல் அப்படியே இருந்தாள்.

"ஹேய் குட்டிம்மா..." என்றபடி அவள் அருகே அமர்ந்த ஸ்ரீரஞ்சன் அவள் கண்ணீரைத் துடைத்தான்.

அவன் எங்கும் போகவில்லை. அங்கேயேதான் இருந்தான். அவளின் ஒவ்வொரு செய்கையையும் அவன் கவனித்துப் பார்த்துக் கொண்டுதான் இருந்தான்.

"சரி, கிளம்பு. போகலாம்."



ஸ்ரீரஞ்சன் வார்த்தையில் அவனை நிமிர்ந்து பார்த்தவள், ஏதோ சொல்ல வாயெடுத்தாள்.

அவள் இதழைத் தன் கரங்களால் மூடியவன், "என்ன... வர முடியாதுன்னு சொல்லப் போறியா? நீ இப்ப கிளம்பல... நானே உன்னைக் குண்டுக்கட்டா தூக்கிட்டுப் போயிடுவேன்."

சிரித்தபடி கூறினாலும், அவன் குரலில் இருந்த உறுதி ஜனனிக்கும் புரியத்தான் செய்தது.

"ஓ.கே. டென் மினிட்ஸ் டைம் தர்றேன். அதுக் குள்ளே சீக்கிரம் கிளம்பு..." என்றவன், அங்கிருந்த கட்டிலில் அமர்ந்து தலையணையை முதுகுக்கு முட்டுக் கொடுத்துச் சாய்ந்தவன், நிதானமாகக் கால் நீட்டி அமர்ந்தான்.

அவன் அறையை விட்டு வெளியில் சென்றவுடன் அவள் மீண்டும் மனம் மாறி விட்டால் என்ன செய்வது?

ஸ்ரீரஞ்சன் குரலில் இருந்த உறுதி, அவன் அங்கு சட்டமாக அமர்ந்திருந்த விதம் எல்லாம்... அவன் சொன்னதைச் செய்யாமல் விடப் போவதில்லை என்று தெளிவாக ஜனனிக்குப் பறை சாற்றியது.

அதை எல்லாம் விட மகளின் அழகு முகம் மனதில் தோன்றி, அவளின் முடிவைப் பரிசீலிக்க வைத்தது.

வேறு வழியின்றி ஜனனி அவனுடன் செல்வது என்று முடிவு செய்தவளாய் உடை மாற்றச் சென்றாள்.

அவனுக்குமே தெரியும், தான் அழுத்திச் சொன்னால் தன் பேச்சை ஜனனி தட்ட மாட்டாள் என்று. அவளின் விருப்பத்திற்காக இத்தனை நாள் இங்கே விட்டு வைத்திருந்தான்.

ஆனால் அதுவே அவர்களிடையே நிரந்தரப் பிரிவை உருவாக்கி விடக் கூடாது என்ற கவலையில்தான் அவ்வாறு பேசினான்.

அவன் வார்த்தைக்கு மதிப்புக் கொடுத்து அவள் தன்னுடன் வரச் சம்மதித்ததே அவனுக்குப் பெரும் சந்தோஷத்தை ஏற்படுத்தியது.

ஸ்ரீரஞ்சன் பின்னே வந்த ஜனனியை ஆச்சரியத்துடன் பார்த்தனர், சௌதாம்பிகை மற்றும் அர்ஜுன்.

அவர்களிடம் விடை பெற்றுக் காரில் ஏறி அமர்ந்த ஜனனி,

இனி மேல் தன் வாழ்வு எப்படிச் செல்லப் போகிறது என்று கலக்கத்துடன் இருந்தாள்.

ஸ்ரீரஞ்சன் அவ்ளைத் திரும்பிப் பார்த்தவன், ஒன்றும் பேசாமல் காரைக் கிளப்பினான்.

## 9

"குட்டிம்மா... வீடு வந்தாச்சு."

ஸ்ரீரஞ்சனின் குரல் ஜனனியின் எண்ணவோட்டத்தை நிறுத்தி நிகழ்காலத்திற்குக் கொண்டு வந்தது.



மெல்ல இறங்கியவள் கண்ணுக்கு அரண்மனை போல் இருந்த அந்த வீட்டின் அழகு கண்ணில் படவில்லை.

ஏதோ பேய் மாளிகைக்கு வந்து விட்டது போல் அவள் அழகிய கண்களில் மிரட்சி தோன்றியது.

தயங்கித் தயங்கி நடந்தாள். ஏனோ கால்கள் முன்னே செல்லப் பிரியப்படாதது போல் பின்னுக்கு இழுத்தன.

அதை எல்லாம் உணராத ஸ்ரீரஞ்சன் அவள் கைப்பிடித்து அழைத்துச் சென்றான்.

"ஹாய் அத்தான்..."

வீட்டின் உள்ளே முதலில் நுழைந்த ஸ்ரீரஞ்சனைக் கண்ட திவ்யா கட்டிப் பிடித்து அவன் தோளில் தொங்கினாள். இந்தத் திவ்யா எங்கிருந்துதான் வந்தாளோ தெரியாது. ஸ்ரீரஞ்சனின் கையைப் பற்றியவள் அதை விடவே இல்லை.

ஸ்ரீரஞ்சன் கையைப் பிடித்திருந்த ஜனனி உள்ளே செல்லலாமா... இல்லை, இப்படியே திரும்பிச் சென்று விடலாமா என்று மனதுக்குள் பட்டி மன்றம் நடத்திக் கொண்டிருந்தவள் கண்ணில் இந்தக் காட்சி பட்டு அவளின் ரத்த அழுத்தத்தை எகிறச் செய்தது.

அவளுக்குத் திவ்யாவை விட ஸ்ரீரஞ்சன் மேல்தான் எரிச்சல் வந்தது. 'அவள்தான் விவஸ்தை இல்லாமல் நடந்து கொள்கிறாள் என்றால் ஒரு பெண் குழந்தைக்குத்

தகப்பனான இவனுக்குப் புத்தி எங்கே போனது?' மனதின் கடுப்பு முகத்தில் தெரிந்தது.

ஸ்ரீரஞ்சனோ திவ்யாவைக் கவனிக்காமல் உள்ளே வராமல் யோசித்துக் கொண்டிருந்த ஜனனியையே பார்த்தான். ஏன் உள்ளே வராமல் இங்கேயே நிற்கிறாள் என்று நினைத்தவன்,

"ஜனனி, என்ன யோசனை? உள்ளே வா."

அவர்கள் இருவர் இருக்கும்பொழுது மட்டும்தான், அதாவது தனிமையில்தான் குட்டிம்மா என்ற அழைப் பெல்லாம்! மற்றவர் முன்னிலையில் எல்லோர் போலவும் ஜனனிதான்.

அவன் அழைத்தும் வராமல் நின்று கொண்டிருந்த ஜனனியைப் பார்த்தவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

ஜனனியை அழைக்க முழுவதும் அவள் புறம் திரும்பும்போதுதான் திவ்யா, தன் மற்றொரு கையைப் பற்றிக் கொண்டு இருப்பதைப் பார்த்தான்.

திவ்யா எப்பொழுதும் அவனைக் கண்டவுடன் செய்யும் செயல்தான்.

ஏனோ இன்று அவனுக்கு எரிச்சலாக இருந்தது. அவன் மனம் முழுவதும் மனைவி மீதான கவலையில் இருந்தது. இதை உணராமல் திவ்யா செய்த நடவடிக்கை இன்று எரிச்சலோடு கோபத்தையும் அளித்தது.

"திவ்யா, எப்பொழுது பார்த்தாலும் கையைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருக்கிறாய். நீ என்ன சின்னப்



பிள்ளையா?" எரிச்சலுடன் மொழிந்தவன், அவள் கையைத் தன் கை மேல் இருந்து அகற்றினான்.

திவ்யாவோ, அவனின் செயலில் முகம் வாடி மனதுக்குள் நொந்து போனாள்.

ஜனனிக்கோ, அவனின் செயலில் முகம் கொஞ்சம் தெளிவானது.

ஸ்ரீரஞ்சன் ஜனனியின் தோள் மீது கை போட்டு அணைவாக அவளை உள்ளே அழைத்துச் சென்றான். ஜனனிக்குத் திருமணம் முடிந்து முதல் முதலில் இங்கு வந்தபோது ஸ்ரீரஞ்சன் நடந்து கொண்டது ஞாபகம் வந்தது.

அன்றும் அப்படித்தான். அவன் வீட்டின் ஆடம்பரம் கண்டு அவள் தயங்கி நிற்கையில், ஸ்ரீரஞ்சன் உன்னுடன் நான் இருப்பேன் என்பது போல் அவள் தோள் பற்றி அணைத்துச் சென்றது இன்றும் அவள் மனதில் பசுமை யாக இருக்கிறது.

அந்த நாள் ஞாபகத்தில் கண்கள் கலங்க அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள்.

அவளின் பார்வை உணர்ந்தோ என்னவோ, அவளைப் பார்த்தவன், அவளின் கண்கள் கலங்கி இருப்பதைப் பார்த்தான்.

"ஹேய், எதுக்கு வீணா கண் கலங்குற? நான் உன் கூடவே இருக்கேன்."

ஜனனியின் காதோரம் குனிந்து மெல்லச் சொன்னவன், தன் அணைப்பை இறுக்கினான். அவனின் அணைப்பில் முகம் சிவந்தவளாய் அதற்கு மேல் தாமதிக்காமல் அவனுடன் சேர்ந்து வீட்டினுள் சென்றாள்.

"என்ன பொண்ணும்மா... நீ! கன்சீவ் ஆனது கூடச் சொல்லாம இப்படி ஆறு நாளா எங்கே போயிட்ட? இங்கே ரஞ்சி கேட்கிற கேள்விக்கு எங்களால பதில் சொல்லி மாளல. போனவ சொல்லிட்டுப் போகக் கூடாதா? நாங்க எப்படித் தவிச்சுப் போயிட்டோம், தெரியுமா?"

மல்லிகா மருமகள் உண்டானதற்கு வாழ்த்துக் கூடச் சொல்லாமல் தன் குற்றப் பத்திரிகையை வாசிக்க ஆரம் பித்தார். என்னவோ மகன் இவரிடம் அவளைப் பற்றிக் கேட்டது போல் இருந்தது, அவரின் பேச்சு.

'நீங்க தவிச்ச தவிப்பு எனக்குத் தெரியாதா! மருமகளும் பேத்தியும் வீட்டை விட்டுப் போய்க் கிட்டத்தட்ட ஒரு வாரமாகுதே.

"அவங்க என்ன ஆனாங்கன்னு கொஞ்சமும் கவலை இல்லாமல் இருந்துட்டு பேசறதைப் பாரு. அட்லீஸ்ட் அதைப் பற்றி என்னிடமாவது கேட்டிருக்கலாம். வாயவே திறக்காம இருந்துட்டு எப்படி இந்த அம்மாவால் இப்படி நடிக்க முடியுது?'

ஸ்ரீரஞ்சன் மனதில் தோன்றியதை வாய் விட்டுச் சொல்ல முடியாமல், தன் கண்களால் எரித்து விடுவதைப் போல், மல்லிகாவைப் பார்த்தான்.



அவர் அவனைப் பார்த்தால்தானே... அதைக் கண்டு கொள்ள!

"அம்மா, கொஞ்சம் பேசாம இருக்கீங்களா?"

ஸ்ரீரஞ்சன் குரல் கொஞ்சம் உயர்ந்து மல்லிகாவை அதட்டியது. இதுநாள்வரை எதுவும் பேசாத மகன் இன்று குரலை உயர்த்தியது கண்டு மல்லிகா இறுக வாயை மூடிக் கொண்டார்.

நம் மரியாதையை நாமே கெடுத்துக் கொண் டோமோ என்று மல்லிகா மனதில் ஒரு எண்ணம் ஓடிக் கொண்டிருந்தது.

மற்றவர்கள் கடனே என்று தங்கள் வாழ்த்தைத் தெரிவித்தனர்.

தனசேகர் வாய் வார்த்தையாகத் தன் வாழ்த்தைத் தெரிவிக்கா விட்டாலும், அவரின் கண்கள் பரிவுடன் மகனையும் மருமகளையும் பார்த்துக் கொண்டிருந்தன.

அதற்கு மேல் தாமதிக்காமல் ஜனனியுடன் தங்கள் அறைக்குச் சென்றான். இதைப் பார்த்துக் கொண்டிருந்த மல்லிகாவிற்கும், திவ்யாவிற்கும் பொறாமையில் வயிறு எரிந்ததைச் சொல்லவே வேண்டியதில்லை.

"என்ன அத்தை, உலகத்தில் இல்லாத பொண்டாட்டி கிடைச்ச மாதிரி உங்க பையன் அவளை இந்தத் தாங்கு தாங்குறாரு...?"

எரிச்சலுடன் திவ்யா மல்லிகாவைப் பார்த்துக் கோபத்தில் கத்தினாள்.

மகன் அதட்டிய கடுப்பில் இருந்த மல்லிகா, "நான் தான் சொன்னேனே... அவன் அவள் முந்தானையைப் பிடிச்சிக்கிட்டு அலையறதை. நீதான் மாத்திக் காட்டுறேன்னு என்னவோ சொன்னே. அவனை மாத்த முடியும்னு எனக்குத் தோணலை." - சலித்துக் கொண்டார்.

அவர் படை யெடுத்துத் தோற்றது, அவருக்கு மட்டும் தானே தெரியும்.

"நானும் செய்ய முடியாததைச் சொல்ல மாட்டேன். ஆனானப்பட்ட விஸ்வாமித்திரரே மேனகை கிட்ட மயங்கல! உங்க பையன் எம் மாத்திரம்?" - கர்வத்துடன் கூறினாள் திவ்யா.

"அப்படி மட்டும் செய்திடு. மருமகளே, நீ கேட்கிறதைக் கொடுக்கிறேன்." மல்லிகா திவ்யாவை அன்போடு நெட்டி வழித்தார்.

நினைப்பதெல்லாம் நடந்து விடுமா, என்ன?

ஜனனியுடன் தங்கள் அறைக்கு உள்ளே வந்த ஸ்ரீரஞ்சன் தன் உணர்வுகளை அடக்கப் பெரும்பாடு பட்டான். கிட்டத்தட்ட ஒரு மாத காலம் மனைவியைப் பிரிந்திருக்கிறான்.

அதுவும் இன்றுதான் அவன் எதிர்பார்த்த தனிமை கிட்டியுள்ளது.

அந்த அறையில் அவனும் அவளும் சேர்ந்து எழுதிய காதல் காவியங்கள் கண் முன் எழுந்து, அவன் தாபத்தை அதிகரித்தன.



இதை அறியாத அவளோ கட்டிலில் உட்கார்ந்து அவன் முகத்தைப் பார்க்கச் சங்கடப்பட்டுக் கொண்டு சுடிதாரின் மேல் துணியைத் திருகியபடி இருந்தாள்.

ஸ்ரீரஞ்சன் அவள் அருகே சென்று அமர்ந்தவன், அதற்கு மேல் தாள முடியாதவனாய் அவளை ஆரத் தழுவிக் கொண்டான்.

அவளைக் கட்டிலில் மெல்லச் சரித்து மேலும் மேலும் முன்னேறியவனுக்கு அவளின் உணர்வற்ற தன்மை மிகத் தாமதமாகத்தான் உறைத்தது.

மேலும் அவளின் சிப்பி வயிற்றில் அவனின் முத்து உருவாகி இருப்பது அப்பொழுதுதான் அவன் ஞாபகத் திற்கு வந்தது. அதை எல்லாம் விட அவளின் மன நிலையைக் கருத்தில் கொண்டு, தன் உணர்வுகளை அடக்கிக் கொண்டு, அவளை விட்டு விலகினான்.

"சாரி, குட்டிம்மா..."

இன்னமும் எழாமல் படுத்துக் கொண்டிருந்த மனைவியின் முகம் நோக்கிக் குனிந்தவன், அவள் முகத்தில் ஆங்காங்கே படிந்திருந்த கூந்தலை விலக்கி விட்டான். அவளின் முகத்தில் இருந்த கலக்கம் அவ னுக்குக் காணச் சகிக்கவில்லை.

அவள் நெற்றியில் குனிந்து முத்தமிட்டவன், "உன் மனசில் என்னதான் இருக்கு? ஏன் இப்படித் தேவை யில்லாமல் கலங்குற?" - கேள்வியுடன் அவளைப் பார்த்தான்.

விடை தெரிந்தும் அவளால் சொல்ல முடியாத நிலை. ஏனெனில் அந்த அளவிற்கு அவனைக் காதலிக் கிறாள். அவன் மேல் உயிரையே வைத்திருக்கிறாள்.

அவனுக்குப் பதில் சொல்ல முடியாமல் முகத்தைத் திருப்பிக் கொண்டாள் ஜனனி.

அவளின் முகத் திருப்பலைக் கண்டு, அவனுக்குத் தன் மகள் முகம்தான் ஞாபகம் வந்தது.

அவளும் அப்படித்தான். அவனிடம் கோபம் கொண்டால், முகத்தைத் தூக்கிக் கொண்டு திருப்பிக் கொள்வாள். மெல்லச் சிரித்தவன் அவள் கன்னம் தட்டி விட்டு எழுந்தான்.

அவன் எழுந்ததும், பதற்றத்துடன் எழுந்தவளைப் பார்த்து, "ஹேய், குட்டிம்மா... ரிலாக்ஸ். இந்த மாதிரி நேரத்தில் இப்படித் திடீர்னு எழக் கூடாது..." என்று கடிந் தவன்,

அவளின் பார்வையைக் கண்டு, "நான் போய் லஞ்ச் முடிச்சிட்டு உனக்கு இங்கே எடுத்துட்டு வர்றேன். அதுவரை நீ ரெஸ்ட் எடு..." என்றவன், அவள் பதிலை எதிர்பார்க் காமல் அறையை விட்டு வெளியேறினான்.

சரியாகப் பத்து நிமிடங்களில் திரும்பி வந்தவன் கைகளில் அவளுக்குத் தேவையான உணவு இருந்தது.

அவள் அருகில் அமர்ந்தவன், அவளுக்கு ஊட்டி விடுவதற்காகத் தட்டில் கையை வைத்தான்.



"இல்ல. நானே சாப்பிட்டுக்கிறேன்." ஜனனி அவன் கையிலிருந்து தட்டை வாங்க முயற்சித்தாள்.

"ஆமா, நீ சாப்பிட்ட லட்சணம்தான் தெரியுதே... எதுவும் பேசாதே!" என்று அவளை மேலும் கீழும் பார்த்தவன், தன் வேலையில் கவனமானான்.

எல்லாவற்றையும் ஊட்டி முடித்தபின்தான் அவளை விட்டான்.

அவனின் கனிவில் அவள் கண்ணோரம் கரித்தது.

குளியலறை சென்று கையைக் கழுவிக் கொண்டு வந்தவன், "சாப்பிட்ட வுடனே தூங்காதே. கொஞ்ச நேரம் டி.வி. பாரு. இல்லை புக் ஏதாவது படி. அதுக்கு அப்புறம் தூங்கு, என்ன...?" என்றபடி வெளியில் கிளம்ப ஆயத்த மானான்.

ஜனனிக்கு ஸ்ரீரஞ்சன் வெளியில் கிளம்புவதைப் பார்த்தவுடன் அடிவயிற்றில் பயப் பந்து உருள ஆரம் பித்தது.

"நீங்க இப்ப போகணுமா?" - தயங்கியபடி கேட்டாள்.

"ஆமாம்டா. ஆபீசுக்குப் போயிட்டு, அப்படியே விதுவை ஸ்கூலில் இருந்து கூட்டிட்டு வர டைம் சரியா இருக்கும்."

கண்ணாடி முன் நின்று உடையைச் சரி செய்து கொண்டிருந்தவன், அதில் தெரிந்த அவளின் பிம்பத்தைப் பார்த்துப் பதில் சொன்னான். ஜனனி பதில் பேசாமல்

வாய்க்குள் ஏதோ முணுமுணுப்பதைக் கண்டு அருகில் சென்றான்.

"ஸ்ரீ, எனக்கு ரொம்பப் பயமா இருக்கு. என்னை விட்டுப் போகாதீங்க." கண்களை மூடிக் கொண்டு திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தவளைப் பார்த்தவன் மனம் வலித்தது.

"குட்டிம்மா..." என்று அவளை அழைத்தவன், அவள் தோள் பற்றிக் கட்டிலுக்கு அழைத்துச் சென்றான். தான் கட்டிலில் அமர்ந்து மடியில் அவளைப் படுக்க வைத்தவன் சிறு குழந்தையைப் போல் தட்டிக் கொடுத்தான்.

ஜனனிக்கும் அவன் அருகாமை தேவையாக இருந்ததோ என்னவோ, அவன் மடியில் படுத்தவள், மெல்லக் கண்களை மூடினாள். குழந்தை போல் மடியில் படுத்திருக்கும் மனைவியைப் பார்த்தவன் மனதில் காதலும், காமமும் கொஞ்சமும் இல்லை. அவள் மேல் தாயின் அன்பு, பரிவுதான் அவன் மனதில் ஓங்கியிருந்தது.

ஸ்ரீரஞ்சனின் மனம் முன்பு இருந்த மனைவியை நினைத்துப் பார்த்தது.

பட்டாம்பூச்சி போல் துறுதுறுவென்று இருக்கும் மனைவி எங்கே போனாள்? அவனுக்கே தெரியவில்லை. அதிலும் அவள் பயந்து அவன் பார்த்தது இல்லை. திருமணமான புதிதில் நடந்த நிகழ்ச்சி ஒன்று அவன் ஞாபகத்துக்கு வந்தது.



அன்று அப்படித்தான். அலுவலகத்தில் இருந்து வந்தவன் மனைவியை அறையில் காணாது தேடியவன் அவள் குளியலறையில் இருப்பதை அறிந்து கொண்டான்.

திடீரென்று அவனுக்கு ஒரு திட்டம் பளிச்சிட்டது. அறையின் விளக்குகளை அணைத்து விட்டுச் சத்தம் செய்யாமல் குளியலறை வாயிலில் மனைவியின் வருகைக்காகக் காத்திருந்தான்.

அவனது எண்ணப்படியே அவனது நாயகி வெளியில் வந்தாள்.

"பே..." என்று கத்தி அலறி அவளைப் பயமுறுத்தினான். ஆனால் அவளோ பயம் சிறிதும் இல்லாமல் இருட்டில் நடந்து மின்விளக்குகளைப் போட்டவள் அவனை முறைத்துப் பார்த்தாள்.

"ஏய்... உனக்குக் கொஞ்சம் கூடப் பயமில்லையா?"

"எதுக்குப் பயப்படணும்?" அவனையே திருப்பிக் கேட்டாள், அவன் அருமை மனைவி.

"உனக்குப் பேய், பிசாசு கண்டா பயம் கிடையாதா? ச்சே... நீ பயந்து போனதும் உன்னைக் கட்டிப் பிடிச்சுச் சமாதானம் பண்ற மாதிரி ஒரு ரொமான்ஸ் பண்ணலாம்னு வந்தா... இப்படிச் சொல்லி உன் அன்பு அத்தானின் சின்ன ஹார்ட்டைச் சுக்குநூறா உடைச்சிட்டியே குட்டிம்மா..." - சோகமாகச் சொன்னவனைப் பார்த்துக் கலகலவெனச் சிரித்தாள் ஜனனி.

"பேயைப் பார்த்து நான் பயப்படணுமா? வேணும்னா... அது வேணா என்னைப் பார்த்துப் பயப் படும். நானெல்லாம் பேய்க்கே அல்வா கொடுக்கிற ஆள் தெரியுமா? ஹா... ஹா... ஹா..." வாய் விட்டுச் சிரித்தவளைப் பார்த்துப் பயப்படுவது போல் நடித்தான், ஸ்ரீரஞ்சன்.

"இந்தப் பேயைப் பார்த்தா எனக்குப் பயமா இருக்கு. ஐயோ, என்னை யாராவது காப்பாத்துங்களேன்!" - சொல்லிக் கொண்டே ஓடினான்.

"என்னைப் பார்த்தா பேய் மாதிரியா இருக்கு. உங்களை..." - அவன் பின்னாலேயே துரத்திச் சென்றாள்.

சிறிது நேரம் அவளுக்குப் போக்குக் காட்டியவன்... வேண்டுமென்றே அவள் கையில் அகப்பட்டான். கோபத் துடன் அவள் கொடுத்த அடிகளை வாங்கியவன், ஒரு கட்டத்திற்கு மேல், "ப்ளீஸ், போதும்டா குட்டிம்மா... அத்தான் உடம்பு இதுக்கு மேல தாங்காது..." என்றவன், அடித்த அவள் கைகளை விலக்கித் தன்னுடன் அணைத்துக் கொண்டான்.

அவன் அணைப்பில் தன்னை மறந்தவளாய் ஒன்றியவளின் காதில், "எப்படியோ நான் நினைச்ச ரொமான்ஸ் நடந்திடுச்சு..." என்று கிசுகிசுப்பாய்க் கூறி னான்.

"உங்களை..." அவனை நிமிர்ந்து பார்த்து முறைத் தாள்.



அவள் முறைத்ததைக் கொஞ்சமும் கண்டு கொள் ளாமல் தன் காரியத்தில் கண்ணாய் இருந்த அவனின் செயலில் அவளும் மெதுமெதுவாய்த் தன்னை இழந் தாள்.

மடியில் புரண்டு படுத்த மனைவியின் அசைவில் தன் நினைவைக் கலைத்தவன்... மனைவியின் முகத்தைப் பார்த்தான். ஆழ்ந்த உறக்கத்தில் அவள் இருப்பது தெரிந்தது.

ஆழ்ந்த உறக்கத்திலும் ஏதோ யோசனையில் புருவம் நெரியப் படுத்துத் தூங்கும் ஜனனியைப் பார்த் தவன், மெல்ல அவளின் புருவங்களை நீவி விட்டான்.

பழைய ஞாபகங்கள் நெஞ்சை அடைக்க.... அவனையும் அறியாது பெருமூச்சொன்றை வெளி யிட்டான்.

அந்த நாள் திரும்பவும் வருமா என்ற ஏக்கம் அவன் மனதில் எழுந்தது.

காலம்தான் பதில் சொல்ல வேண்டும். சொல்லுமா?

## 10

"அம்மா..." - மகளின் மழலைக் குரலில் அடித்துப் பிடித்துக் கொண்டு எழுந்தாள் ஜனனி.

விதுஷிகா அவள் பக்கத்தில் அமர்ந்து, அன்னை யின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். ஸ்ரீரஞ்சன்

மகளுக்கு அருகில் நின்று கொண்டிருந்தான். அவனும் ஜனனியின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"அடடே... குட்டிச் செல்லம் வந்துட்டீங்களா?" விதுவைத் தன்னுடன் அணைத்துக் கொண்டாள், ஜனனி.

மகளைப் பார்த்ததும் மனைவியின் முகத்தில் வந்த மகிழ்ச்சியை அவனும் கண்டு கொண்டுதான் இருந்தான்.

சில மணித் துளிகளுக்கு முன் பயந்து தன்னிடம் ஆறுதல் தேடியவள் இவளா என்று அதிசயித்தவன், எப்படியும் அவள் மனதை அரித்துக் கொண்டிருக்கும் பிரச்சினையில் இருந்து அவளை வெளிக் கொண்டு வந்துவிடலாம் என்ற சிறு நம்பிக்கைப் பூ அவன் மனதில் பூத்தது.

"விதுக் குட்டிக்கு மில்க்கும் சாப்பிடறதுக்கு ஸ்நாக்சும் கொண்டு வரவா? குட்டிக்கு என்ன ஸ்நாக்ஸ் வேணும்? பேபி கார்ன் கோல்ட் காயின் செய்யலாமா?" தன் கூந்தலை அள்ளி முடிந்தபடி எழுந்தவள் மகளிடம் கேட்டாள்.

எழுந்தவளை அவள் தோள் பற்றி அமர வைத்த ஸ்ரீரஞ்சன், "மேடம், நீங்க ஒண்ணும் செய்ய வேண்டாம். நாங்க வரும்போதே எல்லாம் சாப்பிட்டோம். இதோ உனக்கும் கொண்டு வந்திருக்கோம்."

அருகில் இருந்த மேஜையைக் காண்பித்தான். அங்கு ஃபிளாஸ்க்கில் காபியும், தட்டில் சிற்றுண்டியும் வைக்கப்பட்டிருந்தது.



"விது, வாங்க. முகம் கழுவிக் கொண்டு வரலாம்..." என்றவள், மகளை அழைத்துக் கொண்டு குளியலறைக் குள் நுழைந்தாள்.

சிறிது நேரம் கழித்து வெளியில் வந்த இருவரையும் கட்டிலில் சாய்ந்தவாறு பார்த்துக் கொண்டிருந்தான், ஸ்ரீரஞ்சன்.

விதுவுக்கு அழகாகத் தலை சீவி உடையை மாற்றி யவள், தானும் லேசாக ஒப்பனை செய்து கொண்டாள்.

"அம்மா பிங்கி, நீமோ, பிளாக்கி, ப்ரௌனி எல்லாம் எப்படி இருக்காங்கன்னு பார்க்கப் போகலாமா? நாம இல்லாமல் யாரு அதுக்குச் சாப்பாடு போட்டிருப்பாங்க? அப்பா, நீங்க போட்டீங்களா?"

ஜனனியிடம் பேசிக் கொண்டிருந்த விது, தந்தையை நோக்கிக் கேள்வி கேட்டாள். அவை எல்லாம் விது வளர்க்கும் மீன்களின் செல்லப் பெயர்கள்.

"நீங்க இல்லாமல் நானே சரியாச் சாப்பிடல. இதில் நீமோ, பிங்கி, பிளாக்கி, ப்ரௌனி இவங்களை நான் எங்கே கவனிக்க?"

வேண்டுமென்றே சோகக் குரலில் கூறியவனை அப்பொழுதுதான் நிமிர்ந்து பார்த்தாள் ஜனனி. உண்மை தான். முன்பு இருந்ததைவிட இளைத்துத்தான் காணப் பட்டான்.

ஒரு மாதத்தில் இவ்வளவு மாற்றமா?

"அச்சச்சோ... அப்பா நீங்க சரியாவே சாப்பிட லையா?"

விது வருத்தப்பட்டாள். "அம்மா... அப்பாவுக்கு டிபன் எடுத்து ஊட்டுங்க. அப்பா பாவம்..."

ஓடி வந்து, ஸ்ரீரஞ்சனின் கழுத்தைக் கட்டிக் கொண்டு அவன் மேல் சாய்ந்தாள்.

ஜனனிக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. தனக்குக் கொண்டு வந்த சிற்றுண்டித் தட்டைக் கையில் எடுத்துக் கொண்டு விழித்தாள்.

"ம்... அம்மா, சீக்கிரம். அப்பா பசியோடு இருக் காங்க..." அன்னையை அதட்டினாள்.

ஸ்ரீரஞ்சன், ஜனனியின் முகத்தையே ஆவலாகப் பார்த்துக் கொண்டு இருந்தான்.

'இப்பொழுதுதானே சாப்பிட்டு வந்தேன் என்றான். அதற்குள் பசியா?' என்று மனதுக்குள் எண்ணமிட்டவள், வேறு வழியின்றித் தட்டில் இருந்த பஜ்ஜியை எடுத்து அவன் வாயில் வைத்தாள்.

"தேங்க்ஸ் குட்டிம்மா..."

ஸ்ரீரஞ்சனின் குரல் கரகரத்தது. கண்களும் லேசாகக் கலங்கி இருந்தனவோ...? ஒரு வேளை அவளுக்குத்தான் அப்படித் தோன்றுகிறதோ? மனதில் நினைத்தவள், தலையை உலுக்கிக் கொண்டாள்.

"எனக்குப் போதும்... நீ சாப்பிடு."



ஜனனி வாயில் பஜ்ஜியை வைத்து அடைத்த ஸ்ரீரஞ்சன், அவள் முறைத்ததைப் பொருட்படுத்தாமல் உடை மாற்றச் சென்றான்.

முகம் கழுவிக் கொண்டு வந்தவன், உடையை மாற்றிக் கொண்டு, பால்கனி பக்கம் வந்தான்.

அங்கே தரையில் அமர்ந்து, தொட்டியில் பூத்து இருந்த ரோஜாவைக் கையில் பிடித்தபடி, ஜனனியும், விதுவும் தங்களுக்குள் பேசிச் சிரித்துக் கொண்டு இருந்தனர். இந்தச் சிரிப்புக் கேட்காமல், எப்படித்தான் இருந்தானோ... அவனுக்கே தெரியாது. இன்றுதான் அவன் மனம் லேசானது மாதிரி இருந்தது.

அவர்கள் அருகே சென்றவன், இருவருக்கும் இடையில் தரையில் அமர்ந்தான். மகளை வழக்கம் போல் மடியில் இருத்தியவன், தன்னியல்பாய் மனைவியின் தோள் சுற்றிக் கையைப் போட்டுச் சுவரில் சாய்ந்து அமர்ந்தான்.

அவனிடமிருந்து ஜனனியால் விடுபட முடிய வில்லை. அதிலும் மகள் முன்னிலையில் அவளின் விருப்பமின்மையைக் காட்டவும் மனம் வரவில்லை.

"மாட்டிக் கிட்டு இருந்த நாய்க் குட்டியை வெளியில் எடுத்த வுடன், அப்படியே சந்தோஷத்தில் ஓடிப் போய் விட்டது. அம்மா... நான் சொல்றது காதில் விழுதா?"

"ஹாங்... என்ன செல்லம் சொன்னீங்க...? ஓ... நீங்க அந்த நாய்க் குட்டிக்கு ஹெல்ப் பண்ணீங்களா?

என்னோட ஸ்வீட் செல்லம்..." மகளின் கன்னத்தில் அழுத்த மாக முத்தமிட்டவள், நிமிர்ந்த பொழுது, ஸ்ரீரஞ்சனின் கண்கள் பளபளத்ததைக் கண்டாள்.

'இவனுக்கு என்ன ஆனது?' என்று யோசித்தாள்.

"ஐயோ அம்மா... அப்பாதான் ட்ரெய்னேஜில் விழுந்த அந்த நாய்க் குட்டியை வெளியில் தூக்கி விட்டாங்க. அப்போ அப்பாவுக்குத்தான் நீங்க கிஸ் கொடுக்கணும்..." விது, அன்னையின் அறியாமையை எண்ணிக் கலகலத்துச் சிரித்தாள்.

"ம்... நான் ரெடி, விது செல்லம். உங்க அம்மா ரெடியா?"

ஸ்ரீரஞ்சன், தன் கன்னத்தை ஜனனியின் முகம் அருகே கொண்டு சென்றான்.

ஜனனி திகைத்துப் பின்னுக்கு நகர்ந்தாள்.

"அப்பா பாவம் இல்லே... ப்ளீஸ்... ஒண்ணே ஒண்ணு கொடுங்கம்மா..." கெஞ்சலாகக் கேட்டாள் விது.

மகளையும் கணவனையும் மாறி மாறிப் பார்த்தவள், கடைசியில் தன் இதழைக் கணவனின் கன்னத்தில் ஒற்றி எடுத்தாள்.

மெல்லிய பூவொன்று வருடியது போல் வருடிச் சென்ற மனைவியின் இதழ் ஒற்றலில், மனம் மயங்கி நின்றான் அந்தக் காதல் கணவன்.

"விது... ஹோம் வொர்க் பண்ணப் போகலாமா?"



அந்தச் சூழ்நிலையில் இருந்து தப்ப, ஜனனி, விதுவை வீட்டுப் பாடம் செய்ய அழைத்தாள்.

"ம்... சரி, போகலாம்..." என்று துள்ளிக் குதித்து எழுந்த விது, தந்தையைத் துணைக்கு அழைத்தாள்.

"அப்பா... நீங்களும் என் கூட வாங்க. நான் செஞ்ச வொர்க் எல்லாம் பாருங்க..."

மகளின் சொல்லைத் தட்டாதவனாய், அவளுடன் எழுந்தான்.

"அப்பா... உங்களுக்கு ஒரு சர்ப்ரைஸ் வெச்சு இருக்கேன். கண்ணை மூடுங்க..."

கட்டிலில் தந்தையை அமர வைத்தவள், அவனுக்கு உத்தரவு போட்டாள்.

"சரி. கண்ணை மூடியாச்சு..." ஸ்ரீரஞ்சனும் மகளின் உத்தரவுக்குக் கீழ்ப்படிந்தான்.

"ம்... இப்போ கண்ணைத் திறங்க..."

கண்ணைத் திறந்து பார்த்த அவனுக்கு, மனைவியின் கோபத்திற்கான விடை தெரிந்தது. ஒரு பெரிய தாளில் 'டாட் அண்ட் மீ' என்ற தலைப்பில் அவனும் விதுவும் சேர்ந்து இருந்த புகைப்படங்களை ஒட்டி இருந்தாள்.

அவள் செய்ததில் எந்தத் தவறும் இல்லை. ஆனால், அதில் ஒட்டி இருந்த சில புகைப்படங்களில்

ஜனனியும் அவர்களுடன் இணைந்து இருந்தாள். அதில் இருந்த ஜனனியின் பிம்பத்தை மட்டும் வெட்டித் தனியே வைத்து விட்டு, தந்தையும் தானும் மட்டும் இருந்த புகைப் படத்தை ஒட்டி இருந்தாள் அருமை மகள்.

சாதாரணமாக இதில் தவறு ஒன்றும் இல்லை. எல்லோர் வீட்டிலும் நடப்பதுதான்.

ஆனால், ஜனனியின் குழம்பிய மனது, அதைக் கண்டதும் ஆத்திரம் அடைந்து இருக்க வேண்டும். அவளுக்குத் தன் மீதும் மகள் மீதும் எவ்வவு பாசம் இருக்கிறது என்று அவனுக்குமே தெரியும்.

ஒரு சின்ன விஷயம், ஜனனியின் மனதில் பூதாகர மாக எழுந்து இருக்கிற தென்றால், அவள் மனம் அதற்கு முன்னேயே பாதிப்பு அடைந்து இருக்கிறதோ? ஏன்? எதனால்? யாரால்? என்று யோசித்தவன், அதில் தனக்கும் பங்கு இருக்கிறது என்பதை உணர வில்லை.

“அப்பா... நல்லா இருக்கா?”

மகளின் குரலில் சிந்தனை கலைந்தவன், மனைவி யின் முகம் பார்த்தான். உதட்டைக் கடித்துக் கொண்டு அமைதியாக இருந்தவளைப் பார்க்கும்போது மனம் கனிந்தது.

“ம்... நல்லா இருக்குடா. இந்த வயசில் நீங்க ப்ராஜெக்ட் எல்லாம் பண்றீங்க. என்ன ஜனனி... நாம் எல்லாம் காலேஜில்தானே ப்ராஜெக்ட் செஞ்சோம். விது ரொம்பப் பெரிய ஆளாயிட்டா.”



மகளைப் பாராட்டியவன், மனைவியையும் தன் பேச்சில் இழுத்தான். அவன் சொன்னதில், ஜனனிக்கும் லேசாகப் புன்னகை எட்டிப் பார்த்தது.

“எல்லாம் சரிதான் செல்லம்... டாட் அண்ட் மீ அப்படின்னு தலைப்பு எடுக்கிறதுக்குப் பதிலா மை ஃபேமிலின்னு எடுத்து இருந்தா, அம்மாவும் நம்ம கூட இருப்பாங்க இல்ல...” என்று மகளுக்கு எடுத்துச் சொன் னவன், ஒரு கையால் மனைவியையும், மறு கையால் மகளையும் அணைத்துக் கொண்டான்.

“ஹ்ம்... ஆமாமில்ல...” நாடியில் ஒற்றை விரல் வைத்து யோசித்தாள் விது.

“ஓ... அதான் அம்மாவுக்கு அன்னைக்குக் கோபம் வந்ததா? சாரிம்மா... அடுத்த ப்ராஜெக்ட் அப்பா சொன்ன மாதிரி மை பேமிலி பண்றேன். ஓ.கே.வா அம்மா...?”

அம்மாவின் கன்னத்தில் முத்தமிட்டு, அவளைப் பார்த்துத் தலையைச் சரித்து வினவினாள்.

மகளின் அழகு, மனதைக் கொள்ளை கொள்ள, அவளை இறுக அணைத்து முத்தமிட்டாள், ஜனனி.

மகளின் அருகில் படுத்து, அவளைத் தூங்க வைத்துக் கொண்டு இருந்த ஸ்ரீரஞ்சனின் மனதில் பல கேள்விகள் எழுந்தன.

இரவு உணவைச் சிறிது நேரத்திற்கு முன்புதான் முடித்துக் கொண்டு, மகளுடன் அறைக்கு வந்தான். அவளும் விளையாடிக் கொண்டே இருந்தவள், அப்படியே

தூங்கியும் விட்டாள். தூங்குவதற்கு அம்மா தான் வேண்டும் என்று இல்லை. அவனிடமும் சமர்த்தாக உறங்கி விடுவாள் விதுஷிகா.

ஸ்ரீரஞ்சன் மனம், மனைவி எழுதிய கவிதையையும், விது செய்த காரியத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தது. இரண்டும் அவன் சம்பந்தப்பட்டதே. அதில் பொதிந்து இருந்த கருத்தும் ஒன்றே.

அதாவது அவன், அவளை விட்டுப் பிரிந்து சென்று விடுவானோ என்ற எண்ணமே தான் காரணம். அதை நினைத்தவனுக்குச் சிரிப்புதான் வந்தது.

அவனாவது அவளை விட்டுப் பிரிவதாவது... அப்படி ஒன்று நடக்கும் என்றால், அது அவன் உயிர் போகும் போது மட்டும்தான் நடக்கும்.

அது ஜனனிக்குமே தெரிந்ததுதானே. அவனே பல முறை அவளிடம் கூறி இருக்கிறானே.

இப்படி ஒரு எண்ணம், பயம் எதனால் அவளுக்கு வந்தது? புகைப்படத்தில் கூட அவனை விட்டுப் பிரிய மனமில்லாத நிலை அவளுக்கு ஏன் ஏற்பட்டது? அதன் காரணம்தான் அவனுக்குப் புரியவில்லை.

அவன் யு.எஸ். போகும் போதும் நன்றாகத்தானே இருந்தாள் என்று நினைத்தவன், ஒரு வேளை அதற்கு முன்பே அவளுக்குப் பிரச்சினை இருந்து, நாம்தான் கவனிக்காமல் விட்டு விட்டோமோ என்று எண்ணம் எழுந்து, அவன் மேலேயே அவனுக்குக் கோபம் வந்தது.



என்ன ஆனாலும் சரி, இன்று எப்படியும் அவளிடம் பேசி விட வேண்டும் என்று நினைத்தவன், ஜனனியின் வருகைக்காகக் காத்திருந்தான்.

ஜனனி அறைக்குள் நுழையும் போதே, கணவன் உறங்காமல் தனக்காகக் காத்துக் கொண்டு இருப்பதைப் பார்த்தாள். ஆனால், சற்றும் அவனைக் கண்டு கொள் ளாமல், கட்டிலின் மறு பக்கம் சென்று விதுவின் பக்கத்தில் படுத்தாள். மனைவி இப்படித்தான் நடந்து கொள்வாள் என்று அவனுக்குமே தெரியுமாதலால், அவன் தனக்குள் சிரித்துக் கொண்டே, அவள் அருகில் சென்றான்.

"குட்டிம்மா... உன்னிடம் கொஞ்சம் பேசணும். பேசலாமா?"

கணவனின் குரலைக் கேட்டவள், வேண்டும் என்றே கண்களை இறுக மூடிக் கொண்டாள். சற்று நேரம் கண்களை இறுக மூடி இருந்தவள், கணவனிடம் இருந்து சத்தம் ஏதும் வராமல் போகவும், அவன் போய் விட்டான் என்று எண்ணிக் கண்களை மெதுவாகத் திறந்தாள்.

ஆனால், அவள் எண்ணத்தைப் பொய்யாக்கியபடி, அவள் மனம் கவர் கள்வனோ அந்த மாயக் கண்ணனின் மனம் மயக்கும் சிரிப்போடு, அவளையே பார்த்துக் கொண்டு, அங்கேயே நின்று இருந்தான்.

எப்பொழுதும் போல் இப்பொழுதும் அவன் புன்னகை அவளை வசீகரித்தது. அந்த நிமிடம் அவனிடம் அவ ளுக்கு ஏற்பட்ட மனஸ்தாபம் கூட மறைந்து, அவனின் புன்னகையில் மயங்கித் தன்னைத் தொலைத்தாள்.

# 11

ஜனனியின் கண்ணில் தெரிந்த காதலில் தன்னை மறந்து, அவளையே பார்த்தபடி நின்றான் ஸ்ரீரஞ்சன்.

இருவரின் பார்வையும் ஒன்றை ஒன்று கவ்விக் கொள்ள, எவ்வளவு நேரம் அப்படியே பார்த்துக் கொண்டு இருந்தார்களோ தெரியாது... முதலில் சுதாரித்தவள் ஜனனிதான்.

அவனிடம் இருந்து கஷ்டப்பட்டுத் தன் பார்வையைத் திருப்பிக் கொண்டவள், எழுந்து அமர்ந்தாள்.

"க்கும்..."

பேசுவதற்குத் தான் தயார் என்பது போல் தொண்டையைக் கனைத்தாள்.

அவளின் கனைப்பில் தன்னைச் சுதாரித்தவன், ஜனனி அமர்ந்து இருப்பதை அப்பொழுதுதான் கவனித்தான்.

ஜனனியோ கணவனை எப்படி எதிர் கொள்வது என்ற பெரும் யோசனையில் மூழ்கி இருந்தாள். கணவனின் அருகில் அவள் மனம் தன் வசம் இழந்து விடும் என்பது அவளுக்கு நன்றாகத் தெரியும்.

அதுதான் இந்த யோசனை. அப்பொழுது ஸ்ரீரஞ்சனோ சட்டென்று அந்தக் காரியத்தைச் செய்தான்.

கட்டிலின் பக்கவாட்டில் காலைத் தொங்கப் போட்டு அமர்ந்து இருந்தவளின் கால் அருகே தரையில் அமர்ந்தவன், அவள் காலை எடுத்துத் தன் மடியில் வைத்து, அவள் மடியில் தன் முகம் புதைத்தான்.



இடது கை அவள் காலைப் பிடித்து இருக்க, வலது கை அவள் இடையைச் சுற்றி இருந்தது. ஜனனியோ அவனின் செயலில் செய்வதறியாது திகைத்து இருந்தாள். அவனின் தோள்கள் குலுங்கவும்தான், அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது. ஒரு வேளை அழுகிறானோ... என்று நினைத்தவள்,

"ஸ்ரீ..." என்று அவனை அழைத்தபடி, அவன் முடியைப் பற்றித் தூக்கி முகம் நிமிர்த்தினாள். நினைத்தது சரி என்பது போல், அவன் கண்களில் கண்ணீர் வந்து கொண்டு இருந்தது.

ஸ்ரீரஞ்சன் அழுது அவள் பார்த்ததே கிடையாது என்று சொல்வதற்கு இல்லை. விது பிறக்கும் சமயம், ஜனனி வலி தாங்க முடியாமல் கதறியபோது, அவனின் கண்களும் கலங்கின.

அவளின் வேதனை கண்டு, என்னமோ தனக்கே வேதனை ஏற்பட்டாற் போல் அவன் கண்களில் கண்ணீர் வந்தது. அவளுக்கு ஒன்று என்றால் அவன் துடித்துப் போவான் என்று அவளும் அன்றுதான் கண்கூடாகக் கண்டு கொண்டாள்.

பழைய நினைவு மனதை அழுத்த, அவனுடன் அவள் கொண்டு இருந்த மன வேறுபாட்டைத் தூக்கித் தூர எறிந்தவள்,

"ஸ்ரீ... அழாதீங்க..." என்றபடி அவனின் கண் ணீரைத் துடைத்தாள்.

"நீங்க அழுதா எனக்கும் கஷ்டமாக இருக்கு..."

சொன்னவள் கண்களிலும் கண்ணீர் தளும்பியது.

அவளின் கண்ணீர் பார்த்தோ என்னவோ, அவனின் அழுகையைக் கட்டுப்படுத்தியவன், அவளின் கண்ணீரையும் துடைத்தான்.

பின் அருகில் இருந்த மேஜையின் இழுப்றையில் இருந்து அந்தக் காகிதத்தை எடுத்து ஜனனியிடம் நீட்டி னான்.

அதைப் பார்த்தவள் திடுக்கிட்டு அவனைப் பார்த் தாள். இது எப்படி இவன் கையில்...?

"அர்ஜுன்தான் கொண்டு வந்து கொடுத்தான். ஏன்டா இப்படி எழுதி இருக்கே? நான் உன்னை விட்டு விலகிப் போவேனா? நீ என்னைப் புரிந்து கொண்டது இவ்வளவு தானா? உனக்காக உயிரையும் கொடுப்பவன் நான். நான் எப்படி..."

அதற்கு மேல் அவனால் பேச முடியவில்லை. ஜனனியோ அவன் பேச்சைக் கேட்டு இன்னமும் குழப் பத்தில் ஆழ்ந்தாள்.

ஸ்ரீரஞ்சனே மேற்கொண்டு பேசலானான். "நான் அழுதா நீ துடிக்கிறே இல்ல... என் மன வருத்தம் உன்னை எந்த அளவுக்குப் பாதிக்கிறது. அதே மாதிரி



தானே எனக்கும் உன் மன வருத்தம் பாதிக்கும். அதை நீ ஏன் புரிந்து கொள்ள மாட்டேங்கிற, குட்டிம்மா...?"

ஸ்ரீரஞ்சன் கேள்வியில் இருந்த கருத்து புரியத்தான் செய்தது. ஆனால், பதில் அவளிடம் இல்லை. அவளின் பதிலை எதிர்பார்க்காதவனாய், மேலே அவனே தொடர்ந் தான்.

"கிட்டத்தட்ட ஒரு மாசம் ஆச்சு உன்னைப் பிரிந்து... இதற்கு மேல் என்னால் பிரிவைத் தாங்க முடியாது. இருபது நாள் வேலை நிமித்தம் உன்னைப் பிரிந்த தாலோ... இல்லை, தினமும் உன்னிடம் பேசுவதாலோ என்னமோ, அந்தப் பிரிவு கூட என்னை ரொம்பவும் பாதிக்கவில்லை. ஆனால், இந்த ஆறு நாள் உன்னைப் பிரிந்து தூங்காமல், உண்ணாமல் நான் தவித்த தவிப்பு, எனக்கு மட்டும்தான் தெரியும்.

"நான் இங்கு திரும்பி வருவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு கூட நல்லாத்தானே இருந்தே...? அதுக்கு அப்புறம் இரண்டு நாள் நான் கிளம்பி வருவதில் பிசியாக இருந்ததால் உன்னிடம் பேசவில்லை. நான் வருவது சர்ப்ரைஸாக இருக்க வேண்டுமென்று எண்ணித் தான் உன்னிடம் சொல்லவில்லை.

"அந்த ரெண்டு நாளில் என்னதான் நடந்தது? வீட்டில் யாரும் உன்னைத் தப்பாகப் பேசினார்களா? அம்மா ஏதும் தவறாக நடந்து கொண்டார்களா? என்ன நடந்ததுன்னு நீ சொன்னாத்தானே நான் புரிந்து கொள்ள முடியும்?'

ஸ்ரீரஞ்சனின் மனவேதனை கண்டு அவளுக்கும் மனம் வலித்தது. அதிலும் அவன் பிரச்சினையை ஓரளவுக்கு யூகித்ததை எண்ணி மனதில் பெருமிதம் கொண்டாள்.

ஆனால் அவன் வீட்டாரைப் பற்றி அவனிடம் இது நாள்வரை அவள் தவறாக ஒரு வார்த்தை சொன்னது இல்லை. அவனுக்காக எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டாள். முழுத் தவறும் அவர்களிடம்தான் என்று சொல்ல முடியாது. கணவனிடமும் தவறு இருக்கும்போது அவள் யாரை நொந்து என்ன பயன்?

கணவனின் தவறைத் தைரியமாக அவன் முன்னே சுட்டிக் காட்ட அவளுக்குத் தயக்கம். அந்த அளவிற்கு அவனை நேசிக்கிறாள். அவள் கூறும் குற்றச்சாட்டினால் அவன் குற்றவாளி போல் தலை குனிந்து நிற்பதைப் பார்க்க அவளுக்குச் சக்தி இல்லை.

அதனால்தான் அவனைக் குற்றவாளி ஆக்காமல் அவள் விலகிப் போனாள்.

ஜனனியிடமிருந்து எந்தப் பதிலும் வரவில்லை என்றவுடன், அவள் கையை எடுத்துத் தன் கைக்குள் வைத்துக் கொண்டவன், "பேசாம நாம தனிக் குடித்தனம் போய் விடலாமா?"

என்று அவளுக்கு அடுத்த அதிர்ச்சியை அளித்தான்.

ஏற்கெனவே அவனைக் காதலித்துத் திருமணம் முடித்து அவள் முந்தானையில் முடிந்து வைத்திருப்ப



தாகக் குறை கூறும் புகுந்த வீட்டினர், இந்தச் செயலால் அவளை நிச்சயம் தூற்றத்தான் செய்வார்கள்.

அதிலும் குடும்பத்தின் தலைமகன். இந்த வீட்டின் அஸ்திவாரமே, அதாவது பொருளாதாரத்தைப் பொறுத்த வரை, அவன்தான்.

அவனைப் போய் இந்த வீட்டிலிருந்து பிரித்தெடுத்துக் கூட்டிக் கொண்டு போவதா? மனஸ்தாபம் வந்தபோது கூட அவனை விட்டு அவள்தானே சென்றாளே தவிர, அவனைக் கையோடு அழைத்துக் கொண்டு அவள் வெளியேறவில்லையே!

"இல்லை... இல்லை. வேண்டாம்."

அவசரமாக மறுத்தாள் ஜனனி. எந்தக் கேள்விக்கும் வாயைத் திறக்காதவள் இதற்கு மட்டும் எவ்வளவு அவசர மாக மறுக்கிறாள் என்று அவன் முகத்தில் புன்னகை தோன்றியது.

வேறு ஒரு பெண்ணாக இருந்திருந்தால் சந்தோ ஷத்தில் சரி என்று சொல்லியிருப்பாள். கணவனே தன் பேச்சுக் கேட்கும்போது புகுந்த வீட்டில் உள்ள மற்றவர்கள் பேச்சைத் தான் ஏன் கேட்க வேண்டும் என்று அகம் பாவத்துடன் நடந்திருப்பார்கள்.

ஜனனியோ அப்படி நடந்து கொள்ளாதது மட்டு மில்லாமல், அவனையும் அவன் வீட்டினருடன் ஒன்றுபடச் செய்தாள். அவன் ஜனனி என்றுமே வித்தியாசமானவள் தான்.

அதுதானே அவள்பால் அவனை ஈர்த்தது. மனம் பெருமிதத்தில் பூரிக்க, மனைவியையே வைத்த கண் வாங்காமல் பார்த்தான். இப்படிப்பட்டவளை இன்னமும் கண்ணும் கருத்துமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று அந்தக் கணம் முடிவு செய்தான்.

"இங்கே பாரு, குட்டிம்மா... வீட்டில் உள்ளவங்க ளாலதான் பிரச்சனைன்னு தோணுது. அது யாரால் ஏன்னு நீ சொல்ல மாட்டேங்கிற. அவங்களால நீ பாதிக்கப் பட்டிருப்பதைப் பார்த்துக் கொண்டு நான் சும்மா இருக்க மாட்டேன். அதனால் விது பாதிக்கப்படுவதையும் என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது. எனக்கு நீயும், விதுவும் தான் முக்கியம்."

"இல்லை. நான் விதுவை இனிமேல் அடிக்க மாட் டேன்." விதுவை அடித்ததால்தான் அவ்வாறு கூறு கிறானோ என்று அவசரமாக அவனுக்கு உத்தரவாதம் அளித்தாள்.

"விது மட்டும் இல்லைடா. நீயும் எனக்கு முக்கியம் தான். உன் சந்தோஷத்துக்காக எது வேணும்னாலும் செய்யத் தயாரா இருக்கேன்."

கணவனின் குரலில் நூறு சதவீதம்... இல்லை இல்லை, அதற்கும் மேல் அவள் மேல் உள்ள காதல் தெரிந்தது.

ஸ்ரீரஞ்சன் மனம் பற்றி அவளுக்குமே தெரியும். அதில் அவன் வீட்டாருக்குச் செய்ய வேண்டிய கடமைகள் என்னென்ன என்பது அவளுக்குத் தெரியும்.



ஸ்ரீரஞ்சனே அதை அவளிடம் சொல்லி இருக் கிறான். அப்படிப்பட்டவன் தனக்காகத் தனிக் குடித்தனம் வரச் சம்மதிக்கிறான் என்றால் அவனின் அன்பு எத்தகையது.

அந்த நிமிடம் அவனுக்காக எதையும் செய்யலாம் என்று தோன்றியது.

அவனுக்காக அவன் வீட்டாரைப் பொறுத்துப் போனால் என்ன என்று கூடத் தோன்றியது.

"இல்லை ஸ்ரீ... நாம இங்கேயே இருக்கலாம்."

"அப்படின்னா... நீ எனக்கு ஒரு சத்தியம் பண்ணிக் கொடுக்கணும்." - அவனைப் புரியாமல் பார்த்தாள்.

"எந்தக் காரணம் கொண்டும் நீ என்னை விட்டுப் பிரிந்து போகக் கூடாது. பிரிந்து என்ன... அப்படி ஒரு நினைப்பே உனக்கு வரக் கூடாது. என்ன?"

கையை அவள் புறம் நீட்டி, அவளின் பதிலை எதிர் பார்த்து அவள் முகம் பார்த்தான். ஒரு முறை அவனைப் பிரிந்து அவள் பட்ட கஷ்டம் போதும்.

இனியும் அவனைப் பிரிந்து... வேண்டவே வேண் டாம் என்று மனதுக்குள் எண்ணியவள், மேலும் யோசிக் காமல் அவன் கை மேல் தன் கையை வைத்துச் சத்தியம் செய்தாள்.

"தட்ஸ் மை குட்டிம்மா..." என்று அவள் கன்னம் தட்டிச் சொன்னவன், "தேவையில்லாமல் மனதைப்

போட்டுக் குழப்பிக் கொள்ளாதே. உனக்காக நான் இருக்கேன். நான் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்கிறேன். நீ நிம்மதியா இருக்கணும். உனக்காக மட்டும் இல்லை. உன் வயிற்றில் வளரும் நம் இரண்டாவது செல்லத்துக்காகவும் தான் சொல்றேன்...” என்றவன்,

அவள் எதிர்பாரா வண்ணம் அவள் வயிற்றில் தன் இதழைப் பதித்தவன், “இது குட்டிச் செல்லத்துக்கு...” என்று எழுந்து, அவள் கன்னத்தில் அழுந்த முத்தமிட்டு,

“இது என் குட்டிம்மாவுக்கு...” சொல்லி விட்டு அவளைப் பார்த்துக் கண் சிமிட்டினான்.

அவனின் செயலில் ஜனனியின் முகம் வெட்கத்தில் சிவந்தது. அவளின் முகச் சிவப்பை ஒரு நொடி ரசித்தவன் மனம் லேசானது.

“சரி, பேசியது போதும். தூங்கலாமா?”

அவனைப் பொறுத்தவரை ஜனனி இந்த அளவு இறங்கி வந்ததே பெரிய விஷயம். அதான் மேற்கொண்டு பேசி அவளைக் குழப்பாமல் பேச்சுவார்த்தையை முடித்தான்.

அவள் படுத்ததும் அவள் அருகே வந்தான். “உன் பக்கத்தில் நான் படுத்துக்கிறேன். ப்ளீஸ்...”

அவள் பதிலை எதிர்பாராது அவள் அருகே சென்று படுத்தான். அவள் கையை எடுத்துத் தன் மேல் போட்டவன், தானும் அவளை அணைத்துக் கொண்டான். படுத்த ஐந்தாவது நிமிடம் தூங்கியும் போனான்.



அவ்வளவு நாள் அவள் இல்லாமல் தூக்கமின்றித் தவித்தவன் இன்று அவள் கையணைப்பில் நிம்மதியாக உறங்கினான்.

ஜனனிக்குத் தூக்கம் வரவில்லை. கணவனின் பேச்சில் மனம் இன்னமும் குழம்பியது. அவனுக்கு அவள் மேல் இருந்த காதல் துளியும் குறையாமல் அப்படியே இருப்பதை அவனின் சொல்லும் செயலும் அவளுக்குப் புரிய வைத்தது.

ஆனால் அவர்கள் சொன்னது, காட்டிய ஆதாரங்கள் எல்லாம் பொய்யில்லையே. எல்லாம் மெய்யே. எல்லாமே அவனைக் குற்றவாளியாகத்தானே காண்பித்தது. அதை எல்லாம் மெய்ப்பிப்பது போல்தானே ஸ்ரீரஞ்சனின் நடவடிக்கையும் இருந்தது.

ஆனால் இன்றோ அவன் பேசுவதைக் கண்டு, எது உண்மை என்று அவள் மனம் குழம்பியது.

ஸ்ரீரஞ்சன் தன் மேல் போட்டிருந்த கையை மெல்ல விலக்கியவள், எழுந்து அங்கிருந்த அலமாரிப் பக்கம் சென்றாள்.

ஓசைப்படாமல் அதன் கதவைத் திறந்தவள், தன் உடைகளுக்கு இடையில் மறைத்து வைத்திருந்த ஒரு புகைப்படத்தைக் கையில் எடுத்தாள்.

அதை எடுத்துப் பார்த்தவுடன் முதன் முதலில் அதைப் பார்த்த பொழுது எழுந்த மன வலி மீண்டும் எழுவதை உணர்ந்தாள்.

ஸ்ரீரஞ்சன் திவ்யாவின் கன்னத்தில் முத்தம் கொடுப்பது போல் அந்தப் புகைப்படம் இருந்தது.

ஸ்ரீரஞ்சன் முகமோ மகிழ்ச்சியில், திவ்யாவின் முகமோ பரவசத்தில் கண்கள் செருக ஒருவித மயக்கத்தில் இருந்தாள்.

ஜனனிக்கு அந்தப் புகைப்படத்தைப் பார்க்கப் பார்க்க நெஞ்சே வெடித்து விடுவது போல இருந்தது. முதன் முதலில் அதைப் பார்த்த பொழுது அது பொய்யாக இருக்கக் கூடாதா என்று அவள் பேதை உள்ளம் பதை பதைத்தது.

ஆனால் விசாரித்தபோது அது போலிப் புகைப்படம் அல்ல, உண்மைப் புகைப்படம் என்று அறிந்தபோது, அவள் அந்தக் கணம் மனதளவில் செத்துப் போனாள்.

இன்று கணவனின் செயலுக்கும் சொல்லுக்கும் இந்தப் புகைப்படத்திற்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை என்று அவள் உள்ளுணர்வுக்குத் தோன்றினாலும், இது பொய்யும் இல்லையே என்ற மற்றொரு நினைவு வந்து, அவள் எண்ணத்தை மாற்றியது.

இந்தப் புகைப்படம் மட்டும்தானா அவள் இந்த வீட்டை விட்டு வெளியில் போகக் காரணம்... இல்லையே! இன்னும் எத்தனையோ காரணங்கள் இருந்தனவே... அதை எல்லாம் நினைத்துப் பார்த்தவளுக்குக் குழப்பம் மட்டுமே மிஞ்சியது.

குழப்பத்துடன் நின்று கொண்டிருந்தவள் காதில் விதுவின் குரல் கேட்க... தன் நினைவு கலைந்தாள்.



விதுதான் தூக்கத்தில் ஏதோ ஏதோ பேசியபடி புரண்டு படுத்தாள்.

கண நேரத்தில் தன் உணர்வுகளைக் கட்டுக்குள் கொண்டு வந்தவள், அந்தப் புகைப்படத்தை எடுத்த இடத்தில் வைத்து விட்டு, மீண்டும் கட்டிலில் அமர்ந்தாள்.

அவள் மனம் பழைய நினைவுகளை நினைத்துப் பார்த்தது.

அதாவது, அவள் இந்த வீட்டை விட்டுப் போவ தற்குக் காரணமான நிகழ்ச்சியை நினைத்துப் பார்த்தது.

## 12

"குட்டிம்மா... உன்னையும் விதுவையும் விட்டுட்டுப் போறதுக்கு ரொம்பக் கஷ்டமா இருக்கு."

ஸ்ரீரஞ்சன் புலம்பியபடி ஜனனியின் மடியில் படுத் திருந்தான்.

அவளோ ஒன்றும் பேசாமல் அவனின் முடியை வருடிக் கொடுத்தபடி இருந்தாள்.

நாளை அவன் வெளிநாடு செல்வது நினைத்து அவளுக்குமே துக்கம் தொண்டையை அடைத்தது. அவளின் உணர்வுகளை அவள் கொஞ்சம் வெளிக்காட்டி னாலும், அவன் எத்தனை நஷ்டம் வந்தாலும் பரவா யில்லை என்று இந்தப் பயணத்தையே ரத்து செய்து விடுவான். அது அவளுக்குமே தெரியும்.

அவளையும் விதுவையும் விட்டுப் பிரிந்திருக்க முடியாத காரணத்தால்தான் அவன் இவ்வளவு நாள் இந்த மாதிரி வெளிநாட்டுப் பயணத்தைத் தவிர்த்து வந்தான்.

அவனுக்குப் பதில் வேறு யாரையாவது அனுப்பி வைப்பான். ஆனால் இந்த முறை அவன் கண்டிப்பாகப் போயாக வேண்டிய சூழ்நிலை.

ஜனனிக்கு விதுஷிகா பிறந்த சமயம் ஞாபகம் வந்தது. அவள் வயிற்றில் விது ஏழாம் மாதம் இருக்கும் போது வளைகாப்பு செய்து, தங்கள் வீட்டிற்குக் கூட்டிக் கொண்டு போக வேண்டும் என்று சௌதாம்பிகை பிரியப் பட்டார். ஆனால் அதை எல்லாம் ஸ்ரீரஞ்சன் மறுத்து விட்டான்.

அதனால் சௌதாம்பிகைக்குக் கூட மருமகன் மேல் சிறிது மனஸ்தாபம் உண்டு. ஆனால் விது பிறந்த சமயம் அவன் பரிதவித்த தவிப்பைப் பார்த்தபின்தான் அவரின் மனம் லேசானது.

தங்களை விட ஜனனியை ஸ்ரீரஞ்சன் நன்றாகப் பார்த்துக் கொள்வான் என்ற நம்பிக்கை வந்தது. தான் தேர்வு செய்தவன் தப்பாகவில்லை என்ற பெருமிதமும் சேர்ந்து கொண்டது, அவருக்கு.

ஜனனியையும் மகளையும் விட்டுப் பிரியாமல் இருப்பதற்காகவே விதுவிற்குப் பெயர் வைக்கும்வரை மாமியார் வீட்டில் இருந்தான். பெயர் வைக்கும் நாளன்று மல்லிகா ஜனனியைக் குத்திக் காண்பித்து விட்டார்.



“இப்படியே அவனைக் கைக்குள் வைத்திருந்தால் கம்பெனி எல்லாம் யாரு பார்ப்பா? அப்புறம் புவ்வாவுக்கு என்ன பண்ணுவ? முதல்ல அங்கே வந்து சேர்ற வழியைப் பாரு.”

முகத்தைத் திருப்பிக் கொண்டு அவர் பேசியதில் ஜனனிக்குமே கோபம் வந்தது. ஸ்ரீரஞ்சனுக்காகப் பொறுத்துக் கொண்டாள்.

ஸ்ரீரஞ்சன் அவளுடன் இருந்தபோதும், அவன் வேலையை அவன் ஒழுங்காகத்தான் செய்கிறான் என்பது அவளுக்குத் தெரியாதா என்ன? ஆனால் மல்லிகாவுக்கோ வேறு பயம்.

மாமியார் வீடே கதி என்று இருக்கும் பையன் அப்படியே அவர்கள் வீட்டோடு போய் விட்டால் என்ன செய்வது? அதான் ஜனனியைக் குத்திப் பேசினார். மகனிடம் பேச முடியாததை அவளிடம் பேசித் தன் மனதை ஆற்றிக் கொண்டார்.

ஸ்ரீரஞ்சனை... அவனைப் பெற்ற தாயாக இருந் தாலும் தவறாகப் பேசியதில் அவளுக்கு உடன்பாடு இல்லை. உடனே தங்கள் வீட்டிற்குக் கிளம்பினாள். சௌதாம்பிகை கூட எவ்வளவோ தடுத்துப் பார்த்தார். ம்ஹூம். ஜனனி அசைவதாய் இல்லை.

“பிறந்து பதினாறு நாளே ஆன பச்சை மண்ணை வச்சுக்கிட்டு என்ன பண்ணுவ? பேசாம இங்கேயே இரு.” அவர் கெஞ்சியது அவள் காதில் விழவில்லை.

ஜனனியின் பிடிவாதம் பார்த்து ஸ்ரீரஞ்சன்தான் சௌதாம்பிகையைச் சமாதானப்படுத்தினான்.

"அத்தை, நான் ரெண்டு பேரையும் பார்த்துக்கிறேன். நீங்க கவலைப்படாதீங்க..." ஆறுதல் சொல்லி ஜனனியை அழைத்து வந்தான்.

சொன்னது போல் அவளையும் விதுவையும் அவன் பார்த்துக் கொண்ட விதம் கண்டு ஜனனிக்கு இன்னமும் அவன் மேல் காதல் பல்கிப் பெருகியது.

நடு இரவில் விது எழுந்து அழும்போது, சில சமயம் ஜனனி கூட உறங்கி விடுவாள். ஆனால் அவன் எழுந்து விதுவைப் பார்த்துக் கொள்வான்.

பசியில் அழுதால் அவளை எழுப்பிப் பால் கொடுக்கச் சொல்லி விட்டு மீண்டும் விதுவை அவன் வாங்கிக் கொள்வான். அந்த இரவிலும் மகளின் சிரிப்பு விளையாட்டைக் கண்டு அவளுடன் விளையாடி மகிழ்ந்து போவான். காலையில் இருந்து இரவுவரை அவன் வேலை செய்த களைப்பு எல்லாம் மகளின் பூஞ்சிரிப்பில் அவனுக்கு மறைந்து போகும்.

அவன் சௌதாம்பிகையிடம் சொன்ன மாதிரி ஜனனியையும் விதுவையும் எந்தக் குறையும் இல்லாமல் பார்த்துக் கொண்டான். அந்த அளவிற்கு இருவரையும் கண்ணுக்குள் வைத்துப் பார்த்துக் கொண்டான்.

அதை நினைத்துப் பார்த்துக் கொண்டிருந்தவளுக்கு மனதில் ஸ்ரீரஞ்சன் மேல் காதல் அலை அலையாய்



அடித்தது. தான் கேட்ட கேள்விக்குப் பதில் வராதது கண்டு ஸ்ரீரஞ்சன் ஏறிட்டுப் பார்த்தான்.

அவன் கண்களைச் சந்தித்தவளால் தன் கண்களை வேறு புறம் திருப்ப முடியவில்லை.

"ஒரு மாசம் மறக்காம இருக்கும்படி நான் ஒண்ணு குடுக்கவா?" என்று கேட்டவள் அவனின் பதிலை எதிர் பாராமல் அவனை இறுகத் தழுவிக் கொண்டாள்.

அவளின் திடீர்த் தாக்குதலை அவன் எதிர்பார்க்க வில்லை. ஒரு கணம் திகைத்தவன் மறுகணம் சுதாரித்துக் கொண்டு பதிலுக்குத் தன் காதலைக் காட்டினான்.

"என்ன... இன்னைக்கு என்னாச்சு? குட்டிம்மா என்னென்னமோ பேசுறாங்க... என்னென்னமோ செய் றாங்க? ம்... இது, என் குட்டிம்மாதானா?" கூடல் முடிந்து களைப்புடன் இருந்தவளின் முகம் பற்றிக் கண்ணுக்குள் பார்வையைப் பதித்துக் கேட்டவனை அவன் முகம் பார்க்காமல் அவன் மார்பில் முகம் புதைத்தாள், அவன் மனையாள்.

அதில் கிறங்கியவன் மேலும் அவளுள் முத்தெடுக்க எண்ணி மூழ்கினான்.

மறுநாள் வழியனுப்ப அர்ஜுன் வந்திருந்தான்.

தங்கைக்கும் ஸ்ரீரஞ்சனுக்கும் தனிமை கொடுக்க வேண்டி விதுவை அழைத்துக் கொண்டு அவன் வெளி யில் சென்றான்.

"குட்டிம்மா... உனக்கு இங்கே இருக்க கஷ்டமா இருந்தா... உங்க வீட்டுக்குப் போய்த் தங்கிட்டு வாயேன். நான் வரும்போது இங்கே வந்தாப் போதும்."

"அதெல்லாம் வேண்டாம். நான் பார்த்துக்கிறேன். நீங்க கிளம்புங்க."

"இல்லை. அம்மா ஏதும் சொன்னால்..."

மல்லிகாவின் குணம் அவன் அறிந்ததுதான். அதான் அப்படிக் கேட்டான்.

ஜனனிக்கும் மல்லிகாவின் குணம் தெரிந்ததுதான். என்ன முன்பு எல்லாம் ஜாடை மாடையாய்ப் பேசிய பேச்சுக்கள் எல்லாம் இப்பொழுது நேரிடையாக அவளைத் தாக்கின.

அதிலும் கடந்த ஒரு வருடமாகத் திவ்யாவின் வருகைக்குப் பின் அவரின் பேச்சு கொஞ்சம் அதிகமாகிப் போனது என்னவோ உண்மைதான்.

திவ்யா என்றவுடன் ஸ்ரீரஞ்சனுடன் அவள் நெருங்கி இழைவது ஞாபகம் வந்து அவள் முகம் இறுகியது. அவளின் மன உணர்வை அவள் முகம் பிரதிபலித்தது.

அவளையே பார்த்துக் கொண்டிருந்த ஸ்ரீரஞ்சன், "என்ன குட்டிம்மா... என்ன யோசிக்கிற?"

ஸ்ரீரஞ்சன் குரலில் எட்டிப் பார்த்த கவலையில்... மனதில் தோன்றிய வேண்டாத எண்ணங்களைத் தூக்கித் தூர எறிந்தாள்.



"ஒண்ணும் கவலைப்படாதீங்க. இது யார் வீடு? நம் வீடு. நான் எல்லாம் சமாளித்துக் கொள்வேன்..." என்று அவனைச் சமாதானம் செய்தாள்.

அவளின் வார்த்தையில் ஓரளவு நம்பிக்கை அடைந்தான் ஸ்ரீரஞ்சன்.

"குட்டிம்மா... விதுவைப் பத்திரமாப் பார்த்துக்கோ. அங்கே இங்கே ஓடிக்கிட்டே இருப்பா. ரொம்ப சத்தம் போடாதே. அப்புறம் என்னைத் தேடி அழப் போறா. அவ என்ன கேட்டாலும் வாங்கிக் குடு.

"முக்கியமா ஐஸ்க்ரீம் கேட்டால் வாங்கிக் கொடு. சளி பிடிக்கும், காய்ச்சல் அடிக்கும்னு அவளைக் கண்டிக்காதே. அவள் அப்பா இல்லையேன்னு ஃபீல் பண்ணக்கூடாது. என்ன புரிஞ்சுதா?"

ஜனனியோ பதில் பேசாமல் புன்சிரிப்புடன் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"நான் இல்லையேன்னு நீ சாப்பிடாம பட்டினி கிடக்காதே. நான் டெய்லி வீடியோ சாட்டிங்கில் பேசுவேன். அப்போ கொஞ்சம் மெலிஞ்ச மாதிரித் தெரிந்தாலும் அவ்வளவுதான்."

செல்லமாக மிரட்டிய கணவனைக் கண்டு அவள் மனதில் காதல் எப்பொழுதும் போல் பொங்கியது.

மேலும் பேச வாயைத் திறந்த கணவனை அருகில் இழுத்து அவன் இதழில் தன் இதழைப் பதித்தாள்.

அவளின் வேகம் கண்டு அவனுள்ளும் ஆசை கிளர்ந்தது.

சில நொடிகள் கழித்து மூச்சு வாங்க இருவரும் பிரிந்தபோது இருவருக்குமே சிரிப்பு வந்தது.

"என்ன குட்டிம்மா... நேத்தும் இன்னைக்கும் ரொம்ப வித்தியாசமாத் தெரியுற! இதுக்காகவே அடிக்கடி ட்ரிப் போகலாம் போல் இருக்கே."

தன் உதட்டைத் தடவியபடி ஜனனியைப் பார்த்துக் கண் சிமிட்டினான் ஸ்ரீரஞ்சன்.

"உங்களை...."

அவனை அடிக்கக் கை ஓங்கியவளின் கைகளில் அகப்படாமல் வெளியில் வந்தான்.

"ம்... பொழைச்சுப் போங்கன்னு விடறேன்..." என்று சொன்னவளைத் தோள் மேல் கை போட்டுத் தன்னுடன் சேர்த்து அணைத்துக் கொண்டான். இருவரும் சிரித்த முகமாய் இறங்கி வருவது கண்டு மல்லிகாவின் வயிறு எரிந்தது.

வீட்டில் உள்ள அனைவரிடமும் விடைபெற்றுக் காரில் ஏறி அமர்ந்தான் ஸ்ரீரஞ்சன். விது அவன் மடியில் உட்கார்ந்து கொண்டாள். அர்ஜுன் காரை ஓட்ட, ஜனனி பின்னால் அமர்ந்து கொள்ள... கார் விமான நிலையம் கிளம்பியது.

அவர்கள் சென்றவுடன் மல்லிகா பொருமித் தள்ளி விட்டார். "ரஞ்சிக்கு அவன் பொண்டாட்டி, மச்சினன் தவிர



வேறு யாராவது கண்ணில் படறாங்களா? எல்லாம் அவளைச் சொல்லணும். நல்லாத்தான் மயக்கி வச்சிருக்கா..."

காவ்யாவும் ஸ்ரீமதியும் என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் அவரின் இரு பக்கமும் அமர்ந்து முழித்துக் கொண்டிருந்தனர்.

அப்படி அக்கறை உள்ளவர் மகனுடன் வழியனுப்பக் கிளம்பி இருக்கணும். அவன் சென்ற பின் புலம்பி என்ன செய்ய? அர்ஜுனை ஸ்ரீரஞ்சன் அழைக்கவில்லை. அவனாகத்தான் வழியனுப்ப வந்தான். இதை அவரிடம் யார் சொல்வது?

"விது செல்லத்துக்கு என்ன வாங்கிட்டு வரணும்?" - காரில் போகும்போது மகளைக் கொஞ்சிக் கொண்டே கேட்டான் ஸ்ரீரஞ்சன்.

"எனக்கு பார்பி டால், சாக்லேட், அப்புறம்... ஆங்... நிறைய வீடியோ கேம்ஸ் எல்லாம் வாங்கிட்டு வாங்க." தலையைச் சரித்து அவள் யோசித்துக் கூறிய அழகில் மனம் நெகிழ்ந்தவன்... மகளை ஆசையுடன் அணைத்துக் கொண்டான்.

"கட்டாயம் வாங்கிட்டு வர்றேன் செல்லம்..." என்று கூறி, அவள் கன்னத்தில் முத்தமிட்டான்.

பதிலுக்கு மகளும் தன் பூவிதழைத் தந்தையின் கன்னத்தில் பதித்தாள். இதை எல்லாம் ஜனனியும் அர்ஜுனும் சிரிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தனர்.

விமான நிலையத்தில் இறங்கிப் 'புறப்பாடு' வாயிலை நோக்கிச் செல்லும் முன் ஸ்ரீரஞ்சன் அர்ஜுனிடம், "ஜனனி யையும் விதுவையும் பார்த்துக்கோடா..." சொல்லும்போதே அவன் குரல் கம்மியது.

"டேய் ரஞ்சன், என் தங்கையையும், மருமகளை யும் நான் பார்த்துக் கொள்கிறேன். நீ கவலைப்படாம போயிட்டு வா." அர்ஜுன் அவனைச் சமாதானப்படுத்தி னான்.

ஜனனியிடமும் விதுவிடமும் விடைபெற்றுச் செல் லும்போது, விது ஓடி வந்து அவன் காலைக் கட்டிக் கொண்டாள். "அப்பா, நீங்க போக வேண்டாம்."

ஸ்ரீரஞ்சன் குனிந்து அவளைத் தூக்கிக் கொண டான்.

"அப்பா நீங்க கேட்ட பார்பி டால், வீடியோ கேம்ஸ் எல்லாம் வாங்கிட்டு வர்றேன். நீங்க அம்மா கூட சமர்த்தா இருங்க."

"அது எல்லாம் வேண்டாம். அப்பாதான் வேண்டும்." விது அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டாள்.

மகளின் பதிலில் அவனின் கண்கள் கலங்கின. ஸ்ரீரஞ்சன் செய்வதறியாது ஜனனியைப் பார்த்தான்.

ஜனனியே அவன் பிரிவை எண்ணி மனதுக்குள் நொறுங்கிப் போய்த்தான் இருந்தாள்.

தானும் மகளுடன் சேர்ந்து கொண்டு கண் கலங்கினால் கணவன் இந்தப் பயணத்தை ரத்து செய்து



விடுவான் என்று அவளுக்குத் தெரியுமாதலால் தன்னைச் சமாளித்துக் கொண்டு, கணவன் அருகில் சென்று மகளைத் தன் கைகளில் வாங்கிக் கொண்டாள்.

"விது, இங்கே பாருங்க. நீங்க சந்தோஷமா இருந் தாத்தானே அப்பாவும் சந்தோஷமா போவாங்க. நீங்க இப்படி அழுதா அப்பா மனசு கஷ்டப்படும். அப்பா பாவம்தானே. நீங்க அழாம சிரிச்சுக்கிட்டே அப்பாவுக்கு பை சொல்லுங்க..."

அம்மா சொன்னது என்ன புரிந்ததோ இல்லையோ, 'அப்பா பாவம். அழக் கூடாது.' இது மட்டும் விதுவுக்குப் புரிந்து, தலையசைத்தாள்.

பின் புன்னகையுடன் தந்தைக்கு விடை கொடுத் தாள்.

ஸ்ரீரஞ்சன் உள்ளே செல்லும்வரை தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்த ஜனனி அதற்கு மேல் தாங்க மாட்டாதவளாய் அர்ஜுனின் தோளில் சாய்ந்தவள், "அண்ணா..." என்று கதறி அழுதாள்.

அர்ஜுன் ஒரு கரத்தில் விதுவைத் தூக்கிக் கொண்டு, மறு கையால் தங்கையை அணைத்துக் கொண்டான்.

## 13

**வி**துவைப் பள்ளிக்குக் கொண்டு போய் விட்டு விட்டுக் காரை அதற்குரிய இடத்தில் நிறுத்தி விட்டு வந்த ஜனனியின் காதுகளில் திவ்யா சிரிக்கும் ஒலி கேட்டது.

ஏற்கெனவே ஸ்ரீரஞ்சனின் பிரிவில் கவலை கொண்டிருக்கும் ஜனனிக்கு மேலும் கவலை சேர்க்க என்று இருந்தது, திவ்யாவின் வருகை.

வீட்டினுள் நுழைந்த ஜனனி வேறு வழியின்றித் திவ்யாவை வரவேற்றவள், அதற்கு மேல் ஒன்றும் பேசாமல் தன் அறைக்குச் சென்று விட்டாள். அறைக்குச் சென்றும் ஜனனியின் படபடப்பு அடங்கவில்லை.

'இவள் எதற்காக இங்கே வந்திருக்கிறாள்? அதுவும் ஸ்ரீ கிளம்பிச் சென்ற மறுநாளே வந்திருக்கிறாள். ஏதோ சரியில்லையே...' - ஜனனியின் மனம் குழம்பியது.

ஏனெனில் திவ்யாவின் நடவடிக்கை அப்படிப்பட்டது. ஸ்ரீரஞ்சனிடம் உரிமையோடு பழகுவது கூடத் தவறு என்று சொல்ல முடியாது. அத்தை பையன், மாமா பொண்ணு என்ற உறவு என்றுகூட அதை விட்டு விடலாம். சில சமயம் அவளின் பார்வை அவன் மேல் படும்போது, அவள் கண்ணில் தெரியும் மயக்கம், மையல் எல்லாம் சேர்ந்து இது சரியில்லை என்ற உணர்வை ஜனனிக்கு ஏற்படுத்திக் கொண்டே இருக்கும்.

ஆனால், இதை எல்லாம் அவள் கணவன் உணர்ந் தான் என்றால் அதுதான் இல்லை. அவன் எப்பொழுதும் போல் அவளுடன் பேசுவது, வெளியில் கூட்டிக் கொண்டு போவது என்று சாதாரணமாகத்தான் இருந்தான்.

ஜனனி - அவர்கள் இருவரும் வெளியில் போகும் போது, அதற்குத் தடை சொன்னதும் கிடையாது.



அதைத் தவறாக வேறு மாதிரிக் கண்ணோட்டத்தில் எடுத்தது கூடக் கிடையாது.

ஏனெனில் கணவன் மேல் அந்த அளவுக்கு நம்பிக்கை. ஆனால் திவ்யாவிடம் விஷம் இருக்கிறது என்பதை அவள் மல்லிகாவுடன் சேர்ந்து கொண்டு தன்னை இகழ்ச்சியாகப் பேசும்போதுதான் தெரிந்தது.

இதைப் பெரிய விஷயமாக ஸ்ரீரஞ்சன் காதுக்குக் கொண்டு செல்ல ஜனனிக்கு விருப்பமில்லை. அவனோ சிறிது கூட ஓய்வு இல்லாமல் வேலை, வேலை என்று ஓடிக் கொண்டிருப்பவன்.

தன்னால் எந்த அளவுக்கு அவனுக்குச் சந்தோ ஷத்தைக் கொடுக்க முடியுமோ அதைத்தான் அவள் கொடுத்தாள். அதனால் என்னவோ திவ்யாவைப் பற்றி ஸ்ரீரஞ்சனிடம் கூறவில்லை. அப்பொழுது ஜனனியும் அவளை ஒரு பொருட்டாக நினைத்ததில்லை.

திவ்யாவின் வருகை என்னென்ன பிரச்சினைகளைத் தனக்கு உருவாக்கப் போகிறதோ என்ற கவலையில் ஆழ்ந்தாள் ஜனனி. சிறிது நேரம் யோசித்தவள், பிரச்சினை வரும்போது வரட்டும். எதையும் சமாளித்துக் கொள்ளலாம் என்று மனதைத் தேற்றிக் கொண்டாள். வரப் போகும் பிரச்சினையின் அளவு பற்றி அந்த நேரம் அவளுக்குமே தெரியவில்லை.

ஜனனி மும்முரமாகச் சமையலறையில் வேலை யில் இருந்தாள். இன்னும் கொஞ்ச நேரத்தில் விதுஷிகா

பள்ளியில் இருந்து வந்து விடுவாள். அவளுக்குப் பிடித்த சிற்றுண்டி தயார் செய்து கொண்டிருந்தாள்.

"ஜானு அக்கா, சமையலில் பிசியா?"

ஜனனிக்குத் திரும்பிப் பார்க்க அவசியமின்றி அது திவ்யாவின் குரல் என்று தெரிந்தது.

ஜனனி அமைதியாக இருந்தாலும் வலியப் பிரச்சினை அவளைத் தேடி வருவதை எண்ணி மனதுக்குள் நொந்து கொண்டாள்.

வேறு வழியின்றித் திவ்யா புறம் திரும்பியவள், "என்ன?" என்பது போல் அவளைப் பார்த்தாள்.

"அக்கா, என்னோட சேலை நல்லா இருக்கா?"

திவ்யா தன் உடலை முன்னும் பின்னும் திருப்பி ஜனனியிடம் கேட்டாள்.

எதற்கு இவள் என்னிடம் வந்து இந்தக் கேள்வியைக் கேட்கிறாள் என்று குழப்பத்துடன் ஜனனி அவளைப் பார்த்தாள். "ம்... நல்லா இருக்கு."

"இது யாருடைய செலக்ஷன் தெரியுமா?"

திவ்யா இடைவெளி விட்டவள் ஜனனியின் முகத்தைக் கூர்ந்து பார்த்தவள்... பின், "ரஞ்சி அத்தான் வாங்கிக் கொடுத்தது. நல்லா இருக்குல்ல..."

ஒரு பெரிய குண்டைத் தூக்கிப் போட்டு விட்டு ஒன்றும் அறியாதவள் போல் அந்த இடத்தை விட்டு அகன்றாள்.



அப்பொழுதுதான் ஜனனி அந்தச் சேலையைக் கவனித்துப் பார்த்தாள். இதே மாதிரிச் சேலை அவள் பிறந்த நாளின்போது ஸ்ரீரஞ்சன் அவளுக்கு வாங்கிக் கொடுத்தது ஞாபகம் வந்தது.

எப்படி இதைக் கவனிக்காமல் விட்டேன் என்று தன்னைக் கடிந்து கொண்டாள்.

இந்தத் திவ்யாவைப் பார்த்தாலே எல்லாமே மறந்து போகுது என்று எண்ணியவள் அப்போதைக்கு அதை மறந்தும் போனாள்.

இரவு மகளை அணைத்துக் கொண்டு படுக்கும் போதுதான் கணவன் அருகில் இல்லாத துயரம் ஜனனியை வாட்டியது.

அவனின் கையணைப்பில் படுத்தால் அடுத்த நிமிடம் உறங்கி விடுபவள்... இன்றோ அவன் அணைப்பு இல்லாது உறக்கம் வராமல் தவித்தாள்.

ஏதேதோ எண்ணிக் கொண்டிருந்தவள் எண்ணம் கடைசியில் திவ்யாவிடம் வந்து நின்றது. அதிலும் இன்று அவள் கட்டிய சேலையைத் தன் கணவன் எடுத்துக் கொடுத்தது என்று சொன்னபோது கூட ஜனனிக்கு வித்தியாசமாகத் தோன்றவில்லை.

ஸ்ரீரஞ்சன் வீட்டில் உள்ளவர்களுக்கு அடிக்கடி ஏதாவது வாங்கிக் கொடுத்துக் கொண்டுதான் இருப்பான். அதை அவள் தடை ஏதும் சொன்னது இல்லை. அது அவளுக்குமே மகிழ்ச்சிதான்.

உண்மையான மகிழ்ச்சி அடுத்தவர்களை மகிழ்ச்சிப் படுத்திப் பார்ப்பதில் என்பதை அவளும் நன்கு உணர்ந் திருந்தாள். அதனால் கணவன் மனம் போல் அவளும் நடந்து கொண்டாள்.

ஆனால்... ஆனால் ஏதோ ஒன்று உறுத்தியது.

என்ன என்ன... என்று யோசித்தவளுக்கு விடை கிடைத்தது. கிடைத்த விடைதான் அவ்வளவு உவப்பான தாக இல்லை. இரு சேலையும் ஒரே மாதிரியான வடிவமைப்புக் கொண்டது. ஆனால் நிறம் மட்டுமே வேறு வேறு.

மற்றப் பண்டிகை நாளின் போது எல்லோருக்கும் ஒரே மாதிரிப் புடவை வாங்கிக் கொடுப்பதில் தவறு இல்லை. ஆனால் மனைவியின் பிறந்த நாள், அவர் களின் திருமண நாள் எல்லாம் தனித்துவம் வாய்ந்தது இல்லையா? அப்படிப்பட்ட நாளில் மனைவிக்கு எடுக்கும் புடவை போல் மற்றவளுக்கும் எடுக்க அவனுக்கு எப்படி மனம் வந்தது?

அதிலும் அந்தப் புடவை தனக்காகத் தனிப்பட்ட முறையில் செய்யப்பட்டுத் தருவிக்கப்பட்டது என்றானே...

ஒருவேளை திவ்யா அதை எடுத்திருந்தாலும் இவன் வேறு ஒரு புடவை தனக்கு எடுத்திருந்திருக்கலாம். இல்லை, திவ்யாவை வேறு புடவை எடுக்கச் சொல்லி இருந்திருக்கலாம். அவளும் நானும் ஒன்றா? ஏன் தன் கணவன் இப்படிச் செய்தான்?



முதல் முறையாகக் கணவனின் நடவடிக்கையில் குற்றம் கண்டாள். எத்தனை பேருக்கு என்ன வேண்டு மானாலும் வாங்கிக் கொடுக்கட்டும். ஆனால் மனைவி என்பவள் தனி அல்லவா?

அவளுக்கும் மற்றப் பெண்ணுக்கும் அதிலும் திவ்யாவிற்கு ஒரே மாதிரியான புடவை ஏன் எடுத்துக் கொடுக்க வேண்டும்? என்ன காரணம்? யோசித்தவளுக்கு விடை தெரியவில்லை. குழப்பத்துடன் இருந்தவளுக்குத் தூக்கம் வரவில்லை.

மறுநாள் காலையில் வாடிய முகத்துடன் மகளைப் பள்ளிக்கு அழைத்துச் சென்ற ஜனனி மல்லிகாவின் கண்ணில் பட்டாள்.

அவருக்கும் எதுவும் புரியவில்லை. ஒருவேளை கணவனைப் பிரிந்திருப்பதால் இருக்கும் என்று எண்ணி யவர் ஒருவித ஏளனத்துடன் உதட்டை வளைத்தார்.

"என்ன அத்தை... மருமகளையே வச்ச கண் வாங்காமப் பார்க்கிறீங்க?"

திவ்யாவின் கிண்டலான குரல் மல்லிகாவை உசுப்பியது.

"ஆமாம், ஆமாம். அவள் அழகில் மயங்கிப் போய்ப் பார்த்துக்கிட்டு இருக்கேன். நீ வேற...!" என்று அலுத்துக் கொண்டவர், "அவ முகம் சரியில்லை. அதான் யோசித்துக் கொண்டிருந்தேன்..." கூறியவரின் முகமும் யோசனையில் ஆழ்ந்தது.

"எல்லாம் நான் போட்ட பிட்டுதான்." திவ்யா நேற்று நடந்ததை அவரிடம் கூறினாள்.

"ரஞ்சி எல்லோருக்கும் ஏதாவது வாங்கிக் கொடுப்பது சகஜம்தானே. அதிலும் இதுக்கெல்லாம் அவ வருத்தப்பட மாட்டாளே!" - சந்தேகத்துடன் மல்லிகா திவ்யாவைப் பார்த்தார்.

"ஐயோ அத்தை, நீங்க புரியாமப் பேசாதீங்க. ரஞ்சி அத்தான் எல்லோருக்கும் வாங்கிக் கொடுப்பது சாதாரண விஷயம்தான். ஆனால் மனைவிக்கு வாங்கிக் கொடுத்த மாதிரி அதே டிசைனில் வேறொருத்திக்குப் புடவை வாங்கிக் கொடுத்ததை எந்த மனைவியால் தாங்கிக்க முடியும், சொல்லுங்க. அதுவும் நம்ம தமிழ்நாட்டுப் பொண் ணுங்களால தாங்கிக்கவே முடியாது.

"ஜனனி பர்த்டேக்கு அத்தான் வாங்கிக் கொடுத்த சேலையும், நேற்று நான் கட்டிய சேலையும் ஒரே டிசைன். ஜனனிக்கு வாங்கிக் கொடுத்தது அத்தான். ஆனால் எனக்கு நானே வாங்கிக்கிட்டேன்.

"இது யாருக்கும் தெரியாது. அத்தானிடம் அது எந்தக் கடை என்று விசாரித்து வாங்கி விட்டேன். ஆனால் ஜனனி அதை அத்தான் எனக்கு வாங்கிக் கொடுத்ததாக எண்ணி மனதுக்குள் தவித்துக் கொண்டிருக்கிறாள்.

"இப்பதானே குழம்ப ஆரம்பிச்சிருக்கா. இனி குழம்பிய குட்டையில் ஈசியா மீன் பிடிக்கலாம். இனி, நான் அடிக்கிற அடியில் ஜனனி நொந்து நூலாகப் போறா...



பாருங்க." வாய் விட்டுச் சிரித்த திவ்யாவை மல்லிகா பார்த்த பார்வையில் மெச்சுதல் இருந்தது.

மகளைப் பள்ளியில் விட்டு விட்டு வந்த ஜனனி நேரே தன் அறைக்குச் சென்றாள். ஸ்ரீரஞ்சன் இன்று வீடியோ சாட்டிங்கில் பேசுவதாகச் சொல்லி யிருந்தான். அதுதான் காரணம். எதை எதையோ எண்ணித் தவித்த வளுக்கு அவன் முகம் பார்த்தால் மட்டுமே அந்தத் தவிப்பு அடங்கும். அவளை ரொம்ப நேரம் காக்க வைக்காமல் அவனும் சாட்டிங்கில் வந்தான்.

"ஹேய் குட்டிம்மா... எப்படி இருக்கே? விது சமர்த்தா இருக்காளா? என்னைத் தேடலியே?" அடுக்கடுக்காய்க் கேள்விக் கணை தொடுத்த கணவனைக் கண்டதும் அதுவரை அவள் மனதில் நிலவி வந்த குழப்பம் சூரியனைக் கண்ட பனித்துளி போல் விலகியது.

இவன் என்னவன். எனக்கு மட்டுமே சொந்த மானவன். இவனின் முழு அன்பிற்கும் உரியவர்கள் நானும் என் மகளும் மட்டுமே.

அந்த நிமிடம் அவளின் மனதில் அவன் மேல் இருந்த அன்பு மட்டுமே ஆட்சி செய்தது. அந்த அன்பின் காரணமாகக் கணவன் மேல் எழுந்த சிறு வருத்தம்கூட அந்த நேரம் காணாமல் போனது.

ஸ்ரீரஞ்சன் அந்த மாதிரி நடந்திருக்க மாட்டான். இந்த திவ்யாதான் பிடிவாதம் பிடித்து வாங்கியிருக்க வேண்டும்.

அவள் பிடிவாதம் பிடித்தால் இவனும் என்ன செய்வான் என்று கணவனுக்குச் சாதகமாக அவள் மனம் எண்ணியது. அதன் விளைவு, மனதில் எல்லையில்லாத நிம்மதி பரவியது.

மனதில் எழுந்த உற்சாகத்துடன் அவனுடன் உரையாட ஆரம்பித்தாள்.

"ம்... நல்லா இருக்கேன். நீங்க எப்படி இருக்கீங்க?"

"நான் நல்லாவே இல்லைடா. சில்லுன்னு ஒரு காதல் படத்தில் வர்ற சூர்யா மாதிரி நியூயார்க் நகரம் உறங்கும் நேரம்னு பாடணும் போல் இருக்கு. நீயும் விதுவும் இல்லாமல் கஷ்டமா இருக்கு." பெருமூச்சொன்று விட்டவன்,

"ம்... அது கிடக்கட்டும். நீ சொல்லு. அங்கே வேற என்ன விசேஷம்?" அவளைப் பார்த்துக் கேள்வி கேட்டான்.

ஒரு கணம் திவ்யா வந்திருப்பதைச் சொல்லலாமா என்று யோசித்தவள், பிறகு அந்த எண்ணத்தைக் கைவிட்டாள். அதையே கேட்காதவள் புடவை விசயத்தையா கேட்கப் போகிறாள். அதைக் கேட்டு அவனைக் குற்றவாளிக் கூண்டில் ஏற்ற அவள் காதல் கொண்ட மனம் தயங்கியது. அவளைப் பொறுத்த வரையில் அவன் காதல் கணவனே. அதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.

அதனால் தேவை யில்லாமல் மனதை வருத்தும் விஷயத்தைத் தூக்கித் தூர எறிந்தவள் ஸ்ரீரஞ்சனிடம்



வேறு விஷயங்கள் பேச ஆரம்பித்தாள். முதலில் சாதாரணமாக ஆரம்பித்த பேச்சுவார்த்தை அதன் பின் எப்பொழுது ஸ்வீட் நத்திங்காக மாறியது அவர்களுக்கே தெரியாது.

"குட்டிம்மா... கிளம்பும்போது கொடுத்த மாதிரி ஸ்ட்ராங்கா ஒண்ணு கொடு, பார்ப்போம்." கண்களில் கிறக்கத்துடன் கேட்ட கணவனைக் கண்டு வெட்கத்தில் முகம் சிவந்தாள் ஜனனி.

"ஐயோ... ஸ்ரீ... என்ன இது?"

முகம் சிவக்கக் கேட்ட மனைவியைப் பார்த்ததும் எப்பொழுதும் போல் ஸ்ரீரஞ்சன் மனதில் காதல் பெருக்கெடுத்து ஓடியதைச் சொல்லத் தேவையில்லை. திருமணமாகி இவ்வளவு நாள் கழித்தும் புது மணப்பெண் போல் வெட்கப்படும் மனைவியை ரசித்தவன் பேச்சை மாற்றினான்.

"ஈவினிங் விது வந்ததும் மறுபடியும் கூப்பிடுகிறேன்."

"சரி..." என்றவளிடம், மேலும் தன் மனதில் உள்ள காதலை, இரவில் அவள் அருகில் இல்லாத ஏக்கத்தைக் கூறி அவளை இன்னும் முகம் சிவக்கச் செய்தான், அந்தச் சிறந்த காதலன்.

ஸ்ரீரஞ்சன் பேசி முடித்ததும் அப்படியே கட்டிலில் படுத்தவள் தலையணையில் முகம் புதைத்தாள். அவள் கண்கள் மயக்கத்தில் இருக்க முகம் மலர்ந்து விகசித்தது. தான் ஐந்து வயதுப் பெண்ணுக்கு அம்மா என்ற ஞாபகம்

கூட இல்லை அவளுக்கு. காதலனின் காதலியாய் அவள் மனம் காதலில் மூழ்கி யிருந்தது.

கணவனின் காதல் வார்த்தையில் அந்தப் பேதை மனம் இன்பத்தில் துள்ளிக் குதித்தது. அந்த நேரம் திவ்யா – மல்லிகா இவர்களைப் பற்றிய ஞாபகங்கள் கூடப் பின்னுக்குத் தள்ளப்பட்டன. அந்தக் கணம் ஒன்று மட்டும் அவளுக்குப் புரிந்தது. அவளின் பலமும் பலவீனமும் தன் கணவன்தான் என்பது அது.

ஸ்ரீரஞ்சனைக் காணாமல் ஜனனி மனதில் ஏற்பட்ட சஞ்சலம் அவனைக் கண்ட வுடன் மறைந்து போன மாயம் என்ன? அவளின் காதல் அந்தளவிற்கு வலிமை யற்றதா... இல்லை, அதை வலிமை இழக்கச் செய்கிறார் களா?

காலங் காலமாகப் பெண்களின் மனதில் உள்ள உரிமைப் போராட்டம்தான் ஜனனியின் மனதிலும் எழுந்தது. அது கொஞ்சம் கூடினாலும் சந்தேகம் என்ற வட்டத் துக்குள் வந்துவிடும். சந்தேகம் என்று ஒன்று வந்தால் அதன் பின் நிம்மதி ஏது?

ஜனனி சந்தேகம் என்ற வட்டத்துக்குள் சிக்குவாளா? இல்லை, தன் கணவன் அந்த மாதிரி இல்லை என்று அதிலிருந்து வெளியில் வருவாளா? அவள் வெளிவர விரும்பினாலும் மல்லிகா, திவ்யா அதற்கு விடுவார்களா? இது ஒரு சிறு தீப்பொறிதான். இது ஊதி ஊதிப் பெரியதாகப் போகிறதா? இல்லை, நமநமத்துப் போகப் போகிறதா?



## 14

அதிகாலை ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த ஜனனிக்குத் திடீரென்று விழிப்பு வந்தது. மணியைப் பார்த்தாள். அது நான்கு என்றது.

இன்று சனிக் கிழமை என்பதால் விதுவிற்கு விடுமுறை. காலையில் எழுந்து பார்க்க வேண்டிய வேலைகள் ஏதுமில்லை.

மீண்டும் தூங்க முற்பட்டவளுக்குத் தூக்கம் வரவில்லை. மெல்ல மகளின் உறக்கம் கலையாத வண்ணம் எழுந்தவள், குளியலறை சென்று முகம் கழுவியவள் பால்கனிப் பக்கம் சென்றாள். குளிர்ந்த காற்று அவள் மேனியைத் தழுவிச் சென்றது.

அங்கிருந்த சுவரில் சாய்ந்து தரையில் அமர்ந்த வளின் மனதை அந்தக் குளிர் காற்றால் கூடக் குளிர்விக்க முடியவில்லை.

ஒவ்வொரு நாளும் திவ்யாவால் ஏற்படும் பிரச்சினை நாளுக்கு நாள் அதிகரித்தது. வேண்டுமென்றே இவள் காதில் விழுமாறு, “ரஞ்சி அத்தான் இதைச் சொன்னாங்க... அதைச் சொன்னாங்க...” என்று அவளுக்கும் ஸ்ரீரஞ்ச னுக்கும் ஏதோ நெருக்கம் இருப்பது போல் அவள் சொல்லும் போது ஜனனியின் உள்ளமும் உடலும் பற்றி எரிந்ததைச் சொல்லத் தேவையே இல்லை. இதற் கெல்லாம் சிகரம் வைத்தாற் போல் அவள் ஜனனியின் அழகைச் சுட்டிக் காட்டிக் கேலி பேசியதை ஜனனியால் தாங்க முடியவில்லை.

“ஜானு அக்கா, என்ன இங்கே இவ்வளவு சதை போட்டு விட்டது...” என்று ஜனனியின் வயிற்றுப் பகுதி யையும், இடுப்புப் பகுதியையும் சுட்டிக் காட்டிக் கேட்டவள் குரலில் ஏகத்துக்கும் கேலி இருந்ததோ?

“என்னைப் பாருங்க...” என்று தன் முன்னழகையும் பின்னழகையும் காட்டி, “இந்த மாதிரி ஸ்லிம்மா உடம்பை வச்சிருக்க வேண்டாமா? ரஞ்சி அத்தானும் என்னை மாதிரிதான். அனாவசியமா அவர் உடம்பில் எங்கும் சதை போட்டிருக்கிறதா? அவர் மனைவி நீங்க. அவர் அழகுக்கு ஈக்குவலா இருக்க வேண்டாமா?

“திருமணம், குழந்தை என்றவுடன் பெண்கள் உடம்பைக் கட்டுக்கோப்பாய் வைக்காததனால்தான் ஆண்கள் மனம் வேறு பக்கம் போகிறது. நீங்க இப்படி இருந்தீங்கன்னா ரஞ்சி அத்தான் பாவம்...” என்று கூறியவள், ஜனனியின் முகத்தை ஆராய்ந்தாள்.

‘ஸ்ரீரஞ்சன் அழகிற்கு நீ இணையில்லை. அவனுக்கு நான்தான் சரியான இணை. நீ இப்படி இருப்பதால் அவன் பார்வை என் பக்கம் திரும்ப வாய்ப்பு இருக்கிறது...’ என்று சொல்லாமல் சொல்லி விட்டாள் திவ்யா.

திவ்யா சொன்னதைக் கேட்டு ஜனனியின் முகம் விழுந்து விட்டது. மேற்கொண்டு பேசப் பிடிக்காமல் அந்த இடத்தை விட்டு நகர்ந்தாள் ஜனனி.

அவள் போவதைப் பார்த்துக் கொண்டிருந்த திவ்யா வின் இதழில் விஷமப் புன்னகை ஒன்று பூத்தது.



நேரே தன் அறைக்குச் சென்ற ஜனனி, கண்ணாடி முன் போய் நின்றாள். திவ்யா சொன்னது போல் இருக் கிறதா என்று தன் உடல் அழகை ஆராய முற்பட்டாள்.

நான் அழகாக இருக்கிறேன் என்று தன்னம்பிக்கை யுடன் பார்த்தால் உங்கள் வீட்டுக் கண்ணாடி உங்களை அந்த உலக அழகியை விட அழகாகக் காட்டும்.

இதே இது நான் அழகாக இல்லையோ என்று நம்பிக்கையற்றுச் சந்தேகம் மேலிடப் பார்த்தால் உண்மை யில் அழகாய் இருப்பது கூட அசிங்கமாகத் தோன்றும்.

இது அவரவர் பார்ப்பவர் கண்ணோட்டத்தைப் பொறுத்தது.

ஜனனியோ சந்தேகக் கண்ணோட்டத்துடன் பார்த் தாள். பால் நிறம், மாசு மருவில்லாத குழந்தைத் தனத் துடன் கூடிய அழகிய முகம். நிறைவான தாம்பத்தியத்தின் விளைவாக எப்பொழுதும் முகத்தில் குடியிருக்கும் நிரந்தரப் புன்னகை எல்லாம் அவளைப் பேரழகியாகக் காட்டியது.

ஜனனியின் அழகின் முன் திவ்யா கால் தூசு கூடப் பெற மாட்டாள். இதுநாள்வரை ஜனனி தன் அழகை எப்பொழுதும் ஆராய்ச்சி செய்தது இல்லை. அவள் அழகை ஒரு பொருட்டாகக் கருதியது கிடையாது.

இன்று ஏனோ அது மிக முக்கியமாகப் பட்டது. காமாலைக் கண்ணோடு பார்த்தால் எல்லாமே வேறாகத்தான் தெரியும். அதே மாதிரி ஜனனிக்கும் திவ்யா சொன்னது சரிதானோ என்று தோன்றியது.

பிரபஞ்ச அழகியாக இருந்தாலும், யாராவது ஏதாவது அவர்கள் அழகைக் குறை கூறினால் நிச்சயம் அவர்கள் மனதில் கூட ஒரு சிறு தடுமாற்றம் வந்து போகும்.

அவர்களே அப்படி என்றால் ஜனனியின் நிலையோ சொல்லத் தேவையில்லை.

முதல் முறையாக ஸ்ரீரஞ்சனுக்கு ஏற்றவள் தான் இல்லையோ என்ற எண்ணம் அவள் மனதில் தோன்றியது. 'இவ்வளவு அழகான நீ எப்படி இந்தக் கறுப்பனைக் கட்டச் சம்மதிச்ச?' என்று கணவன் அவள் அழகைப் புகழ்ந்து பேசியது ஏனோ அந்த நிமிடம் அவள் ஞாபகத்திற்கு வரவில்லை.

ஒரு பெண்ணை எங்கு தட்டினால் வீழ்வாள் என்பதை நன்கு அறிந்திருந்த அதற்கு ஏற்றாற் போல் செயலாற்றிய திவ்யாவைப் பாராட்டத்தான் வேண்டும். அதிலும் ஸ்ரீரஞ்சன் அருகில் இல்லாத சமயத்தைத் தேர்ந்தெடுத்த அவள் புத்திசாலித்தனத்தை என்ன சொல்வது!

திவ்யா நினைத்தது நடந்தது. ஜனனியின் மனதில் குழப்ப விதைகளைத் தூவி விட்டு விட்டாள். இனி குழம்பிய குட்டையில் மீன் பிடிப்பது அவளுக்கு எளிது அல்லவா? ஜனனியின் இந்த மாற்றத்திற்குக் காரணம் அவள் அடிமனதில் அவளையும் அறியாமல் இருந்த ஒருவிதத் தாழ்வு மனப்பான்மையே. முதலில் இருந்தே ஸ்ரீரஞ்சனின் வசதி வாய்ப்புக்குத் தான் ஏற்றவள் கிடையாது என்பது அவள் மனதில் ஆழப் பதிந்திருந்தது.



அதற்குக் காரணம் ஸ்ரீரஞ்சனின் வீட்டார் மற்றும் அவன் உறவினர்கள் நடவடிக்கைதான்.

அதை எல்லாம் ஸ்ரீரஞ்சன் அவள் மேல் வைத்திருந்த அன்பு ஈடுகட்டியது. அதனால் என்னவோ அதை ஜனனியும் அவ்வளவாக உணரவில்லை.

ஆனால் இப்பொழுது அவன் அருகில் இல்லாத சமயம் சிறு விஷயம் கூடப் பூதாகரமாகத் தோன்றி அவள் மனதைப் பாதித்தது.

சமயம் பார்த்துத் திவ்யா, ஜனனியின் அமைதியான நெஞ்சுக் கூட்டில் கல்லை விட்டு எறிந்து விட்டாள். அதற்குப் பலனும் இருந்தது.

ஆனால் ஜனனிக்கு எல்லாக் குழப்பமும் ஸ்ரீரஞ்சனிடம் பேசும்வரைதான்.

அன்றே அவன் வீடியோ சாட்டிங்கில் வந்தபோது வேண்டுமென்றே ஜனனி, "என்ன... நாங்க இல்லாமல் அய்யா ரொம்ப என்ஜாய் பண்றீங்க போல..." என்று கேட்டாள்.

"நீ வேற... இங்கே மீட்டிங்கில் பாதி நேரம் போகுது. மீதி நேரம் உனக்கும் விதுவுக்கும் வேண்டியது வாங்க என்று ஷாப்பிங்கில் போகுது. என்ன என்ஜாய்மென்ட் இருக்கு. அடுத்த தடவை வரும்போது உங்க ரெண்டு பேரையும் கூட்டிக் கொண்டு வர வேண்டும்."

அவன் குரலில் அவர்கள் தன்னுடன் இல்லாததால் ஏற்பட்ட ஏக்கம் நன்றாகவே வெளிப்பட்டது.

"ஏன் இவ்வளவு சலிச்சுக்கிறீங்க? அங்கேதான் அழகழகா சூப்பர் ஃபிகர் எல்லாம் இருக்குமே. சைட் அடிக்க வேண்டியதுதானே!"

"கட்டின புருஷனை சைட்டா அடிக்கச் சொல்ற...! உன்னை..." அடிப்பது போல் கையை ஓங்கினான் ஸ்ரீரஞ்சன். பின் கலகலத்துச் சிரித்தவன், "அவர்கள் எல்லாம் என் குட்டிம்மாவின் அழகுக்கு ஈடாகுவாங்களா என்ன...?" தன் முன் இருந்த மடிக்கணினியின் திரையில் தெரிந்த மனைவியின் முகத்தை மையலுடன் பார்த்தான்.

"சும்மா பொய் சொல்லாதீங்க. அங்கே உள்ள பொண்ணுங்க எல்லாம் ரொம்ப அழகு. அது எனக்கும் தெரியும்." அவளையும் அறியாமல் அவள் குரல் சிணுங்கியது. அதை அவள் உணரவில்லை. ஆனால் ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருக்கும் அந்தக் காதல் கணவன் புரிந்து கொண்டான்.

"எத்தனை பேர் அழகா இருந்தாலும், அவங்க எல்லாம் என் குட்டிம்மா இல்லையே... என் கண்ணுக்கு என் குட்டிம்மா தான் அழகு..." என்றவன் குரலில் இருந்த காதல் அவளுக்குப் புரிந்தது.

தன் கணவன் கண்ணுக்குத் தான் அழகாக இருக்கிறோம் என்ற உணர்வே அவளுக்கு உற்சாகத்தை, தன்னம்பிக்கையைத் தந்தது. திவ்யா பேச்சால் எழுந்த குழப்பம் கணவனின் பதிலில் நிம்மதியடைந்தது.

ஆனால் அந்த நிம்மதி கொஞ்ச நேரம்கூட நீடிக்கவில்லை. அது ஸ்ரீரஞ்சனிடம் இருந்து வந்த



வார்த்தையால்தான். "இன்னும் இரண்டு நாள் வேலை அதிகமாக இருக்கு. அதனால் உன் கூடப் பேச முடியாதுடா குட்டிம்மா."

அவனின் வார்த்தை கேட்டு அவள் முகம் வாடியது. அதைப் பார்த்த ஸ்ரீரஞ்சனுக்கோ வருத்தம் இருந்தாலும், இன்னும் இரண்டே நாள்தான். அதுக்குப் பின் நேரில் வந்து சமாதானப்படுத்துகிறேன் என்று மனதுக்குள் கூறிக் கொண்டான்.

ஜனனிக்கு இன்ப அதிர்ச்சியாக இருக்க வேண்டும் என்பதற்காக அவன் சொன்ன நாளுக்கு முன்பாகக் கிளம்பப் போவதை அவளிடம் சொல்லவில்லை.

அதை அறியாத அவன் மனைவியோ மனதுக்குள் தவித்தாள். தவித்தவளின் மனதை வேறு பேச்சில் மாற்ற நினைத்தவன் அதை வெற்றிகரமாகச் செய்தும் முடித் தான்.

எங்கோ பறவைகளின் சத்தத்தில் தன் நினைவு கலைந்த ஜனனிக்குத் தன்னையும் அறியாமல் பெரு மூச்சொன்று வெளிப்பட்டது.

ஸ்ரீரஞ்சனிடம் தினமும் பேசித் தன் மனதை ஆற்றிக் கொள்பவளுக்கு, நேற்று ஒரு நாள் பேசாததே என்னவோ காலம் காலமாக அவனை விட்டுப் பிரிந்து பேசாமல் இருப்பது போல் தோன்றியது.

இன்னும் ஒரு நாள் தானே. அதன் பின் அவனுடன் பேசலாம் என்று தன்னைத் தானே சமாதானப்படுத் தியவள்... மகள் எழுந்து விட்டாளா என்று பார்க்க

அறைக்குள் நுழைந்தாள். (அவளுக்குத் தெரியாதே, அவன் நாளை அவளை நேரில் சந்திக்கப் போகிறான் என்று.)

"ஜானு அக்கா, இங்கே வாங்க." தேன் குரலில் ஜனனியை அழைத்தாள் திவ்யா.

வலியக் கூப்பிடுபவளிடம் முடியாது என்றா சொல்ல முடியும். வேறு வழியின்றி அவள் அருகே சென்றாள். இப்பொழுதுதான் விதுவைத் தலைக்குக் குளிப்பாட்டி உணவு ஊட்டி விட்டு என்று அவள் வேலை முடிந்தது. விதுவும் அவளின் வீடியோ கேம்ஸில் மூழ்கியிருந்ததால் ஜனனிக்கும் இப்போதைக்கு வேறு வேலை இல்லை.

திவ்யாவோ கை நிறையப் புகைப்படங்களை வைத்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். மற்றவர்கள் யாரும் அங்கே இல்லை.

"அக்கா, இந்தப் போட்டோ பாருங்க..." என்று ஜனனி கையில் சில புகைப்படங்களைத் திணித்தாள்.

ஜனனி அதை மறுக்காமல் வாங்கிப் பார்த்தாள். அவள் புகைப்படங்களைப் பார்ப்பதைக் கண்ணில் ஒருவிதக் கேலியுடன் உதட்டில் அலட்சியப் புன்னகையுடன் பார்த்துக் கொண்டிருந்தாள் திவ்யா.

ஜனனி சுவாரசியத்துடன் பார்த்துக் கொண்டிருந் தவள் கடைசியாக இருந்த அந்தப் புகைப்படத்தைப் பார்த்ததும் அதிர்ச்சியில் அப்படியே திகைத்துப் போய்ச் சிலையெனச் சமைந்தாள்.



திவ்யா தான் நினைத்தது நடந்து விட்டதை அறிந்து மனதில் சந்தோஷத்தில் குதித்தாள். "அக்கா, உங்களுக்கு என்ன ஆச்சு? ஏன் இப்படி இருக்கீங்க?" குரலில் வருவித்துக் கொண்ட பதட்டத்துடன் ஜனனியைக் கேட்டாள் திவ்யா.

ஜனனி ஒன்றும் பேசாமல் அவள் கையில் அந்தப் புகைப்படத்தை நீட்டினாள்.

ஸ்ரீரஞ்சன் திவ்யாவின் கன்னத்தில் முத்தமிடுவது போல் இருந்த புகைப்படம்தான் அது.

"அய்யோ அக்கா... இந்தப் போட்டோ எப்படி இங்கே?" ஏதோ ரகசியம் வெளிப்பட்டது போல் துடித்தாள். இல்லை இல்லை, நடித்தாள்.

"சாரி. அத்தானைத் தப்பா நினைச்சுக்காதீங்க."

ஜனனி இப்பொழுது நேரிடையாகத் திவ்யாவின் பார்வையைச் சந்தித்தாள். "உனக்கு என்ன வேணும், திவ்யா? ஏன் இப்படி எல்லாம் பண்ற? எதுக்குக் கிராஃபிக்சில் இப்படி ஒரு போட்டோ ரெடி பண்ணின? இதைப் பார்த்து நான் என் ஸ்ரீயைச் சந்தேகப்படணும்னு நீ எதிர்பார்க்கிறியா? என் ஸ்ரீ இப்படி நடந்து கொள்பவர் இல்லை."

ஜனனி நேரிடையாகக் கேட்ட வுடன் திவ்யா தன் முக பாவத்தை மாற்றிக் கொண்டாள்.

"உனக்குத் தெரிந்து போனது ரொம்ப நல்லதாப் போச்சு. எனக்கு என்ன வேணுமா? எனக்கு என் அத்தான்

வேணும். அவரை எனக்குக் குடுக்க முடியுமா? நீ என்ன கொடுக்கிறது... உன்னை விரட்டி விட்டுட்டு நானே என் அத்தானை எடுத்துக்கிறேன். அப்புறம் என்ன கேட்ட... இந்த போட்டோ கிராபிக்ஸ்னா? நோ. இது ஒரிஜினல்..." என்றவள், அந்தப் புகைப்படத்தையும், அதற்குண்டான நெகட்டிவையும் ஜனனியின் கையில் வைத்தாள்.

ஜனனியால் ஒன்றும் பதில் பேச முடியவில்லை. ஒருவேளை முன்பு எடுத்த புகைப்படமோ என்று எண்ணுவ தற்குக் கூட அதில் சாத்தியம் இல்லை. ஏனெனில் தற்போதைய ஸ்ரீரஞ்சனே அதில் இருந்தான். ஆனால் இதை நம்புவதற்கும் இயலவில்லை. நம்பாமலும் இருக்க முடியவில்லை.

"என் ரஞ்சி அத்தான்... எனக்கு மட்டும்தான். அதனால் வந்த வழியே திரும்பிப் போய் விடு." அதிகாரமாகத் திவ்யா கூறியது கேட்டு ஜனனிக்கு ஆத்திரம் வந்தது.

"இந்த போட்டோ என்ன... இது போல் நூறு போட்டோ காட்டினாலும் என் ஸ்ரீயை நான் சந்தேகப்பட மாட்டேன். கண்ணால் காண்பதும் பொய். காதால் கேட்பதும் பொய். தீர விசாரிப்பதே மெய்... என்று ஒரு சொல் உண்டு. ஆனால் என் ஸ்ரீயைப் பற்றித் தீர விசாரிக்க வேண்டும் என்று கூட இல்லை. அவர் அந்த அளவுக்குச் சுத்தமானவர். அவர் மனதில் நான் மட்டும்தான். இனி மேலும் நான் மட்டும்தான்.

"இந்தப் புகைப்படம் உண்மையானதாக இருந் தாலும் முத்தம் குடுப்பதில் தவறு ஒன்றும் இல்லையே. உன்னைத் தன் தங்கையைப் போல் எண்ணி யிருக்கலாம். அவர் தூய அன்பை நீ வேறு கண்ணோட் டத்தில் பார்க்காதே." படபடவெனப் பேசியவள் திவ்யாவின் முகத்தை ஆத்திரத்துடன் உறுத்துப் பார்த்தாள்.



ஜனனியின் ஆத்திரத்தைக் கொஞ்சமும் கண்டு கொள்ளாமல் தன் கைபேசியை நோண்டிக் கொண்டிருந் தாள் திவ்யா. அதைக் கண்டு ஜனனியின் ஆத்திரம் இன்னமும் அதிகமானது. இதற்கு மேல் இங்கே இருந்தால் கோபத்தில் இந்தத் திவ்யாவைத் தான் ஏதும் செய்து விடுவோம் என்று எண்ணி ஜனனி அங்கிருந்து செல்ல முற்பட்டாள்.

"ஒன் செகண்ட்..." என்று கை நீட்டி ஜனனியைச் செல்ல விடாமல் தடுத்த திவ்யா கைபேசியை அவளிடம் நீட்டி, "இதைப் பார்த்து விட்டுப் பேசு." - இகழ்ச்சியான குரலில் கூறினாள்.

கைபேசியில் இருந்ததோ சமூக வலைத்தளத்தின் குறுஞ்செய்தி அனுப்பும் பகுதி. இதில் என்ன இருக்கிறது என்பது போல் பார்த்தாள் ஜனனி.

"உங்க கண் முன்னாடியே நான் ரஞ்சி அத்தானுடன் பேசியதைக் காண்பிக்கிறேன். அதாவது உங்க ஸ்ரீயுடன். பிறகு அதையும் நான் போலி, பித்தலாட்டம் பண்ணி யிருக்கேன்னு சொல்லப் போற..." என்ற திவ்யா, ஜனனி கண் முன்னே அவள் ஸ்ரீரஞ்சனுடன் குறுஞ்செய்தி மூலம் பேசியதைக் காண்பித்தாள்.

ஜனனியின் கண்களில் வேறு எந்த வார்த்தையும் விழவில்லை. “ஐ லவ் யூ குட்டிம்மா...” என்று ஸ்ரீரஞ்சன் திவ்யாவிற்கு அனுப்பிய செய்தியில் மட்டும் நிலைகுத்தி நின்றது.

“குட்டிம்மா...” இது ஜனனியை மட்டும் அவன் அழைக்கும் சொல். மகளைக் கூட அவன் செல்லம் என்றோ, வேறு ஏதாவது சொல்லியோதான் அழைப்பான். ஒருபோதும் விதுவைக் கூட அவன் குட்டிம்மா என்று அழைத்தது இல்லை. அப்படிப்பட்டவன் திவ்யாவை அவ்வாறு அழைத்திருக்கிறான் என்றால் அவர்கள் இடையே என்ன உறவு? இல்லை, அவன் மாதிரிப் பணக்காரங்களுக்கு ‘ஐ லவ் யூ’ என்ற வார்த்தை குட் மார்னிங் சொல்வது மாதிரி சாதாரண வார்த்தையா?

ஸ்ரீரஞ்சன் முத்தமிடுவது போல் இருந்த புகைப்படத்தைக் கூடச் சாதாரணமாக எடுத்த ஜனனியால், நான் உன்னை நேசிக்கிறேன் என்ற இந்த வார்த்தையைச் சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியவில்லை. அதிலும் அந்தக் குட்டிம்மா என்று ஸ்ரீரஞ்சன் விளித்திருந்ததை அவளால் ஜீரணிக்க முடியவில்லை.

ஜனனியால் திவ்யா கொடுத்த முதல் அடியைத் தாங்க முடிந்தது. அடுத்துக் கொடுத்த அடியைத் தாங்க முடியவில்லை. அந்த அடி அவள் மனதில் ஆழப் பாய்ந்து தீராத ரணத்தைக் கொடுத்ததோ? மூளை வேலை செய்ய மறந்து மரத்துப் போனது. திவ்யாவிடம் எதிர்த்து வாதிடக் கூட முடியாமல் மனது கனத்துப் போய்



இருந்தது. கால்கள் எப்படித்தான் அறைக்கு வந்தனவோ தெரியாது.

விது விளையாடும் வீடியோ கேம்ஸ் சத்தத்தில்தான் சுய உணர்வு அடைந்தாள்.

‘ஸ்ரீ அப்படிப்பட்டவரா... என்னால் நம்ப முடிய லையே!’ என்று மனதுக்குள் புலம்பியவள் தலையைப் பிடித்துக் கொண்டு கட்டிலில் அமர்ந்தாள்.

கண்களில் இருந்து கண்ணீர் தானாக வடிய அப்படியே அமர்ந்திருந்தாள் ஜனனி. சற்று முன் பார்த்த புகைப்படம் இப்பொழுது பூதாகர உருவெடுத்து அவள் கண் முன் வந்தது.

ஒருவேளை அதுவும் உண்மைதானோ என்று அவள் மனம் மறுகியது. உண்மை இல்லாமலா அவள் அதன் நெகட்டிவோடு தந்திருப்பாள். மனம் அதை முழுவதும் நம்பியது. ஆனால் அறிவோ அதை நம்பாதே. அது பொய் என்றது.

இரண்டுக்கும் இடையில் போராடியவள் இறுதியில் மனதுக்கே வெற்றிக் கோப்பையை அளித்தாள்.

ஏனெனில் மனதில்தான் தேவையில்லாத குழப்பம், தாழ்வு மனப்பான்மை இருந்தது. அறிவில் அவள் எல்லோ ரையும் விடச் சிறந்தவளே. அதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் பாலில் கலந்த ஒரு துளி விஷம் போல் அவள் மனதில் இருந்த தாழ்வு மனப்பான்மை அவள் அறிவை எளிதில் வென்றது.

அப்பொழுதுதான் கவனித்தாள், அந்தப் புகைப்படம் தன் கையில் இருப்பதை. அதைப் பார்த்தவளுக்கு மனதில் மீண்டும் துயரம் நிரம்பியது. எங்கே மகள் அதைப் பார்த்து விடுவாளோ என்று எண்ணியவள் அவசரமாக அந்தப் புகைப்படத்தை அலமாரியில் தன் உடைகளுக்குக் கீழே அவசரமாகப் போட்டாள். கணவ னிடம் அப்போதே பேச வேண்டும் என்று மனம் தவித்தது.

அவனை எப்படித் தொடர்பு கொள்வது? அதுவும் வேலைகள் இருப்பதாக வேறு சொல்லி யிருக்கிறான். இந்த நிலைமையில் தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும் அவளுக்கு விருப்பம் இல்லை.

அவனிடம் சிறிது நேரம் பேசினாலும் ஆறுதல் அடைந்து விடுமே தன் மனம் என்று எண்ணியவளுக்குச் சுய இரக்கத்தில் கண்ணீர் கண்களில் முட்டிக் கொண்டு நின்றது.

திவ்யாவோ ஜனனி சென்றவுடன் நேரே மல்லிகாவின் அறைக்குத்தான் சென்றாள்.

தான் வெற்றி பெற்றதை அவரிடம் சொல்லிக் கொண்டாட வேண்டாமா? அதற்காகத்தானே அவரைக் கூட வர விடாமல் தானே தனியே ஜனனியை எதிர் கொண்டாள்.

ஒருவரின் துன்பத்தில் இன்பம் காணும் இவளையும் ஒரு நாள் துன்பம் நெருங்கத்தான் போகிறது. ஆனால் அன்று யாரும் அவளுக்குத் துணையாக இருக்கப் போவ தில்லை என்பதை அவள் அறியவில்லை.



"அம்மா, எனக்கு ப்ராஜெக்ட் வொர்க் மிஸ் கொடுத் திருக்காங்க... நீங்க ஹெல்ப் பண்றீங்களா?"

விது அழைக்கும் குரலில்தான் ஜனனி நடப்புக்கு வந்தாள். மணியைப் பார்த்தாள். அது ஆறு என்று காட்டியது.

மதியம் எப்படி விதுவுக்குச் சோறு ஊட்டினாள்... அதன் பின் என்ன நடந்தது என்று அவளைக் கேட்டால் அவளுக்குத் தெரியாது. எல்லாமே இயந்திர கதியில் செய்து முடித்திருந்தாள்.

"அம்மா..." - விது மீண்டும் அழைத்தாள்.

"என்னடா செல்லம்?" - வாஞ்சையுடன் கேட்ட வளுக்கு மகளைப் பார்த்ததும் மனது துடித்தது.

உன் தகப்பன் இனி உனக்குச் சொந்தமில்லை என்று சொல்ல நா துடித்தது. வேண்டாம். பொறு மனமே பொறு. அவன் வரும்வரை இருந்து விட்டுத் தீர விசாரிக் காமல் முடிவெடுக்கக் கூடாது என்று அவள் மனதுக்குள் முடிவெடுத்துக் கொண்டாள்.

"ப்ராஜெக்ட் வொர்க்...?" வினாவோடு அன்னையைப் பார்த்தாள் மகள்.

"ம்... ப்ராஜெக்ட் வொர்க்கா! விது கண்ணா, நீயே செஞ்சுக்கிறியா? அம்மா உனக்குத் தேவையான திங்ஸ் எடுத்துத் தர்றேன்."

"ம்..." என்று யோசித்த விது, ஜனனியின் முகத்தில் இருந்த வாட்டத்தை உணர்ந்தோ என்னவோ, "சரிம்மா.

நீங்க எடுத்துத் தாங்க. நான் பண்றேன்...” என்றவள், தனக்கு வேண்டியதைச் சொல்ல... ஜனனி அவளுக்கு வேண்டியதை எடுத்துக் கொடுத்தாள். அதில் அவர்கள் குடும்பப் புகைப்படங்களும் அடக்கம். அதைப் பார்த்த வளுக்கு மீண்டும் கண்ணைக் கரித்தது.

இப்படியே அழுது கொண்டிருந்தால் அழுது கொண்டே இருக்க வேண்டியதுதான் என்று மனதைக் கட்டுப்படுத்தியவள்... மகளுக்குப் பால் எடுத்து வரக் கீழிறங்கினாள்.

“எங்கே இந்த மதியைக் காணோம்? இவ கிளம்பி வர்றதுக்குள்ள அங்கே கடையையே மூடிடுவாங்க போலிருக்கே. வர வர இந்தப் பொண்ணு பண்ற அழிம்பு தாங்கல...” மல்லிகா அலுத்த குரலில் சொன்னது ஜனனியின் காதில் விழுந்தது. எல்லோரும் கடைவீதிக்குக் கிளம்பி விட்டார்கள் என்பது புரிந்தது.

அவர்கள் என்று அவளை வா என்று அழைத் திருக்கிறார்கள், இன்று அழைக்க... என்று எண்ணியவள் உதட்டில் விரக்திப் புன்னகை எழுந்தது. மேற்கொண்டு செல்ல எத்தனித்துக் காலை எடுத்து வைத்தவள் காதில், “ஜனனி...” என்று அவள் பெயர் விழுந்தது.

“காவ்யா எங்கே?”

“அவள் ஆஷிஷைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள். எல்லோரும் கிளம்பியதும் சொல்லச் சொன்னாள்...” என்ற திவ்யா மிக மெல்லிய குரலில் மல்லிகாவிடம் கேட்டாள்.



“அத்தை, காலையிலிருந்து ஜனனியைக் கவனிச்சீங் களா? நான் இவ்வளவு சொல்லியும் கொஞ்சம் கூடக் கலங்காமல் கல்லுளிமங்கி மாதிரி இருக்கா. ஒரு ரியாக்ஷனையும் காணோமே. இவளை ரஞ்சி அத்தானிடம் இருந்து விலகச் செய்வது ரொம்பக் கஷ்டம் போல் இருக்கு.”

யாரும் இல்லாமல் அமைதியாக இருந்ததாலோ என்னவோ திவ்யா பேசியது துல்லியமாக ஜனனியின் காதில் விழுந்தது.

“அது எப்படி... அவள் விலக மாட்டேன்னு பிடிவாதமா இருக்க முடியுமா, என்ன? அவள் விலகிப் போகலைன்னா நான் போக வைப்பேன்.”

மல்லிகாவின் குரலில் உறுதி நிரம்பி வழிந்தது.

“எப்படி இந்த டிவி சீரியல்ல காட்டுற மாதிரி ஜனனியைக் கொடுமைப்படுத்தப் போறீங்களா? இல்லை, திருட்டுப் பட்டம் கட்டப் போறீங்களா? எதை நீங்க செய்தாலும் பலன் இல்லை.”

கேலிக் குரலில் திவ்யா சொன்னாலும்... இது எல்லாம் நடைமுறைக்கு உதவாது என்ற ஆதங்கம் அவள் குரலில் தெரிந்தது. ஏனெனில் ஸ்ரீரஞ்சன் இந்த விசயங்களைக் கேள்விப்பட்டால் நிச்சயம் மனைவியை விரட்ட மாட்டான். அவர்களைத்தான் விரட்டி விடுவான் என்பது திவ்யாவுக்கு நன்கு தெரியும். ஆனால் தெரிந் திருக்க வேண்டிய ஜனனியோ மூளையை யாருக்கோ

கடன் கொடுத்து விட்டதைப் போல் எதையும் யோசிக்க முடியாமல் அப்படியே நின்றாள்.

"திவ்யா இது இல்லைன்னா என்ன... என் கைவசம் நிறைய விசயம் இருக்கு. அதில் எதையாவது ஒண்ணைச் சொல்லி அவளை விரட்டி விடுறேனா... இல்லை யான்னு பாரு..."

மல்லிகா சொன்னதை ஜனனியால் நம்ப முடியவில்லை. அவருக்கு அவளைப் பிடிக்காது என்று தெரியும். ஆனால் வீட்டை விட்டு விரட்டும் அளவுக்கு அவர் மனதில் தன் மேல் கோபம் இருக்கும் என்பது அவளுக்கு இவ்வளவு நாள் தெரியாமல் போனது துரதிர்ஷ்டம்.

அவர் தன்னை அவர் மகன் வாழ்விலிருந்து விரட்டி அடிக்கும் அளவிற்குத் தான் செய்த தவறுதான் என்ன? அவர் மகனை உயிருக்கு உயிராக நேசித்ததைத் தவிர, தான் வேறு எந்தத் தவறும் செய்யவில்லையே?

அந்தஸ்தை மட்டும் பெரிதாக நினைப்பவர்கள் நேசத்தைப் புரிந்து கொள்வார்கள் என்று நினைக்க முடியாது என்று எண்ணியவளால் என்ன செய்வது என்று தெரியாமல் நின்றிருந்தாள்.

"அதில் கொஞ்சத்தை எனக்கும் சொல்லுங்களேன்." - கொஞ்சியபடி கேட்டாள் திவ்யா.

"உனக்கு ஒண்ணு தெரியுமா? ஜனனி ஜாதகத்தில் அவளுக்கு எல்லாமே பெண் குழந்தைகள் என்று இருக்கு.



ஆண் வாரிசுக்கு இடமே இல்லை. இந்த ஒரு காரணம் போதாதா என்ன?"

"அடப் போங்க அத்தை... நீங்க எந்தக் காலத்தில் இருக்கீங்க? இந்தக் காலத்தில் அதுவும் கம்ப்யூட்டர் யுகத்தில் போய் இப்படி யோசிக்கிறீங்களே!"

"திவ்யா, இவ்வளவு சொத்தை ஆண்டு அனுபவிக்க ஒரு ஆண் வாரிசு வேண்டாமா? என்னதான் பெண் குழந்தைகள் வேண்டும் என்றாலும் தொழில் வாரிசு என்று வரும்போது மகனைத்தான் ஒரு தந்தை உள்ளம் தேடும். ரஞ்சி மட்டும் என்ன விதிவிலக்கா என்ன? அதை எப்படிச் சரியாச் சொல்லணுமோ அப்படிச் சொல்லி ரஞ்சி மனசை மாத்த எனக்குத் தெரியும்." மல்லிகாவின் குரலில் சாதிக்கும் பாவம் தெரிந்தது.

ஜனனிக்கு இந்தச் செய்தி புதிது. அவளுக்கும் சரி, ஸ்ரீரஞ்சனுக்கும் சரி. குழந்தையில் ஆண், பெண் பேதம் கிடையாது. எந்தக் குழந்தை என்றாலும் ஒன்றுதான் என்ற மனப்பான்மை உடையவர்கள்.

ஆனாலும் பெண்ணான அவளுக்குக் கணவனைப் போல் ஒரு ஆண் குழந்தை வேண்டும் என்று ஒரு கனவு இருக்கிறது. இவர்கள் சொல்வதைப் பார்த்தால் அதற்கு வழி இல்லை போலிருக்கிறதே.

ஒருவேளை மல்லிகா சொல்வது போல் ஸ்ரீயும் தொழிலுக்கு ஒரு ஆண் வாரிசு வேண்டும் என்று எண்ணி விட்டால்... நினைக்கும்போதே துக்கம் எழுந்தது. அதனால்

தான் அவன் தன்னை விட்டு விலகிப் போகிறானோ? தான்தான் அதை உணராமல் இருக்கிறோமோ? தேவை யில்லாத சிந்தனை மனதில் ஓடிக் கணவனின் அன்பையே அது சந்தேகப்பட்டது.

"சரி. இந்த விஷயமும் பலன் இல்லாமல் போனால் காலம் காலமாய்ப் பெண்கள் மேல் போடப்படும் ஒரு பழிச் சொல் இருக்கு. அதைத் தூக்கி ஜனனி மேல் போட்டுவிட வேண்டியதுதான்."

திவ்யா புரியாமல் மல்லிகாவைப் பார்த்தாள்.

"ஜனனியின் நடத்தை சரியில்லை என்று ரஞ்சியிடம் சொல்லிப் பிரிக்க வேண்டியதுதான்."

"அத்தை..."

அதிர்ந்து போய்த் திவ்யா இருக்கையை விட்டு எழுந்து விட்டாள்.

திவ்யா மட்டுமா அதிர்ந்தது... கேட்டுக் கொண்டிருந்த ஜனனியின் உடலும் தூக்கி வாரிப் போட்டது.

"இதுக்கு ஏன் இவ்வளவு அதிர்ச்சியாகுற? உனக்கு ரஞ்சி வேணுமா... இல்லையா?"

"வேணும்..." என்பது போல் தலையை ஆட்டினாள் திவ்யா.

"அப்போ நான் சொல்றதைக் கேளு. ரஞ்சிகிட்ட ஒரு பழக்கம் இருக்கு. பொண்ணுன்னா இப்படித்தான் இருக் கணும். அப்படித்தான் இருக்கணும்னு எதிர்பார்ப்பான்.



அதனால்தான் நம்ம ஸ்டேட்டஸில் பொண்ணு பார்க்காம இவளைப் போய் முடிச்சிருக்கான். ஏன்னா நம்மதில் அந்த மாதிரிப் பெண் இல்லையாம். அப்படிப்பட்ட அவனிடம் உன் பொண்டாட்டி நடத்தை சரியில்லை என்று சொன்னால் என்ன ஆகும்? அடுத்த நிமிஷம் அவளை அனுப்பி விடுவான்."

"எனக்கு என்னமோ நம்பிக்கை இல்லை, அத்தை. அத்தான் இந்த மாதிரிச் செய்யக்கூடிய ஆள் இல்லை."

"நம்பிக்கை வரும்படி ஆதாரத்துடன் நிரூபித்தால் ரஞ்சி நம்புவான். ஏன்னா... அவனும் ஆண்வர்க்கம் தானே... சந்தேகப் புத்தி எங்கே போகும்? ஆனானப்பட்ட ராமனே சீதையைச் சந்தேகப்படவில்லையா என்ன... ரஞ்சி மட்டும் விதிவிலக்கா என்ன? எப்படிக் காயை நகர்த்தணும்னு எனக்குத் தெரியும். நீ கவலைப்படாதே, திவ்யா."

அதற்குள் மதி கிளம்பி வர, காவ்யாவையும் அழைத்துக் கொண்டு எல்லோரும் வெளியில் சென்றனர்.

ஜனனி அவர்கள் பேசியதைக் கேட்டது மல்லிகா விற்கும் திவ்யாவிற்கும் தெரியாது.

ஜனனிக்கு மல்லிகா சொல்லியதைக் கேட்டு அப்படியே கால்கள் வலுவிழந்து போய் அப்படியே அமர்ந்து விட்டாள். ஒரு பெண்ணை முடக்கக் காலம் காலமாய் அவள் எதிரிகளால் எடுக்கப்படும் ஒரே ஆயுதம் இந்த நடத்தை கெட்டவள் என்ற அவச் சொல்.

எதையும் துணிந்து எதிர்கொள்ளும் பெண்ணின் மனம் ஏனோ இன்றுவரை இந்த வார்த்தையை எதிர் கொள்ளத் துணியவில்லை. அதனால்தான் இதைச் சொல்லியே பெண்களை அடக்கி வைக்கிறார்களோ?

ஜனனியும் இந்த வார்த்தையில் மனதில் இருந்த கொஞ்ச நஞ்சத் தைரியத்தையும், நம்பிக்கையையும் இழந்து எதையும் செய்யத் தோன்றாமல் அப்படியே அமர்ந்து விட்டாள்.

ஜனனி கொஞ்சம் கூர்ந்து கவனித்திருந்தாலும் அவள் ஒரு விஷயத்தைக் கவனித்திருப்பாள். திவ்யாவோ ஸ்ரீரஞ்சன் தன் மேல் மையல் கொண்டிருக்கிறான் என்பது போல் சொன்னவள், பின் ஏன் மல்லிகாவுடன் சேர்ந்து ஜனனியை விரட்டி அடிக்கத் திட்டமிடுகிறாள் என்பதை ஆராய்ந்து பார்த்திருக்க வேண்டும்.

திவ்யாவிடம் ஸ்ரீரஞ்சன் மயங்கியிருப்பது உண்மை என்றால் அவள் சொன்னாலே போதுமே... அவன் ஜனனியைத் துரத்தி விடுவானே. இதிலிருந்தே தெரிய வில்லையா... அவள் சொல்வது பொய் என்று. இதை எல்லாம் ஜனனி யோசித்துப் பார்க்கும் மனநிலையில் இல்லை.

ஜனனி சித்தப் பிரமை பிடித்தது போல் எவ்வளவு நேரம் அப்படியே இருந்தாளோ தெரியாது. அவளே சுயநினைவை அடைந்து, தன் அறைக்குச் சென்றாள். தான் எதற்குக் கீழே செல்ல வந்தோம் என்பதையும் மறந்து போனாள்.



கீழே யாரும் இருப்பது போல் தெரியவில்லை. அமைதியாக இருந்தது. அறைக்குள் நுழைந்தவள்... விதுவின் அழைப்பில் திரும்பி அவளைப் பார்த்தாள்.

"அம்மா, நான் பண்ணியிருக்கிறது நல்லா இருக்கா?"

மகளின் கை வண்ணத்தில் உருவாகி இருந்த ப்ராஜெக்ட் மிகவும் நன்றாக வந்திருந்தது.

அந்தச் சூழ்நிலையிலும் ஐந்து வயதான தன் மகளின் திறமையை எண்ணி மனதுக்குள் பாராட்டிக் கொண்டாள்.

பாராட்டுவதற்காக அருகில் வந்தவள் கவனத்தில் அப்பொழுதுதான் அது தென்பட்டது. அதைப் பார்த்ததும் மனதில் மீண்டும் கோபம், ஆத்திரம், ஒன்றும் செய்ய முடியாத கையாலாகாத்தனம் எல்லாம் எழுந்தது.

விது ப்ராஜெக்ட் செய்கிறேன் பேர்வழி என்று புகைப் படத்தில் இருந்து தாயின் புகைப்படத்தை எல்லாம் வெட்டித் தூர எறிந்து விட்டுத் தன்னையும் தந்தையையும் சேர்த்து ஒட்டியிருந்தாள்.

அவர்கள்தான் தன் கணவனைத் தன்னிடமிருந்து பிரிக்கத் திட்டமிடுகிறார்கள் என்றால் இங்கே மகளும் அந்த வேலைதான் செய்து கொண்டிருப்பதைப் பார்த்தவள்... மன அழுத்தம் ஏகத்துக்கும் ஏறியது.

அவர்களிடம் காண்பிக்க முடியாத கோபத்தை, ஆத்திரத்தை அந்தப் பிஞ்சுவிடம் காண்பித்து விட்டாள்.

அம்மா தன்னைப் பாராட்டுவாள் என்று எதிர்பார்த்த விதுவோ இந்தத் தாக்குதலை எதிர்பார்க்கவில்லை.

என்றுமே அடிக்காத கோபப்படாத அம்மா, செல்லம் மட்டுமே கொஞ்சிய அம்மா இன்று அடித்ததை அந்தப் பிஞ்சு மனத்தால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

அன்னை அடித்ததால் ஏற்பட்ட பயத்தின் விளை வால் நரம்புகள் உணர்ச்சி வசப்பட... கை கால் வெட்டி வெட்டி இழுக்க... அப்படியே தரையில் விழுந்தாள் அந்தப் பூ மகள்.

மகள் கை கால் இழுத்துக் கொண்டு கீழே விழவும் தான்... தான் செய்திருக்கும் காரியத்தின் வீரியம் புரிந்தது ஜனனிக்கு. பதறிப் போனவளாய் மகளின் அருகே வந்து அவளின் கை, கால் இழுப்பதை நிறுத்த முயற்சித்தாள்.

ம்ஹூம். அதற்குப் பலன் இல்லை. பாவி... பாவி... என்று சொல்லிக் கொண்டே தலையில் அடித்துக் கொண்டு அழுதவள், அடுத்த நிமிடம் மகளைத் தூக்கிக் கொண்டு காரை நோக்கி ஓடினாள்.

வீட்டில் யாரும் இல்லை. பெண்கள் கடைத் தெருவுக்குச் சென்றிருக்க... ஆண்கள் அலுவலகத்திற்குச் சென்றவர்கள் இன்னமும் வரவில்லை. வேலையாட்கள் அவர்கள் வேலையில் மும்முரமாக இருந்ததால் யாரும் இவர்களைக் கவனிக்கவில்லை.

வாசலில் இருந்த காவலாளி மட்டும் ஜனனியின் கார் வெளியில் செல்வதைப் பார்த்தான்.



விதுவை மருத்துவ மனையில் சிகிச்சைக்காகச் சேர்த்து விட்ட பின்தான் ஜனனிக்குச் சுற்றுப்புறம் ஞாபகம் வந்தது. யாருமே இல்லாது தனித்து விடப்பட்டது போல் ஒரு உணர்வு தோன்றியது.

அந்த நிமிடம் அம்மா, அண்ணன் ஞாபகம் வந்தது. அண்ணன் வேலை பார்க்கும் மருத்துவமனைக்குத்தான் அனிச்சைச் செயல் போல் ஜனனி வந்திருந்தாள்.

உடனே அர்ஜுனின் கைபேசிக்கு அழைத்தாள்.

தங்கையின் அழைப்பின் விவரத்தைக் கேட்டவன் மறுநிமிடமே ஓடி வந்தான். அவனுக்குமே அன்று பார்க்க வேண்டிய நோயாளிகள் எண்ணிக்கை மிகவும் குறைவு.

அதன் பின் அர்ஜுன் தான் எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டான்.

விதுவிற்கு ஒன்றுமில்லை என்றதும்தான் போன உயிர் திரும்ப வந்தது ஜனனிக்கு. அதன் பின்தான் செயல் இழந்திருந்த அவள் மூளை செயல்பட ஆரம்பித்தது. இரவெல்லாம் யோசித்தவள்... எடுத்த முடிவு கணவனைப் பிரிவது என்று. அவர்கள் கட்டிய கதையில் செயலில் ஜனனிக்குமே ஸ்ரீரஞ்சனுக்கு உண்மையிலேயே திவ்யா வின் மீது விருப்பம் இருக்குமோ என்று தோன்றக்கூட ஆரம்பித்து விட்டது.

அதிலும் அவர்கள் சொன்ன அவளின் நடத்தையை ஸ்ரீரஞ்சனே சந்தேகப்படும்படி செய்யப் போவதாகச் சொன்னதை அவளால் இன்னமும் ஜீரணிக்க முடிய

வில்லை. அப்படிப்பட்ட அவச்சொல்லுடன் அவள் அந்த வீட்டை விட்டு வெளியில் வருவதை விடத் தானே வெளியேறுவது நல்லது என்று எண்ணினாள்.

இதுநாள்வரை கடிந்து ஒரு சொல் பேசாத கணவன் வாயிலிருந்து நீ நடத்தை கெட்டவள் என்ற சொல் கேட்க அவளுக்கு விருப்பமில்லை. இப்படி அவச்சொல் கேட்டு அசிங்கப்பட்டு அவர்களே வீட்டை விட்டு அனுப்புவதை விட, அவளே அவனை விட்டு விலகுவதே சாலச் சிறந்தது. அவனுடன் வாழ்ந்த இந்த ஆறு வருடங்கள் அவளுக்கு ஆயிரம் வருடங்கள் வாழ்ந்த திருப்தி அளித்திருக்கிறது.

அந்த வாழ்வு கொடுத்த இனிமையான எண்ணங்கள் அவள் மனதில் பசுமையாக நிறைந்திருக்கின்றன. அவள் வாழ் நாள் முழுமைக்கும் அந்த நினைவுகளே போதும். இனி, அவள் வாழ்வில் விது மட்டும்தான் என்று முடிவு செய்தாள்.

ஸ்ரீரஞ்சன் மனநிலை என்ன? அதில் என்ன இருக் கிறது என்பதைக் கூட அறியாதவளாய் எல்லாவற்றையும் அவளே முடிவு செய்தாள்.

அவள் நினைத்ததைச் செயலாற்ற அவள் கணவன் எங்கே விட்டான்? இதோ தன்னோடு அவளையும் அல்லவா இந்த வீட்டிற்குக் கூட்டிக் கொண்டு வந்து விட்டான்.

கணவனின் செயல்களுக்கும், மல்லிகா, திவ்யா பேசியதற்கும் கொஞ்சமும் சம்பந்தம் இல்லை என்பது கொஞ்சம் அவளுக்குப் புரிந்தது. ஆனால் அவர்கள்



சொன்னது போல் அவளின் ஒழுக்கத்தைச் சந்தேகப் படும்படி செய்து விட்டால், அதையும் கணவன் நம்பி விட்டால்... நினைத்துப் பார்த்தவளுக்கு உடல் நடுங்கியது. அவள் தலை விதி பழிச் சொல்லோடுதான் இந்த வீட்டை விட்டுப் போக வேண்டும் என்று எழுதியிருக்கிறதோ என்னவோ? - நினைத்தவளுக்கு அவளையும் அறியாமல் பெருமூச்சொன்று எழுந்தது.

ஆனாலும் கொஞ்ச நாள் என்றாலும் கணவன் அருகாமையில் இருக்கலாமே என்ற ஒரு அல்ப சந்தோஷம் ஜனனியின் மனதுக்குள் எட்டிப் பார்த்தது.

அந்த நிமிடம் அந்தப் புகைப்படம், அந்தக் குறுஞ் செய்தி எதுவுமே அவள் ஞாபகத்தில் இல்லை. நடத்தை கெட்டவள் என்ற பழிச்சொல் முன் இது எல்லாம் ஒன்றுமில்லாததாகப் போய் விட்டதோ என்னமோ?

கணவனின் எண்ணம் வந்தவுடன் அருகில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்த கணவன் முகம் பார்த்தாள் ஜனனி. அவனின் முகம் பார்த்துக் கொண்டிருந்தால் அவளுக்குப் பசி, தூக்கம் எதுவுமே தேவையில்லை. அவளின் உணர்வுகள் புரிந்தோ என்னமோ ஸ்ரீரஞ்சனிடம் அசைவு தெரிந்தது.

தூக்கக் கலக்கத்திலேயே மறுபுறம் படுக்கத் திரும்பி யவன் கண்ணில் கலங்கலாக ஜனனி அமர்ந்திருப்பது தெரிந்தது. அவள் தூக்கமில்லாமல் அமர்ந்திருப்பதைப் பார்த்தவனுக்குத் தூக்கம் கலைந்தது.

எழுந்து அமர்ந்தவன் கட்டிலின் தலைப் பகுதியில் சாய்ந்து கொண்டு இரு கரம் நீட்டி ஜனனியை வாவென்று சைகையில் அழைத்தான்.

ஜனனிக்குமே அவனின் அருகாமை தேவைப் பட்டதோ என்னவோ... அவன் அழைத்ததும் மறுப்பேதும் சொல்லாமல்... அவன் மார்போடு ஒண்டிக் கொண்டாள்.

ஸ்ரீரஞ்சன் ஜனனியின் தலை உச்சியில் தன் இதழை ஒற்றியவன்... பின் அவளின் தலை மேல் தாடையை வைத்து அழுத்தியவன்... அவளை இறுக அணைத்துக் கொண்டான். அந்த அணைப்பு அவளை இனி ஒரு கணமும் பிரிய மாட்டேன் என்பது போல் இருந்தது. அதை ஜனனியும் உணர்ந்தாள். அந்த நிமிடத்தைக் கண் மூடி அனுபவித்தாள்.

ஜனனி மனதில் இருந்த இறுக்கம் அவனின் அணைப்பில் தளர்ந்தது. ஒரு பாதுகாப்பு உணர்வு எழுந்தது அவளுக்கு.

அந்த உணர்வு தந்த நிம்மதியில் மெல்ல உறக்கம் அவளைத் தழுவியது. குழந்தை போல் உறங்கும் மனைவியைப் பார்த்துக் கொண்டிருந்தான் ஸ்ரீரஞ்சன்.

அப்பொழுது அருகில் படுத்திருந்த மகள் தூக்கத்தில் புரள்வது கண்டு அவளையும் தன் கையணைப்பில் கொண்டு வந்தவன் மெல்லக் கண் அயர்ந்தான். மனைவி யைத் தன் குழந்தை போல் நேசிக்கும் கணவன் எல்லோ ருக்கும் கிடைப்பதில்லை.



அத்தகைய கணவன் ஜனனிக்குக் கிடைத்திருக் கிறான். அவனின் அருகாமையை அவள் உணர்ந்து கொண்டு அவள் நடப்பாளா? இனியாவது ஜனனி அவளின் ஸ்ரீயைப் புரிந்து கொள்வாளா?

## 15

“ஹேய்... கொஞ்ச நேரம் தூங்கு. காலையில் எழுந்து என்ன செய்யப் போற?”

காலையில் அவசரமாக எழுந்த ஜனனி யைப் படுக்க வைத்து அவளைத் தன் கை அணைப்பில் கொண்டு வந்தான் ஸ்ரீரஞ்சன்.

“மணி ஆறாகுது. எழுந்திருக்க வேண்டாமா?” - சிணுங்கலாய்க் கேட்டவளின் முகம் பார்த்தவன்,

“இன்னைக்கு விதுவுக்கு லீவுதானே. பேசாமப் படு...” என்றவன் மீண்டும் உறங்க முற்பட்டான்.

இவ்வளவு நாள் உறக்கம் இல்லாமல் தவித்தவன்... நேற்றுதான் நிம்மதியாக உறங்கி யிருக்கிறான். அந்த நிம்மதியைத் தொடர ஆசைப்பட்டான்.

“நீங்க கம்பெனிக்குப் போக வேண்டாமா?” மீண்டும் தன் பல்லவியை ஆரம்பித்தாள் அவன் மனையாள்.

“இல்லை. நான் போகல. இன்னைக்கு முழுவதும் உன் கூடவும், விது கூடவும்தான் இருக்கப் போறேன்.” - சொல்லியபடி அவள் கழுத்து வளைவில் முகம் புதைத்துப் படுத்தான்.

ஜனனி அவன் முகத்தைத் தன்னிடமிருந்து பிரித்தெடுத்து அவன் கண் நோக்கி, “ப்ராமிஸ்...” கண்களில் ஆர்வம் பொங்கக் கேட்டாள்.

“ப்ராமிஸ்...” என்ற கணவனை இறுகக் கட்டிக் கொண்டவள்.. அவளாகவே அவன் மார்பில் முகம் புதைத்தாள். கோடி ரூபாய் கொட்டிக் கொடுத்தால் கூடச் சந்தோசப் படாதவள் தன் அருகாமையில் மட்டும் சந்தோசப்படும் மனைவியை எண்ணி என்றும் போல் இன்றும் மனதுக்குள் பெருமைப் பட்டவன் அவளை இறுக அணைத்துக் கொண்டான்.

இது ஏதும் அறியாத விதுவோ ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள்.

மீண்டும் ஜனனி எழும்போது ஸ்ரீரஞ்சன் அலுவலகத்திற்குக் கிளம்பிக் கொண்டு இருந்தான். விதுவை அறையில் காணோம். எழுந்தவள் அவன் பின் சென்று தோளோடு சேர்த்து அணைத்தவள் அவன் பரந்த முதுகில் முகம் புதைத்தாள்.

மனைவியின் செய்கையில் முகம் மலர்ந்தவன்... அவள் கையைப் பற்றித் தன் மார்போடு வைத்துக் கொண்டவன், தன் தலையைப் பின்னுக்குச் சாய்த்து அவள் தலையோடு சேர்த்து வைத்தான்.

“குட்டிம்மா... நல்ல மூட்ல இருக்காங்க போலிருக்கே?”

நேற்று இருந்தவளுக்கும் இன்று இருப்பவளுக்கும் எவ்வளவு வேறுபாடு. இதுதான் அவன் குட்டிம்மா. நிச்சயம்



அவள் மனதை மாற்ற முடியும் என்று மனதுக்குள் எண்ணிக் கொண்டான்.

“குட்டிம்மா... நல்ல மூட்லதான் இருக்கா. நீங்கதான் அவளை விட்டுப் போறீங்க. ப்ராமிஸ் பண்ணிட்டு இப்ப கிளம்பறீங்களே?” மனதின் வருத்தம் குரலில் தெரிந்தது.

அவள் கை பிடித்து இழுத்துத் தன் முன் கொண்டு வந்த ஸ்ரீரஞ்சன், “மேனேஜர் போன் பண்ணினார். ஒரு முக்கியமான வேலை. போயிட்டு டுவல் ஓ கிளாக் வந்திடறேன். போயிட்டு வரவா?”

நேற்றைய நினைப்பில் அவன் கேட்டான். அவனை விட்டு இருக்க நேற்று அவள் பயந்தது அவனுக்குமே புரிந்துதான் இருந்தது.

நேற்றைய நினைவில் அவனும் கேட்கிறான் என்பதைப் புரிந்து கொண்டவளாய், “போயிட்டு சீக்கிரம் வாங்க...” என்று அவன் போக அனுமதி அளித்தாள்.

அவளின் இடை பற்றி அருகே இழுத்தவன் அவளின் முன் நெற்றியில் தன் இதழைப் பதித்தான்.

“ஏதாவது அவசரம்னா என்னைக் கூப்பிடு, என்ன?”

அவன் சொன்னதைக் கேட்டுச் சட்டென்று சிரித்து விட்டாள் ஜனனி.

“என்ன சிரிப்பு?”

“இப்பவே மணி பத்து ஆகுது. இரண்டு மணி நேரத்தில் என்ன அவசரம் வந்து விடப் போகுது?”

சொல்லியவள் மீண்டும் சிரித்தாள். அவள் கூறியதன் அர்த்தம் புரிந்து அவனும் அவளுடன் சேர்ந்து நகைத் தான்.

"ஆமாம், விது எங்கே?"

"அவள் குளித்து விட்டு ஆஷிஷ் கூட விளையாடப் போய் விட்டாள். நீ குளிச்சுச் சாப்பிடு. ஜுஸ் குடிக்க மறந்துடாதே."

ஜனனியிடம் சொல்லியபடி ஸ்ரீரஞ்சன் அவளிட மிருந்து விடை பெற்றான். அவன் போவதைப் பார்த்தபடி நின்றிருந்தவளின் மனம் நிறைந்து இருந்தது.

இவன் என்னவன். என் மன வேதனை அவனையும் பாதிக்கிறது.

நேற்று முகம் கறுத்து எப்படியோ இருந்தவன் இன்று முகம் மலர்ந்து சற்று வயது கூடக் குறைந்தாற் போல் தோன்றுகிறான் என்றால் அவளின் அருகாமை அவ னுக்கு மகிழ்ச்சியை, நிம்மதியைத் தருகிறது என்றுதானே அர்த்தம்.

இன்றைய நிகழ்காலத்தை அவனுடனான வாழ்க் கையை ஒவ்வொரு நிமிடமும் அனுபவிக்க வேண்டும் என்று அவள் மனம் உறுதி எடுத்தது.

எதிர்காலம் எப்படி இருந்தாலும் தான் கவலைப்படப் போவதில்லை என்று அந்தக் கணம் முடிவு எடுத்தாள்.

**த**னசேகர் ஸ்ரீரஞ்சனின் அலுவலக அறைக்குள் நுழைந்தார். எதற்காகவும் தன்னைத் தேடி வராத தந்தை



அங்கு வரவும் ஆச்சர்யமாகப் பார்த்தவன், அவரை அமரும்படி சொன்னான்.

"என்னப்பா... என்ன விஷயம்?"

"ஜனனி எப்படி இருக்கிறாள்?"

மருமகள் தாய் வீட்டிற்குச் செல்லும் போது கூடத் தனித்துச் செல்லாமல் மகனுடன் சேர்ந்து செல்பவள் இப்பொழுது முழுதாக ஒரு வாரம்வரை கணவனைப் பிரிந்து இருந்து இருக்கிறாள் என்றால் நிச்சயம் ஏதோ பிரச்சினை இருக்கிறது என்று அவர் உள் மனம் கூறியது.

இவ்வளவு நாள் ஜனனி பற்றிக் கேட்காத தந்தை இப்பொழுது கேட்பது குறித்து அவனுக்குச் சிறிது எரிச்சல் எட்டிப் பார்த்தது.

இருந்தாலும் அதை மறைத்துக் கொண்டு, "நல்லா இருக்கா!" என்று பதிலளித்தான்.

"ரொம்ப நல்ல பொண்ணு. பத்திரமாப் பார்த் துக்கோ."

"ம்...." என்றவன், "அப்பா! நான் ஒண்ணு கேட்டா தப்பா நினைச்சுக்காதிங்க..." என்று அவர் முகம் பார்த் தான்.

அவன் கேட்கப் போகும் விஷயம் தெரிந்ததோ என்னவோ, அவர் முகம் கறுத்தது.

இருந்தாலும் சமாளித்துக் கொண்டு அவனை என்னவென்பது போல் பார்த்தார்.

"ஜனனி ஏன் வீட்டை விட்டுப் போனாள் என்று உங்களுக்குத் தெரியுமா?" - கூர்மையுடன் அவர் முகம் பார்த்தான்.

தனசேகருக்குமே முழு விவரமும் தெரியாது. மல்லிகாவும் திவ்யாவும் சேர்ந்து செய்யும் கூட்டுச் சதிகள், பாவம்! அவருக்குத் தெரியவில்லை.

"தெரியாதுப்பா. நான் ஆபீஸ்ல இருந்து வரும் போது அவள் வீட்டில் இல்லை. நைட் என்பதால் எனக்கும் அது பெரியதாகத் தெரியவில்லை. மறுநாள் காலையில் விதுவைக் காணாமல் தான் மல்லியிடம் கேட்டேன். ஜனனி அவள் அம்மா வீட்டுக்குப் போய் இருக்கிறாள் என்று சொன்னாள்.

"சரி, எப்பொழுதும் போல் போயிருக்கிறாள் என்று எண்ணிப் பேசாமல் இருந்து விட்டேன். ஆனால் அவள் இவ்வளவு நாள் வராமல் இருந்ததைப் பார்க்கும்போதும், உன் முகத்தில் தெரிந்த கவலை எல்லாம் பார்க்கும் போதும், ஏதோ நடந்து இருக்கிறது என்று தெரிகிறது. ஆனால் என்னவென்றுதான் தெரியவில்லை."

தந்தையின் வார்த்தையில் உண்மை இருப்பதைப் புரிந்து கொண்டவனாய் ஸ்ரீரஞ்சன் சற்று நேரம் அமைதியாக இருந்தான்.

ஸ்ரீரஞ்சன் எல்லாவற்றையும் தந்தையிடம் சொன்னான். ஜனனியின் மன அழுத்தத்தைப் பற்றியும் சொன்னான். பதில் பேசாமல் கேட்டுக் கொண்டிருந்த தனசேகரின் மனமோ ஜனனிக்காகப் பரிதாபப்பட்டது.



"என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது. ஆனால் இதுக்கு முழுக் காரணம் அம்மாதான். அது மட்டும் உறுதியாகச் சொல்வேன்."

"ரஞ்சி... பேசாமல் நீ தனிக் குடித்தனம் போய் விடேன்."

அதுதான் தீர்வு என்பது போல் சொன்ன தந்தையைப் பார்த்தவன் விழிகளில் ஏகத்துக்கும் ஏளனம் கலந்து இருந்தது.

"நான் தனிக் குடித்தனம் போவது இருக்கட்டும். உங்கள் மனைவியை நீங்கள் என்றுதான் கண்டிக்கப் போறீங்க. அவங்க செய்யுற ஒவ்வொரு காரியத்துக்கும் ஆமாம் சாமி போட்டுக்கிட்டு எத்தனை நாள் இருக்கப் போறீங்க. அட்லீஸ்ட் அவங்க தவறு செய்யும் போதாவது கண்டிக்கக் கூடாதா?"

மகனின் குரலில் இருந்த ஆற்றாமை அவருக்குமே புரியத்தான் செய்தது. ஆனாலும் என்ன செய்ய? அவரையும் அறியாமல் பெருமூச்சொன்று வெளி வந்தது.

"ரஞ்சி, மல்லி என்னைப் பொறுத்தவரையில் நல்ல மனைவி. அதில் ஒரு குற்றம் குறை காண முடியாது. இவ்வளவு ஏன், அவள் ஒரு நல்ல தாய்தான் என்பது உனக்குமே தெரிந்ததுதானே?"

ஸ்ரீரஞ்சன் தந்தையின் கூற்று உண்மை என்பதை உணர்ந்தவனாய்ப் பேசாமல் இருந்தான். அவனைப் பொறுத்தவரையில் மல்லிகா நல்ல தாய்தான். அதில்

மாற்றுக் கருத்துக் கிடையாது. ஆனால் ஜனனி வந்த பின் அவளுக்கும் விதுவுக்கும் இடையில் இருக்கும் பாசப் பிணைப்பைப் பார்த்துத் தன் அன்னை அந்த அளவு தன்னை அன்பு காட்டி வளர்க்கவில்லையே என்று அவன் மனம் வேதனைப்பட்டது அவனுக்கு மட்டுமே தெரியும்.

அதனால்தான் என்னவோ மனைவி, மகள் இடத்தில் அவனுக்குமே அதிக அன்பு, பாசம் வந்தது. இதை எப்படித் தந்தையிடம் சொல்ல முடியும். அவர் பணக்காரர்கள் என்ற வட்டத்துக்குள் வாழ்ந்தவர். இப்படி வாழ்வதுதான் பாசம் என்று எண்ணுகிறார். அதையேன் நாம் கெடுப்பானேன் என்று எண்ணி அதைப் பற்றி அவன் பேசவில்லை.

"அப்பா, அம்மா நல்லவங்கதான். இல்லைன்னு சொல்லல. ஆனால் நல்ல அம்மாவா இருக்கிற அவங்க ஏன் நல்ல மாமியாரா இருக்க மாட்டேங்கிறாங்க?"

ஸ்ரீரஞ்சன் தந்தையிடம் கேள்வி கேட்டான். "அப்படின்னும் சொல்ல முடியாது. அவங்க ஜனனிகிட்ட மட்டும்தான் அப்படி நடந்துக்கிறாங்க. ஏன் காவ்யாவும் அவங்க மருமகதானே? அவள் கிட்ட மட்டும் நல்ல விதமாத்தானே நடந்துக்கிறாங்க..." என்று தனக்குள் பேசிக் கொண்டான்.

ஸ்ரீரஞ்சன் வார்த்தைகள் தனசேகரைச் சுடத்தான் செய்தன.

"அதான் சொல்றேன், ரஞ்சி. பேசாம நீ தனிக் குடித்தனம் போய்விடு."



"என்னைத் தனியாப் போகச் சொன்னாலும் சொல்வீங்களே தவிர, உங்க மனைவியை ஒண்ணும் சொல்ல மாட்டீங்க... என்ன?" எரிச்சல் மண்டி இருந்தது அவன் வார்த்தையில்.

"ஜனனி இது போல் நடந்து கொண்டால் நீ அவளை வெறுத்து விடுவாயா ரஞ்சி?"

"அப்பா, நான் என்ன... நீங்க வெறுத்து அம்மாவை டைவர்ஸ் பண்ணி விடுங்கன்னா சொல்றேன். அவங்க தவறு செய்யும்போது கண்டிங்கன்னுதான் சொல்றேன். அப்புறம் என்ன சொன்னீங்க... ஜனனி இது போல் செய்தால் என்ன செய்வன்னுதானே கேட்டீங்க? அவள் தவறு செய்தால் நிச்சயம் கண்டிப்பேன். விது தவறு செய்தால் கண்டிப்பதில்ல... அதுபோல்தான் இதுவும். இவ்வளவு ஏன் நான் தவறு செய்தாலும் என்னைக் கண்டிக்கும் முழு உரிமை அவளுக்கு உண்டு.

"கணவன் மனைவிக்குள் என்ன ஈகோ இருக்கிறது? ஆனால் அதற்கு எல்லாம் அவசியம் இல்லை. ஏனெனில் என் ஜனனி இது போன்ற ஒரு செயலைச் செய்ய மாட்டாள்."

மனைவி பற்றிப் பெருமையாகப் பேசிய மகனைக் கண்டு கொஞ்சம் பொறாமை எழுந்தது தனசேகருக்கு. தானும் இது போல் பெருமை பேசுவது போல் தன் மனைவி இல்லையோ என்று முதல் முறையாகச் சந்தேகம் வந்தது.

ஒன்று மட்டும் நிச்சயம்... பெருமை பேசும்படி அவரின் மனைவி செயல் இல்லை என்பது மட்டும் அவருக்குப் புரிந்தது.

"உன்னைப் பார்க்கும்போது பொறாமையா, அதே சமயம் பெருமையாவும் இருக்கு, ரஞ்சி. அந்த ஆண்டவன் உனக்காவது ஒரு நல்ல வாழ்க்கையைக் கொடுத்தானே. அறுபது வருடம் வாழ்ந்தால் கூட இந்த அளவுக்கு அண்டர்ஸ்டான்டிங் இருக்குமான்னு தெரியல. ஆனால் உங்கள் இருவருக்குள் அது இருக்கு. இதே அன்பு, பாசம் குறையாம எப்பவும் இப்படியே இருக்கணும், ரஞ்சி..." என்று வாழ்த்தியவர் புறப்படுவதற்காக எழுந்தார்.

"அப்பா, கடைசிவரை அம்மாவைத் தட்டிக் கேட்பேன்னு ஒரு வார்த்தை கூடச் சொல்லல." நமட்டுச் சிரிப்புடன் கேட்ட மகனைப் பார்க்கும் போது அவருக்குமே சிரிப்பு வந்தது.

"தேர்தல் நேரத்தில் வாக்குறுதி கொடுக்கும் வேட்பாளர் போல்தான் என் வாக்குறுதியும். அதனால் பொய்யாக எந்த வாக்குறுதியும் நான் அளிக்க விரும்பவில்லை. அதே சமயம் உன் அம்மாவை எதிர்த்து என்னால் எதுவும் பேச முடியாது. ஆனால் நீயும் ஜனனியும் எந்தக் காரியம் செய்தாலும் அதற்கு என் முழு ஆதரவு உங்களுக்கு உண்டு."

சிரித்தபடி சொல்லி விட்டுச் செல்லும் தந்தையைப் பார்க்கும் போது ஸ்ரீரஞ்சனுக்குமே சிரிப்பு வந்தது. அப்பொழுதுதான் ஞாபகம் வந்தவனாய் மணியைப்



பார்த்தான். வீட்டிற்குச் செல்லும் நேரம் வந்து விட்டதை உணர்ந்து கிளம்ப ஆயத்தமானான்.

ஸ்ரீரஞ்சன் வரும் நேரம் உணர்ந்து ஜனனி கீழே சென்றாள். விதுஷிகா ஆஷிஷ் கூட இருந்தாள். அவனைப் பார்த்துக் கொள்ளும் பெண்மணி அவனுக்கு உணவு ஊட்டிக் கொண்டு இருக்க, அவருடன் சேர்ந்து விதுவும் ஆஷிஷ்க்கு உணவு ஊட்டி விளையாடிக் கொண்டு இருந்தாள்.

இந்த மட்டும் காவ்யா விதுவை ஆஷிஷுடன் பழக விடுகிறாளே. தன் மீது உள்ள உதாசீனத்தை மகளிடம் அவள் காண்பிக்காததே ஜனனிக்குச் சற்று ஆறுதலாக இருந்தது. வரவேற்பறையில் அமர்ந்தவள் கணவனை எதிர்பார்த்துக் காத்து இருந்தாள்.

திவ்யா ஜனனியைப் பார்த்ததும் அங்கு வந்தாள். அவளுடன் மல்லிகாவும் தொலைக்காட்சி பார்ப்பது போல் அங்கு வந்து அமர்ந்தார். ஜனனியின் எதிரில் கால் மேல் கால் போட்டு அலட்சியமாக அமர்ந்தாள் திவ்யா.

திவ்யாவைக் கொஞ்சமும் கண்டு கொள்ளாமல் வெளியில் கண் பார்வையைப் பதித்து இருந்த ஜனனி யின் மனம் உள்ளுக்குள் தடுமாறிக் கொண்டு இருந்தது. இன்று என்ன புதிதாகக் கதை கட்டப் போகிறாளோ என்று அவள் பயந்தாள்.

"ஜனனி..." திவ்யாவின் அழுத்தமான குரல் ஜனனியை அவள் புறம் திரும்ப வைத்தது.

"நான் இவ்வளவு சொல்லியும் நீ இங்கே மறுபடியும் வந்து இருக்கிறே. ஆனாலும் உனக்கு இவ்வளவு அழுத்தம் கூடாது. நீ என்ன பண்ணினாலும் ரஞ்சி அத்தான் எனக்குத்தான்."

ஸ்ரீரஞ்சன் ஜனனியிடம் காட்டிய அன்பு, காதல் இது எல்லாவற்றையும் விட அவன் அவள் அருகில் இருக்கிறான் என்ற மன நிம்மதி... அதனால் வந்த மனத் தைரியம் எல்லாம் சேர்த்து ஜனனியைக் கொஞ்சம் நிமிர வைத்தது.

அவளுக்கு ஏதாவது ஒன்று என்றால் அவள் கணவன் இருக்கிறான். அதுவும் இன்னும் சில நிமிடங்களில் இங்கு வந்து விடுவான் என்ற நினைப்பே ஜனனிக்குத் திவ்யாவைப் பற்றித் துச்சமாக எண்ண வைத்தது.

"இந்த நொடிவரை ஸ்ரீ என் கணவர். நான் அவர் மனைவி. இதில் எந்த மாற்றுக் கருத்தும் உனக்கு இல்லை என்று நம்புகிறேன். நீ சொல்வது போல் நடக்கும்போது அப்பொழுது பார்த்துக் கொள்ளலாம். ஆனால் ஒன்று, அத்தைக்கு மீசை முளைத்தால்தான் சித்தப்பா என்று சொல்வார்கள். அது போல்தான் நீ நினைப்பது. அது ஒரு போதும் நடக்காது."

"ஏய்... அவ்வளவு ஆதாரம் காட்டியும் உனக்குக் கொழுப்பு அடங்கல என்ன? ரஞ்சி அத்தானைக் கல்யாணம் செய்து உன் திமிரை அடக்குகிறேன் பார்."

எவ்வளவுதான் குட்டக் குட்டக் குனிய முடியும். ஜனனி அவளை நிமிர்ந்து பார்த்தாள்.



"ஸ்ரீ ஒன்றும் சிறு பிள்ளை இல்லை. கையைக் காலைக் கட்டி வைத்து உனக்கு வலுக்கட்டாயமாகத் தாலி கட்ட வைப்பதற்கு. அவரின் மனைவி நான் மட்டும்தான். உன்னால் முடிந்தால் அப்படிச் செய்து பாரு. எந்தப் பெண் பின்னாலும் போவதற்கு அவர் ஒன்றும் பெண் பித்தன் கிடையாது."

திவ்யாவிற்கு ஜனனியின் இந்தத் தைரியம் புதிது. ஆத்திரத்தில் என்ன பேசுவது என்று தெரியாமல் ஜனனியை உறுத்துப் பார்த்துக் கொண்டு இருந்தாள்.

பின் மல்லிகாவிடம் திரும்பினாள்.

அவர் தனக்குச் சாதகமாக ஏதாவது பேசுவார் என்று எதிர்பார்த்தாள். ஆனால் அவரோ வாயைத் திறக்கவில்லை.

என்னதான் ஜனனியை ஜாடை மாடையாகப் பேசினாலும் ரஞ்சனிடமிருந்து அவளைப் பிரிப்பது பற்றி அவர் நேரிடையாக இதுவரை பேசியது கிடையாது.

ஏனெனில் மருமகள் மகனிடம் சொல்லி விட்டால் அவ்வளவுதான். சும்மாவே வீட்டாருடன் அளந்து பேசும் ரஞ்சன் தங்களை முற்றிலும் வெறுத்து விடுவான் என்று அவருக்குத் தெரியும்.

அவரின் தைரியம் எல்லாம் முதுகுக்குப் பின்னால் மட்டுமே. அதே போல் இன்றும் வாயை மூடிக் கொண்டு அமைதியாக இருந்தார்.

அவரின் நிலை திவ்யாவிற்கு எரிச்சலைத் தந்தது.

வீட்டினுள் நுழைந்த ஸ்ரீரஞ்சன் வரவேற்பறையில் அமர்ந்து இருந்த மனைவியின் அருகில் சென்றான். மல்லிகாவிற்கோ மகனை இந்த நேரத்தில் பார்த்ததும் பயம் வந்தது. அதுவும் திவ்யா இப்படிப் பேசும் போதா இவன் வீட்டிற்கு வரணும் என்று மகனை மனதுக்குள் திட்டினார். திவ்யாவும் அவன் வருகை உணர்ந்து அவன் புறம் திரும்பினாள்.

மல்லிகா, திவ்யா இருவரையும் கண்டு கொள்ளாமல் மனைவியை நோக்கிப் போனவனைக் கண்டு இருவர் மனமும் உலைக் களமானது.

"அத்தான் என்ன இந்த நேரத்தில்?" திவ்யா குரலில் ஏகத்துக்கும் தேன் வழிந்தது.

ஜனனி அவளை ஆச்சரியமாகப் பார்த்தாள். இவளுக்கு இவ்வளவு இனிமையாகப் பேசத் தெரியுமா என்ன?

"ம்... வேலை எல்லாம் முடிந்தது. ஃப்ரீயா இருந்தேன். அதான் வீட்டிற்கு வரலாம் என்று கிளம்பி வந்து விட்டேன்."

ஸ்ரீரஞ்சன் பதிலுரைத்தவாறு ஜனனியின் அருகில் அமர்ந்தான். இருக்கையில் சாய்ந்து அமர்ந்து கொண்டு ஜனனியின் தோள் சுற்றிக் கைபோட்டவன் அவளைத் தன்னுடன் சேர்த்து அணைத்து அமர்த்திக் கொண்டான்.

அவனின் செயலில் ஜனனி வெட்கத்தில் முகம் சிவந்து தலையைக் குனிந்தாள்.



இருவரின் நெருக்கத்தையும் கண்டு திவ்யாவிற்கு மனதுக்குள் பூகம்பமே வெடித்தது. அந்த நெருக்கத்தை எப்படிக் குறைப்பது என்று யோசித்தவளின் மனதில் திட்டம் பளிச்சிட்டது.

"அத்தான்! நீங்க ஃப்ரீ என்றால் நாம எங்காவது வெளியில் போயிட்டு வருவோமா?"

திவ்யா சொன்னதைக் கேட்டு மல்லிகா அவளை வெற்றியுடன் பார்த்தார்.

ஜனனியோ கலக்கத்துடன் ஸ்ரீரஞ்சனைப் பார்த்தாள். அவன் என்றுமே திவ்யாவை வெளியில் கூட்டிச் செல்வதற்கு மறுப்புத் தெரிவித்தது கிடையாது.

அது போல் இன்றும் வெளியில் சென்று விடுவானோ என்று அச்சத்துடன் பார்த்தாள்.

"இல்லை திவ்யா! நான் எங்கும் வரவில்லை. இன்றைய நாள் என் மனைவி, மகளுக்கு மட்டுமே. அவர்களுக்காக மட்டுமே..." என்று அழுத்தமாகக் கூறியவன், "வேணுமென்றால் ஒன்று செய். டிரைவரைக் கூட்டிக் கொண்டு அம்மாவுடன் வெளியில் செல்!" என்று முடித்துக் கொண்டான்.

ஸ்ரீரஞ்சன் பதில் திவ்யாவிற்கு ஆத்திரத்தைக் கிளப்பியது. அதே ஆத்திரத்துடன் ஜனனியைப் பார்த்தாள். ஆனால் ஜனனியோ கணவனைக் காதலுடன் பார்த்துக் கொண்டு இருந்தாள். மற்றொரு பெண்ணாக இருந்

திருந்தால் திவ்யாவை வெற்றிச் சிரிப்புடன் பார்த்து இருப்பாள். ஜனனிக்கோ கணவனின் அருகாமையில் திவ்யா மறந்து மறைந்து போனாள்.

“குட்டிம்மா, ஜூஸ் குடித்தாயா?”

அம்மா, திவ்யாவை மறந்து மனைவி மட்டுமே நினைவில் இருந்ததால் அவனையும் அறியாமல் குட்டிம்மா என்ற சொல் வந்துவிட்டது.

“ம்ஹும்... இல்லை.” தலையை இடமும் வலமும் ஆட்டினாள், அவன் மனைவி.

“என்னடா இந்த மாதிரி நேரத்தில் ஜூஸ், சூப் என்று சத்தானதா குடிக்க வேண்டாமா?” என்று கடிந்தவன், “நான் போய் ஜூஸ் போட்டுக் கொண்டு வர்றேன்...” என்று எழுந்தான்.

அவன் எழவும் ஜனனியும் கூடவே எழுந்தாள்.

அந்த நேரம் விது ஆஷிஷ் அறையில் இருந்து வெளியில் வந்தவள் தந்தையைக் கண்டவுடன் அவன் அருகில் ஓடி வந்தாள்.

மகளை அள்ளி அணைத்துத் தூக்கிக் கொண்டான் ஸ்ரீரஞ்சன்.

“அப்பா, ஆஷிஷ்க்கு நான் பப்பு புவ்வா ஊட்டி விட்டேன்.”

மகள் பெருமையுடன் சொல்வதைக் கேட்டு அவள் கன்னத்தில் முத்தமிட்டான்.



“இப்ப நாம அம்மாவுக்கு ஜூஸ் போடப் போக லாமா?” இந்த மாதிரி வேலை செய்வது பெண் குழந் தைகளுக்கு மிகவும் பிடித்தமான ஒன்று.

“ஓ... போடலாமே!” உற்சாகத்துடன் கூறினாள் சின்னவள்.

சமையலறையில் தனக்காகப் பழச்சாறு பிழிந்து கொண்டு இருக்கும் கணவனைக் காணக் காண ஜனனிக்குக் காதல் பெருக்கெடுத்தது. அவன் கண் அசைவில் பணிபுரிய அத்தனை வேலையாட்கள் இருந்த போதும் தனக்காக அவன் செய்யும் செயல் அவள் மனதை நெகிழ்த்தியது.

ஜனனி சுற்று முற்றும் பார்த்தவள் யாரும் இல்லை என்றதும் கணவன் உயரத்திற்கு எம்பி அவன் கன்னத்தில் தன் இதழைப் பதித்தாள்.

ஸ்ரீரஞ்சன் அவளின் செயல் கண்டு ஆச்சரியத் துடன் விழி அகல அவளைப் பார்த்தான்.

“நானும் அப்பாவுக்குக் கிஸ் கொடுப்பேன்...” என்று விதுவும் அவன் மறு கன்னத்தில் முத்தமிட்டாள். மனைவி, மகள் பாசத்தில் கண் கலங்கின ஸ்ரீரஞ்சன், நெகிழ்ச்சி யுடன் இருவரையும் இரு கரம் கொண்டு அணைத்துக் கொண்டான்.

அங்கே வரவேற்பறையில் அமர்ந்து இருந்த மல்லிகாவிற்கும், திவ்யாவிற்கும் நெருப்பை வாரி இறைத்தது போல் உடல் முழுவதும் காந்தியது.

இவர்களின் ஒற்றுமையை எப்படிக் குலைப்பது என்று அவர்களின் மூளை வேகமாகச் சிந்தித்தது.

## 16

"ஜனனி, உன்னை இப்படி அண்ணாவுடன் சேர்ந்து பார்ப்பதற்கு எவ்வளவு சந்தோசமா இருக்கு, தெரியுமா? இப்பதான் உன் முகத்தில் மகிழ்ச்சி நிறைந்து இருக்கு," என்று சொன்ன ஆர்த்தியை ஜனனி நெகிழ்ச்சியுடன் அணைத்துக் கொண்டாள்.

ஸ்ரீரஞ்சன், ஜனனி மற்றும் விது மூவரும் அவளின் அம்மா வீட்டிற்கு வந்து இருந்தனர்.

இன்று ஞாயிறு ஆதலால் அர்ஜுனும் வீட்டில்தான் இருந்தான். அவசரத் தேவை என்றால் மட்டுமே தன்னைத் தொடர்பு கொள்ளுமாறு மருத்துவமனையில் கூறியிருந் தான்.

ஸ்ரீரஞ்சனும் அர்ஜுனும் பொதுவான விசயங் களைப் பேச, பெண்கள் இருவரும் சமையலறைக்கு வந்தனர். சௌதாம்பிகை பேரன், பேத்தியுடன் தன் அறைக்குள் சென்று விட்டார்.

"ஜனனி, ரஞ்சன் அண்ணா ரொம்ப நல்லவர். நீ எந்த முடிவும் எடுக்கும் முன் அதை மட்டும் நல்லா ஞாபகம் வச்சுக்கோ." அன்றைய நாள் ஜனனி எழுதிய கவிதையின் அர்த்தம் புரிந்ததால் ஆர்த்தி அவ்வாறு கூறினாள்.



"என் ஹஸ்பென்ட் பத்தி என்கிட்டயே ரெக மெண்ட்டா?" கிண்டலுடன் கேட்டாள் ஜனனி.

"அட அடடா... என் ஹஸ்பென்ட்டா? இது எப்போ திருந்து ஜனனி?"

பதிலுக்குக் கிண்டலடித்தாள் ஆர்த்தி.

"அது ஆச்சு ஆறு வருஷம்." கண்சிமிட்டிச் சிரித்தாள் ஜனனி.

அவளின் சிரிப்பைத் தாயின் வாஞ்சையுடன் பார்த்துக் கொண்டு இருந்தாள் ஆர்த்தி.

ஆர்த்தி பார்வையில் இருந்த அன்பைக் கண்டு கண் கலங்கிய ஜனனி அவள் கையை எடுத்துத் தன் கைகளுக்குள் வைத்துக் கொண்டவள்,

"ஆர்த்தி, நான் எழுதியதை நீதான் அண்ணாவிடம் காட்டினாயா?" என்று கேட்டாள்.

ஆம் என்பது போல் தலையசைத்தாள் ஆர்த்தி. தன்னை ஏதும் தவறாக ஜனனி நினைத்துக் கொள்வாளா என்று தயக்கத்துடன் அவளைப் பார்த்தாள்.

"ரொம்பத் தேங்க்ஸ் ஆர்த்தி. பறி போய்விடுமோ என்று பயந்த என் வாழ்க்கையை நீ மீட்டுக் கொடுத்திட்ட!"

ஜனனி தன்னைத் தவறாக நினைக்கவில்லை என்றதும் இயல்பாக ஆர்த்தியிடம் குதூகலம் வந்து ஒட்டிக் கொண்டது. இருவரும் பேசியவாறே தங்கள் வேலையில் ஈடுபட்டனர்.

"என்ன ரெண்டு பேரும் என்ன செய்துட்டு இருக்கீங்க?" அர்ஜுன் குரல் கொடுத்தவாறே வர, அவன் பின்னே ஸ்ரீரஞ்சன் வந்தான்.

"ம்.. பார்த்தா எப்படித் தெரியுது?" அவனை முறைத்தாள் ஆர்த்தி.

"நீ மட்டும் சமைச்சாலே சாப்பாட்டை வாயில் வைக்க முடியாது. இதில் ஜனனி வேறா?" என்ற அர்ஜுனிடம்,

"அதானே... எங்களைப் பார்த்தால் பாவமா இல்லை, பேசாம அத்தையைச் சமைக்கச் சொல்லுங்க." அவனுக்கு எடுத்துக் கொடுத்தான் ஸ்ரீரஞ்சன். இருவரும் ஒருவருக்கொருவர் கையைத் தட்டி, ஹை-ஃபை கொடுத்துக் கொண்டார்கள். ஜனனியும் ஆர்த்தியும் தத்தம் கணவன்மாரை முறைத்தனர்.

"அய்யோ அர்ஜுன், முறைக்கிற முறைப்பைப் பார்த்தால் பட்டினி போட்டு விடுவாங்க போல இருக்கே. பேசாமல் சரண்டர் ஆகி விடுவோம் மச்சான்."

'பட்டினி'யில் வேண்டும் என்றே அழுத்தம் கொடுத்துக் கேட்டான் ஸ்ரீரஞ்சன். அதைப் புரியாமல் இருக்க அர்ஜுன் மடையனா என்ன?

"அப்படிங்கற...?" கிசுகிசுத்த குரலில் கூறிய அர்ஜுன், "ஓ.கே. நான் ரெடி." என்னமோ சண்டைக்குத் தயாராவது போல் சரணாகதிக்குத் தயாரானான்.

"இல்லை செல்லம்... அது வந்து செல்லம்..." என்று அர்ஜுன் தடுமாற ஸ்ரீரஞ்சன் அவன் காதைக் கடித்தான்.



"டேய், இதைக் கூட ஒழுங்காப் பண்ண முடியலியா? ஆர்த்தி உன்னைத் திட்டுறதில் தப்பே இல்லை."

"ஹி... ஹி..." அசடு வழிந்தான் அர்ஜுன்.

"இப்ப பாரு... நான் எப்படிச் சமாளிக்கிறேன்னு?" என்ற ஸ்ரீரஞ்சன்... ஜனனி அருகில் வந்து அவள் தோள் பற்றி அங்கு இருந்த உணவு மேஜையில் அமர வைத்தவன், "ஜனனி... இந்த மாதிரி நேரத்தில் நீ ஏன் வேலை செய்றேனு பாசத்தில் சொன்னேன்டா. நீ தப்பா புரிஞ்சுக்கிட்ட. வேணும்னா ஒண்ணு செய்யலாம். நாம எல்லோரும் லஞ்சுக்கு ஹோட்டல் போலாமா?"

ஜனனியின் தோளில் இருந்து கையை எடுக்காமல் பேசினான். அவனின் அருகாமை என்றும் போல் இன்றும் ஜனனியை மயக்கியது. அவள் ஒன்றும் பேசாமல் தலையை ஆட்டினாள்.

அவளின் முகச் சிவப்புப் பார்த்து ஸ்ரீரஞ்சன் மனம் எங்கோ பறந்து சென்றது. அவளை ஆசையுடன் பார்த்தான்.

"டேய்! நாங்க இங்கேதான் இருக்கோம்."

"அண்ணா, நாங்க இருக்கிறது உங்க கண்ணுக்குத் தெரியுதா?"

அர்ஜுன், ஆர்த்தி குரலில் இருவரும் சுய நினைவுக்கு வந்தனர். அதன் பின் ஆண்கள் காய்கறிகளை வெட்டித் தர, பெண்கள் இருவரும் சமையல் செய்ய என்று சமையலறை களை கட்டியது. அவர்களின் அரட்டைக்

கச்சேரி... நடுநடுவே எழுந்த சிரிப்பு எல்லாம் சௌதாம்பிகையின் காதில் விழுந்தது.

“ஏதோ கண் திருஷ்டி போல் இடையில் என்னென்னமோ நடந்து விட்டது. இனி மேலாவது சந்தோசத்தைக் கொடு இறைவா. இந்தச் சிரிப்பு இன்று போல் என்றும் வாடாது இருக்க வேண்டும்...” என்று கடவுளை மனதில் வேண்டிக் கொண்டார்.

“ஜனனி, நான் என்ன சொன்னாலும் கேட்கக் கூடாது என்ற முடிவுடன்தான் இருக்கியா? கூலி வேலை செய்றவங்க, சித்தாள் வேலை செய்றவங்க எல்லாம் குழந்தை உண்டாகிப் பெத்துக்கிறது இல்லையா என்ன? அவங்க எல்லாம் என்ன காலை ஆட்டிக்கிட்டு வீட்டிலா உட்கார்ந்து இருக்காங்க. அவங்களும் பெண்கள்தானே. நீ மட்டும் விதி விலக்கா என்ன?

“இவ்வளவு ஏன் கவர்மெண்ட்டே செவன் மந்த்க்கு அப்புறம்தான் டெலிவரி லீவ் கொடுக்குது. அதனால்... இந்தக் குழந்தை உண்டாகி இருக்கேன், மசக்கையா இருக்கேன்னு சாக்குப் போக்கு சொல்லாமல் என் கூட கம்பெனிக்கு வந்து வேலையைப் பாரு.” கோபமாக இரைந்தான் ஸ்ரீரஞ்சன்.

அவனும் ஜனனியைப் பார்த்துக் கொண்டு இருந்தான். அவள் மீண்டும் இங்கு வந்து பத்து தினங்களுக்கு மேல் ஆகிவிட்டது. அவன் இருக்கும்போது அவள் முகத்தில் இருக்கும் மகிழ்ச்சி அவன் வெளியில் இருந்து வரும்போது இல்லாது இருப்பதைக் கண்டான்.



அவள் முகம் ஏதோ யோசிப்பது போல் இருக்கும். அவனைக் கண்டதும் முகத்தின் இயல்பை மாற்றி விடுவாள். சாதாரண மனஸ்தாபம், கோபம் என்றால் சரியாகி விடும் என்று நம்பலாம்.

ஆனால் அவளுக்கு இருப்பதோ மன அழுத்தம். நாளை அது வேறு ஒரு உருவத்தில் பிரச்சினையை உண்டாக்கி விட்டால் என்ன செய்வது?

இனியும் ஒரு பிரிவைத் தாங்கும் சக்தி அவனிடம் இல்லை. மருத்துவர் கூறியது போல் ஜனனியின் மனதை வேறு பக்கம் திருப்ப எண்ணினான்.

அதற்கு அவன் கண்டுபிடித்த வழிதான் அவனுடன் கம்பெனிக்கு ஜனனியை அழைத்துச் செல்வது என்பது. அங்கு என்றால் அவனும் அருகில் இருக்கிறான். அவளை நன்றாகப் பார்த்துக் கொள்ள முடியும். அதுவும் போக வேலையில் மனதைச் செலுத்தும்போது தேவையில்லாத சிந்தனை ஜனனி மனதில் எழாது என்று எண்ணினான்.

அது பற்றி அவளிடம் சொன்னபோது மறுத்து விட்டாள். அதற்குத்தான் அவளிடம் கோபப்பட்டுக் கொண்டு இருந்தான் ஸ்ரீரஞ்சன்.

ஸ்ரீரஞ்சன் பேசியதைக் கேட்டு, நியாயத்திற்கு ஜனனியும் பதிலுக்குக் கோபப்பட்டு இருக்க வேண்டும். ஆனால் அவள் அதைச் செய்யாமல் இரு கைகளையும் கட்டிக் கொண்டு முகத்தில் புன்சிரிப்புடன் அவனையே பார்த்துக் கொண்டு இருந்தாள்.

"என்ன... என்னைப் பார்த்தா கேனை மாதிரியா இருக்கு? என்ன சிரிப்பு வேண்டி இருக்கு?" மீண்டும் கோபப்பட்டான்.

"ச்சே... உங்களைப் போய் யாராவது கேனை என்று சொல்வாங்களா?" அதே சிரிப்பு மாறாமல் அவனிடம் கேட்டபடி அவன் அருகில் வந்து அமர்ந்தாள்.

"ஆனால் காப்பி கேட் அப்படி வேணும்னா சொல்ல லாம். அதெப்படி நான் பேசிய வசனத்தை அப்படியே ஒரு வார்த்தை பிசகாமல் சொல்றீங்க." ஜனனி முகத்தில் ரகசியப் புன்னகை மலர்ந்தது.

விது உண்டாகி இருக்கும் சமயத்தில் அவளை ஒரு வேலை செய்யக் கூடாது. அப்படி இருக்காதே. இப்படி இருக்காதே என்று ஆயிரம் கட்டளை இட்டவனின் அன்புத் தொல்லையைத் தாங்க முடியாமல் ஜனனி சொன்ன வசனம்தான் ஸ்ரீரஞ்சன் இப்பொழுது கோபப்பட்டு அவளிடம் சொன்னது.

தன்னைக் கண்டு கொண்டு விட்டாளே என்று எண்ணியவன், தன் பொய்க் கோபத்தைக் கைவிட்ட வனாய் (இருந்தால்தானே கை விடுவதற்கு) ஜனனியைத் தன் கை வளைவில் கொண்டு வந்தான்.

"குட்டிம்மா... நான் சொல்றது உனக்குப் புரியுதா? முதல்ல கூப்பிட்டப்போ விது சின்னவள். அதனால வரலன்னு சொன்ன. சரி, இப்பதான் விது வளர்ந்துட் டாளே. இப்ப நீ வர்றதில் என்ன பிரச்சினை?"



மறந்தும் கூட அவளின் மனமாற்றத்திற்காகத்தான் இந்த ஏற்பாடு என்று சொல்லவில்லை. மறந்தும் அவளுக்கு மன அழுத்தம் இருப்பதைச் சுட்டிக் காட்ட அந்த அன்புக் கணவன் விரும்பவில்லை.

"இந்தக் குழந்தையும் பிறந்து வளர்ந்த பிறகு வர்றேனே..." என்னவோ பள்ளிக்குச் செல்ல அடம் பிடிக்கும் குழந்தையின் பாவம் ஜனனியின் முகத்தில் இருந்ததைக் கண்டு ஸ்ரீரஞ்சனுக்குச் சிரிப்பு வந்தது.

"அதெல்லாம் முடியாது. நீ வர்ற. நான் சொன்னால் சொன்னதுதான்." உறுதியான குரலில் கூறினான். அவனின் குரலில் இருந்த உறுதி ஜனனிக்கா புரியாது.

"ம்...ம்..." தனக்குள் முனகினாள்.

"என்ன சொன்ன... எனக்குக் கேட்கல." அவளின் உதட்டு அருகே காதைக் கொண்டு சென்றான்.

"வர்றேன்னு சொன்னேன்." குறும்புத்தனம் தலை தூக்க அவன் காதைப் பிடித்ததும், சத்தமாகக் கத்தினாள்.

"ராட்சசி, ஏன் இப்படிக் கத்துற?" வார்த்தையில் மட்டும்தான் கோபம் இருந்தது. அவன் முகத்திலோ கனிவு மட்டுமே இருந்தது. ஜனனியும் கொஞ்சம் மாறி இருக் கிறதை எண்ணி மனதிற்குள் மகிழ்ந்தான்.

ஆனால் அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் அவளைத் தன்னுடன் அலுவலகத்திற்கு அழைத்துச் செல்வதிலேயே குறியாக இருந்தான். அதில் வெற்றியும் கண்டான்.

ஜனனி அவன் அலுவலகத்திற்கு அப்பொழுதுதான் முதன் முறையாக வருகிறாள். அது ஒரு சிறிய தொழில் நகரமாக இருப்பதைப் பார்த்தவள் ஆச்சரியப்பட்டுப் போனாள். தொழிற்சாலைகள் எல்லாம் ஒரு புறம் அமைந்து இருந்தன.

மறுபுறம் வேலை செய்பவர்களுக்கான குடியிருப்பு இருந்தது. அங்கேயே பூங்கா, பள்ளி, ஆசிரமம், கோவில், விளையாடுவதற்குச் சிறிய மைதானம், அங்காடி என அனைத்தும் இருந்தன.

அலுவலகம் மட்டும் தனியே ஐந்து மாடிக் கட்டடத்தில் இருந்தது.

"என்ன இப்படி பார்க்கிற? எல்லாம் தாத்தாவோட அப்பா உண்டாக்கியது. அவர் சிறிய அளவில் உண்டாக்கியதைத் தாத்தா, அப்பா அதற்கு அடுத்து நான் என்று எங்களால் முடிந்த அளவு முன்னேற்றி வந்து இருக்கிறோம்."

ஜனனியின் ஆச்சரியப் பார்வைக்குப் பதில் கொடுத்தான்.

அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றவன், அங்கு வேலை செய்பவர்களுக்கு அவளை அறிமுகப்படுத்தினான்.

அதன் பின் அவளைத் தன் அறைக்குள் அழைத்துச் சென்று அன்றைய அவன் அலுவலக வேலையில் அவளை ஈடுபடுத்தினான்.



"இன்று ஒரு நாள் என்னோடு வேலை செய். நாளையில் இருந்து உனக்கு என்ன வேலை பிடித்து இருக்கிறதோ அதைச் செய்."

அவளின் மனதை மாற்றத்தான் அவன் இங்கு அழைத்து வந்ததே. அவள் உடல் வருந்த வேலை செய்ய வேண்டும் என்று அவன் எண்ணவில்லை.

அதே சமயம் வேலை அவள் மனதுக்குப் பிடித்ததாகவும் இருக்க வேண்டும் என்று நினைத்தான்.

கொஞ்ச நேரம் அங்கே இருந்தவள் வெளியில் சுற்றிப் பார்த்து விட்டு வருவதாகக் கூறினாள்.

ஸ்ரீரஞ்சனுக்கோ அசைய முடியாத அளவில் வேலை இருந்தது. அதனால் அவன் செயலாளர் பெண்ணை அழைத்து ஜனனியுடன் போகச் சொன்னான். ஜனனி சந்தோசத்துடன் அந்தத் தொழில் நகரத்தைச் சுற்றிப் பார்க்க உற்சாகத்துடன் கிளம்பினாள்.

அன்றிரவு தன் கையணைப்பில் இருந்த மனைவியிடம், "என்ன வேலை தேர்ந்து எடுப்பதாய் முடிவு பண்ணி இருக்க?" ஸ்ரீரஞ்சன் கேட்டான்.

அதற்கு ஜனனி சொன்ன பதிலைக் கேட்டு அவன் திகைத்துப் போய் அவள் முகம் பார்த்தான்.

ஜனனியின் முடிவு கேள்விப்பட்டு ஸ்ரீரஞ்சன் திகைத்தான் என்றால் மல்லிகாவும் திவ்யாவும் சந்தோசத்தில் குதூகலித்தனர்.

# 17

**"ஹ**லோ... மேடம் என்ன பண்ணிக் கிட்டு இருக்கீங்க?" ஸ்ரீரஞ்சன் குரலில் உற்சாகம் நிரம்பி வழிந்தது.

"வேலை நேரத்தில் என்ன தொந்தரவு பண்ணிக்கிட்டு இருக்கீங்க? நான் ஃப்ரீயா இருக்குமபோது கூப்பிடறேன். இப்ப நீங்க வைங்க..." என்ற ஜனனி அவன் மறுத்துக் கூறும் முன் தன் அலைபேசியை அணைத்தாள்.

கையிலிருந்த அலைபேசியைப் பார்த்துக் கொண டிருந்த ஸ்ரீரஞ்சன் ஜனனியின் செயல் குறித்துத் தனக்குள் புன்னகைத்துக் கொண்டான்.

ஒரு வாரத்திற்கு முன் நடந்தது எல்லாம் அவனுக்கு ஞாபகத்திற்கு வந்தது. ஜனனியின் முடிவு கேட்டுக் கொஞ்சம் திகைக்கத்தான் செய்தான்.

"நான் நம்ம பள்ளியில் வேலை பார்க்கட்டுமா?"

தயங்கித் தயங்கித்தான் கேட்டாள் என்றாலும்... அவளின் இந்தப் பதிலை அவன் நிச்சயமாக எதிர்பார்க்க வில்லை.

"ஏன் குட்டிம்மா.... ஆபீஸ் வந்து முதலாளியாய் நிர்வாகம் பண்றதை விட்டு விட்டு இது என்ன வேலை பார்க்கப் போவதாய்ச் சொல்ற? எனக்குக் கொஞ்சமும் பிடிக்கல."

ஸ்ரீரஞ்சன் தன் அதிருப்தியை வார்த்தையிலும், முகத்திலும் காண்பித்தான்.



"ஸ்ரீ..... நான் சொல்றதையும்......."

ஜனனி வாக்கியத்தை முடிக்கக் கூட இல்லை,

"எனக்குப் பிடிக்கவில்லை. அவ்வளவுதான் சொல் வேன்."

ஸ்ரீரஞ்சன் உறுதியான குரலில் கூறினான். அவனின் வருத்தம் புரியத்தான் செய்தது.

அவன் அருகில் வந்து அவன் மார்பில் சாய்ந்து அமர்ந்து கொண்டாள். அவளின் செயல் அவனின் கோபத்தைக் குறைக்கும் என்று அவளுக்குத் தெரியும்.

அவள் நினைத்ததை மெய்ப்பிப்பது போல் ஸ்ரீரஞ்சன் கரங்கள் அவளைத் தழுவின.

"நான் சொல்வது உனக்குப் புரியலையா? நீ என் கண் பார்வையில் இருக்க வேண்டும் என்று நான் விரும்பு கிறேன். ப்ளீஸ்டா."

அவளின் கழுத்து வளைவில் முகம் புதைத்தவாறே கூறியவனைக் கண்டு சிரிப்பு வந்தது ஜனனிக்கு.

அவன் இப்படி நடந்து கொண்டால் அவள் எப்படித் தன் மனதில் உள்ளதைச் சொல்ல முடியும். செல்லமாகச் சிணுங்கியது, அவள் மனது.

அவனுக்கும் தெரியும், அவனின் இந்தச் செயலில் மனம் நெகிழ்ந்து அவள் தன் முடிவை மாற்றிக் கொள் வாள் என்று. ஆனால் அவன் மனையாளோ நெகிழ்ந்தது என்னவோ ஒரு நொடிதான். பின் தன்னைச் சுதாரித்துக்

கொண்டு அவனிடமிருந்து விலகி அமர்ந்து அவன் கண்ணோடு கண் நோக்கினாள்.

"ஸ்ரீ! என்னை எதுக்கு வேலைக்குப் போகச் சொல் றீங்க?"

"அது வந்து.... வந்து....."

என்னவென்றுதான் அவனும் சொல்வான். உனக்கு மன அழுத்தம். வீட்டில் இருந்தால் எதையாவது நினைத்துக் கொண்டு இருப்பாய். அதான் வேலைக்கு வரச் சொல்கிறேன் என்றா அவளிடம் சொல்ல முடியும்.

அப்படிச் சொன்னால் ஜனனியின் மனம் எந்த அளவுக்குக் காயமடையுமோ அதை விட அவன் மனதில் வலி எழும். அதனால் அவனுக்குப் பதில் சொல்லத் தெரிய வில்லை.

"நான் சொல்லட்டுமா?" என்ற மனைவியைக் கேள்வியாகப் பார்த்தான் அவன்.

"எனக்கு மன மாற்றம் தேவை என்றுதானே நீங்க ஆபீஸுக்கு வரச் சொல்றீங்க?"

தன் மனதைப் புரிந்து கொண்டாளே என்று அவளை வியப்புடன் பார்த்தான்.

அதைப் பார்த்தவள் கலகலவெனச் சிரித்தாள். ஜனனி இந்த மாதிரிச் சிரித்து எவ்வளவு நாள் ஆயிற்று என்று மனதில் நினைத்தவன் வாய் விட்டுச் சொல்லாமல் அவளின் சிரிப்பையே ஆசையுடன் பார்த்துக் கொண்டு இருந்தான்.



"எப்படிக் குட்டிம்மா..... இப்படி?" - சிரித்துக் கொண்டே கேட்டான்.

"ம்ஹூம்..... இங்கே இருப்பது நான்தானே."

அவனின் இதயப் பகுதியைச் சுட்டிக் காட்டி, "அப்போ நீங்க என்ன நினைத்தாலும் எனக்குத்தான் முதலில் தெரிய வரும். அந்த அளவுக்கு நான் பவர் ஃபுல்லாக்கும்."

தன்னைத் தானே மெச்சிக் கொண்டவளைக் கண்டு அவனுக்குமே சிரிப்பு வந்தது.

"உண்மைதான்டா..... இதில் நீதான்... நீ மட்டும்தான் இருக்கிறாய்."

ஸ்ரீரஞ்சன் தன் மனதைத் தொட்டுக் காட்டிச் சொல் லியதைக் கேட்டு, ஜனனி அவனை இமைக்காமல் பார்த் தாள்.

"ஹலோ.... என்ன உட்கார்ந்துகிட்டே தூங்கு கிறாயா?" அவள் முன் கையை ஆட்டினான்.

ஸ்ரீரஞ்சனின் செயலில் சுய நினைவுக்கு வந்தவள் அடுத்த கணம் ஆவேசமாக அவனைத் தன்னோடு சேர்த்து அணைத்தாள்.

அவளின் செயலில் தடுமாறியவன் எதையும் பற்ற வழி இல்லாமல் மனைவியையே பற்றுக்கோலாகக் கொண்டு அவளின் மேல் விழுந்தான்.

ஜனனிக்கு அவனின் வார்த்தையில் மனதில் பூட்டி வைத்திருந்த அவன் மீதான காதல் எல்லாம் நீரூற்றாய்ப் பீய்ச்சிக் கொண்டு வெளிவந்தது.

அவன் முகம் முழுவதும் முத்திரையைப் பதித்தாள். ஒரு நொடி கூட விடாமல் இதழால் கவிதை எழுதும் மனைவியின் காதல் கண்டு அப்படியே பிரமித்தான் ஸ்ரீரஞ்சன்.

இவ்வளவு காதல் கொண்ட பெண் மனைவியாகக் கிடைக்கத் தான் என்ன தவம் செய்தோம்!

அடுத்த கணம் அவனும் தன் மனையாளுடன் சேர்ந்து கவிதை படைக்கலானான். கவிதையாக ஆரம் பித்துக் காதலாகத் தொடர்ந்து... காமம் கொஞ்சம் எட்டிப் பார்க்கும் முன் ஸ்ரீரஞ்சன் தான் சுதாரித்தான்.

"ஹேய்... என்ன ஆச்சு உனக்கு?" என்றபடி விலகியவனை விலக விடாமல் தடுத்தவளை மறுக்க முடியாமல் அவள் அருகில் படுத்தவன்,

"இப்போ இது எல்லாம் வேண்டாமே?" மென்மை யாகச் சொன்னான்.

கேள்வியாக நோக்கியவளை, "இன்னும் கொஞ்ச நாள்... அதுக்கு அப்புறம் நீயே விலகினாலும் நான் உன்னை விட மாட்டேன்."

காதலுடன் சொன்னவனின் மார்பில் வெட்கத்துடன் முகம் புதைத்தாள் ஜனனி.



"சரி, இப்போ சொல்லு. ஏன் வேலைக்குப் போறேன்னு சொல்ற?"

"நான் அலுவலகம் வருவதே மன மாற்றத்திற்குத் தான். எனக்கு பிசினெஸ் எல்லாம் தெரியாது."

"நான் சொல்லித் தர்றேன்டா."

"ப்ச்சு... எனக்கு அதில் இஷ்டம் இல்லை. ஸ்கூலில் வேலை பார்ப்பது எனக்குப் பிடித்து இருக்கு. வித விதமான பட்டாம் பூச்சி போல் சந்தோஷத்துடன் இருக்கும் குழந்தைகளைப் பார்க்கும் போது எவ்வளவு சந்தோசமாக இருக்குது தெரியுமா!

"அங்குதான் என் மனம் உயிர்ப்புடன் இருக்கும். தொழில் என்றால் என் மனம் இயந்திர கதியில் மாறி விடும்."

ஜனனியின் கூற்று உண்மை என்பதால் ஸ்ரீரஞ் சனும் அமைதியாக இருந்தான்.

முன்பு அவனும் அப்படி இயந்திரமாக இருந்தவன் தானே! என்று ஜனனியைப் பார்த்தானோ அன்றுதானே அவனுக்கு உயிர்ப்பு வந்தது.

"அங்கு என்றால் கிரியேட்டிவாக யோசிக்கலாம். தினமும் என்ன செய்யலாம் என்று புதுவிதமாக யோசிக்க முடியும். இன்னும்..." சொல்லிக் கொண்டே போனவளைத் தடுத்தவன்,

"ஓ.கே. ஓ.கே. நீ சொல்றது புரியுதுடா. நீ சொல்லி நான் என்னைக்கு மறுப்புத் தெரிவித்தேன்." அவளின்

விருப்பத்திற்குப் பச்சைக் கொடி காண்பித்தான், அந்த அன்புக் கணவன்.

"பட் ஒன் கண்டிஷன். அங்கே நீ நிர்வாகத்திலும் பங்கு எடுத்துக்கணும். எனக்கும் ஒரு வேலை குறையும் இல்லையா? என்ன ஓ.கே.வா?"

"நிர்வாகம்..." ஜனனி தயங்கியதைக் கண்டு கோபம் தான் வந்தது ஸ்ரீரஞ்சனுக்கு.

"அப்போ நீ இன்னும் என்னை வேற்று ஆளாகத் தான் நினைக்கிறாய், என்ன? நீ அலுவலகம் வரமாட்டேன். வேலைக்கு வருகிறேன் என்று சொன்ன போதே எனக்குப் புரிந்து போனது."

"இல்லை ஸ்ரீ! இது உங்க தாத்தாவோடது. நான் வந்து நிர்வாகம் பண்ணுவது என்பது..."

தன்னைக் கண்டு கொண்டானே என்று அவள் குரலில் வருத்தம் இருந்தது.

"என் மனைவி நீ... உனக்கு இல்லாத உரிமையா?"

"இருந்தாலும் வேண்டாமே. யாராவது ஏதாவது சொல்வாங்க."

கணவன் மூலம் வரும் சொத்தையும் வேண்டாம் என்கிறாளே... இவளை என்ன சொல்ல? ஜனனியின் மனதில் அவளையும் அறியாமல் குடி கொண்டு இருந்த தாழ்வு மனப்பான்மையை அவன் ஒரு நொடியில் புரிந்து கொண்டான்.



அந்தக் கணம் அவன் முடிவு செய்தான். அவளை யும் அவள் திறமையால் சிறக்கச் செய்ய வேண்டும் என்று.

"சரிடா, குட்டிம்மா. உன் இஷ்டம் போல் செய். ஆனால் பள்ளி நிர்வாகத்தில் எனக்குப் பதிலாகத்தான் உன்னைச் செயல் படச் சொல்றேன். என் வேலைப் பளு உனக்கும் தெரியும்தானே."

"ம்... ம்... சரி. உங்களுக்காக..." அரையும் குறை யுமாகத் தலையாட்டிய மனைவியைக் கண்டு சிரிப்பு வந்தது அவனுக்கு.

தனக்காக அவளுக்கு விருப்பம் இல்லாததையும் செய்யத் துணியும் அவளைக் கண்டு மனதுக்குள் மெச்சிக் கொண்டான்.

இப்படியே தான் இவளைச் சரி செய்ய வேண்டும் என்று மனதில் எண்ணிக் கொண்டான்.

ஜனனி பொறியியலில் கணினிப் பிரிவு படித்து இருந்த படியால் கணினிப் பிரிவில் வேலை செய்தாள். ஆசிரியராகப் பாடம் கற்பிக்கும் வேலை இல்லை.

கணினி மூலம் புதுப் புது உத்திகளைக் கையாண்டு மாணவர்களுக்குப் புரியும் வகையில் பாடத்தைச் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்று எண்ணி அதற்கான முயற்சியில் இறங்கி இருந்தாள்.

முதலாவதாக மழலையர் வகுப்பில் இருந்து ஆரம் பித்து இருந்தாள்.

நடந்ததை எல்லாம் நினைத்துக் கொண்டவன், முகத்தில் சிரிப்புத் தவழ மனைவியைப் பார்த்து வர எண்ணிப் பள்ளிக்குக் கிளம்பினான்.

அவன் அலுவலகத்தில் இருந்து பத்து நிமிடக் கார் பயணத்தில் பள்ளி இருந்தது. பள்ளியில் நுழைந்தவன் அங்கு இருந்தவர்களின் வணக்கத்தை ஏற்றுக் கொண்டு மனைவியைப் பார்க்கப் போனான். இடையில் அவனை நிறுத்தி ஒன்றிரண்டு பேர் ஜனனியைப் பற்றிப் புகழ்ந்த தோடு இல்லாமல், இப்படி ஒரு மனைவி கிடைக்க அவன் குடுத்து வைத்து இருக்க வேண்டும் என்று வேறு சொல்லி விட்டுச் சென்றார்கள்.

வந்த ஒரு வாரத்தில் எல்லோர் மனதிலும் இடம் பிடித்து விட்டதை எண்ணி மனதில் பெருமைப் பட்டுக் கொண்டான். எங்கு இருந்தாலும் தன் மனைவி தனித் துவத்துடன் இருப்பதைக் கண்டு அவன் மனம் பூரித்தது.

“ஹலோ மேடம், என்ன ஆராய்ச்சி இன்னும் முடியலியா?” ஜனனியின் மேஜைக்கு எதிரில் இருந்த நாற்காலியில் அமர்ந்தபடி கேட்டான் ஸ்ரீரஞ்சன்.

கணினியில் பார்வை பதித்திருந்த ஜனனி ஸ்ரீரஞ் சனின் குரல் கேட்டு நிமிர்ந்தாள்.

எதிர் பாராமல் அவனை இங்கு பார்த்ததில் மகிழ்ச்சி யில் அவள் கண்கள் விரிந்தன. அவளின் மகிழ்ச்சி அவனையும் தொற்றிக் கொண்டது.

“என்ன ஸ்ரீ திடீர்னு?”



“ஒழுங்கா வேலை பார்க்கிறாயா என்று பார்க்க வந்தேன்.” போலியாக அவளை மிரட்டினான்.

“எல்லாம் ஒழுங்காகத்தான் செய்கிறேன் சார்.”

அவளும் பதிலுக்குப் போலி பவ்யத்துடன் நடித் தாள். அதைக் கண்டு ஸ்ரீரஞ்சனுக்குச் சிரிப்பு வர, அவனைப் பார்த்து அவன் மனையாளுக்கும் சிரிப்பு முட்டிக் கொண்டு வந்தது.

“ஓகே... ஓகே... ஏதாச்சும் சாப்பிட்டாயா? இப்போ மணி என்ன?” என்று தன் கைக்கடிகாரத்தைப் பார்த்தவன்,

“லெவன் தர்ட்டி. ஜூஸ் குடித்தாயா?” என்று கேட் டான்.

“இன்னும் இல்லை.” குற்றம் செய்த சிறு பிள்ளை போல் தலை குனிந்து கொண்டு பதில் சொன்னாள் ஜனனி.

“நேரா நேரத்திற்கு உன்னை ஜூஸ் குடிக்கச் சொன்னேன் இல்ல. அதைக் கூடச் செய்யாமல் என்ன வேலையோ?” என்று கடிந்தவன்,

“நல்ல வேளை. மதிய உணவு என்னோடு என்ப தால் பிரச்சினை இல்லை. இல்லை என்றால் அதையும் சாப்பிட மாட்ட.” கோபத்துடன் சொன்னான்.

பிறகு பணியாளரிடம் சொல்லி மாதுளம் பழ ரசத்தை வரவழைத்தான். அவள் குடித்து முடிக்கும்வரை இருந்து விட்டுத்தான் சென்றான்.

கணவன் சென்ற திசையைப் பார்த்துக் கொண்டு இருந்த ஜனனியின் முகத்தில் காதலும் பெருமையும் சரி விகிதத்தில் இருந்தது.

"**அ**த்தை, என்னதான் நடக்குது இங்கே? எனக்கு ஒண்ணும் புரியல." திவ்யா மல்லிகாவிடம் கேட்டுக் கொண்டு இருந்தாள்.

"ஏன்? என்னவாச்சு?"

"ரஞ்சியும் அந்த ஜனனியும் காலையில் கிளம்பிப் போறவங்கதான். அப்புறம் மாலையில்தான் வர்றாங்க. எங்க போறாங்க என்னன்னு ஒண்ணும் தெரியல. அவங்க ஜோடி போட்டுப் போகும் போது எனக்கு வயிறு எரியுது." சொல்லும்போதே திவ்யாவின் குரல் உடைந்தது.

"என்ன திவ்யா இது? இதுக்கு எல்லாம் போய்க் கண் கலங்கிட்டு. உன் அத்தை ஒண்ணும் இத்தனை நாள் சும்மா இல்லை. அவங்க எங்கே போறாங்க, என்ன செய்றாங்கன்னு விசாரிச்சுக்கிட்டுத்தான் இருந்தேன்."

"எங்கே போறாங்களாம்?" ஆர்வத்துடன் திவ்யா கேட்டாள்.

"ஜனனி ஸ்கூலில் வேலை செய்கிறாள்."

"வேலையா?" இகழ்ச்சியான குரலில் கேட்டாள் திவ்யா. முதலாளி வர்க்கம் அப்படித்தானே கேட்கும்.

"ஆமாம். எனக்குத் தெரிஞ்சவங்க மூலம் விசாரிச்சுத் தெரிஞ்சுக்கிட்டேன்."



"ச்சே... வீட்டில் இருந்தாலாவது அவளை ஆட்டலாம் என்று நினைத்தேன். இப்போ வேலைக்குப் போயிட் டாளா?"

"இப்பவும் ஒண்ணும் கெட்டுப் போயிடல. நீ சரின்னு சொன்னா அந்த ஸ்கூல் கரெஸ்பான்டென்ட் போஸ்ட்ல உன்னை உட்கார வைக்கிறேன்."

"அதெப்படி முடியும்?"

"அதில் மொத்தம் நாலு ஷேர்ஸ் இருக்கு. மாமா வோடது. ஸ்ரீகாந்தோடது எல்லாம் என்கிட்டதான் இருக்கு. நான்தான் ஸ்கூல் நிர்வாகத்தில் விருப்பம் இல்லாமல் ரஞ்சியிடம் கொடுத்து வைத்து இருந்தேன். அதனால் முடிவு எடுக்கறதுக்கு யாரும் மறுப்புச் சொல்ல முடியாது."

"ரஞ்சி அத்தான்..."

"அவனுக்குப் புரியும் விதத்தில் சொல்லிப் புரிய வைக்கலாம். நீ கவலைப்படாதே. நீ அந்த ஜனனியை எப்படி விரட்டி அடிக்கலாம் என்று மட்டும் யோசி."

"சோ... ஸ்வீட் அத்தை." திவ்யா மல்லிகாவின் கன்னத்தில் முத்தமிட்டாள்.

மறுநாள் ஸ்ரீரஞ்சனும் ஜனனியும் அலுவலகம் கிளம்பும் சமயம் மல்லிகா ஸ்ரீரஞ்சனைத் தடுத்து நிறுத் தினார்.

"ரஞ்சி! உன்னிடம் கொஞ்சம் பேசணும்," என்று சொல்லிவிட்டு ஜனனியைப் பார்த்தார்.

அவரின் பார்வை உணர்ந்து ஜனனி கணவனிடமிருந்து விலகி வாசலை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

"ஜனனி! இங்கே இரு!" என்று அவள் கைப் பிடித்துத் தடுத்து நிறுத்தினான் ஸ்ரீரஞ்சன்.

அதைக் கண்டு ஆத்திரமாக வந்தது மல்லிகாவிற்கு. ஆனால் அதை வெளியே காட்ட முடியாதே!

"என்ன... சொல்லுங்கம்மா?"

"வந்து திவ்யாவை நிர்வாகம் கத்துக்க உன்னுடன் கூட்டிக் கொண்டு போ..."

"என்ன..." ஸ்ரீரஞ்சன் குரல் உயர்ந்தது.

முதல் முறையாகத் தன் அம்மா மீதும் அவர் அருகில் நின்று கொண்டு இருந்த திவ்யா மீதும் ஸ்ரீரஞ்சனுக்குச் சந்தேகம் வந்தது.

## 18

"என்ன விசயம்னு இப்ப சொல்லுங்கம்மா?" சாவகாசமாகக் கேட்டபடி வந்தமர்ந்த மகனைக் கண்டு மல்லிகாவிற்கு எரிச்சலாக வந்தது.

என்ன ஒரு வேகம் என்று மனதில் ஸ்ரீரஞ்சனைத் திட்டிக் கொண்டார். பின்னே காலையில் அவர் கேட்ட கேள்விக்கு மாலையில் வந்து ஒண்ணும் தெரியாத மாதிரி கேட்கும் மகனைக் கண்டு எரிச்சல் வராமல் வேறு என்ன வரும்.



காலையில் கிளம்பும் போதே மல்லிகா சொன்னதைக் கேட்டு ஸ்ரீரஞ்சனுக்குச் சற்றுத் திகைப்பாகவும் அதே சமயம் சந்தேகமாகவும் இருந்தது.

எதற்காக அம்மா திவ்யாவை நிர்வாகம் கத்துக்க அனுப்ப நினைக்கிறார்? ஜனனிக்கு எதிராக ஏதாவது செய்ய வேண்டும் என்று எண்ணி இவ்வாறு செய்கிறாரா என்று மனதில் ஒரு கேள்வி எழுந்தது.

இந்த விசயம் அவசரமாகப் பேசும் விஷயம் இல்லை. ஆதலால் மாலையில் அலுவலகம் முடிந்து வந்து பேசிக் கொள்ளலாம் என்று சொல்லி விட்டுக் கிளம்பி விட்டான் ஸ்ரீரஞ்சன்.

அவனுக்குமே கொஞ்சம் யோசிக்க வேண்டி இருந்தது. எதையும் எடுத்தோம் கவிழ்த்தோம் என்று செய்து பழக்கம் அவனுக்கு இல்லை. சொன்னபடி வந்தவன் பேச்சு வார்த்தைக்காக அம்மாவின் எதிரில் இருந்த சொகுசு நாற்காலியில் அமர்ந்தான்.

"சொல்லுங்கம்மா! காலையில் திவ்யா பத்தி ஏதோ சொன்னீங்களே, என்ன?"

"அது வந்து ரஞ்சி... நம்ம திவ்யாவுக்கு நிர்வாகத்தில் பயிற்சி தேவைன்னு நினைக்கிறாள். அதான் உன் கூடக் கூட்டிக் கொண்டு போனாயானால் நன்றாக இருக்கும்."

"அம்மா, அவளுக்கு நிர்வாகத்தில் பயிற்சி தேவை என்றால் மாமா கம்பெனியில் நிர்வாகம் கத்துக்க வேண்டியது தானே? நம் நிர்வாகத்தில் எதற்கு? இது

எனக்குச் சரியாகப் படல." தன் விருப்பமின்மையை நேரிடையாக அம்மாவிடம் தெரிவித்தான்.

ஜனனியை வெறுப்பு ஏற்றுவதற்காகத் தான் மல்லிகா இவ்வாறு கூறுகிறாரோ என்ற சந்தேகத்திலேயே இதைத் தவிர்க்க எண்ணினான். அதிலும் இப்பொழுது தான் மனைவி தன் கூட்டில் இருந்து கொஞ்சம் வெளியில் வந்து மகிழ்ச்சியாக இருக்கிறாள். அதைக் கெடுக்க அவனுக்கு விருப்பம் இல்லை.

"அதற்காகத்தான் ரஞ்சி... உன் மாமா திவ்யாவை இங்கே நிர்வாகம் கற்றுக் கொண்டு வரட்டும் என்று பிரியப்படுகிறான். அவனுக்கு உன் மீதும் உன் திறமை மீதும் நம்பிக்கை இருக்கிறது. திவ்யாவை நீ நல்லா ட்ரெய்ன் பண்ணி விடுவாய் என்றுதான் அப்படிச் சொன்னான்.

"அவனுக்கு இரண்டுமே பெண் குழந்தைகள்தான் என்று உனக்கே தெரியும். மூத்தவள் காவ்யா இங்கே நம் வீட்டிற்குத் திருமணமாகி வந்து விட்டாள். அதனால் திவ்யா தான் நிர்வாகத்தைப் பார்த்தாக வேண்டும். அதற்குத்தான் உன் உதவி தேவை என்று சொல்கிறான்." தன் தம்பியின் பேரைச் சொல்லி மல்லிகா தப்பிக்க நினைத்தார்.

மாமாவின் பேரைச் சொன்னதும் மறுத்துப் பேச முடியவில்லை. ஆனாலும் மனதில் சிறு சஞ்சலம் இருந்து கொண்டுதான் இருந்தது.

திவ்யாவைப் பள்ளி நிர்வாகத்திற்கு அனுப்பினால் தானே ஜனனிக்குத் தொந்தரவு வரும். அதனால் தன்



னோடு அலுவலகத்திற்கு அழைத்துச் செல்லலாம் என்று முடிவு செய்தான்.

"சரிம்மா. நாளையில் இருந்து திவ்யாவை நம் ஆபீசுக்கு வரச் சொல்லிடுங்க. என்ன திவ்யா, உனக்கு ஓ.கே. தானே?"

பள்ளி நிர்வாகத்தில் நுழைந்தால்தானே ஏதாவது செய்ய முடியும். அலுவலகத்திற்குச் சென்றால் அது நடப்ப தற்குச் சாத்தியம் இல்லையே. ஒரே நேரத்தில் மல்லிகாவும், திவ்யாவும் மனம் பதைபதைத்துப் போனார்கள்.

"என்ன ரஞ்சி, எடுத்த வுடனே அலுவலக நிர்வாகமா? திவ்யா சிறு பெண் அல்லவா! நம் பள்ளியில் அவளுக்குப் பயிற்சி அளிக்கலாமே. அது கொஞ்சம் எளிதானதும் கூட."

"ஓஹ்... அப்படி என்றால் ஒன்று செய்யலாம். முதலில் ஆசிரியராக அங்கு வந்து பயிற்சி எடுத்து அதன் பின் நிர்வாகத்தில் பயிற்சி எடுக்கலாம். என்ன திவ்யா, உனக்கு ஓகே தானே?"

"வேலையா?... நானா?" முகத்தைச் சுழித்தாள் திவ்யா.

ஸ்ரீரஞ்சனின் மனம் கண நேரத்தில் ஜனனியையும் திவ்யாவையும் ஒப்பிட்டுப் பார்த்தது. உரிமை உள்ளவளாய் இருந்தாலும் நிர்வாகத்தில் பங்கெடுக்க விரும்பாத ஜனனி எங்கே? வேலையா என்று முகம் சுழிக்கும் இவள் எங்கே? அவன் மனதில் திவ்யா ஒரு படி தாழ்ந்து போனாள்.

"சரி. இப்ப என்னதான் செய்யச் சொல்றீங்க?" மனதில் எழுந்த எரிச்சலுடன் கேட்டான் ஸ்ரீரஞ்சன்.

பள்ளி நிர்வாகம் நால்வரின் பேரில் இருப்பதால் அவனாலும் தனித்து முடிவு எடுக்க முடியாத நிலை.

"முதலில் பள்ளி நிர்வாகத்தில் திவ்யாவுக்கு என்று ஒரு இடம் கொடுத்து அமர வைப்போம். அதை அவள் எப்படிச் செயல் படுத்துகிறாள் என்று பார்ப்போம்."

"அம்மா! வயதில் சிறிய பெண்ணாக இருக்கிறாளே, இவளால் எப்படி?"

"வயதில் சிறிய பெண்ணாக இருந்தால்தான் பள்ளியில் புதுமையான எண்ணங்களைப் புகுத்த முடியும். அப்பொழுது நம் பள்ளி இன்னும் சிறந்து விளங்கும்."

"நல்லா விளங்கினாப்பல..." மனதில் முணு முணுத்துக் கொண்டான் ஸ்ரீரஞ்சன்.

"சரி. நாளையில் இருந்து வரச் சொல்லுங்க..." என்றபடி எழுந்தான் அவன்.

மல்லிகாவும் திவ்யாவும் நடந்ததை நம்ப முடியாமல் அப்படியே அமர்ந்து இருந்தனர்.

இவ்வளவு எளிதாகத் தாங்கள் நினைத்த காரியம் வெற்றி பெறும் என்று அவர்கள் நினைக்கவில்லை. தங்களுக்குள் சந்தோசப் பார்வையைப் பரிமாறிக் கொண்டனர்.

இரவில் மகளைத் தூங்க வைத்து விட்டுக் கணவனிடம் திரும்பிய ஜனனி அவன் இன்னமும் உறங்காமல் எதையோ நினைத்துக் கொண்டு இருப்பதை உணர்ந்து அவன் தோள் மேல் கை வைத்தாள். மனைவியின்



ஸ்பரிசத்தில் தன் நினைவு கலைந்த ஸ்ரீரஞ்சன் அவளைப் பார்த்தான்.

"என்ன தூங்காம யோசனை?"

"ஒண்ணுமில்லை..." என்று அவன் சொல்லும் போதே, அதில் ஆயிரம் இருப்பதாகப் பட்டது அவளுக்கு.

"என்ன ஸ்ரீ... பிசினெஸ்ல ஏதும் பிரச்சினையா?" கவலையுடன் கேட்டவளை அருகில் இழுத்து அணைத்துக் கொண்டவன்,

"அதெல்லாம் இல்லை. அம்மா செய்ற விஷயம் தான் ஒண்ணும் புரிய மாட்டேங்குது," என்று மல்லிகாவுடன் நடந்த உரையாடலை ஜனனியிடம் கூறினான்.

"முடியாது என்று ஒரு வார்த்தையில் கூறி விடலாம். ஆனால் மாமாவுக்காகப் பார்க்க வேண்டும். காலையில் பேசிய போதே நான் ஏன் ஒன்றும் பேசாமல் போனேன் தெரியுமா? மாமாவிடம் பேசி விட்டுத்தான் அம்மாவிடம் பேச வேண்டும் என்றுதான். அம்மாதான் இப்படி, அவர் மிகவும் நல்லவர்.

"சிறு வயதில் இருந்து எங்களைத் தூக்கி வளர்த்தவர். அவர் என்னிடம் கேட்கும்போது என்னால் மறுக்க முடியவில்லை. எனக்கு மகன் இல்லை. என் மூத்த மகனாக இருந்து என் மகளுக்கு வழி காட்டு. உன் தங்கைக்குச் செய்ய மாட்டாயா? அதே மாதிரி திவ்யாவை உன் தங்கையாக எண்ணி இதைச் செய்யப்பா என்று கேட்கும் போது என்னால ஒன்றும் பேச முடியவில்லை.

"எனக்கு மதியும் திவ்யாவும் வேறு வேறு அல்ல. இருவரும் ஒன்றுதான். ஆனால் அம்மா வேறு ஏதும் ப்ளான் போடுகிறார்களா என்று தெரியவில்லை. அவர் களுக்கு உன்னை வெறுப்பேற்ற வேண்டும். உன்னைக் கஷ்டப்படுத்த வேண்டும் என்பதுதான் லட்சியம் போல. இப்பொழுது பள்ளி நிர்வாகத்தில் திவ்யாவை நுழைக்கப் பார்க்கிறார்கள்.

"வேறு வழியின்றி நானும் மாமாவுக்காகச் சரி என்று சொல்லி விட்டேன். இதனால் உனக்கு ஏதும் வருத்தம் இல்லையே!" கண்களில் கலக்கத்துடன் கேட்ட கணவ னைக் கண்டு மனம் நெகிழ்ந்தது.

திவ்யாவைத் தன் தங்கை மாதிரித் தான் எண்ணி இருப்பதாக அவன் சொன்னது அவள் மனதிற்குத் தைரியம் அளித்தது.

கணவன் மனதில் கல்மிஷம் இல்லை என்று அந்தக் கணம் அவளுக்குப் புரிந்து போனது.

திவ்யா காட்டிய அந்தப் புகைப்படம், குறுஞ்செய்தி எல்லாம் ஒன்றும் இல்லாததாக அந்த நேரம் அவளுக்குத் தோன்றியது.

அது எந்தச் சூழ்நிலையில் எடுக்கப்பட்டதோ, அனுப்பப்பட்டதோ, அதனால் அதைப் பற்றிய கவலை யைத் தூக்கித் தூர எறிந்தாள்.

"எனக்கு ஏதும் வருத்தம் இல்லை..." என்று அவன் கை மேல் வைத்து உறுதியுடன் கூறியவள்,



"அத்தனை பேர் இருக்கும் இடத்தில் யாரும் என்னை ஒன்றும் செய்ய முடியாது..." என்று அவன் மனதைச் சமா தானப்படுத்தக் கூறினாள்.

ஸ்ரீரஞ்சன் அவள் கூறியதைக் கேட்டு அவள் முகம் பார்த்தான். அதிலிருந்து ஒன்றும் கண்டுபிடிக்க முடிய வில்லை. ஆனால் அவள் கூறிய வார்த்தைகளை மன துக்குள் பதிய வைத்துக் கொண்டான்.

நிர்வாகத்தில் பங்கெடுத்த முதல் நாளே திவ்யா அவள் வேலையைக் காட்ட ஆரம்பித்து விட்டாள்.

தான் பயிற்சிக்காகத் தான் இங்கே வந்து இருக் கிறோம் என்பதையே சில சமயங்களில் அவள் மறந்தும் போனாள்.

என்னமோ அந்தப் பள்ளியையே அவள் தன் தலை மேல் வைத்துத் தாங்குவது போல் ஒரு கர்வம் ஏற்பட்டது. அவள் செய்த அதிகாரத்தில் அங்கு பணிபுரிந்த ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களுக்கு அவளை அறவே பிடிக்காமல் போய் விட்டது.

இந்த மாதிரி ஒரு சூழ்நிலையில்தான் ஜனனியைத் திவ்யா படுத்தி எடுத்தாள்.

அன்றொரு நாள் ஜனனியைத் தன் அறைக்கு வந்து பார்க்குமாறு சொல்லி விட்டுப் போனாள் திவ்யா. கூப்பிட்ட மரியாதைக்கு அங்கு சென்ற ஜனனியைச் சுமார் அரை மணி நேரம் நிற்க வைத்துக் கேள்வி மேல் கேள்வியாகக் கேட்டாள்.

அவள் கேட்ட அத்தனை கேள்விக்கும் பொறுமை யாகப் பதில் சொன்ன ஜனனிக்கு ஒரு கட்டத்திற்கு மேல் நிற்க முடியாமல் தலை சுற்றி மயக்கமே வரும் போல் இருந்தது.

அங்கிருந்த மற்ற ஆசிரியர் இருவருக்கும் ஜனனியைப் பார்த்துப் பரிதாபமாக இருந்தது.

"கொஞ்சம் உடல் நலம் சரியில்லாமல் இருப்பது போல் இருக்கு. நான் போகலமா?" – ஜனனி தன்மை யாகத்தான் கேட்டாள்.

"உடம்பு சரியில்லாதவங்க எல்லாம் எதுக்கு வேலைக்கு வர்றீங்க?" நக்கலுடன் கேட்ட திவ்யா, "ஓ.கே. நீங்க இப்ப போகலாம்..." என்றதும், ஜனனி அவசரமாக அவள் அறையை விட்டு வெளியில் வந்தாள்.

அன்றிரவு காலைச் சுருக்கிக் கொண்டு படுத்திருந்த ஜனனியைக் கண்டதும் ஸ்ரீரஞ்சன் அவள் அருகில் வந்தான்.

"குட்டிம்மா... உடம்புக்கு என்ன செய்யுது?"

"கொஞ்சம் கால் வலிதான். வேற ஒன்றுமில்லை."

"எதுக்கும் டாக்டர் கிட்ட போயிட்டு வருவோமா?" கவலையுடன் கேட்டவனைப் பார்த்துச் சிரித்தவள்,

"அடுத்த செக்கப்புக்கு இன்னும் ஒன்றரை மாதம் இருக்கிறது. நீங்க படுங்க..." என்றவள்... சொல்லச் சொல்லக் கேட்காமல் அவள் காலைப் பிடித்து விட்டு அவள் தூங்கிய பின்பே அவன் தூங்கச் சென்றான்.



அடுத்த நாள் திவ்யா ஜனனியின் அறைக்கே வந்தாள். அங்கு வந்து ஜனனி கணினியில் அவள் செய்து வைத்திருந்த வேலைகளை எல்லாம் பார்வை யிடுகிறேன் பேர்வழி என்று அனைத்தையும் குழப்பிக் கடைசியில் எல்லாவற்றையும் அழித்து விட்டுச் சென்றாள்.

ஜனனிக்கு அழுகை முட்டிக் கொண்டு வந்தது. எத்தனை நாள் உழைப்பை ஒரு நிமிடத்தில் ஒன்றும் இல்லாததாகச் செய்து விட்டாளே. வேறு வழியின்றி முதலிலிருந்து தன் வேலையை ஆரம்பித்தாள்.

திவ்யா ஜனனிக்கு எதிராகச் செய்யும் ஒவ்வொரு செய்கையும் ஸ்ரீரஞ்சனுக்குத் தெரியாமல் பார்த்துக் கொண்டாள். அவன் பள்ளிக்கு வரும்போது நல்ல பிள்ளை போல் ஜனனியிடம் அன்பு இருப்பது போல் நடிப்பாள். அவன் சென்றவுடன் தான் அவள் விளை யாட்டு எல்லாம்.

அவளுக்குத் தெரியும், ஜனனி ஸ்ரீரஞ்சனிடம் எதையும் சொல்ல மாட்டாள் என்று. அதனால் தான் செய்யும் காரியம் ஸ்ரீரஞ்சன் காதுக்குப் போக வாய்ப்பு இல்லை என்று ஜனனியைப் படுத்தி எடுத்தாள்.

திவ்யா, யாருக்குத் தான் செய்யும் காரியம் தெரிய வராது என்று எண்ணி இறுமாப்புடன் இருந்தாளோ, அவனுக்கு வேறு ஒருவர் மூலம் திவ்யா ஜனனியை இழிவாக நடத்துவது பற்றித் தெரிய வந்தது.

அது தெரிந்ததும் அவன் ரத்தம் கொதித்தது.

யாரை மிரட்டுவது? இழிவாக நடத்துவது? மல்லிகா வுடன் திவ்யாவும் கூட்டு என்பது அவனுக்கு அந்தக் கணம் புரிந்தது. ஆனால் ஏன் எதற்கு என்றுதான் புரியவில்லை. ஒரு சிறிய பெண் தன்னை எந்த அளவுக்கு முட்டாளாக்கி இருக்கிறாள் என்று மனதில் நொந்தான்.

மனைவி என்று வரும்போது மாமன் மகள் என்ற உறவு பின்னுக்குத் தள்ளப்பட்டது.

திவ்யாவிடம் நேரிடையாகப் பேசி அவளின் செயலைக் கண்டிக்கலாம் என்றால் அவளிடம் பேசவே அவனுக்கு அருவருப்பாக இருந்தது. அதனால் சொல் லாமல் தன் கண்டிப்பைச் செயலில் காட்ட நினைத்தான்.

அடுத்து ஸ்ரீரஞ்சன் செய்யவிருந்த காரியம் மல்லிகாவின் குணத்தை வெளிக்காட்டியது.

அதைக் கண்ட அவன் மனம் தாய் என்ற சொல் லையே வெறுத்தது. "உன் இஷ்டத்திற்குத் திவ்யாவை வேலையில் இருந்து தூக்க முடியாது. பள்ளி நிர்வாகத்தில் நான்கு பேரும் இருக்கிறோம். அதனால் உன் மனம் போல் செயல்பட இது ஒன்றும் உன் அலுவலகம் கிடையாது. திவ்யா அங்குதான் வருவாள். உன்னால் முடிந்ததைப் பார்த்துக் கொள்..." என்பது போல் இருந்தது மல்லிகாவின் பேச்சு.

ஸ்ரீரஞ்சனே அம்மாவின் இந்தப் பேச்சை எதிர் பார்க்கவில்லை. ஏன் என்று காரணம் கேட்பார் என்று நினைத்தான். ஆனால் அவர் அப்படி எதுவும் கேட்காமல்



அவரே அதற்கு முடிவு எடுத்து விடப் போகிறார் என்பதை அவனால் ஜீரணிக்க முடியவில்லை.

ஒருகணம்தான் ஸ்ரீரஞ்சன் அப்படிச் செயலிழந்தாற் போல் நின்றது. மறுகணம் மனதில் வீராப்புக் கிளம்பியது.

'நானும் உங்கள் மகன்தான். உங்களுக்குத் தெரிந்த குறுக்கு வழிகள் எனக்கும் தெரியும். நான் என்ன செய்யப் போகிறேன் என்று பொறுத்திருந்து பாருங்க...' என்று மனதில் நினைத்தவன், அதற்கான காரியத்தில் இறங்கி வெற்றியும் பெற்றான். ஆனால் அந்த வெற்றியை நடைமுறைப் படுத்த முடியாமல் ஸ்ரீமதியின் திருமணம் குறுக்கே வந்து நின்றது.

## 19

"வாங்க... வாங்க..." என்று வந்தவர்களை வரவேற்றார்கள் தனசேகரும், மல்லிகாவும். ஸ்ரீமதியைப் பெண் பார்க்க வந்திருந்தனர். பெண் பார்க்க என்று சொல் வதை விட உறுதி பண்ணுவதற்கு என்று சொன்னால் பொருந்தும்.

ஏனெனில் மாப்பிள்ளை ராகவின் குடும்பமும் இவர்களும் தூரத்துச் சொந்தம். அதனால்தான் ராகவின் தந்தை ராமன் தங்கள் ஒரே மகன் ராகவிற்கு ஸ்ரீமதியைப் பெண் கேட்கவும், தனசேகரும் மல்லிகாவும் தங்கள் சம்மதத்தைத் தெரிவித்து விட்டனர்.

அந்தஸ்து என்று பார்க்கும்போது இருவருமே ஒரே மாதிரி என்பதால் மறுப்பதற்குப் பெரிதாகக் காரணம்

ஏதுமில்லை. வீட்டில் இருந்த மற்ற உறுப்பினர்களும் அவர்களை வரவேற்க அங்கே கலகலப்பான சூழ்நிலை உருவாகியது.

மல்லிகா வருங்காலச் சம்பந்தியம்மா சீதாவிடம் பேசிக் கொண்டிருந்தார். காவ்யாவும் திவ்யாவும் அலங் காரப் பொம்மைகளாய் உதட்டில் வருவித்துக் கொண்ட புன்னகையுடன் அமர்ந்திருந்தனர்.

ஜனனி மட்டுமே வந்தவர்களுக்கு உண்ண, குடிக்க எடுத்துக் கொடுக்கச் சொல்லிக் கொண்டும் மற்ற எல்லாத் தேவைகளையும் ஓடி ஓடிப் பார்த்துக் கொண்டும் இருந் தாள்.

ராகவின் தங்கை மகன் விஷ்வா ஜனனியிடம் பசை போட்ட மாதிரி ஒட்டிக் கொண்டான். ஜனனிக்குமே அவனைப் பார்க்கும்போது அவள் அண்ணன் மகன் ஆகாஷ் போல் இருந்தது. அதனால் அவனிடம் அன் பாகப் பேச ஆரம்பித்தாள். அவனுக்கு நொடிக்கு ஒரு தரம் ஏதாவது கேள்வி கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும். அங்கே எல்லோரும் அவரவர் வேலையில் ஈடுபட்டிருக்க... அவன் கண்களில் ஜனனியும், விதுவும்தான் விழுந் தார்கள்.

ஜனனியிடம் அவன் இயல்பாகக் கேள்வி கேட்க அவளும் இயல்பாகப் பதில் சொல்ல... சின்னவனுக்குப் பெரியவளை மிகவும் பிடித்து விட்டது.

அதன் பின் அவளுடனே சுற்றிக் கொண்டிருந்தான்.



இதையெல்லாம் ராகவின் தாய் சீதா பார்த்துக் கொண்டே இருந்தார். அவருக்கு முதல் பார்வையிலேயே ஜனனியை மிகவும் பிடித்து விட்டது. "உங்கள் மூத்த மருமகளா? யார் வீட்டுப் பெண்?" மல்லிகாவிடம் ஜனனி யின் தாய் வீட்டைப் பற்றி விசாரித்தார். அவருக்குத் தெரியாதே ஸ்ரீரஞ்சனின் திருமணம் காதல் திருமணம் என்று.

மல்லிகா ஆச்சரியமாகச் சீதாவின் முகத்தைப் பார்த்தார். இவருக்கு உண்மையிலேயே விஷயம் தெரி யாதா? இல்லை, தெரிந்து வைத்துக் கொண்டே வேண்டு மென்றே கேட்கிறாரா? ஏனெனில் ஸ்ரீரஞ்சன் காதல் திருமணம் சொந்தபந்தங்கள் கூடி நின்று ஆசிர்வதிக்கக் கோலாகலமாக நடந்த ஒன்று.

அதுவும் அவன் திருமணம் நேற்று நடந்த விசயமும் இல்லை, யாருக்கும் தெரியாமல் இருக்க. அவன் திருமணம் முடிந்து ஆறு வருடம் ஆகிறதே! அது எப்படிச் சீதாவிற்குத் தெரியாமல் போயிற்று?

ஆனால் சீதாவின் முகத்தைப் பார்க்கும்போது அதில் அறிந்து கொள்ளும் ஆர்வம்தான் இருந்தது. எந்தவிதக் கல்மிஷமும் அதில் இல்லை. இப்பொழுது மல்லிகாவிற்குத்தான் தர்மசங்கடமாகப் போய் விட்டது. காதல் திருமணம் என்று எப்படிச் சொல்வது? சொன் னாலும் அதை எப்படி இவர் எடுத்துக் கொள்வாரோ என்று யோசனையாக இருந்தது.

"உங்கள் மருமகள்தானே?"

மீண்டும் சீதா கேட்கவும் வேறு வழியின்றி மல்லிகா வாய் திறந்தார்.

"ஆமாம். என் மூத்த மருமகள்தான். ஆனால்... நம் இனம் இல்லை." சங்கடத்துடன் கூறியவர், "ரஞ்சியின் திருமணம் காதல் திருமணம்..." என்று முடித்தார்.

"அட... இதுக்குப் போய் ஏன் இவ்வளவு சங்கடப் படுறீங்க? உங்க மகன் என்ன கொலையா பண்ணி விட்டான்! காதல்தானே பண்ணினான். அதுவும் இந்தக் காலத்தில் இதெல்லாம் சகஜமான விஷயம்..." என்றவரை மல்லிகா திறந்த வாய் மூடாமல் பார்த்துக் கொண்டிருந் தார்.

பார்ப்பதற்குக் கொஞ்சம் பட்டிக்காடு போல் இருக்கும் சீதாவின் பேச்சில் இருந்த முற்போக்குச் சிந்தனை கண்டு கொஞ்சம் மலைத்துத்தான் போனார் மல்லிகா.

"அதானே பார்த்தேன். அவளுக்கும் நம்மளுக்கும் கொஞ்சமும் சம்பந்தமில்லை என்று..." இப்படிச் சொன்ன சீதாவை மல்லிகா ஒரு மார்க்கமாய்ப் பார்த்தார். இருந் தாலும் ஜனனி குடும்பத்துடன் ஒட்டவில்லை என்று சொன் னதும் அவருக்குக் குஷியாகிப் போனது.

"என்ன செய்ய? வசதியில் நம் அளவுக்கு இல்லை. ரஞ்சி காதலித்து விட்டதால் வேறு வழியின்றித் திருமணம் செய்து வைத்து விட்டோம்." -அங்கலாய்ப்பது போல் கூறினார் மல்லிகா.

"இதுக்கு நீங்க என்ன செய்ய முடியும்? திருமணம் என்பது ஆண்டவன் போட்ட முடிச்சு. அதே மாதிரிதான்



பெண் அமைவதும். உங்க மூத்த மருமகள் மாதிரி அழகான பெண் நம் இனத்திலேயே கிடையாது. அதிலும் அவள் நிறம் சுண்டினால் ரத்தம் வந்து விடும்போல் இருக்கிறது.

"அதை எல்லாம் விட அவள், அவள் அழகை உணராமல் எளிமையுடன் இருப்பது இன்னமும் அவள் அழகைக் கூட்டிக் காட்டுகிறது. அதைத்தான் நான் சொல்ல வந்தது. உங்கள் மகனின் தேர்வு உண்மை யிலேயே பிரமாதம். அவளின் அழகுக்கு முன்னால் வசதி ஒன்றும் ஒரு பெரிய விஷயம் இல்லையே..." என்றவர், ஸ்ரீரஞ்சனிடமும் தன் மனதில் நினைத்ததை மறைக்காமல் கூறினார்.

ஸ்ரீரஞ்சன் பெருமையுடன் ஜனனியைப் பார்த்தான். எல்லோரும் அவளையே பார்ப்பது கண்டு ஜனனியின் முகம் வெட்கத்தில் சிவந்தது.

அவளின் மனம் ஸ்ரீகாந்த் - காவ்யா திருமண நிகழ்வின்போது மல்லிகாவின் உறவினர்கள் அவளை இகழ்ச்சியாகப் பேசியதையும், இளக்காரமாக நடத்தியதை யும் ஒப்பிட்டுப் பார்த்தது. மனிதர்களில் நல்லவர்களும் இருக்கிறார்கள் போலும் என்று மனதில் நினைத்துக் கொண்டாள்.

அதை எல்லாம் விடக் கணவனுக்குத் தான் சிறிதும் பொருத்தமில்லாதவளோ என்று மனதில் இருந்த சிறு கவலை, கணவனின் வசதிக்கும் தன் வீட்டு வசதிக்கும் இருந்த மலைக்கும் மடுவுக்கும் இருந்த வித்தியாசத்தால்

ஏற்பட்ட தாழ்வு மனப்பான்மை எல்லாம் அவளையும் அறியாமல் அந்தக் கணம் விலகியது.

நல்லதை எடுத்துக் கூறவும் ஒருவர் வேண்டுமே. அதற்குத்தான் கடவுள் சீதாவை அனுப்பி வைத்தாரோ என்னவோ?

ராகவிற்கும், ஸ்ரீமதிக்கும் ஒருவரை ஒருவர் நன்கு பிடித்துப் போனதால் பெண் பார்க்கும் படலம் இனிதே நடந்து முடிந்தது. இன்னும் மூன்று மாதத்தில் திருமணம் என்று முடிவு செய்யப்பட்டது.

எல்லோரும் புறப்பட்டுச் சென்ற பின் ஸ்ரீரஞ்சன் மல்லிகாவையும் திவ்யாவையும் பேசுவதற்காக அங்கேயே இருக்கச் செய்தான். இருவருக்கும் மனதில் லேசாகத் திகில் பரவியது. ஏன், எதற்கு என்று ஜனனிக்குப் பதற்றமாக இருந்தது. தனசேகரும் அங்கேயேதான் இருந்தார். ஸ்ரீரஞ்சன் என்ன விஷயமாகப் பேசப் போகிறான் என்பது அவருக்கும் தெரியும்.

"அம்மா, நாளை முதல் திவ்யா வேலைக்கு வர வேண்டாம். அவளை நிர்வாகப் பொறுப்பிலிருந்து நீக்கி யாச்சு."

"அதெப்படி நீயே முடிவெடுக்க முடியும், ரஞ்சி?" அப்பொழுதும் கொஞ்சமும் அடங்காமல் கேட்டார் மல்லிகா.

ஸ்ரீரஞ்சனின் வார்த்தையில் திவ்யாவின் முகம் பயத்தில் வெளிறிப் போய் விட்டது.



"எப்படியென்றால்... பள்ளியின் நிர்வாகத்தில் அதிக ஷேர் வைத்திருப்பவன் என்ற காரணத்தால். இன்னும் சொல்லப் போனால்... நான் எடுக்கும் முடிவுகளுக்கு நீங்கள் கட்டுப்பட்டாக வேண்டிய நிர்பந்தத்தில் இருக்க வேண்டிய உங்கள் நிலைதான் காரணம். என் முடிவே இனி பள்ளியைப் பொறுத்தவரையில் இறுதி முடிவாக இருக்கும்."

"எப்படி... அப்பா, ஸ்ரீகாந்த் ஷேர்கள்..."

"அவர்கள் ஷேர்களை நான் வாங்கி விட்டேன். ஸ்ரீகாந்த்க்குப் பள்ளி நிர்வாகத்தில் இஷ்டமில்லை. அதனால் நல்ல விலை சொன்னதும் எனக்கு எழுதிக் கொடுத்து விட்டான். அப்பா நான் கேட்டதும் எந்தவிதக் கேள்வியும் இல்லாமல் எழுதிக் கொடுத்து விட்டார்."

நிதானமாகக் கூறிய மகனைத் திகைப்புடன் பார்த்தார் மல்லிகா.

இடைப்பட்ட இரு நாட்களில் எல்லா வேலைகளை யும் முடித்து விட்டுப் பேசும் மகனின் விஸ்வரூபம் அவர் பார்த்தறியாதது. உண்மையிலேயே முதல் முறையாக மகன் மீது பயம் வந்தது.

தன்னால் ஒன்றும் செய்ய முடியாமல் தன் பங்கை மகனுக்கு எழுதிக் கொடுத்துத் தன் கையைக் கட்டிப் போட்ட கணவனைக் கண்டு ஆத்திரமாக வந்தது. ஆனால் தனசேகரோ எனக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை என்பது போல் அங்கு இருந்த செய்தித்தாளைக் கையில் எடுத்துக் கொண்டு பாராதவர் போல் அமர்ந்து கொண்டார்.

"இது எல்லாவற்றையும் விட மிக முக்கியமானது நான் எல்லா ஷேர்ஸையும் என் மனைவி ஜனனி பெயரில் எழுதி வைத்து விட்டேன். பள்ளியை நிர்வாகம் செய்ய நம்மை விடத் திறமையான ஆள் அவள் மட்டுமே. ஏனெனில் பள்ளியைச் சேவை மனப்பான்மை உடைய வர்களால் மட்டுமே நன்கு நடத்த முடியும்."

உங்களுக்கு அந்த மனப்பான்மை கொஞ்சமும் கிடையாது என்று சொல்லாமல் சொன்ன மகனைக் கண்டு மல்லிகாவிற்கு ஆத்திரமாக வந்தது.

"இன்னொரு முக்கியமான விஷயம், பள்ளி நிர்வாகத்தில் நீங்க எடுக்கும் எந்த ஒரு முடிவும் ஜனனி சம்மதித்தால் மட்டுமே இனி செயல்படுத்த முடியும்..." என்று கூறியவன்,

"இதற்கு மேலும் நான் எடுத்த நடவடிக்கையை எதிர்க்க நினைத்தால் என்னிடம் திவ்யாவிற்கு எதிரான ஆதாரம் இருக்கிறது. அது என்ன என்பதைச் சொல்ல என் வாய் கூசுகிறது. என் மாமாவின் முகத்திற்காக இதோடு விட்டு விட்டேன். இனியும் இதுபோன்ற செயலை அனு மதிக்க முடியாது."

அவ்வளவுதான் பேச்சு வார்த்தை முடிந்தது என்பது போல் தன் அறைக்குச் செல்லத் திரும்பினான்.

"ஒரு நிமிஷம்..." என்ற மல்லிகா, உள்ளே சென்றவர் திரும்ப வரும்போது கையில் காகிதத்துடன் வந்தார்.



"இந்தா என் ஷேரையும் உனக்குக் கொடுத்து விட்டேன். நான் யாருக்கும் அடிமை கிடையாது. யாருக்கும் கட்டுப்பட்டிருக்க முடியாது. ஆனால் ஒன்று ரஞ்சி... எனக்கு நல்ல மரியாதை செலுத்தி விட்டாய்."

"ரொம்பச் சந்தோசம்..." என்று அதை வாங்கிக் கொண்டவன், "உங்கள் மரியாதையை நீங்கள்தான் காப் பாற்றி இருக்க வேண்டும். அதைத் தவற விட்டது நீங்கள்தான். நான் அல்ல..." என்று கூறியவன், திரும்பி யும் பாராமல் தன் அறைக்குச் செல்ல மாடிப் படியில் ஏறினான்.

அதுவரை திக் பிரமை பிடித்து நின்றிருந்த ஜனனி கணவன் செல்லவும்தான் சுய நினைவு அடைந்து அவன் பின் விரைந்தாள்.

திவ்யாவோ செய்வது அறியாமல் அப்படியே கல்லெனச் சமைந்து அமர்ந்திருந்தாள்.

ஸ்ரீரஞ்சனின் இந்தத் தடாலடிச் செயல் அவள் சற்றும் எதிர்பாராதது. அடுத்து என்ன என்று அவள் மனதில் கேள்வி எழுந்தது.

அவள் யோசிப்பதற்கு முன் மல்லிகாவின் கரம், அவள் தோள்மீது ஆதரவாக விழுந்தது. அதன் பின் அவள் எங்கே யோசிக்க?

அறைக்குள் நுழைந்த ஸ்ரீரஞ்சன் விதுவிற்குப் புதிர் விளையாட்டுகளை எடுத்துக் கொடுத்து விளையாடச் சொன்னான்.

"அப்பா, நீங்க ஹெல்ப் பண்ணுங்களேன்..."

"முதல்ல நீங்க செய்யுங்க. உங்களுக்கு முடிய வில்லை என்றால் நான் ஹெல்ப் பண்றேன். விது குட்டி பிரில்லியன்ட்தானே?"

"ஆமாம்... ஆமாம். நான் பிரில்லியன்ட்தான்."

"அப்ப நீங்களே ட்ரை பண்ணுங்க, பார்ப்போம்."

மகளை உற்சாகப்படுத்தியவன் அவள் விளை யாட்டில் மூழ்கும்வரை அருகில் இருந்தான். அதன் பின் அவன் பார்வை மனைவியின் புறம் திரும்பியது. அவள் கையைப் பற்றி அறையின் பக்கவாட்டில் இருந்த உடை மாற்றும் அறைக்கு ஜனனியை அழைத்துக் கொண்டு கதவைத் தாழிட்டான்.

"உனக்கு ரொம்பத் தியாகின்னு நினைப்போ?"

பதில் கூற முடியாமல் ஜனனி தலையைக் குனிந்து கொண்டாள்.

"பொறுமைக்கும் ஒரு எல்லைதான் இருக்கு. ஐந்தறிவு படைத்த ஜீவன் கூடத் தனக்கு யாராவது தீங்கு செய்ய நினைத்தால் அதைத் தைரியமாக எதிர்த்துப் போராடும். அதுக்கு உள்ள அறிவு கூடவா உனக்கு இல்லை. முதுகெலும்பு இல்லாத கோழை போல் திவ்யா விற்கு இப்படித்தான் பயப்படுவாயா?

"அவளுக்கு நிர்வாகத்தில் உரிமை இருக்கு என்றால், உனக்கும் அதே உரிமை நான் கொடுத்துத்



தானே இருந்தேன். அவள் என்ன செய்தாலும் வாங்கிக் கொண்டு பேசாமல் இருப்பாயா? நீ யார் என்னைக் கேட்க என்று பதிலுக்கு அவளைக் கேட்டிருக்க வேண்டாமா?"

கணவன் கேட்கக் கேட்கத் தான் முட்டாள்தனமாக நடந்து கொண்டதன் விளைவை எண்ணி மனதில் நொந் தாள் ஜனனி. எல்லாம் ஒரு கணம்தான். இவனுக்கு எப்படி இதெல்லாம் தெரியும் என்று கண்களை அகல விரித்து ஆச்சரியத்துடன் அவனைப் பார்த்தாள்.

"பார்த்து... பார்த்து... அப்படியே முட்டைக் கண்ணு ரெண்டும் வெளியே தெறிச்சு விழுந்திடப் போகுது." எரிச்சலுடன் சொன்னவன்,

"நீ சொல்லலைன்னா என்ன? நம்ம பிரின்சிபால் அங்கிள் வந்து எல்லாம் சொல்லிட்டார். அவர் வந்து சொல்வதற்கு முன்னேயே நான் நம் பள்ளியின் மற்ற எல்லா ஷேர்ஸையும் வாங்கி விட்டேன். அவர் சொல்லியதும்தான் உன் ரூமிலும், திவ்யா ரூமிலும் கண்காணிப்பு கேமிரா மாட்டிக் கண்காணித்தேன். அவர் சொல்லியது சரி என்று தெரிய வந்தது.

"எல்லாம் சரி. திவ்யாவிற்கு உன் மேல் ஏன் இத்தனை கோபம்? அம்மா சொல்லித்தான் அவள் அப்படி நடந்து கொள்கிறாள் என்றாலும் வேறு ஏதோ ஒன்று இருக்கிறது. அது என்னன்னு உனக்குத் தெரியுமா?" – ஜனனியிடம் வினவினான்.

அவள் என்னவென்று சொல்வாள்? திவ்யா உன்னைத் திருமணம் செய்ய விரும்புகிறாள் என்றா

சொல்ல முடியும். இதற்கே இத்தனை ருத்திர தாண்டவம் ஆடியவன், அதைக் கேள்விப்பட்டால் உண்டு இல்லை என்று பண்ணி விடுவான்.

ஸ்ரீமதி திருமணம் முடிவாகி யிருக்கும் இந்த நேரத்தில் இதைப் பற்றி அவனிடம் சொல்ல ஏதோ ஒன்று ஜனனியைத் தடுத்தது.

பதில் பேசாமல் அப்படியே நின்று கொண்டிருந்தாள்.

"ம்ஹூம். இப்பவும் வாயைத் திறக்க மாட்டியே. இதை எப்படிக் கண்டு பிடித்தேனோ... அப்படியே அதையும் கண்டுபிடிக்கிறேன்..." என்று சவாலாகக் கூறியவன், அவள் அருகே வந்து அவள் முகத்தை இரு கரங்களாலும் ஏந்தி, அவள் கண்ணுக்குள் பார்த்தவனாய், "ஏன் குட்டிம்மா இவ்வளவு கஷ்டத்திலும் என்னிடம் சொல்ல வேண்டும் என்று உனக்கு ஏன் தோணவில்லை? என் மேல் நீ வைத்த பிரியம் அவ்வளவுதானா? அந்த அளவிற்கா நான் அன்னியப்பட்டுப் போனேன்.

"இல்லை... இல்லை. உன் பிரியத்தில் எந்தத் தவறும் இல்லை. நான்தான் என் அன்பை உனக்குச் சரியாகப் புரிய வைக்கவில்லை. அப்படிப் புரிய வைத்திருந்தால் இத்தனை கஷ்டத்தையும் என்னிடம் சொல்லாமல் மறைப்பாயா? கஷ்டம் என்று வரும்போது பிரியமானவர்கள் நினைவுதான் முதலில் ஞாபகம் வர வேண்டும். ஆனால் உனக்கு என் நினைவு வரவே இல்லையா?"



வருத்தத்துடன் கூறியவனின் வேதனையைக் காணச் சகிக்காமல் அவனைத் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டாள் ஜனனி.

"அப்படி எல்லாம் இல்லை ஸ்ரீ..."

அவள் வாய் முணுமுணுத்தது.

கொஞ்ச நேரம்தான் அவள் அணைப்பில் இருந் தவன்... பின் தன்னை அவளிடமிருந்து பிரித்தெடுத்து அவளை நிமிர்ந்து பாராமல் விலகிப் போனான். அவனின் விலகல், பாராமுகம் ஏனோ அவளுக்கு அந்தச் சமயம் கோபத்தைக் கொடுக்கவில்லை. மாறாகச் சந்தோ ஷத்தைக் கொடுத்தது.

அன்றிரவு தன் மனதில் எழுந்த உணர்வுகளை எல்லாம் வார்த்தைகளாக்கி நாட்குறிப்பில் எழுதினாள்.

மனதில் உள்ள உணர்வுகள் எல்லாம் எழுத்து வடிவம் பெறப் பெற... அவள் மனம் தெளிவுற்றது.

இப்பொழுது அவள் மனதில் இருந்த தேவை யில்லாத சஞ்சலங்கள் மறைந்து அமைதி மட்டுமே குடி கொண்டது. கணவனைப் பற்றி மனம் பெருமிதம் அடைந்தது.

கணவன் நினைப்பு வந்தவுடன் அருகில் படுத்திருந்த அவனைத் திரும்பிப் பார்த்தாள். மனதில் இருந்த மொத்தக் காதலையும் கண்களில் தேக்கி அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். எவ்வளவு நேரம்

பார்த்துக் கொண்டிருந்தாளோ, அவளுக்கே தெரியாது. அவளையும் அறியாமல் தூக்கம் அவள் கண்களைத் தழுவியது.

நடு இரவில் உறக்கம் கலைந்து எழுந்த ஸ்ரீரஞ்சன், மனைவி அப்படியே அமர்ந்த வாக்கில் உறங்கி இருப் பதைப் பார்த்து அவளை நேராகப் படுக்க வைக்க முயன்றான். அப்பொழுது அவன் கையில் அந்த நாட் குறிப்பு அகப்பட்டது.

அதில் எழுதி இருந்ததைப் படித்தவன், "ஆமாம். இதுக்கெல்லாம் குறைச்சல் இல்லை..." என்று முணு முணுத்துக் கொண்டான்.

அவனின் முணுமுணுப்பிற்கு நேர்மாறாக அவன் முகம் புன்னகையில் விரிந்தது. மனைவியின் மனதில் ஏற்பட்ட மனமாற்றம் கண்டு அவனின் மனமும் மகிழ்ச்சி அடைந்தது. அவள் எழுதியதை எடுத்து முதலில் எழுதி யிருந்ததோடு சேர்த்துப் பத்திரப்படுத்தி வைத்தான்.

## 20

"ரஞ்சி, உன்னிடம் கொஞ்சம் பேச வேண்டும்."

அலுவலகத்தில் இருந்து அப்பொழுது தான் ஸ்ரீரஞ்சன் வீட்டிற்குள் நுழைந்திருந்தான். வந்ததுமே தனசேகர் அவனை அழைத்தார்.

தந்தையின் அழைப்புக்கிணங்கி வரவேற்பறைக்குச் சென்றவன், அப்பொழுதுதான் கவனித்தான் எல்லாக்



குடும்ப உறுப்பினர்களும் அங்கே குழுமியிருந்ததை. ஜனனியும் கூட அங்கு இருந்தாள்.

அவளின் முகமும் சரியில்லை. கலக்கத்துடன் இருப்பது போல் தோன்றியது. மறுபடியும் அவளுக்கு ஏதும் பிரச்சினையா என்று எண்ணியவன் அம்மாவைப் பார்த்தான். பாவம்... அவர் முகமும் ஏதோ யோசனையில் இருந்தது.

"என்ன விஷயம், சொல்லுங்கப்பா?"

"நம்ம மதியைப் பெண் பார்த்து விட்டுப் போனாங் களே..."

"ஆமாம். அதுக்கென்ன?"

"இப்போ ராமன், மதிக்குச் செய்ய வேண்டிய சீர்வரிசையை இன்னமும் கொஞ்சம் அதிகமாக எதிர் பார்க்கிறார் போல் தெரிகிறது. ராகவ் அவருக்கு ஒரே மகனாம். அதே போல் மதியும் நமக்கு ஒரே பெண்ணாம். அதனால் செய்ய வேண்டியவற்றைக் கூடுதலா சிறப்பா செஞ்சா நல்லா இருக்கும்னு சொல்றார்.

"எனக்கு என்ன சொல்றதுன்னு தெரியலை. அதான் நீ வந்ததும் கலந்து பேசிட்டுச் சொல்றேன்னு சொல்லிட் டேன். என்ன செய்யலாம் ரஞ்சி?"

இதைக் கேட்டதும் ஸ்ரீரஞ்சனுக்கு ஆத்திரமாக வந்தது. பெண் பார்த்து விட்டுப் போய் ஒரு மாதத்திற்கு மேலாகிறது. அப்பொழுது எல்லாம் பேசாமல் இருந்து விட்டு... இப்போது திருமண அழைப்பிதழ் அச்சிட்டு வரும்

நேரம் பார்த்து, இந்த மாதிரிப் பேசும் ராமன் மீது எரிச்சல் வந்தது, அவனுக்கு.

"நம் வீட்டுப் பெண்ணுக்கு என்ன செய்ய வேண்டும் என்பதை நாம்தான் முடிவு செய்ய வேண்டும். அவர் யார் சொல்வதற்கு? நாம் என்ன அப்படியேவா பெண்ணை அனுப்பி வைக்கப் போகிறோம். நம் அந்தஸ்திற்குத் தகுந்தவாறு செய்துதானே அனுப்பப் போகிறோம்.

"இந்த மாதிரி ஆசை உள்ள, சமயம் பார்த்துப் பேசும் இவர்கள் சம்பந்தம் நமக்குத் தேவையில்லப்பா... பெண்ணைப் பார்த்துதான் திருமணம் செய்ய வேண்டும். அவள் கொண்டு வரும் பொன் பார்த்து அல்ல... நம்ம மதிக்கு இதைவிட வேறு நல்ல மாப்பிள்ளை பார்க்கலாம். இவர்கள் வேண்டாம்."

திட்டவட்டமாகக் கூறினான் ஸ்ரீரஞ்சன்.

அவர்களின் வசதிக்கு என்னவெல்லாமோ செய்யத் திட்டமிட்டிருந்தனர். ஆனால் ராமனின் அதிக ஆசை அதை யெல்லாம் தடுத்து விட்டது.

தனசேகருக்கும் ஸ்ரீரஞ்சன் சொல்வது சரி என்று பட்டது.

"சரி... நீ சொல்வதுதான் சரி. இப்பவே இப்படிப் பேசுபவர்கள் திருமணத்திற்குப் பின் எப்படி எல்லாம் பேசுவார்களோ? நானே ராமனிடம் பேசி விடுகிறேன்."

சரி... அவ்வளவுதான் என்பது போல் ஸ்ரீரஞ்சன் எழுந்து தன் அறைக்குச் சென்றான்.



மற்றவர்களும் அங்கிருந்து செல்ல ஆரம்பித்தனர். யாருக்கும் என்ன சொல்வது என்று தெரியவில்லை.

ஜனனி ஸ்ரீமதியின் முகத்தையே தான் பார்த்துக் கொண்டிருந்தாள். விட்டால் அழுது விடுபவள் போல் இருந்த அவள் முகம் பார்க்கும்போது ஜனனிக்குப் பாவ மாக இருந்தது.

ஒரு பெண்ணின் மனம் ஒரு பெண்ணுக்குத்தானே தெரியும். இந்த ஒரு மாதக் காலத்தில் ராகவுடன் என்ன மாதிரியான ரகசியப் பேச்சுக்களை, எதிர்காலக் கனவு களைப் பகிர்ந்து கொண்டாளோ? பாவம் அவள்!

ஸ்ரீமதியைப் பார்த்து ஜனனி மனதுக்குள் சந்தோஷப்பட்டு இருக்கலாம். இல்லை, அவள் முகத்துக்கு நேரே இகழ்ந்து பேசியிருக்கலாம். அந்த அளவுக்கு ஜனனியை அவளும் தன் அம்மாவுடன் சேர்ந்து படுத்தி யிருக்காளே... ஆனால் அப்படி எல்லாம் ஜனனி செய்ய வில்லை.

மாறாக, அவள் இரக்கம் உள்ள மனது அவளுக் காக இரங்கியது. நேராக மாமனாரிடம் சென்றாள். நல்ல வேளை. அவர் அலுவலக அறையில் தனியாகத்தான் அமர்ந்திருந்தார். ஜனனியின் வருகை உணர்ந்து அவளைப் பார்த்துப் புன்னகைத்தார்.

ஆறு வருடங்களாக ஒரே வீட்டில் இருந்தாலும் மாமனாரும், மருமகளும் கலகலப்பாகப் பேசியது கிடையாது. தேவைக்கு ஓரிரு வார்த்தைகள் மட்டுமே

பரிமாறப்படும். சில சமயங்களில் அதுவுமில்லாமல் சிறு புன்னகை மட்டுமே.

"வாம்மா... என்ன விஷயம்?"

"மாமா..." – தயங்கினாள் ஜனனி.

"என்னிடம் எதுக்கும்மா தயக்கம்? என்ன விஷயம் சொல்லும்மா?"

"மாமா, அவசரப்பட்டு ராகவ் வீட்டிற்குப் பேச வேண்டாம்."

"பின்னே என்ன செய்ய? அவங்க கேட்டதைக் குடுக்கச் சொல்றியாம்மா?"

"கொடுத்தால்தான் என்ன மாமா? நமக்கு இருப்பதோ ஒரே பெண். அவளுக்குச் செய்யாமல் வேறு யாருக்குச் செய்யப் போறீங்க? வேண்டாம் என்றால் வேண்டாம் என்று சொல்ல இது ஒண்ணும் பிசினெஸ் டீல் இல்லை.

"இது ஒரு பெண்ணின் மனம் சம்பந்தப்பட்டது. நீங்களே முடிவெடுத்துப் பேசுறீங்களே... இதில் மதியின் மனதைப் பற்றி யாராவது சிந்தித்துப் பார்த்தீங்களா? பாவம் அவள்!"

தனசேகர் அப்படி ஒரு கோணத்தில் கொஞ்சமும் யோசிக்கவில்லை. இவ்வளவு ஏன், அவர் மனைவி கூட மகளின் பார்வையிலிருந்து அவருக்கு இதை உணர்த்த வில்லையே!

ஆனால், இந்தச் சின்னப் பெண் அதுவும் அண்ணி, தன் நாத்தனாரின் மனநிலையில் இருந்து



யோசித்திருக்கிறாள் என்றால் இவள் எப்படிப்பட்ட பெண்ணாக இருக்க வேண்டும்? இவள் மனநிலை எப்படிப் பட்டதாக இருக்க வேண்டும்? நிச்சயம் இவள் குணத்தால் மிகவும் உயர்ந்த பெண்.

சும்மாவா மகன் மனைவியைத் தலையில் தூக்கி வைத்து ஆடுகிறான் என்று எண்ணியவருக்கு முகத்தில் புன்னகை நிரம்பியது.

"சரிம்மா... இப்போ என்ன செய்யலாம்? நீயே சொல்லு."

"நான் அவரிடம் பேசும்வரை நீங்கள் ராகவ் வீட்டினருக்கு எதுவும் சொல்ல வேண்டாம்."

"சரிம்மா. உன் இஷ்டம் போல் செய்கிறேன்."

தனசேகரின் அறையிலிருந்து வெளியில் வந்த ஜனனி, தங்கள் அறைக்குச் சென்றாள்.

கட்டிலில் தலையில் கை வைத்தபடி படுத்திருந்த கணவனின் அருகில் சென்றாள் ஜனனி.

"ஸ்ரீ..."

அவன் கை மேல் தன் கையை வைத்தாள். மனைவியின் புறம் திரும்பியவன் புன்னகைத்தான்.

திவ்யாவினால் ஏற்பட்ட பிரச்சினையில் அவளிடம் கொஞ்சம் மனம் வருந்தினாலும், அவனாலும் அவளிடம் அதிக நேரம் பாராமுகம் காட்ட முடியவில்லை. அதுவும் ஜனனியே அவனிடம் கெஞ்சிக் கொஞ்சிப் பேசும்போது அவன் தன் பாராமுகத்தைக் கைவிட வேண்டியதாயிற்று.

சும்மாவே அவளிடம் மயங்கிப் போய் இருப்பவன் அவளின் கெஞ்சலிலும் கொஞ்சலிலும் இன்னமும் மயங்கித்தான் போனான் என்றால் மிகையாகாது.

"ஸ்ரீ... மதி விசயத்தில் இன்னும் கொஞ்சம் யோசித்துப் பேசி இருக்கலாமே! அவசரப்பட்டு இப்படி முடிவு எடுக்க வேண்டுமா?"

ஸ்ரீமதியின் விஷயம் என்றதும் ஸ்ரீரஞ்சன் எழுந்து அமர்ந்தான். அவன் முகம் கடினமுற்றது.

"என்ன செய்யச் சொல்ற? இப்பவே இவ்வளவு கேட்கிறவங்க கழுத்துல தாலி ஏறியதும் இன்னமும் என்னவெல்லாம் ஆட்டம் போடுவாங்களோ தெரியாது. இந்த மாதிரி அதிக ஆசை உள்ளவங்க நமக்கு வேண டாம். நம்ம வசதிக்கு இதை விட நல்ல வரன் பார்க்கலாம்."

"ஒருவேளை மதி ராகவை விரும்பினால்... கொஞ்சம் யோசித்துப் பாருங்க ஸ்ரீ... ஒரு பெண்ணின் மனம் பற்றிக் கவலை இல்லையா உங்களுக்கு? அதுவும் அவள் உங்கள் தங்கை. நமக்கும் ஒரு பெண் குழந்தை இருக் கிறாள். அதையும் ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்." ஜனனிக்குக் கொஞ்சம் கோபம் கூட வந்தது.

"கல்யாண மேடை வந்து கூட மாப்பிள்ளை, பெண் மாறும் காலம் இது. மதி அவள் மனதை மாற்றிக் கொண டால் முடிந்து போயிற்று. இதுக்குப் போய் உனக்கு ஏன் இவ்வளவு கோபம் வருது? நமக்கும் ஒரு பெண் குழந்தை இருக்குன்னு உனக்கு ஞாபகம் இருக்குதானே.



"இவ்வளவு செய்தால் நாளைக்கு என் பொண ணுக்கு என்ன மிஞ்சும்? தனக்குப் போகத்தான் தானம். இதை நீ கேள்விப்பட்டது இல்லையா? அப்படியும் மதிக்கு எல்லாம் செய்ய நான் ரெடிதான். அதையும் மீறி ஆசைப் படும் அவர்களை என்ன செய்வது சொல்லு. இதுக்கு மேல் இதில் பேசுவதற்கு வேறு ஒன்றும் இல்லை..." என்றவன் அவளுக்கு முதுகு காட்டிப் படுத்து விட்டான்.

கணவன் சொல்லிலும் அர்த்தம் இருப்பதாகப் பட்டது. ஆனாலும் கல்யாணம் நடக்க வேண்டுமானால் என்ன செய்ய என்று அவள் யோசிக்கும்போது அவள் நினைவில் பளிச்சிட்டது சீதாவின் முகமே!

"கங்கிராட்ஸ் மிஸ்டர் ஸ்ரீரஞ்சன்..." என்ற மருத்துவரைப் புரியாமல் பார்த்தான் ஸ்ரீரஞ்சன்.

ஜனனியை மாதாந்திரப் பரிசோதனைக்காக மகப்பேறு மருத்துவரிடம் அழைத்து வந்திருந்தான். தான் தந்தையான விஷயம் தனக்குத் தெரியுமே. இவர் எதற்கு வாழ்த்துச் சொல்கிறார் என்று புரியாமல் அமர்ந்திருந்தான்.

"என்ன மிஸ்டர்... நான் எதற்கு வாழ்த்து சொன னேன்னு புரியலையா? உங்கள் மனைவிக்கு ஸ்கேன் பண்ணிப் பார்த்ததில் இரட்டைக் குழந்தைகள் இருப்பது தெரிய வந்தது. இப்ப உங்களுக்குப் புரிந்திருக்கும்தானே?" மருத்துவர் நமட்டுச் சிரிப்புச் சிரித்தார்.

அப்பொழுது உடைகளைச் சரி செய்து கொண்டு வந்த ஜனனியைப் பரவசத்துடன் பார்த்தான் ஸ்ரீரஞ்சன். அவளுக்கும் விசயம் தெரிந்திருக்கும் போலும்.

முகத்தில் வெட்கச் சிவப்புப் பூச... கணவனின் பார்வையை எதிர் கொள்ள முடியாமல் தலையைக் குனிந்து கொண்டாள்.

"ரொம்ப சந்தோஷம் டாக்டர்..." என்றவன் மனைவி என்ன உணவு, மருந்துகள் சாப்பிட வேண்டும், மற்றும் இந்த மாதிரிக் காலத்தில் கடைப்பிடிக்க வேண்டிய பக்குவங்கள் எல்லாவற்றையும் மருத்துவரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டான். ஏற்கெனவே விதுவின் அனுபவம் இருந்தாலும் மனத் திருப்திக்காக ஆலோசனை கேட்டுக் கொண்டான்.

"ஹலோ, மிஸ்டர் ஸ்ரீரஞ்சன்... மனைவியைக் கண்ணாடிப் பாத்திரம் போல் கையாண்ட காலக்கெடு முடிந்து விட்டது. இனி மனைவியாகவும் கையாளலாம்." மருத்துவர் குறிப்பாய் உணர்த்திய செய்தி இருவருக்கும் புரிந்து இருவரின் முகமும் ரத்தச் சிவப்பு கொண்டது.

அடுத்து மனநல மருத்துவரிடமும் சென்று ஆலோசனை கேட்க வேண்டும் என்று ஸ்ரீரஞ்சன் வற்புறுத்தவே, அவரிடம் இருவரும் சென்றனர்.

அவரும் ஜனனியைப் பரிசோதித்து விட்டு அவளின் மனநிலை முன்பை விட நல்ல முன்னேற்றம் அடைந்திருப்பதைக் கூறினார். இதே போல் முன்னேற்றம் இருந்தால் இனி தன்னிடம் வரத் தேவையில்லை என்றும் கூறினார்.

"மிஸ்டர்... நீங்க உங்கள் மனைவியை நன்றாகப் பார்த்திருப்பது அவங்க மனநிலையில் ஏற்பட்டிருக்கிற



முன்னேற்றத்திலேயே தெரிகிறது. நீங்கள் அவர்களிடம் நடந்து கொள்வதைப் பார்க்கும்போது லவ், நல்ல கேரிங், நல்ல அண்டர்ஸ்டான்டிங் எல்லாம் தெரியுது. இதை எல்லாம் விட உங்கள் செயல் மூலம் அவங்களை உங்கள் மனைவி என்று உணரச் செய்ய வேண்டும்.

"நான் சொல்வது உங்களுக்குப் புரியும் என்று நினைக்கிறேன். சில சமயம் இது கூட மனக் காயத்திற்கு மருந்தாக மாறக் கூடும். ஆல் தி பெஸ்ட் ஸ்ரீரஞ்சன்..." என்று கை குலுக்கி விடை கொடுத்தார் அந்த மனநல மருத்துவர்.

இத்தனை விசயங்களையும் ஜனனி அறியாமல் தனியே ஸ்ரீரஞ்சனை அழைத்துக் கூறினார் மருத்துவர்.

காரில் வரும்போது கணவனின் வித்தியாசமான பார்வையில் முகம் சிவந்தாள் ஜனனி.

கடந்த மூன்று மாதங்களாக இல்லாத இந்தப் பார்வை அவளுக்கு ஒன்றும் புதிதானது இல்லை.

என்ன பேசுவது என்று தெரியாமல் தனக்குள் தவித்த மனதை அடக்கத் தெரியாமல் வலுக்கட்டாயமாக வெளிப்புறம் வேடிக்கை பார்க்க ஆரம்பித்தாள் ஜனனி.

ஸ்ரீரஞ்சனுக்கு அவளின் தவிப்பு கண்டு உதட்டில் புன்னகை விரிந்தது. ஜனனியின் கையை எடுத்துத் தன்னோடு சேர்த்து வைத்துக் கொண்டான்.

அவனின் செயலில் இன்னமும் முகம் சிவந்தாள்.

"ஈவினிங் விது ஸ்கூலில் இருந்து வந்ததும் அத்தையைப் பார்த்து விஷயத்தைச் சொல்லி விட்டு வருவோமா?"

வீட்டில் தங்கள் அறைக்குள் நுழைந்ததும் ஸ்ரீரஞ்சன் ஜனனியைப் பார்த்துக் கேட்டான்.

"ம்..." என்ற ஜனனியின் முகம் யோசனையில் இருந்தது. இவ்வளவு நேரம் நன்றாகத்தானே இருந்தாள். இப்பொழுது என்னவாயிற்று என்று யோசித்தவன், ஒற்றை விரல் கொண்டு அவள் முகம் நிமிர்த்தியவன்,

"என்ன குட்டிம்மா? என்ன யோசனை?" என்றான்.

"ஸ்ரீ... இந்த இரண்டு குழந்தைகளும் பெண் குழந்தைகளாக இருந்து விட்டால்..." - கலக்கத்துடன் கேட்டவள் முகத்தைப் பார்த்தவன் வாய் விட்டுச் சிரித்து விட்டான்.

"ஹேய், எந்தக் காலத்துல நீ இருக்க... ஆண் என்ன... பெண் என்ன? எந்தக் குழந்தையாக இருந் தாலும் சந்தோஷம்தான். அதுவும் என் குழந்தைதானே. இதில் வருத்தப்படுவதற்கு என்ன இருக்கு?"

அவனைப் புரியாமல் பார்த்தாள் ஜனனி. "உங்க ளுக்குக் கொஞ்சமும் வருத்தம் இல்லையா? ஒரு ஆண் குழந்தை கூட இல்லையே என்று வருத்தம் இல்லையா? உங்களுக்கு வாரிசு இல்லையேன்னு வருத்தம் இல்லையா?"

"ஆமாம், ஆமாம். பெரிய மன்னர் பரம்பரை பாரு. வாரிசு இல்லாமல் அழிந்து விடுவதற்கு..." என்று வாய் விட்டுச் சிரித்தவன், "பெண் குழந்தை என்றாலும் என் வாரிசுதானே. அவர்கள் உடம்பில் மட்டும் வேறு ரத்தமா ஓடுகிறது. என் ரத்தம்தானே ஓடுகிறது..." என்று கூறியவன்,



"குட்டிம்மா... எனக்கு மூன்றும் பெண் குழந்தை களாக இருந்தாலும் என் வாரிசு, தொழில் வாரிசு எல்லாம் இவர்கள்தான். இனி, இதுபோல் அபத்தமாகப் பேசாதே." - சிறு கண்டிப்புடன் கூறினான்.

இன்னமும் ஜனனி முகம் தெளியாதது கண்டு, "ஏய்... நல்ல நேரத்தில் எதற்குத் தேவையில்லாத பேச்சு. அப்படியே இது பெண் குழந்தைகளாய் இருந்தாலும் எனக்கு மூன்று தேவதைகள் மகளாகப் பிறந்திருக் கிறார்கள் என்று சந்தோசப்படுவேன். அதனால் தேவை யில்லாமல் கவலைப்படாதே!" என்று அவளைச் சமா தானப் படுத்தினான்.

ஜனனியும் அவன் வார்த்தையில் ஓரளவு சமாதானம் அடைந்தாள்.

"உங்க மகள்கள் மட்டும்தான் தேவதையா? அப்போ நான் யாரு?" - செல்லமாக முறுக்கிக் கொண்டாள் அவன் மனையாள்.

"ம்... நீ என் மகாராணி. இங்கே வீற்றிருக்கும் என் இதய ராணி..." என்று இதயத்தைக் காட்டிக் கிறக்கக் குரலில் கூறியவன், அவளை ஒட்டி அமர்ந்து கைகளை எடுத்துத் தன் கைகளுக்குள் வைத்துக் கொண்டு, "ஓ.கே. மேடம். நான் ரொம்பச் சந்தோஷமா இருக்கேன். உங்களுக்கு என்ன கிஃப்ட் வேணும்? கேளுங்க!" அதே கிறக்கக் குரலில் வினவினான்.

அதற்கு மனைவி சொன்ன பதில் கேட்டுப் புரியாமல் அவள் முகம் பார்த்தான்.

"மதிக்கு ராகவ் வீட்டில் கேட்டதைச் செய்து விடலாமே!" என்று கேட்டவளைக் கண்டு ஸ்ரீரஞ்சனுக்குக் கோபம் வராமல் புன்னகைதான் வந்தது.

என்றுமே தனக்காக மட்டும் இல்லாமல் மற்றவர்களுக்காகவும் யோசிக்கும் மனைவி கண்டு மனம் நிறைந்தது அவனுக்கு.

"நான் உனக்குத்தான் கேட்டேன். மதிக்கு இல்லை..." வேண்டுமென்றே பொய்க் கோபம் காட்டினான்.

"நான் சீதாம்மாவிடம் பேசி விட்டேன் அவர்களும் ராகவிடம் பேசி ராமன் அங்கிளிடம் பேசி விட்டார்கள். இருவரும் சேர்ந்து சத்தம் போட்டதில் அவரும் தான் பேசியது குறித்து வருத்தப்பட்டாராம். மாமாவிடம் பேசுவதாகச் சொன்னாராம். என்னதான் அவர்கள் சொன்னாலும் நம் பெண்ணிற்குச் செய்வதில் நாம் ஒன்றும் குறைந்து போய் விட மாட்டோமே..."

ஒரு நாளைக்குள் இத்தனை வேலைகள் பார்த்து முடித்திருக்கும் மனைவியை எண்ணிப் பிரமித்தான் ஸ்ரீரஞ்சன்.

"ப்ளீஸ், ஸ்ரீ... எனக்காக..." – தலையைச் சாய்த்துக் கெஞ்சும் மனைவியைப் பார்க்கும் பொழுது அவளுக்காக எது வேண்டுமென்றாலும் செய்யலாம் என்று தோன்றியது, அவனுக்கு. கணவனிடம் இருந்து பதில் வராததால் அவளே தொடர்ந்தாள்.



"இந்த மாதிரிச் சமயத்திலே என்ன கேட்டாலும் நிறைவேற்றி வைச்சுடணும். இல்லைன்னா..." என்ன சொல்வது என்று நாக்கைக் கடித்துக் கொண்டு கணவனைப் பார்த்தாள். அவளின் முக பாவனையில் அவன் மனம் உருகியது.

ஆனாலும் வெளிக்காட்டிக் கொள்ளாமல், "இல்லைன்னா..." கொஞ்சமும் மாறாத குரலில் கேட்டான்.

"சரி, நான் உனக்காகச் செஞ்சா... நீ எனக்கு என்ன செய்வ?" தன் சம்மதத்தைத் தெரிவிக்காமல் மனைவியிடம் பேரம் பேசினான்.

"என்ன கேட்டாலும் செய்றேன்."

"நான் என்ன கேட்டாலும் செய்வாயா?" – குரலில் தாபத்துடன் நெருங்கி அவள் அருகில் அமர்ந்தவனைக் கண்டு திகைப்புடன் பார்த்தாள்.

அவளின் பார்வையைக் கண்டு வாய் விட்டுச் சிரித்தவன், அவள் நெற்றியில் தன் தலையை முட்டி, "மக்கு மக்கு... என் தங்கைக்காக நீ இவ்வளவு யோசிக்கும் போது நான் யோசிக்க மாட்டேனா? உனக்காக... அதுவும் எப்பொழுதும் எதுவும் கேட்காத உனக்காக நான் செய்கிறேன். சரிதானே? எல்லாம் சரிதான். கணவனின் தங்கை யிடத்தில் காட்டும் அன்பைக் கொஞ்சமாவது இந்த அப்பாவிக் கணவனிடமும் காட்டலாமே?" என்று ஒற்றைப் புருவம் தூக்கிக் குறும்பாக வினவிய கணவனைக் கண்டு ஜனனி திகைத்துப் பார்த்தது என்னவோ ஒரு கணம்தான்.

மறுகணம் அவனைத் தன் அருகில் இழுத்து, அவன் முகம் முழுவதும் முத்த மழை பொழிந்தாள். ஜனனியின் திடீர் அன்புத் தாக்குதலில் திக்குமுக்காடித்தான் போனான் ஸ்ரீரஞ்சன்.

கொஞ்ச நேரம் அவளுக்கு ஒத்துழைத்தவன், அதன்பின் அவளைத் தன் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வந்தான். கொஞ்ச நேரம் கழித்து அவளை விடுவித்தவன், "அப்பா... என்ன ஒரு வேகம்..." என்று, அவள் முகம் பார்த்துக் கூறியவனின் பார்வை வீச்சுத் தாங்க முடியாமல், வெகு நாட்களுக்குப் பின் மனதில் நிறைந்த காதலுடன் கணவன் மார்பில் ஒன்றினாள் ஜனனி.

மனைவியின் மறைமுகச் சம்மதத்தை அழைப்பாக ஏற்றுக் கொண்டு, அவள் முகம் நோக்கிக் குனிந்தான் ஸ்ரீரஞ்சன். அங்கே மென்மையான காதல் நாடகம் அரங்கேறியது.

## 21

"எக்ஸ்க்யூஸ்மீ மேடம்... நாங்க உள்ளே வரலாமா?" லேசாகக் கதவைத் திறந்து கொண்டு, தலையை மட்டும் நீட்டி அனுமதி கேட்ட கணவனைக் கண்டு ஜனனிக்குச் சிரிப்பு வந்தது.

"ஹேய் ஸ்ரீ... வாங்க, வாங்க. என்ன இது... யாரோ மாதிரி பெர்மிஷன் எல்லாம் கேட்டுக்கிட்டு..." என்று உற்சாகமாகக் கணவனை வரவேற்றாள்.



நாங்க என்றானே... கூட யார் வந்திருக்கிறது என்று ஆர்வம் தோன்ற அவன் பின்னே பார்த்தாள். அவன் பின்னால் விதுஷிகா சமர்த்தாக வந்து கொண்டு இருந்தாள்.

"ஹேய் விது குட்டி... ஸ்கூல் போகாம இங்கே என்ன வந்து இருக்கீங்க?"

"அதை நான் சொல்றேன் மேடம்."

ஸ்ரீரஞ்சன் 'மேடம்' என்ற வார்த்தையில் அழுத்தம் கொடுத்தான்.

"என்ன ஸ்ரீ இது... புதுசா மேடம் சொல்றீங்க?"

"நீங்க இந்த ஸ்கூலோட கரெஸ்பாண்டென்ட். நான் என் பொண்ணுக்கு அட்மிஷன் கேட்டு வந்து இருக்கேன். அப்படின்னா உங்களை மரியாதை'யாகத் தானே கூப்பிடணும்," என்றவன்,

"என் பொண்ணை ஸ்கூலில் சேர்த்துக்க முடியுமா?"

அவளிடம் விண்ணப்பம் வேறு வைத்தான்.

ஜனனிதான் விதுவை இங்கே சேர்க்கச் சொல்லி அவனிடம் வேண்டுகோள் விடுத்து இருந்தாள்.

"ஸ்ரீ... நம்ம ஸ்கூல்ல நம்ம பொண்ணைச் சேர்க்காம, வேறு ஸ்கூலில் சேர்த்து இருப்பது, நம்மை நாமே தாழ்த்திக் கொள்வது போல் இருக்கு... ஏன் விதுவை நீங்க இங்கே சேர்க்கலை?"

"இங்கேயா...?" என்று சிறிது நேரம் யோசித்தவன்,

“இது குறைந்த கட்டணத்தில் இயங்கும் பள்ளி. அதிலும் சர்வீஸ் மைண்ட்ல கட்டப்பட்டது. இங்கு போய் விது எப்படி....?”

தயங்கியபடி நிறுத்தினான்.

ஜனனிக்கு அவன் என்ன சொல்ல வருகிறான் என்று புரிந்தது. இந்தப் பள்ளி ஏழை மாணவர்களுக்காகக் கட்டப்பட்டது.

அவன் எதிர்பார்க்கும் கல்வித் தரம் அங்கு இல்லை. மகள் நுனி நாக்கில் ஆங்கிலம் பேச வேண்டும். மேல் தட்டு நாகரிகம் கொஞ்சமும் குறையாமல் வளர வேண்டும். ஸ்ரீரஞ்சனின் எண்ணம் அறிந்து, ஜனனி கொதித்து எழுந்து விட்டாள்.

“ஸ்ரீ... உங்களிடம் இருந்து இந்த மாதிரியான வார்த்தையை நிச்சயம் நான் எதிர்பார்க்கவில்லை. பள்ளி ஒன்று மட்டுமே வேற்றுமை மறந்து ஒற்றுமை காணும் இடம். அதில் போய் நீங்கள் வேற்றுமை பார்ப்பது எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை.

“நம் பள்ளியில் கல்வித் தரம் இல்லை என்றால், நம் தரத்தை நாம்தான் உயர்த்த வேண்டும். நீங்கள் சொல்வது போல் சர்வீஸ் மைண்ட்ல கட்டியது என்றால், குறைந்த கட்டணத்தில் நல்ல கல்வித் தரத்தை நீங்கள் அளித்து இருக்க வேண்டும். அதை ஏன் நீங்கள் செய்யவில்லை?”

ஜனனி கேட்கும் கேள்விக்கு அவனிடம் பதில் இல்லை. தொழிலில் கவனம் செலுத்திய அளவு, அவன் இதில் கவனம் செலுத்தவில்லை. தாத்தா காலத்தில் எப்படி நடந்ததோ அதே மாதிரி தொடர்ந்து நடத்தினான். அதில் மாற்றம் கொண்டு வர வேண்டும் என்ற எண்ணம் அவனுக்குத் துளியும் ஏற்படவில்லை.



“ஓ.கே... ஓ.கே... கூல். நீ சொன்னபடி செய்து விடலாம். எனக்கு இது எல்லாம் தெரியாது. நீதான் சொல்லித் தரணும். நான் வளர்ந்த விதம் அப்படி. சாரி குட்டிம்மா...”

ஸ்ரீரஞ்சன் மனைவியிடம் பணிந்தான். அவள் சொல்லி அவன் எதையும் என்றுமே மறுத்தது இல்லை. அதிலும்... இதை அவன் மறுக்கப் போவது இல்லை. ஏனெனில் அவள் சொல்வதிலும் அர்த்தம் இருக்கிறதே.

“ஸ்ரீ... தப்பா எடுத்துக்காதீங்க. நீங்க சொன்னதைக் கேட்டதும் எனக்குக் கொஞ்சம் கோபம் வந்து விட்டது. நீங்கள் தரத்தை உயர்த்துவதால், இன்னொரு நன்மையும் இருக்கு. தரம் உயரும்போது, வசதியான வீட்டுப் பிள்ளைகளும் வந்து சேரலாம். ஏன், விதுவைப் பார்த்துக் கூட வந்து சேரலாம். இருப்பவர்களிடம் கட்டணம் வாங்கி, இல்லாதவர்களுக்கு இலவசமாகச் சேவை செய்யலாமே...”

கண்கள் விரிய ஆர்வமாகச் சொன்னவளைக் கண்டு, அவனுக்கும் ஆர்வம் வந்தது.

“நீ சொல்லி நான் செய்யாமல் இருப்பேனா?” என்று அவள் முன் நெற்றியில் தன் தலையால் முட்டிக் கொண்டே பதில் கூறினான்.

"ஆமாம்... இதை விதுவை ஸ்கூலில் சேர்ப்பதற்கு முன்னமே சொல்லி இருந்தால் நம் ஸ்கூலிலேயே சேர்த்து இருக்கலாமே?"

அவளிடம் கேள்வி கேட்டான்.

கணவனை முறைத்துப் பார்த்தாள் ஜனனி.

"நீங்கள் இப்படி ஒரு பள்ளி நடத்துவதாக என்னிடம் சொல்லவே இல்லையே!"

"ம்... நீ சொல்வதும் சரிதான்," என்றவன், அத்துடன் அதைப் பற்றிய பேச்சை முடித்துக் கொண்டான்.

ஆனால், பள்ளியின் கல்வித் தரத்தை உயர்த்து வதற்கு வேண்டிய ஏற்பாடுகளை எல்லாம் செய்தவன், மறந்தும் மகளை இங்கே சேர்ப்பது பற்றி அவளிடம் பேசவில்லை.

அவளும், அவனுக்கு விருப்பம் இல்லை போலும் என்று அதைப் பற்றிப் பேசுவதை விட்டு விட்டாள்.

ஆனால், இன்று இனிய அதிர்ச்சியாகக் கணவன் மகளைக் கூட்டிக் கொண்டு வந்தது மட்டுமல்லாமல், பள்ளியில் சேர்க்க வேறு வந்து இருப்பது கண்டு அவளுக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது.

ஸ்ரீரஞ்சனின் இந்தச் செயல் மூலம் நிம்மதி அடைந்தாள். ஸ்ரீ நல்லவன் என்பது அவளுக்குப் புரிந்தது. நல்லதை யார் சொன்னாலும் கேட்டுக் கொள் பவன் என்று அப்பொழுது அவளுக்குத் தெரிந்தது.



"ம்ஹூம்... அப்படியா? அட்மிஷன் விஷயம் எல்லாம் நீங்க பிரின்சிபால் கிட்டே தான் பேசணும். என்னிடம் டொனேஷன் விஷயம் வேண்டுமென்றால் பேசலாம்."

நிர்வாகியாகப் பதில் கூறினாள்.

"எவ்வளவு டொனேஷன் கொடுப்பீங்க மிஸ்டர்...?"

கேட்கும்போதே அவளுக்குச் சிரிப்பு வந்தது.

"நீங்க கேட்டா என் சொத்தையே கொடுக்கத் தயாராக இருக்கேன். இதில் டொனேஷன் கொடுக்க மாட்டேனா என்ன?"

"ஸ்ரீ..."

ஜனனிக்கு அதற்கு மேல் சிரிப்பை அடக்க முடிய வில்லை. வாய் விட்டுச் சிரித்தாள். அம்மாவின் சிரிப்பு கண்டு, விதுவும் இணைந்து நகைத்தாள். அவர்களுடன் ஸ்ரீரஞ்சனும் சேர்ந்து கொண்டான்.

"தேங்க்ஸ் ஸ்ரீ..." அவன் கை மேல் கை வைத்துத் தன் நன்றியைத் தெரிவித்தாள்.

"ஹேய்... தேங்க்ஸ் எல்லாம் எதுக்கு...?" என்று அவளின் கையைச் சற்று அழுத்தி ஆறுதல் படுத்தியவன், "வாங்க மேடம்... பிரின்சிபால் கிட்டே பேசி விட்டு வரு வோம்." பேச்சை மாற்றினான்.

மூவரும் தலைமை ஆசிரியர் அறைக்குச் சென்று விதுவைப் பள்ளியில் சேர்ப்பதற்கான எல்லா ஆயத்தங் களையும் செய்து விட்டு வெளியில் வந்தனர்.

வெளியில் வந்த ஸ்ரீரஞ்சன், ஜனனியைத் தன்னுடன் வருமாறு அழைத்தான். அவன் அழைத்து வந்த இடத்தைப் பார்த்ததும், ஜனனியின் கண்கள் ஆச்சரியத்தில் விரிந்தன.

அவளின் கனவை அவள் கணவன் நனவாக்கி வைத்து இருந்தான். ஒரு நாள் பேச்சு வாக்கில் அவனிடம் சொல்லிக் கொண்டு இருந்தாள்.

"ஸ்ரீ... நம் ஊரில் பிள்ளைகளுக்குக் கம்ப்யூட்டர் கிளாஸ் என்பது கோடை விடுமுறையில் படிப்பது போன்று தான் உள்ளது. அப்படி இல்லை என்றால் கோச்சிங் சென்டரில் பெரிய பிள்ளைகளுக்கு மட்டுமே சொல்லிக் கொடுக்கிறார்கள்.

"என்னுடைய எய்ம் ஐந்து வயதில் இருந்து பதினைந்து வயதுப் பிள்ளைகள் மட்டுமே. அவரவர் களுக்கு அவரவர் வயதுக்கு ஏற்றபடி கணினியில் பயிற்சி கொடுக்க வேண்டும். அதற்கு சர்டிபிகேட்ஸ், மெடல் மற்றும் பிரைஸ் கப் என்று கொடுத்து ஊக்குவிக்க வேண்டும்.

"கம்ப்யூட்டரில் ஓரளவு தேர்ச்சி பெற்றவர்களைக் கொண்டு நாம் முதலில் நடத்தலாம். பிறகு தேவைப் பட்டால் அவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கலாம். ஒரு ஆசிரியருக்கு இரு மாணவர்கள் என்று வகுப்பு எடுத்தால்தான் மாணவர்களிடம் தனிக் கவனம் செலுத்த முடியும். ஒவ்வொரு மாணவருக்கும் ஒரு மணி நேரம் வகுப்பு எனும்போது சொல்லிக் கொடுப்பதிலும் பிரச்சினை இருக்காது.



"சில பெற்றோர் கோச்சிங் சென்டருக்கு அனுப்பு வதில், பாதுகாப்புக் கருதித் தயக்கம் காண்பிப்பார்கள். நாம் நம் பள்ளியின் சார்பில் நடத்தும்போது பாதுகாப்பைப் பற்றிக் கவலைப்படாமல் தங்கள் பிள்ளைகளை அனுப்பி வைப்பார்கள். அப்படியே நம் ஆசிரமத்தில் உள்ள பிள்ளைகள் மற்றும் வசதியில்லாத பிள்ளைகளுக்கு, இலவசமாகச் சொல்லிக் கொடுக்கலாம். என்ன ஸ்ரீ... நான் சொல்வது சரிதானே?"

ஜனனி சொல்வதைக் கேட்டவன், "நீ எப்போது தவறாகச் சொல்லி இருக்கிறாய்?" மனதில் மனைவியைப் பற்றிப் பெருமையாக எண்ணிக் கொண்டே கூறினான்.

அவள் கூறியது போல், கணினிப் பயிற்சி நிலையத்தைத்தான் அமைத்து இருந்தான். ஒவ்வொரு கணினிக்கும் தனித்தனித் தடுப்பு அமைத்து, அதில் ஒவ்வொன்றிலும் ஒரு ஆசிரியரும், இரு மாணவர்கள் அமர்வதற்கு வசதியாக நாற்காலிகளையும் போட்டு அவன் அமைத்து இருந்த விதம், அவனின் செயல் நேர்த்தியைச் சொல்லாமல் சொல்லியது.

சந்தோஷ மிகுதியில் ஜனனி, ஸ்ரீரஞ்சனின் உயரத் திற்கு எம்பி, அவன் கன்னத்தில் தன் இதழைப் பதித்தாள். அவன் மயங்குவது போல் பாவனை செய்தான்.

அதற்குள் விதுவும், "நானும் அப்பாவுக்குக் கிஸ் கொடுப்பேன்..." என்று, தன் தந்தையைத் தூக்கச் சொல்லி, அவன் கன்னத்தில் தன் பட்டு இதழைப் பதித்தாள்.

ஜனனி, உணர்ச்சிவசப்பட்டவளாய் ஸ்ரீரஞ்சனின் தோளில் சாய்ந்தவள், "தேங்க்ஸ் ஸ்ரீ. இன்னைக்கு அதிர்ச்சி மேல் அதிர்ச்சியாகத் தர்றீங்க. ஆனால், எல்லாமே இன்ப அதிர்ச்சி..." என்று கண் கலங்கியவளைத் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டான் ஸ்ரீரஞ்சன்.

மனைவியின் கனவை நனவாக்கும் கணவன் எத்தனை பேருக்குக் கிடைக்கும்? தன்னிடம் அன்பு மட்டும் செலுத்தாமல், தன் மன உணர்வுகளுக்கும் மதிப்பு அளிக்கும் கணவனைக் கண்டு, ஜனனியின் மனம் அவனுக்காக மெழுகாய் உருகியது.

"குட்டிம்மா... நீ ரெஸ்ட் எடு. நான் ஊருக்கு வேண்டியதை பேக் பண்றேன்."

ஸ்ரீரஞ்சன், ஜனனியை வலுக்கட்டாயமாக ஓய்வு எடுக்கச் சொன்னான். இன்று அலைச்சல் மிகுதியாக இருந்ததாலோ என்னமோ, ஜனனியும் கொஞ்சம் சோர்வாகத்தான் இருந்தாள். இருந்தாலும் கணவனை வேலை வாங்குவதில் அவளுக்கு விருப்பம் இல்லை.

"இல்லை ஸ்ரீ... எது எது எடுத்து வைக்கணும்னு உங்களுக்குத் தெரியாது. நானே எடுத்து வைக்கிறேன்," என்றவளைக் கட்டாயப்படுத்திப் படுக்க வைத்தவன்,

"உனக்கு உடம்பு சரியில்லை என்றால், நாம் வேண்டுமானால் போகாமல் இங்கே இருப்போமா?" அவளின் முகம் பார்த்துக் கனிவாகக் கேட்டான். அவனின் கனிவில் அவள் மனமும் கனிந்தது.



"வேண்டாம் ஸ்ரீ. நாளைக்கு மதியின் திருமண அழைப்பிதழைக் குல தெய்வம் கோயிலில் வைத்துக் கும்பிடுவதற்காகப் போகிறோம். அந்தச் சமயம் நாம் போகாமல் இருப்பது நல்லதல்ல. இந்த மாதிரிச் சாக்கு வைத்துத்தான் நாமும் அந்தப் பக்கம் எட்டிப் பார்க்க முடியும். மற்ற நேரம் என்றால் நீங்களும் வேலை இருக்கு... வர மாட்டேன்னு சொல்வீங்க. நாம போயிட்டு வந்தால் நமக்கும் நல்லதுதானே!"

"ம்ம்... நீ சொல்றதை நான் கேட்கணும் என்றால், நான் சொல்றதை நீ கேட்க வேண்டும்," என்றவன், அவளை உறங்க வைத்த பின்தான் பிரயாணத்திற்குத் தேவையானவற்றை எடுத்து வைக்க ஆரம்பித்தான்.

அவனுக்குத் தெரிந்ததை எடுத்து வைத்தவன், அப்படி ஏதும் விட்டுப் போய் இருந்தால், அங்கே போய் வாங்கிக் கொள்ளலாம் என்று நினைத்துக் கொண்டான். கடைசியாக ஜனனியின் உடைகளை எடுத்து வைத்தான். அவளுக்கு எந்த மாதிரிப் புடவை கட்டினால் அழகாக இருப்பாள் என்பது அவனுக்குத் தெரியுமாதலால், அவனுக்குப் பிடித்தமானவற்றை எடுத்து வைத்தான்.

அப்படி எடுக்கும் போதுதான், அவன் கண்ணில் அந்தப் புகைப்படம் தென்பட்டது.

எடுத்துப் பார்த்தவன் கண்கள், கோபத்தில் சிவந்தன.

அதை எடுத்துத் தன்னுடைய மேஜை இழுப்பறையில் வைத்துப் பூட்டினான்.

மறுநாள் எல்லோரும் புறப்படும் சமயம் அம்மாவையும், திவ்யாவையும் பார்த்த ஸ்ரீரஞ்சன், ஆத்திரத்தில் பல்லைக் கடித்தான்.

ஆனால், எதையும் காட்டிக் கொள்ளவோ, கோபப்படவோ இது ஏற்ற சமயம் அல்ல என்று அவன் அறிவு அறிவுறுத்தியதாலோ என்னவோ, தன் கோபத்தை மனதுக்குள் பூட்டி வைத்தான்.

ஆனால், மனது எரிமலையாய்ப் புகைந்து கொண்டு இருந்தது.

எப்பொழுது வெடிக்குமோ தெரியாது.

"விது... என் கூட வர்றியா?" என்று ஸ்ரீமதி, விதுவைத் தன்னோடு அழைத்தவள்,

"அண்ணி... விது என் கூட இருக்கட்டுமா?" ஜனனியிடம் வினவினாள்.

"ம்... சரி..." என்று தன் சம்மதத்தைத் தெரிவித்தாள் ஜனனி.

தடைப்பெற்று இருந்த திருமணம் மீண்டும் நடப்பதைப் பார்த்த மதி, தன் தந்தையிடம் வந்து, அவர் கையைப் பிடித்துக் கண் கலங்கினாள்.

அப்பொழுது தனசேகர், இதற்குக் காரணம் ஜனனி என்று கூறியவர், நடந்தது எல்லாவற்றையும் மதியிடம் கூறினார். அந்தக் கணம் மதிக்குத் தன்னைக் குறித்து மிகவும் கேவலமாக இருந்தது.



தான் எவ்வளவு கெடுதல் நினைத்தாலும், தனக்கு நல்லது நினைக்கும் ஜனனியின் உயர்ந்த மனது கண்டு வெட்கினாள்.

உடனே தன் தவறைச் சரி செய்து கொள்ளவும் அவள் தயங்கவில்லை. ஜனனியிடம் சென்று மன்னிப்பும் கேட்டு விட்டாள். செய்த தவறை உணர்ந்து மன்னிப்புக் கேட்கும் மதியை, ஜனனியால் மன்னிக்காமல் இருக்க முடியுமா என்ன? அவளின் இளகிய மனது, மதியை உடனே மன்னித்தது.

இதை எல்லாம் கேள்விப்பட்ட மல்லிகாவோ, கொஞ்சமும் தன் மனதை மாற்றிக் கொள்ளவில்லை.

"இவள் என்ன... இவ அப்பன் வீட்டுச் சொத்தை எடுத்தா என் மகளுக்குக் கொடுத்தாள்? நான் உடனே போய் இவள் காலில் விழ வேண்டுமா என்ன? இவளுக்கு எதுக்கு நன்றி சொல்லணும்? என் மாமனாரோட சொத்தில் என் மகளுக்கும் உரிமை இருக்குது. அதை எடுத்துக் கொடுக்க இவள் யார்? சொல்லப் போனால், செய்ய முடியாதுன்னு சொல்வதற்கு என் மகனுக்குக் கூட உரிமை கிடையாது."

வீண் ஜம்பம் பேசிய அம்மாவைத் திருத்த முடியாது என்று எண்ணிய மதி, அதற்கு மேல் ஒன்றும் பேசவில்லை.

ஸ்ரீமதிக்கு, ஜனனியைப் பற்றிப் பெரிதாக அபிப்பிராய பேதம் ஒன்றும் கிடையாது. தன் அம்மாவுக்குப்

பிடிக்காது... அதனால் அவளுக்குப் பிடிக்காது... அவ்வளவுதான்.

ஆனால், இப்பொழுது ராகவுடன் திருமணப் பேச்சு வார்த்தை ஆரம்பித்ததில் இருந்து, அதுவும் அவனை மனதார நேசித்ததில் இருந்து, அம்மாவின் ஜனனிக்கு எதிரான போக்கு, அவளுக்குக் கொஞ்சமும் பிடிக்க வில்லை. என்னதான் இருந்தாலும் அவளும் ஒரு பெண்தானே!

இப்பொழுது ஜனனியிடத்தில் மதிப்பும் மரியாதையும் வந்த பின், அம்மாவின் செயல் மிகவும் அற்பமாகத் தோன்றியது அவளுக்கு.

அண்ணனிடம் அம்மா மற்றும் திவ்யாவின் எண்ணத்தைச் சொல்லி விடலாமா என்று யோசித்த மதிக்குச் சொல்லத்தான் வாய் வரவில்லை. திவ்யாவைப் பற்றிச் சொல்வதற்கு அவளுக்கு ஒன்றும் இல்லை. ஆனால், அம்மாவைப் பற்றிச் சொல்வதற்கு அவள் மனம் இடம் கொடுக்கவில்லை.

அம்மாவின் தரத்தைத் தான் தாழ்த்துவதில் அவளுக்குச் சிறிதும் விருப்பம் இல்லை. இன்னும் திருந்தாமல் அவர்களே அவர்கள் தரத்தைத் தாழ்த்திக் கொண்டால், அவளாலும் ஒன்றும் செய்ய முடியாது. அண்ணன் புத்திசாலி... எல்லாவற்றையும் புரிந்து கொள்வான். அதிலும் மனைவியிடத்தில் மிகுந்த அன்பு உடையவன். இவர்கள் பேச்சைக் கேட்டு, அண்ணிக்குத் தீங்கு இழைக்க மாட்டான் என்ற நம்பிக்கையால், அண்ணனிடம் அவள் இது பற்றி மூச்சு விடவில்லை.



ஜனனி, கணவன் முகத்தைத் திரும்பித் திரும்பிப் பார்த்தாள். இவர்கள் வாகனத்தில் இவர்கள் இருவர் மட்டுமே. கணவன் முகம் இறுக ஏதோ யோசனையில் இருப்பதைப் பார்த்தவள்,

"ஸ்ரீ... ஏன் ஒரு மாதிரி இருக்கீங்க?" கவலையுடன் கேட்டாள்.

ஸ்ரீரஞ்சன், தன் யோசனையில் இருந்து கலைந்தவன், திரும்பி மனைவி முகம் பார்த்தான்.

அவளின் கண்களில் கலக்கத்தைக் கண்டவன், தன் யோசனையைப் புறம் தள்ளி விட்டு அவளைப் பார்த்துப் புன்னகைத்தான்.

"ஒன்றும் இல்லை... சும்மா தொழில் யோசனை..." என்றவன், அவள் தோள் மேல் கை போட்டுத் தன்னருகில் இழுத்துக் கொண்டான். ஜனனியும் மனம் அமைதி உற்றவளாய், கணவனின் தோள் சாய்ந்தாள்.

ஸ்ரீரஞ்சன் மனம் ஜனனிக்காகப் பரிதாபப்பட்டது. அவளின் மென்மையான மனதைப் புரிந்து வைத்துக் கொண்டு தாயும், திவ்யாவும் விளையாடி இருப்பது கண்டு, அவனுக்கு ஆத்திரம் வந்தது. அந்தப் புகைப்படம் எந்த மாதிரிச் சூழ்நிலையில் எடுத்தது என்று அவனுக்குத் தெரியும்.

இவ்வளவு ஏன்... அம்மாவிற்கும் திவ்யாவிற்குமே தெரியுமே! எல்லாம் தெரிந்து இருந்தும் தன் வாழ்க்கை யில் விளையாடிய இருவரையும் மன்னிக்க அவன் தயாராக இல்லை.

இந்த மாதிரி ஒரு புகைப்படத்தை எந்த மனைவியிடம் காட்டினாலும், அவள் நிச்சயம் கோபப்படத்தான் செய்வாள். ஆனால், தன் மனைவி அவனிடம் கோபப் படாமல், தன்னையே வதைத்துக் கொண்டது கண்டு உள்ளம் நொந்தான்.

அவன்பால் எவ்வளவு அன்பு, காதல் இருந்து இருந்தால், இப்படித் தன்னை வருத்தி இருக்க முடியும்? மனைவியின் மன நிலையைக் குழப்பிய அவர்களை என்னவெல்லாமோ செய்யத் துடித்த மனதை முயன்று அடக்கிக் கொண்டான்.

அம்மாவிடமும், திவ்யாவிடமும் பேசுவதற்கு முன், ஜனனியிடம் இதைப் பற்றிப் பேச அவனுக்கு விருப்பமில்லை. அவர்களிடம் பேசி, இந்த விஷயத்திற்கு முற்றுப் புள்ளி வைத்த பின்தான் மனைவியிடம் பேச வேண்டும் என்று நினைத்தான்.

யோசித்துக் கொண்டிருந்தவன், மனதிற்குள் ஒரு முடிவு எடுத்தான். அதன் பிறகே அவன் மனம் தெளிந்தது.

இரவு தாமதமாகத்தான் சொந்த ஊருக்கு வந்து சேர்ந்தனர்.

வரும் வழியில் உணவை முடித்துக் கொண்டு வந்து விட்டதால், அனைவரும் நேரே உறங்கச் சென்றனர். நடு இரவில் ஜனனிக்கு விழிப்பு வந்தது. எழுந்து உட்கார்ந்தவள் காதில், ஆஷிஷ் அழும் குரல் கேட்டது. பக்கத்தில் படுத்து இருந்த கணவனைப் பார்த்தாள். அவன் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டு இருந்தான்.



அவனை எழுப்ப மனம் இல்லாமல், அறையின் கதவைத் திறந்து கொண்டு வெளியில் சென்றாள். அங்கு காவ்யா, அழும் ஆஷிஷை எப்படிச் சமாதானப்படுத்துவது என்று தெரியாமல் விழித்துக் கொண்டு இருந்தாள்.

பக்கத்தில் ஆஷிஷைப் பார்த்துக் கொள்ளும் பெண்ணும் என்ன செய்வது என்று தெரியாமல் கையைப் பிசைந்து கொண்டு, அருகில் நின்று கொண்டு இருந்தாள்.

"ஏன் காவ்யா, ஆஷிஷ் இப்படி அழுகிறான்?"

"தெரியலை அக்கா... திடீரென்று எழுந்து அழுகிறான். கிரேப் வாட்டர் கொடுத்தும் அழறதை நிறுத்தலை."

காவ்யாவுக்கும் எதுவும் புரியவில்லை. அவள் ஜனனியிடம் இது நாள் வரை பேசியது இல்லை.

மகன் அழும் குரல் கேட்டு யாரும் வராத போது, ஜனனி வந்தது அவளுக்குக் கொஞ்சம் நிம்மதியாக இருந்தது. அவள் கணவனோ, அழும் மகனை வெளியில் தூக்கிக் கொண்டு போ என்று சொல்லி விட்டு, விட்ட தூக்கத்தைத் தொடர்ந்தான்.

"அவனைக் கொஞ்சம் கொடு..." என்றவள், ஆஷிஷைக் கை நீட்டி வாங்கினாள். அவனின் உடையைக் கொஞ்சம் தளர்த்தி விட்டாள். இரவு உடைதான் போட்டு இருந்தான்.

இருந்தாலும் உடையைத் தளர்த்தியதும், கொஞ்சம் நேரம் அழாமல் இருந்தான். அதன் பின் மீண்டும் அழ ஆரம்பித்தான்.

"காவ்யா... ஒரு வேளை சூடு பிடித்து இருக்கலாம்... உன்னிடம் எலெக்ட்ரால் பவுடர் இருக்கா...?"

"இல்லையே...!"

காவ்யா மறற மருந்துகளை எடுத்து வைத்து இருந்தாள். இதைக் கொண்டு வரவில்லை. ஆஷிஷை அவள் இவ்வளவு தூரம் வெளியில் கூட்டிக் கொண்டு வந்ததில்லை.

அவன் பிறந்த பின் முதன் முறையாக இப்பொழுது தான் சொந்த ஊருக்கே வந்து இருக்கிறாள்.

"கொஞ்சம் இவனைப் பிடி... என்னிடம் இருக்கும், எடுத்து வருகிறேன்..." என்ற ஜனனி, தன்னறைக்குச் சென்றாள். தன் குழந்தைக்காகப் பரிதவிக்கும் ஜனனியை நன்றியுடன் பார்த்தாள் காவ்யா.

அறையில் விளக்கு எரிந்ததில் எழுந்த ஸ்ரீரஞ்சன், "இந்த நேரத்தில் என்ன தேடுற?" தூக்கக் கலக்கத்தில் கேட்டான்.

"ஆஷிஷ் சூடு பிடித்து அழறான்னு நினைக்கிறேன்... அதான் விதுவுக்காக வைத்து இருந்த எலெக்ட்ரால் பவுடர் எடுக்க வந்தேன். நீங்க படுங்க."

தம்பி மகன் அழுகிறான் என்றதும், ஸ்ரீரஞ்சனுக்கும் தூக்கம் பறந்தது. அவனும் எழுந்து வெளியில் வந்தான்.

ஒரு வழியாய்ச் சிறுவனைச் சமாதானப்படுத்தி எலெக்ட்ரால் பவுடரை நீரில் கரைத்து அவனுக்குப் புகட்டினர். வேலை செய்யும் பெண்ணிடம் கொஞ்சம் நல்லெண்ணெய் எடுத்து வரச் சொல்லி, அதையும் தேய்த்து விட்டனர்.



அதன் பின் ஸ்ரீரஞ்சன் ஆஷிஷைத் தூக்கிக் கொண்டான். அவனிடம் ஆறுதல் வார்த்தைகள் கூறியபடி அவனைத் தூங்க வைப்பதைக் காவ்யா திறந்த வாய் மூடாமல் பார்த்துக் கொண்டு இருந்தாள்.

அவனின் தம்பிதானே தன் கணவன்... அவன் ஒரு நாளும் இதுபோன்று குழந்தையைப் பார்த்துக் கொண்டது இல்லையே என்று எண்ணியவள் மனதில் ஏக்கம் எழுந்தது.

தூங்கிய ஆஷிஷை காவ்யாவிடம் கொடுத்து விட்டு ஸ்ரீரஞ்சன், ஜனனியை அழைத்துக் கொண்டு தங்கள் அறை நோக்கிச் சென்றான்.

மனைவியின் தோள் மீது கை போட்டு லேசாக அணைத்தபடி செல்லும் ஸ்ரீரஞ்சனையும், அவனின் தோளில் தலை சாய்ந்து இருக்கும் ஜனனியையும் பார்த்துக் கொண்டே இருந்தாள் காவ்யா.

குலதெய்வம் கோயிலில் நல்லபடியாகச் சாமி கும்பிட்டு விட்டுத் தங்கள் ஊர் வந்து சேர்ந்தனர். வந்த மறுநாள் ஸ்ரீரஞ்சன், மல்லிகாவிடமும், திவ்யாவிடமும், தன் கையில் இருந்த புகைப்படத்தைக் காட்டி, "ஏன் இப்படிச் செய்தீங்க? எதற்காக இப்படிச் செய்தீங்க?" என்று கோபத்துடன் கேட்டான்.

22

ஸ்ரீரஞ்சன் அதிமிஞ்சிய கோபம் கண்டு, மல்லிகா சற்றே திகைத்துத்தான் போனார். திவ்யாவோ பயந்து போய் மல்லிகாவின் பின் ஒளிந்து கொண்டாள்.

ஸ்ரீரஞ்சனின் காதல் முகம் கண்டு காதல் கொண்ட திவ்யாவுக்கு, அவனின் கோப முகம் பார்த்து, அந்தக் காதல் ஏறிய விதத்தில் அப்படியே இறங்கியது.

வாழ்க்கை காதல் மட்டும் கொண்டது இல்லையே. மற்ற உணர்வுகளுக்கும் அங்கே இடம் உண்டு என்பதைத் திவ்யா ஏனோ மறந்து போய் இருந்தாள்.

ஸ்ரீரஞ்சனின் மற்ற முகம் பார்த்து, சீச்சீ... இந்தப் பழம் புளிக்கும் என்ற நிலையில் இப்பொழுது இருந்தாள். இந்தக் கோபக்காரனோடு ஒரு நாள் குப்பை கொட்ட முடியுமா?

இதில் வாழ்நாள் முழுவதும் அவனோடு வாழ்க்கை நடத்துவதா என்று நினைத்த அவளால், அந்த நினைப் பையே சகிக்க முடியவில்லை.

"அம்மா, உங்களைத்தான் கேட்கிறேன்... இதற்கு என்ன அர்த்தம்?"

ஸ்ரீரஞ்சன் இப்பொழுது அழுத்தமாக மல்லிகாவிடம் கேட்டான்.

மல்லிகா, முழுக்க நனைந்த பின் முக்காடு எதற்கு என்று நினைத்தாரோ என்னவோ, அவரின் நாக்கு



விஷத்தைக் கக்கியது. "ஆமாம்டா... நான்தான் எல்லாத் துக்கும் காரணம். இப்போ அதுக்கு என்னங்கிற?"

"உங்களிடம் இதை நான் எதிர்பார்க்கவில்லை. ஜனனி பிடிக்காது என்று தெரியும்... ஆனால், அதற்காக இப்படியா?"

"ஆமாம். அவளை எனக்குப் பிடிக்காது. நம்ம ஸ்டேட்டஸுக்குக் கொஞ்சமாவது பொருத்தமாக இருக் காளா? அப்படி என்னதான் அவளிடம் கண்டு மயங்கி னாயோ தெரியலை. எனக்கு மருமகளாக வர, அவளுக்கு எந்தத் தகுதியும் இல்லை. உன்னை மயக்கி இங்கே நுழைந்தால் மட்டும் போதுமா? பேமிலி பேக்ரவுண்ட் வேண்டாமா?"

"அம்மா..." மல்லிகா பேசுவது பொறுக்க மாட்டாமல் ஸ்ரீரஞ்சன் கத்தினான்.

"ஜனனி என் மனைவி. அவளை இந்த மாதிரிப் பேசுவதைக் கேட்டுக் கொண்டு நான் சும்மா இருக்க மாட்டேன். என்ன பெரிய உங்க ஸ்டேட்டஸ்...? இப்ப இருக்கிற வசதி இல்லாமல் போனால் உங்க ஸ்டேட்டஸ் என்னவாகும்? எனக்கு உள்ள சொத்து, வசதி வாய்ப்புகள் எல்லாம் என் மனைவிக்குத்தான். இப்போ அவளும் உங்களை மாதிரி சரி அந்தஸ்தில் உள்ளவள்தான். அதை மனதில் வைத்துக் கொண்டு பேசுங்கள்."

"என்னடா ரொம்பத் துள்ளுற? கண்டவளையும் என்னோட கம்பேர் பண்ணாதே!"

"ச்சே... மனுஷன் பேசுவானா உங்க கூட. என் மேல் கொஞ்சம் கூடவா பாசம் கிடையாது. நான் நிம்மதியாக இருக்கிறது உங்களுக்குப் பிடிக்கலையா என்ன? ம்ஹூம்... உங்களுக்கு அந்த மாதிரி ஒரு எண்ணம் இருந்து இருந்தால், என் மனைவியை எனக்காகவாவது நேசித்து இருப்பீங்களே... இப்படி அவளை மன நலம் பாதிக்கும் அளவிற்குக் கீழ்த்தரமாக நடந்து இருக்க மாட்டீங்க..."

அவனையும் அறியாமல் அவன் வாயில் வார்த்தைகள் வந்தன.

"ஓஹ்... உன் பொண்டாட்டிக்கு இப்போ மன நலம் வேறு சரியில்லையா? ரொம்ப நல்லதாப் போச்சு. அதையே காரணமா வெச்சு அவளை டைவர்ஸ் பண்ணிடு. அதுக்கு அப்புறம் நம்ம திவ்யாவைக் கல்யாணம் பண்ணிக்கோ. பைத்தியத்தோட கூட எத்தனை நாள்தான் நீயும் வாழ முடியும்?"

"அம்மா... எப்படி உங்களால் இந்த மாதிரிப் பேச முடியுது?" என்று தவிப்பாய்க் கேட்டவன்,

"என் மனைவியை டைவர்ஸ் பண்ணணுமா? ஆஹா... என்ன ஒரு நல்ல எண்ணம். அக்மார்க் மாமியார் நீங்கதான். அதுவும் திவ்யாவை மறுமணம் செய்துக்கணுமா? என்ன பேச்சுப் பேசுறீங்க நீங்க...?

"எனக்கு மது எப்படியோ, அப்படித்தான் திவ்யாவும். நீங்களும் உங்கள் எண்ணமும்... முதலில் வாயைக் கழுவுங்க. எப்பொழுதும் நல்லதை மட்டும் பேசுங்க."



"ஏன்டா பெரிசா அலட்டிக்கிறே... திவ்யாவே ஒண்ணும் சொல்லலை... அவளுக்குமே விருப்பம்தான்."

ஸ்ரீரஞ்சனின் பார்வை இப்பொழுது திவ்யாவிடம் திரும்பியது. அவனின் பார்வையை எதிர்கொண்ட திவ்யாவிற்கு உள்ளூரக் குளிர் எடுத்தது.

"வாங்க மேடம்... நீங்களும் இதுக்கு உடந்தையா? அதான் ஸ்கூலில் ஜனனியை அந்தப் பாடு படுத்தினாயோ? ச்சே... ச்சே... சின்னப் பொண்ணான உன் மனசில் இவ்வளவு வக்கிரமா? உன்னைப் போய் ஒண்ணும் தெரியாதவள் என்று நினைத்து, நானும் விகல்பம் இல்லாமல் பழகினேன் பாரு... என்னைச் சொல்லணும்.

"ஏன் திவ்யா... உனக்கு அழகு இல்லையா? படிப்பு இல்லையா? அந்தஸ்து இல்லையா? எதுக்கு உன் புத்தியை இப்படிப் புல் மேய விடுறே? அம்மாதான் அறிவு இல்லாமல் பேசுறாங்கன்னா, உனக்கு அறிவு வேண்டாமா?"

மல்லிகாவை உசுப்பேத்தியதே திவ்யாதானே... அவளால், அவன் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் தலையைக் குனிந்தாள்.

"இதை நீதான் ஜனனியிடம் கொடுத்தாயா?" என்று புகைப்படத்தைத் திவ்யாவிடம் நீட்டிக் கேட்டவன்,

"இதில் இருக்கும் தோற்றம் பொய் என்பது உனக்கும் தெரியும், எனக்கும் தெரியும். இவ்வளவு ஏன் அம்மா

வுக்குக் கூடத் தெரியும். அப்படி இருக்கும்போது, பொய்யான ஒன்றை உண்மை மாதிரிக் காட்டி இருக்கிறாய். இது மட்டும்தான் ஜனனியிடம் காட்டினாயா... இன்னும் வேறு ஏதாவது காண்பித்தாயா?"

திவ்யாவால் பதில் சொல்ல முடியவில்லை. ஸ்ரீரஞ்சன் முகத்தை நிமிர்ந்து பார்க்கவே அவளுக்கு அச்சமாக இருந்தது. அவன் விஷயம் கேள்விப்பட்டுக் கேட்கும் ஒவ்வொரு கேள்வியும் அவளுக்கு அவமானமாக இருந்தது. மல்லிகாவிற்குத்தான் அவன் செய்யும் ஆர்ப்பாட்டம் கண்டு எரிச்சல் வந்தது.

"நாங்கதான் தவறு செய்தோம்... சரி, ஒத்துக்கிறேன். ஆனால், உன் பொண்டாட்டி ஏன்பா நாங்க காட்டியதைப் பார்த்து உன்னைச் சந்தேகப்படணும்? அந்த நேரம் அவள் மூளையை யாருக்காவது கடன் கொடுத்து இருந்தாளோ? முதல்ல சந்தேகப்படுற பொண்டாட்டியைப் போய் விசாரி. அதுக்கு அப்புறம் வந்து எங்களைக் கேள்வி கேளு..." இன்னமும் மல்லிகா, தான் அடங்கவில்லை என்பதை வார்த்தையால் நிரூபித்தார்.

"ஆஹா... என்ன ஒரு நல்ல எண்ணம். நீங்க சொன்னதைக் கேட்டு ஜனனி கிட்டே போய், என்னை ஏன் சந்தேகப்பட்டேன்னு சண்டை போடணுமா? நல்லாத்தான் இருக்கு உங்க பேச்சு. ஏன்மா வயசான காலத்தில் உங்க புத்தி இப்படி இறங்கிப் போச்சு?"

அதைக் கேட்டதும் மல்லிகாவிற்குக் கோபம் வந்து விட்டது. அதுவும் தன்னைப் பார்த்து மகன் வயசானவள் என்பதா? யாரைப் பார்த்து என்ன கேள்வி இது?



"சும்மா ஏன் குதிக்கிறே? எல்லாம் உன் நல்லதுக்குத் தான் செஞ்சேன். ஜனனியால் உனக்கு ஒரு வாரிசு பெத்துத் தர முடியுமா? நான் வாரிசு என்று சொன்னது, ஆண் குழந்தையை. இப்போ இல்லை என்றாலும் என்னைக்காவது ஒரு நாள், நம் அம்மா சொன்னாங்களேன்னு நீ ஃபீல் பண்ணத்தான் போறே... ம்ஹூம்... நல்லதுக்கே காலம் இல்லை..." வராத பெருமூச்சை வெளியிட்டார்.

ஸ்ரீரஞ்சன் அம்மாவின் பேச்சைக் கேட்டுத் தன் முழு உயரத்திற்கும் நிமிர்ந்தான். என்ன சொன்னாலும் திருந்தாத ஜென்மம் என்று மனதுக்குள் எண்ணியவன், தன் முடிவைப் பேச ஆரம்பித்தான்.

"பெண்ணா இருந்திட்டு உங்க வாயில் இப்படி ஒரு வார்த்தையை நான் எதிர்பார்க்கலை. சாரி... நீங்க பெண்ணே இல்லை. மிருகம் நீங்க. எவ்வளவு கீழ்த்தரமான எண்ணம். எனக்கு ஆண் குழந்தை வேணும்னு உங்க கிட்டே வந்து நான் கேட்டேனா? என் வாரிசு என்று சொல்வதற்கு என் மகள் இருக்கிறாள். இன்னும் கொஞ்ச நாளில் வரப் போகும் இரு ஜீவன்கள் இருக்கு.

"அவர்களும் பெண்ணாக இருந்தாலும் எனக்குச் சந்தோஷமே. மூன்று தேவியர் எனக்கு மகள்களாகப் பிறந்து இருக்கிறார்கள் என்று நான் அவர்களைக் கொண்டாடத்தான் செய்வேன். பெண்ணை எங்கு கொண்டாடுகிறார்களோ அங்கேதான் செல்வம் இருக்கும். பெண்களைக் கொண்டாடாத உங்களிடம் செல்வம் ஒரு

நாளும் தங்கப் போவது இல்லை. வெறுமனே வாரிசை வைத்துக் கொண்டு நீங்க என்ன செய்வீங்க?

"நீங்க உங்க முடிவைச் சொல்லிட்டீங்க... அதே மாதிரி நானும் என் முடிவைச் சொல்றேன், கேட்டுக் கோங்க. நீங்க என்ன சொல்லி ஜனனி மனசைக் கலைச்சீங்களோ எனக்குத் தெரியாது. நீங்க ரெண்டு பேரும் அதைப் பத்தி வாயைத் திறக்க மாட்டேன்றீங்க... சரி... அதை நான் ஜனனியிடம் பேசிக் கொள்கிறேன்.

"இன்னும் ஒரு நாளில் நான் தனிக் குடித்தனம் போகப் போகிறேன். இதற்கு மேல் நான் இங்கே இருந்தால், நான்தான் இந்த உலகத்திலேயே உள்ள பெரிய முட்டாள். இனி எந்த ஒரு சம்பந்தமும் எனக்கும் இந்தக் குடும்பத்துக்கும் கிடையாது. மதி கல்யாணம் மட்டும் என் பொறுப்பு. இனி வாழ்நாளில் உங்கள் முகத்தில் விழிப்பதைக் கூட நான் விரும்பவில்லை. நீங்களும் என்னைப் பார்க்க வர வேண்டாம்.

"இதுதான் நான் உங்களிடம் கடைசியாகப் பேசுவது. ஆனால், ஒண்ணே ஒண்ணு உங்களைக் கேட்கணும்... எனக்காக, என் நன்மைக்காகத்தான் எல்லாம் செய் தீங்கன்னு சொன்னீங்களே... என் நன்மை, என் மூச்சு, என் உயிர் எல்லாம் ஜனனிதான்னு ஏன் உங்களுக்குப் புரியாமப் போச்சு?" மல்லிகாவிடம் பேசியவன், திவ்யா விடம் திரும்பி,

"உன்னை என்னவெல்லாமோ திட்டத் தோணுது. உன்னைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளணும்



போலிருக்கு. ஆனால், உங்க அப்பா முகத்துக்காகப் பேசாமல் இருக்கேன். நாளைக்கு நீ ஊருக்குப் போற துக்கு ரெடியா இரு. உன் அப்பாவுக்குப் போன் பண்ணி வரவழைக்கப் போறேன். அவருக்கும் தன் செல்ல மகளின் மற்றொரு முகம் எவ்வளவு விகாரமானது என்று தெரிய வேண்டாமா? அவரே உனக்கு ஒரு நல்ல முடிவைக் கூறுவார்."

அதற்கு மேல் பேசுவதற்கு ஒன்றுமில்லை என்பது போல், ஸ்ரீரஞ்சன் அந்த அறையை விட்டு வெளியேறி னான். இல்லை... இவர்களிடம் பேசிப் பிரயோஜனம் இல்லை என்று எண்ணி வெளியேறினானோ என்னவோ?

மல்லிகா அசையாமல் அப்படியே இருக்க, திவ்யா நாளை தன் தந்தையின் வரவை எண்ணிக் கலக்கமுற்று, என்ன செய்வது என்று தெரியாமல் அமர்ந்து இருந்தாள். இதையெல்லாம் ஒட்டுக் கேட்டு விட்டுப் போனது ஒரு உருவம்.

அம்மாவிடம் பேசி விட்டுப் போன ஸ்ரீரஞ்சன், தான் முடிவு செய்து இருந்த விஷயங்களைச் செயல்படுத்த ஆரம்பித்தான்.

முதலில் தந்தையிடம்தான் பேசினான்.

"அப்பா... நான் தனிக் குடித்தனம் போகலாம் என்று இருக்கிறேன்..."

ஆச்சரியமாக அவனைப் பார்த்த தனசேகரிடம், மல்லிகா மற்றும் திவ்யாவின் நடவடிக்கைகளைக் கூறி னான்.

"வேண்டாம்ப்பா... நம்ம குடும்பம் நம்ம குடும்பம்னு இருக்கிற என்னைக் கடைசியில் என் குடும்பம்னு இல்லாமல் ஆக்கி விடுவாங்க போலிருக்கு. இனி நான் என் ஜனனிக்காக மட்டுமே வாழப் போகிறேன். குடும்ப ரீதியான என் உறவு, அந்த வீட்டுடன் உடைந்து போய் விட்டது. இனி தொழில் ரீதியாக மட்டுமே தொடரும். அதையும் முடிவுக்குக் கொண்டு வர நீங்கள் பிரியப் பட்டால் நான் விலகிக்கிறேன்."

தனசேகர் எழுந்து வந்து தன் மகனைக் கட்டிக் கொண்டார். அவரின் மனம் சொல்லவொணா துயரத்தில் மூழ்கி இருந்தது.

"ரஞ்சி... இப்பொழுதாவது நீ நல்ல முடிவை எடுத்தாயே... ரொம்ப சந்தோஷம்ப்பா. ஆனால், உறவை மட்டும் முறித்துக் கொள்ளாதே. உனக்காக நான் இருக் கேன். எனக்குக் கொள்ளி போடத் தலைச்சன் பிள்ளை நீ வேணும். உன் அம்மா எப்படியும் இருந்து விட்டுப் போகட்டும். எனக்காக அந்தக் கடமையை மட்டும் செய்ய, எங்கே இருந்தாலும் வந்து விடு... என்ன?"

கண் கலங்கக் கேட்டவரைக் கண்டு, அவன் கண்களும் கலங்கின. "அப்பா... ஏன் இப்படி எல்லாம் பேசுறீங்க...? நான் உங்க மகன்தான்ப்பா."

"மல்லி... ஏதோ ஜனனியைப் பிடிக்காமல்தான் இப்படி நடந்து கொள்கிறாள் என்று நினைத்தேன். ஆனால், மனதில் இப்படி ஒரு கேவலமான எண்ணத் துடன்தான் நடந்து இருக்கிறாள் என்பது எனக்குத் தெரி யாமல் போச்சே!"



தனக்குள் புலம்பியவரைப் பார்க்கும் போது, ஸ்ரீரஞ்சனுக்குப் பரிதாபமாக இருந்தது.

"சரி ரஞ்சி... உன் இஷ்டம் போல் நீ இருந்து கொள். இனியாவது ஜனனியை மன நிம்மதியுடன் வைத்துக் கொள். அப்புறம்... தொழில் ரீதியாகவும் விலகிக்கிறேன்னு சொன்னியே... இது எல்லாமே நீ கட்டிக் காத்து வந்தது. அதை யாருக்காகவும் நீ விட்டுக் கொடுக்க வேண்டாம். ஸ்ரீகாந்துக்கு அவன் பங்கு ஏற்கெனவே கொடுத்தாச்சு. அதை எல்லாம் அவன் தகாத நடிவடிக்கைகளால் அழித்து வருகிறான். அது அவன் தலையெழுத்து. இப்போ இருக்கிறது உன்னுடையது. அதனால் யாரும் உன்னைக் கேள்வி கேட்க முடியாது."

– என்ற தந்தையைப் பார்க்கும் போது, இவருக்காக வாவது ஏதாவது செய்ய வேண்டும் என்று அவன் மனதில் தோன்றியது. அதன் பின் சிறிது நேரம் இருந்து பேசிவிட்டுத் தனசேகர் புறப்பட்டார். அவரின் நடை சற்றே தளர்ந்து இருந்தது போல் ஸ்ரீரஞ்சனுக்குத் தோன்றியது.

இரவு தாமதமாக வந்த ஸ்ரீரஞ்சனுக்கு உணவு எடுத்து வைத்து விட்டு, அவன் சாப்பிட்ட பின் அவனோடு தங்கள் அறைக்கு வந்த ஜனனி, அவன் குளித்து முடித்து வரும் முன் உறங்கி விட்டாள். அவனுக்கு ஜனனியிடம் பேச வேண்டும் என்று தோன்றினாலும், அவளை எழுப்ப மனம் வரவில்லை. மேலும், அவனுக்குமே அசதியாக இருந்தது. மகளை அணைத்தபடி படுத்தவன், அப்படியே உறங்கி விட்டான்.

திவ்யா, அவள் அறையில் உறக்கம் இல்லாமல் தவித்துக் கொண்டு இருந்தாள். நாளை தந்தையின் முன் எப்படி நிற்கப் போகிறோம் என்று பயமாக இருந்தது. மனதில் கலக்கத்துடன் யோசித்துக் கொண்டு இருக்கும் போது, அவள் அறைக் கதவு தட்டும் சத்தம் கேட்டது. 'இந்த நேரத்தில் யார்?' என்ற எண்ணத்துடன் கதவைத் திறந்தாள். அங்கு நின்று கொண்டு இருந்தவனைக் கண்டு திகைத்தாள்.

"அத்தான்... இந்த நேரத்தில் இங்கே எங்கே?"

"ஏன் திவி... நான் உன் ரூமுக்கு வரக் கூடாதா என்ன?"

கோணல் சிரிப்புடன் உள்ளே வந்தான் ஸ்ரீகாந்த். அவனின் இளிப்பே, அவன் குடித்து இருக்கிறான் என்பதைச் சொல்லாமல் சொல்லியது. உள்ளே வந்தவன், திரும்பி நின்று அறைக் கதவைத் தாழிட்டான். அவனின் செயல் திவ்யாவிற்கு அச்சத்தை உண்டு பண்ணியது.

"அத்தான்... என்ன பண்றீங்க?"

"ஏன் திவி... உன் கண்ணுக்கு ரஞ்சி மட்டும்தான் ஆண் பிள்ளையாய்த் தெரிவானா? நான் எல்லாம் தெரிய மாட்டேனா?"

அவனின் சொல்லில் அப்படியே திகைத்துப் போய் அவனைப் பார்த்தாள்.

"காலையில் ரஞ்சி, நீ, அம்மா மூவரும் பேசியதை நான் கேட்டேன். எனக்கு என்ன குறைச்சல் திவி?



அவனை விட வயதில் குறைந்தவன்... அவனை விட இளமையானவன்... அவனை மாதிரி நானும் பணக்காரன் தான். அவன் கொடுக்க முடியாத சந்தோஷத்தை நான் கொடுப்பேன். உனக்குச் சந்தேகமாக இருந்தால், உன் அக்காவிடம் கேட்டுப் பாரு."

ஸ்ரீகாந்தின் பேச்சு சகிக்காமல், காதை மூடிக் கொண்டாள் திவ்யா.

"அத்தான்... நீங்க இப்போ வெளியில் போகல... நான் கத்துவேன்."

"கத்து... நல்லாக் கத்து. எல்லோரும் வரட்டும். ஆனால், நீ சொல்வதை யாரும் நம்ப மாட்டாங்க. ஏன், உன் அக்காவே உன்னை நம்ப மாட்டாள்."

உண்மைதானே! அவன் சொல்வது உண்மைதானே என்று எண்ணியவள், அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல், அப்படியே சிலையென நின்றாள். அவளின் அந்தச் செயலற்ற தன்மையைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட ஸ்ரீகாந்த், அவளை அணைத்துத் தன்வசப்படுத்த முயன்றபோது, அறைக் கதவு மீண்டும் தட்டப்பட்டது.

போராடிக் கொண்டிருந்த திவ்யாவைக் கட்டுப் படுத்திக் கொண்டு இருந்த ஸ்ரீகாந்த், ஒரு நொடி தன் பார்வையைக் கதவின் புறம் திருப்பினான்.

ஒரு நொடிதான் என்றாலும், திவ்யா அதைத் தப்பித்துக் கொள்ளக் கிடைத்த மிகப் பெரிய வாய்ப்பாகக் கருதி, அவனைத் தள்ளி விட்டு ஓடி வந்து கதவைத்

திறந்தாள். போதையில் இருந்ததாலோ என்னவோ, ஸ்ரீகாந்த் நிலை தடுமாறிக் கட்டிலில் விழுந்தான்.

திவ்யா கதவைத் திறந்ததும் உள்ளே வந்தவர் மல்லிகா. ஸ்ரீரஞ்சன் பேசி விட்டுப் போன பின், காலையில் இருந்து திவ்யா முகம் கலங்கி இருப்பதைப் பார்த்து அவர் மனம் தாங்கவில்லை. அதனால், இரவு எல்லோரும் உறங்கிய பின் அவளைப் பார்த்து ஆறுதல் வார்த்தை பேசி விட்டுப் போகலாம் என்று அவளைப் பார்க்க வந்தார்.

வந்த இடத்தில் இந்தக் காட்சியைக் கண்டு திகைத்து அப்படியே நின்று விட்டார். சின்ன மகளையும், திவ்யாவை யும் மாறி மாறிப் பார்த்தவர், ஒரு நொடியில் நடந்ததை ஊகித்து விட்டார்.

திவ்யாவின் கண்ணீரும், கலைந்து இருந்த உடை யும், அவருக்கு நடந்த விஷயத்தைச் சொல்லாமல் சொல்லியது. திவ்யாவை ஆறுதலுடன் அணைத்தவர், ஸ்ரீகாந்தை வெறுப்புடன் பார்த்தார்.

## 23

"ஸ்ரீகாந்த்... நீ என்ன பண்ணி இருக்கேன்னு புரிந்துதான் இருக்கிறாயா? ஒரு சின்னப் பெண்ணிடம் இப்படித்தான் நடந்து கொள்வாயா?"

மல்லிகா, ஸ்ரீகாந்தைக் கோபத்துடன் வினவினார். ஆனால், அந்தக் கோபத்திற்கு எல்லாம் ஸ்ரீகாந்த் பயப்பட



வில்லை. மிக நிதானமாகப் படுக்கையில் இருந்து எழுந்தான்.

"அதான் ஒண்ணும் நடக்கலியே... பின்னே எதுக்கு வீணாகச் சத்தம் போடுறீங்க?"

ஸ்ரீகாந்த் தான் செய்த தவறுக்குச் சிறிதும் வருந் தாமல், மல்லிகாவையே திருப்பிக் கேட்டான். மல்லிகாவின் நேரடி வாரிசு என்பதை அவன் நிரூபித்தான்.

"டேய்... புரிஞ்சுதான் பேசுறியா? நீ பண்ணி இருக்கிற காரியம் உன் மனைவிக்குத் தெரிஞ்சா என்ன ஆகும்? கொஞ்சம் யோசித்துப் பாரு. நீ பண்ணியது கட்டிய மனைவிக்குத் துரோகம். ஏன்டா, உனக்குக் கொஞ் சமும் வருத்தம் கிடையாதா? திவ்யா சின்னப் பெண். அதுவும் உன் தங்கை வயதில் உள்ள பெண்ணைப் போய்... சீச்சீ... மச்சினிச்சி என்பவள் தங்கை மாதிரி. அதை எல்லாம் விடு... இவள் உன் தாய் மாமன் மகள்... அதாவது ஞாபகம் இருக்கா?"

"என்னம்மா, சும்மா குதிக்கிறீங்க? ரஞ்சிக்கு மட்டும் இவள் தாய் மாமன் மகள் இல்லையா? அவனுக்கு மட்டும் தங்கை மாதிரி இல்லையா? பின்னே, அவனுக்கு மட்டும் இவளை ஜோடி சேர்க்க நீங்க திட்டம் போடுறீங்க... ஏன், எனக்கு ஜோடி சேர்க்க மாட்டீங்களா? நான் செய்தா தப்பு... அதையே நீங்க செய்தா நியாயமா? நான் பண்ணியது துரோகம் என்றால், நீங்கள் பண்ணியதற்குப் பேர் என்ன? ரஞ்சிக்கு ஒரு நியாயம்... எனக்கு ஒரு நியாயமா?"

ஸ்ரீகாந்த் கேட்கக் கேட்க, மல்லிகாவிற்கும் திவ்யாவிற்கும் தாங்கள் செய்ய நினைத்த காரியத்தின் வீரியம் புரிந்தது.

'ஸ்ரீகாந்த் கேட்பதிலும் நியாயம் இருக்கிறதுதானே! தன் தம்பி மகளுக்குத் துரோகம் இழைக்கத் தன்னால் முடியவில்லை. ஆனால், யாரோ பெற்ற ஜனனிக்குக் கொஞ்சமும் யோசிக்காமல் துரோகம் இழைக்க நினைத்து விட்டேனே... நல்ல வேளை ரஞ்சி, ஸ்ரீகாந்த் போல் இல்லை. அந்த ஸ்ரீராமன் போல் ஏக பத்தினி விரதன். அதனால் தவறு நேரவில்லை.

'ஒரு வேளை ஸ்ரீகாந்த் போல் இருந்து இருந்தால் என்ன நடந்து இருக்கும்? இரு பெண்களுக்கும் அல்லவா துரோகம் செய்ய நினைத்து இருந்தேன். திவ்யாதான் புரியாமல் பேசினாள் என்றால், பெரியவளான நான்தான் அவளைப் புத்தி சொல்லித் திருத்தி இருக்க வேண்டும். அதை விட்டு விட்டுத் தானும் அவளுடன் சேர்ந்து கொண்டு...' நினைக்கவே அவரால் முடியவில்லை.

'இப்போது நினைவால் கூட அதை நினைக்க முடியாத நான், எப்படி அப்பொழுது அதைச் செயலாக்க நினைத்தேன்? எதைக் கண்டு என் மனம் மாறியது? திவ்யாவின் நிலை கண்டு என் மனதில் மாற்றம் வந்ததா? இல்லை, ஆழ் மனதில் இருந்த பெண் உள்ளம் விழித்துக் கொண்டதா? பணம் மட்டுமே பிரதானமாக நினைத்த நான், ஒரு பெண்ணின் வாழ்வைப் பற்றிக் கொஞ்சமும் யோசிக்காமல் போய் விட்டேனே!'



இது நாள் வரை தன் கண்ணை மறைத்த பணம் என்ற போதை, தன் இளைய மகனால் தெளிய வைக்கப் பட்டதை எண்ணியவர், ஸ்ரீகாந்துக்கு மனதில் நன்றி கூறினார்.

திவ்யாவோ, ஸ்ரீகாந்தின் வார்த்தையில் கூனிக் குறுகிப் போய் விட்டாள்.

சொந்த அக்காவிற்குத் துரோகம் இழைக்கத் தன்னால் முடியவில்லை. ஆனால், ஜனனிக்கு எப்படித் துரோகம் இழைக்க முயன்றாள்? அவளுக்கே அது புரியவில்லை. தான் செய்ய இருந்த காரியத்தின் வீரியம் இப்பொழுது அவளுக்குப் புரிந்தது. தான் எப்படிப்பட்ட கேவலமான பிறவியாக மாறிப் போனோம் என்று கழி விரக்கம் தோன்ற, கைகளால் முகத்தை மூடிக் கொண்டு அழுதாள். அழுதால் மட்டும், பாவம் இல்லை என்று ஆகி விடுமா என்ன?

ஸ்ரீகாந்த், அம்மாவையும் திவ்யாவையும் மாறி மாறிப் பார்த்தான்.

அவர்களின் நிலை கண்டே, அவர்களின் மன நிலையை உணர்ந்து கொண்டான். மிக நிதானமாக மல்லிகாவின் அருகில் வந்து, அவர் கையைப் பிடித்துக் கொண்டான்.அதில் மன்னிப்புக் கேட்கும் பாவம் இருந்தது.

"அம்மா... திவ்யாவும் நீங்களும் செய்த காரியம் எவ்வளவு கேவலமானது என்று இப்பொழுது உங்க ளுக்குப் புரியுதா? நான் கெட்டவன்தான்... வெளியில்

அப்படி இப்படிச் சுற்றித் திரிபவன்தான். ஆனால், நம் வீட்டுப் பெண்கள் மேலே கை வைக்கும் அளவுக்கு நான் கீழ்த்தரமானவன் இல்லை."

நம்ப முடியாத பார்வையை மல்லிகா, ஸ்ரீகாந்த் மீது பதித்தார்.

"நம்புங்கம்மா... நீங்க திவ்யா ரூமுக்கு வரப் போறதை உணர்ந்துதான் உங்களுக்கு முன் இங்கே வந்தேன். நான் வேறு மாதிரி நினைத்து இருந்தால், திவ்யாவைப் பிடித்த பிடி நழுவ விட்டிருக்க மாட்டேன். வந்து இருப்பது நீங்கள் என்று எனக்குத் தெரியும். அதனால்தான் என் பிடியை நான் தளர்த்தினேன்.

"திவ்யாவும் அதைப் பயன்படுத்திக் கொண்டு, கதவைத் திறந்து விட்டாள். உங்கள் மனம் மாற வேண்டும்... நீங்கள் செய்த செயல் எவ்வளவு தவறானது என்று உணர வேண்டும் என்றுதான், நான் அவ்வாறு நடந்தேன். நான் செய்தது தவறு என்றால், என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்," என்றவன், திவ்யாவிடம் திரும்பி,

"திவ்யா... நீயும் என்னை மன்னித்து விடு. உன் மனதை உனக்கு உணர்த்தவே நான் இப்படி நடந்து கொண்டேன். இப்பொழுது உனக்கே உன் மனம் புரிந்து இருக்குமே! எல்லா ஆண்களும் ரஞ்சி போல் இருப்பது இல்லை. அதைத்தான் நான் உனக்கு உணர்த்தினேன். உனக்கு என்ன குறைச்சல்? எல்லா விதத்திலும் சிறந்த ஒருவன் உன்னைத் தேடி வருவான். என்ன, புரிந்ததா? மீண்டும் உன்னிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்."



இருவரிடமும் மன்னிப்புக் கேட்டவன், திவ்யாவின் அறையை விட்டு வெளியே வந்தான். அங்கே காவ்யா இருப்பதைக் கண்டு திகைத்தவன்,

"கவி..."

"ஷ்... நீங்க ஒன்றும் சொல்ல வேண்டாம்..." என்று, அவள் அவர்களின் அறையை நோக்கி நடந்தாள்.

நாளை தன் பெற்றோர் வரப் போவதை அறிந்து, காவ்யாவும் தங்கைக்கு அறிவுரை கூறத்தான் அவள் அறைக்கு அந்த நேரத்தில் வந்தாள். வந்தவள் கண்ணில் மல்லிகாவும், திவ்யாவும் மனம் மாற, அவள் கணவன் ஆடிய நாடகம் பட்டது.

"கவி... நான்..."

ஸ்ரீகாந்த் ஆரம்பிக்கும் முன், காவ்யா அவனை இறுக அணைத்து இருந்தாள். அவளின் கண்களில் கண்ணீர் வழிந்தது. கணவன் குடிகாரன், ஆடம்பரப் பிரியன், பெண்கள் விஷயத்தில் ஒரு மாதிரி என்று அவனிடத்தில் அவளுக்கு இருந்த மனஸ்தாபம் எல்லாம், இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டது.

முதன் முதலாக அவன் செய்த செயலில், அவள் முற்றிலும் நெகிழ்ந்து இருந்தாள்.

ஸ்ரீகாந்தோ மனைவியின் அணைப்பில், அவனும் நெகிழ்ந்துதான் இருந்தான். அவன், அவளை அணுகும் போது எப்பொழுதும் கடமையுடன் செயல்படுபவளிடம், காதல் ஒரு போதும் இருந்ததில்லை. அதை அவனும் பெரிதாகக் கண்டு கொண்டது இல்லை.

அந்த நேரம் தாபம் தீர்ந்ததா, அது மட்டும் அவனுக்குப் போதும். ஆனால், இன்று வெகு நாட்களுக்குப் பிறகு மனைவியின் அணைப்பில் காதலைக் கண்டவன், ஒரு கணம் திகைத்துத்தான் போனான். அவனின் அணைப்பும் இறுகியது.

"அத்தான்... நீங்க செய்த காரியத்தைப் பார்க்கும் போது தவறானதாகத் தெரிந்தாலும், ஒரு நல்லதுக்காகப் பண்ணியிருக்கீங்க எனும் போது, எனக்கே சந்தோஷமாக இருக்கு. உங்க கிட்டே இதை நான் எதிர்பார்க்கவில்லை."

"கவி... நீயும் என்னை மன்னிக்க வேண்டும். நான் செய்த தவறுகளை எல்லாம் பொறுத்துக் கொண்டு என்னுடன் வாழ்ந்தாயே! உனக்கு உண்மையிலேயே பெரிய மனசுதான். இனி நான் முற்றிலும் வேறு மனிதன். அன்பான கணவனாய், பாசமான தகப்பனாய் நான் மாறி விட்டேன்."

காவ்யா, அவனை ஆச்சரியத்துடன் பார்த்தாள்.

"உண்மைதான் கவி. ரஞ்சியைப் பார்த்துத்தான் நான் திருந்தினேன். அம்மா, திவ்யா தவறு செய்ததைச் சுட்டிக்காட்டி, அண்ணியை ஆதரித்து அவன் பேசினான் பாரு... ஒரு கணம் திகைத்துப் போய் விட்டேன். என்ன மாதிரியான ஒரு அன்பு அவன் மனைவியிடத்தில் அவனுக்கு இருக்கிறது. நாம் அதைப் போல் ஒரு நாளாவது நடந்து இருக்கோமா என்று என்னை நானே கேள்வி கேட்டுக் கொண்டேன். அவன் அளவுக்கு இல்லை என்றாலும், அவன் தம்பி நான் என்று கொஞ்சமாவது



நிரூபிக்க வேண்டாமா?" என்று சொன்னவனைக் காதலுடன் பார்த்தாள் காவ்யா.

மனைவியின் காதல் பார்வை கண்டு, அவளைத் தன் தோளோடு சேர்த்து அணைத்துக் கொண்டான்.

அன்றொரு நாள் ஸ்ரீரஞ்சனையும், ஜனனியையும் ஏக்கத்துடன் தான் பார்த்த காட்சி, இன்று தன் வாழ்வில் நடந்து இருப்பதை உணர்ந்தவள் மனதில் நிம்மதி பூத்தது.

அத்தானுக்கும், அக்காவுக்கும் மனதார நன்றியைச் சொல்லிக் கொண்டாள்.

மறுநாள் காலையில் வந்து இறங்கிய தம்பி சங்கரின் முகம் பார்ப்பதற்கே மல்லிகாவினால் முடியவில்லை.

அதிலும் தம்பி மனைவி கோமதி என்ன பேசக் காத்து இருக்கிறாளோ என்று பயம் வேறு மனதில் எட்டிப் பார்த்தது.

அதற்கு முன் பெரிய மகனிடம் பேசிப் பார்ப்போமா என்று எண்ணி, ஸ்ரீரஞ்சனிடம் பேசச் சென்றார்.

"உப்பைத் தின்றவன் தண்ணீர் குடித்துத்தான் ஆக வேண்டும். தவறு செய்த நீங்களும் திவ்யாவும் பதில் சொல்லித்தான் ஆக வேண்டும். இதற்கு மேல் என்னிடம் பேச வேண்டாம். உங்கள் தம்பி கேள்வி கேட்பார்... அவருக்கு நீங்கள் பதில் சொல்லிக் கொள்ளுங்கள்."

முகம் பார்த்துக் கூடப் பதில் சொல்லப் பிடிக்காதவனாய், முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

இதை எல்லாம் பார்த்துக் கொண்டு இருந்த ஜனனிக்கு ஒன்றும் புரியவில்லை. என்னவென்று கேட்ப தற்கும் கணவனின் இறுக்கமான முகம் இடம் கொடுக்க வில்லை.

ஒன்றும் புரியாதவளாய், நடப்பதை ஒரு பார்வை யாளனாய்க் கவனிக்க ஆரம்பித்தாள். நடக்கும் விஷயத் திற்குத் தான்தான் முக்கிய காரணி என்று அவளுக்குத் தெரிந்து இருக்கவில்லை.

வரவேற்பறையில் குடும்ப உறுப்பினர்கள் எல் லோரும் குழுமி இருந்தனர்.

என்ன விஷயம் என்று தெரியாததால், சங்கரும் கோமதியும் சகஜமாக உரையாடிக் கொண்டு இருந்தனர். அவர்களிடம் சகஜமாகப் பேச முடியாத நிலையில் தனசேகரும், மல்லிகாவும் இருந்தனர்.

மைத்துனன் கேட்கப் போகும் கேள்விக்கு என்ன பதில் சொல்வது என்று தனசேகரும், தம்பி மனைவி தன் முகத்தில் காறி உமிழப் போகிறாளே என்று மல்லிகாவும் தங்கள் யோசனையில் ஆழ்ந்து இருந்தனர்.

யாரும் எதுவும் கேட்கப் போவதில்லை, பேசப் போவதில்லை என்று உணர்ந்த ஸ்ரீரஞ்சன், தானே பேச்சைத் துவக்கினான்.

அக்காவின் மூத்த மகனைச் சங்கருக்கு எப்பொழு துமே பிடிக்கும். அவன் பேசத் துவங்கியதும், மகிழ்ச்சியுடன் அவன் பேச்சைக் கவனிக்க ஆரம்பித்தார். ஸ்ரீரஞ்சன்



பேசப் பேச அவர் முகம் இறுகியது. கோபத்தில் முகம் சிவந்தது.

அதற்கு மேல் தாங்க முடியாதவராய், தன் இளைய மகள் திவ்யாவின் அருகில் போனவர், கண் இமைக்கும் நேரத்தில், யாரும் எதிர்பார்க்காத நேரத்தில் அவளை அடித்துத் துவம்சம் செய்து விட்டார்.

எல்லோரும் திக்பிரமை பிடித்து நிற்க, ஸ்ரீரஞ்சன் தான் சுதாரித்துச் சங்கரை விலக்கினான்.

“பாரு... நீ அடி வாங்கறதைக் கூடப் பார்க்க முடியாமல் தடுக்கிற இந்தப் பிள்ளைக்கா நீ துரோகம் பண்ண நினைச்சே. என் மகள்தானா நீன்னு சந்தேகமா இருக்கு. அந்த ஜனனி உனக்கு என்ன பண்ணினான்னு, நீ அவளுக்கு இப்படி ஒரு பெரிய துரோகம் பண்ண நினைச்சே?

“நல்ல வேளை என் மருமகன் தங்கம்... அதனால நீ தப்பிச்ச. வேற யாராவது இருந்து இருந்தா, அனுபவிச் சிட்டு விட்டுட்டுப் போயிட்டே இருந்து இருப்பான். இது ஒரு தகப்பன் சொல்லக் கூடாத வார்த்தை... அதையும் என்னைச் சொல்ல வெச்சிட்ட. போ... போய் மரியாதையா ரெண்டு பேர் கிட்டேயும் மன்னிப்புக் கேளு.”

ஜனனி, ஸ்ரீரஞ்சன் சொல்வதைக் கேட்டவள், அப்படியே அசையாமல் நின்று இருந்தாள். கணவனுக்கு இதெல்லாம் எப்படித் தெரிந்தது? சொல்லவில்லை என்று தன்னிடம் கோபிப்பானோ என்று மனதில் கலக்கம்

தோன்ற, அவனைப் பார்த்தாள். ஆனால், அவள் கணவனோ அதை உணர்ந்தாற்போல் அவள் அருகில் சென்று, அவள் கையைப் பிடித்துத் தன் கைக்குள் வைத்து லேசாக அழுத்தினான். அந்தச் செயல், எப்பொழுதும் நான் இருக்கிறேன் உன்னோடு என்று சொல்லாமல் சொல்லியது.

"கவி... நீ இருந்துமா இந்தச் செயலை அனு மதிச்சே? இல்லை, உனக்குத் தெரியாம இந்த மாதிரி நடந்துச்சா...? நீயாவது உன் தங்கைக்குப் புத்தி சொல்லி இருக்க வேண்டாமா?"

கோமதி, தன் மூத்த மகளிடம் அழுதார். காவ்யாவால் அம்மாவின் கேள்விக்குப் பதில் சொல்ல முடியவில்லை.

இந்த ஈனச் செயலுக்கு அவளும் கொஞ்ச நாள் துணை போனாளே... அதை எண்ணி வெட்கித் தலை குனிந்தாள்.

தந்தையின் சொல் கேட்டுத் திவ்யா, ஸ்ரீரஞ்சன், ஜனனி அருகில் வந்தாள். தந்தை சொல்வதற்கு முன்னேயே அவர்களிடத்தில் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று அவள் ஏற்கெனவே முடிவு செய்து வைத்து இருந் தாள்.

"அத்தான்... ஜனனி அக்கா... என்னை மன்னித்து விடுங்கள். மன்னிக்கும் படியான காரியம் நான் செய்ய வில்லை. இருந்தாலும் என்னை மன்னித்து விடுங்கள்."



ஸ்ரீரஞ்சனோ ஒன்றும் பேசாமல், தன் பார்வையை வேறு பக்கம் திருப்பிக் கொண்டான். அவன் மனம் திவ்யாவின் செயலில் அருவருத்து இருந்தது.

ஜனனியோ... 'மன்னிக்கவா? வேண்டாமா?' என்று இரு நிலையில் இருந்தாள். வேறு எந்தத் தவறு செய்து இருந்தாலும் மன்னிக்கலாம். திவ்யா செய்ததோ, அவள் வாழ்க்கையை அபகரிக்க நினைத்தது. ஏதோ ஸ்ரீ நல்லவனாய் இருக்கக் கண்டு அவள் வாழ்க்கை தப்பியது. இதே இது, சபலக்காரனாய்க் கணவன் இருந்து இருந்தால், நினைக்கவே உடல் நடுங்கியது.

அதனால், அவள் உயிரை அவளிடம் இருந்து பறிக்க நினைத்தவளை, மனதில் ஆறாத வடுவை ஏற்படுத்தியவளை அவளால் மன்னிக்க முடியுமா என்று அவளுக்குத் தெரியவில்லை.

கணவன் வேறு பேசாமல் முகத்தைத் திருப்பிக் கொண்டு இருக்கிறான். இந்த நிலையில் தானும் அதே மாதிரி நடந்தால் நன்றாக இருக்காது என்று எண்ணி, லேசாகத் திவ்யாவைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

இப்போதைக்கு அவளால் அதை மட்டுமே தர முடியும். மதியையும் காவ்யாவையும் மன்னித்த ஜனனியால், திவ்யாவை மன்னிக்க முடியாமல் போய் விட்டது.

அது ஏன் என்று அவளுக்குமே தெரியவில்லை. ஒரு வேளை காலம் மனப் புண்ணை ஆற்றி மன்னிக்கும் மனப் பக்குவத்தைக் கொடுக்கலாம்.

"நீ துரோகம் பண்ணி இருந்தாலும் ஜனனி உன்னைப் பார்த்து முகம் திருப்பவில்லை பாரு. அது பெண். அவளைப் பார்த்துப் பெண் என்றால் எப்படி இருக்கணும் என்று கத்துக்கோ..." என்று மகளிடம் சொல்லிய சங்கர்,

ஸ்ரீரஞ்சனிடமும், ஜனனியிடமும் மகள் செய்த காரியத்திற்கு மன்னிப்புக் கேட்டார். திவ்யாவிடம் முகம் திருப்பிய ஸ்ரீரஞ்சனால், சங்கரிடம் முகம் திருப்ப முடியவில்லை.

"திவ்யா பண்ணியதுக்கு நீங்க என்ன பண்ண முடியும் மாமா. அவளைக் கூட்டிக் கொண்டு போய் நல்ல பையனாகப் பார்த்துக் கல்யாணம் பண்ணி வையுங்க," என்றதோடு தன் பேச்சை முடித்துக் கொண்டான்.

தன்னிடம் பேச வந்த அக்காவைச் சங்கர் ஏறெடுத்தும் பார்க்கவில்லை.

திவ்யாவிடம் அவள் உடைமைகளை எடுத்து வரச் சொன்னார்.

தனசேகர், மைத்துனனிடம் மன்னிப்புக் கேட்டார். அக்கா செய்த தவறுக்கு அவள் கணவர் என்ன செய்வார் என்று சங்கர் அவரிடம் கோபப்படவில்லை.

கோமதி, மல்லிகாவிடம் வந்து, "உங்களை நம்பிப் பெண்ணை அனுப்பியதற்கு நல்லாப் பாடம் கத்துக் கொடுத்திட்டீங்க..." என்றவர் முகம், அருவருப்பில் சுருங் கியது.



மல்லிகா என்னதான் மன்னிப்புக் கேட்டாலும், சமாதானம் செய்தாலும், கோமதி அவரிடம் முகம் கொடுத்துப் பேசவில்லை.

அதற்குள் திவ்யா கிளம்பி வரவும், இருவரும் அவளைக் கூட்டிக் கொண்டு கிளம்பினர்.

"என்னங்க..." மல்லிகா, கணவரை அழைத்தார்.

தங்கள் அறைக்கு வந்தும் எதுவும் பேசாமல் அமர்ந்து இருந்த கணவரைக் கண்டு அவருக்கு மனம் வருந்தியது. தான் செய்த தவறுக்குத் தன்னை அடித்து இருந்தால் கூடப் பரவாயில்லை. ஆனால், ஒன்றும் பேசாமல் அமர்ந்து இருந்த அவரைக் கண்டு, முதன் முறையாகப் பயம் வந்தது.

"என்னை மன்னிக்க மாட்டீங்களா?"

தனசேகர் கூர்ந்து மனைவியைப் பார்த்தார்.

"மன்னிக்கும்படியான காரியமா நீ பண்ணி இருக்கே? நீ செய்த ஒவ்வொரு செயலுக்கும் நான் ஏன் மறுத்துப் பேசாமல் இருந்தேன் தெரியுமா? அது உனக்குப் பயந்து அல்ல... உன் மேல் நான் வைத்து இருந்த காதலால்தான். ஆனால், நீ இப்படிப்பட்டவள் என்று எனக்குத் தெரியாமல் போய் விட்டதே.

"என் காதலைப் பொய்யான ஒருத்தி மேல் இத்தனை நாள் வைத்து இருந்தேன் என்று நினைக்கும் போது, என்னையே எனக்குப் பிடிக்கவில்லை. நான் யார் உன்னை மன்னிக்க? யாருக்குத் தவறு செய்தாயோ

அவர்கள்தான் உன்னை மன்னிக்க வேண்டும்," என்றவர், அதற்கு மேல் அங்கு நிற்காமல், அறையை விட்டு வெளியேறினார்.

கணவனின் பாராமுகம் கண்டு, தான் எத்தகைய அன்பை இழந்திருக்கிறோம் என்று அந்தக் கணம் மல்லிகாவிற்குப் புரிந்தது.

தன் தவறைத் தான் திருத்திக் கொள்ள முடியாதா என்று அவர் மனம் தவித்தது. இல்லை... காலம் முழுவதும் இதை எண்ணித் தவிக்க வேண்டுமோ என்று மற்றொரு எண்ணம் எழுந்தது. தான் செய்த தவறுக்கு இந்தத் தண்டனை தேவைதான் என்று அவர் உள் மனம் சுட்டிக் காட்டியது.

வீட்டை விட்டுக் கிளம்பும் முன், தந்தைக்கு வேண்டிய வருமானத்திற்குரிய வழிமுறைகளை ஏற்படுத்திக் கொடுத்து இருந்தான் ஸ்ரீரஞ்சன்.

மல்லிகாவிற்கும் பள்ளியின் பங்கை வாங்கியதற்கு ஈடாகக் கொடுக்க வேண்டிய பணத்தோடு, ஒரு பெரும் தொகையைச் சேர்த்து வங்கியில் போட்டு, அதையும் தனசேகரிடம் கொடுத்தான்.

எதற்கு என்று கேட்ட தந்தையிடம், "அம்மா யார் கிட்டேயும் எதற்கும் கை ஏந்தும் நிலைக்கு நான் விட மாட்டேன். மகனாக என் கடமையை நான் செய்வேன். ஆனால், என் மனக் காயம் ஆறும் வரை ஜனனியின் கணவனாக என்னை இருக்க விடுங்கள்."



யாரிடமும் திறக்காத தன் மனக் கதவைத் தந்தையிடம் திறந்தான். அவனின் பாசம் கண்டு அவருக்கும் கண் கலங்கியது.

ஸ்ரீரஞ்சன், சொன்னபடி தனிக்குடித்தனம் சென்றான். மன்னிப்புக் கேட்ட மல்லிகாவை அவன் மன்னிக்கத் தயாராக இல்லை.

ஜனனிக்கோ அவரைக் கண்டு பாவமாக இருந்தாலும், இந்த விஷயத்தில் கணவன் தன் பேச்சைக் கேட்கப் போவதில்லை என்று நன்கு தெரிந்து போனதால், ஒன்றும் பேச முடியாமல் கணவன் பின் சென்றாள்.

விதுவிற்கோ இதெல்லாம் புரியும் வயதில்லை. புது வீட்டிற்குப் போகப் போகிறோம் என்றதும் குஷியாகி விட்டாள்.

ஆனாலும் ஆஷிஷை விட்டுப் போக அவளுக்கு வருத்தமாக இருந்தது. சித்தியிடம், ஆஷிஷை விடுமுறை நாட்களில் தங்கள் வீட்டிற்குக் கூட்டிக் கொண்டு வர வேண்டும் என்ற நிபந்தனை போட்டு விட்டே சென்றாள்.

மிக எளிமையாக இரு வீட்டாரும் கலந்து கொள்ள, ஸ்ரீரஞ்சன், ஜனனி புது வீடு பால் காய்ச்சினர். எல்லோரையும் அழைக்கும் போது மாமியாரையும் அழைக்க வேண்டும் என்று ஜனனி கூறி விட்டாள்.

அவள் சொல்லி ஸ்ரீரஞ்சன் எதை மறுத்தான்? அதனால் இதற்கும் அவன் ஒன்றும் சொல்லவில்லை. அதற்காக அம்மாவிடம் பேசவும் இல்லை. யாரோ எவரோ என்பது போல் நடந்து கொண்டான்.

மல்லிகாவிற்கு மகன் பேசாதது வருத்தம் அளித் தாலும், மருமகள் தன்னை மன்னித்து அழைத்து இருந்தது ஆறுதல் அளித்தது.

மருமகள் தன்னை மன்னித்ததாலோ என்னவோ, இதுவரை பேசாமல் இருந்த கணவன் வேறு பேசியது அவருக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது.

விரைவில் எல்லாம் சரியாகிப் போகும் என்ற நம்பிக்கை அவருள் எழுந்தது.

அறைக்குள் தயங்கித் தயங்கி உள்ளே நுழைந் தாள் ஜனனி. வீடு நிறைய ஆட்கள் இருந்ததால், கணவனிடம் தனிமையில் பேசச் சந்தர்ப்பம் கிடைக்க வில்லை.

இன்றுதான் அந்தத் தனிமை கிட்டி உள்ளது. விது, சௌதாம்பிகையுடன் உறங்கச் சென்று விட்டாள். மகளின் பிரசவம் வரை அங்கே இருக்க அவர் சம்மதித்து இருந்தார்.

உள்ளே நுழைந்து கதவைத் தாழிட்டவள் மனதில், தான் அவனிடம் திவ்யா விஷயத்தைச் சொல்லாமல் மறைத்ததால், தன்னை ஏதும் சொல்வானோ என்று அச்சம் எழுந்தது.

ஆனாலும் அவன் எப்படி அதை அறிந்து கொண் டான் என்பதை அறியும் ஆவலும் அவளுக்கு ஏற்பட்டது.

கட்டிலில் அமர்ந்து இருந்த ஸ்ரீரஞ்சன், மனைவி யையேதான் பார்த்துக் கொண்டு இருந்தான். அவளின் முக பாவனை கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது.



“வாங்க மேடம்... வாங்க...”

கணவன் தன்னைக் கிண்டல் செய்கிறானோ என்று அவன் முகத்தைப் பார்த்தாள். ஆனால், அதில் இருந்த மகிழ்ச்சி கண்டு அவளுக்கு நிம்மதி ஏற்பட்டது.

அவன் அருகில் சென்று அமர்ந்தவள், “சாரி ஸ்ரீ... உங்களிடம் சொல்லாமல் இருந்தது தவறுதான்...”

இரு கைகளையும் கொண்டு காதைப் பிடித்துக் கொண்டு அவள் மன்னிப்புக் கேட்ட பாவனையில், ஸ்ரீரஞ்சனால் சிரிப்பை அடக்க முடியவில்லை. அவனின் சிரிப்பை ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டு இருந்தாள் அவன் மனைவி.

“ஸ்ரீ... உங்களுக்கு என் மேல் கோபம் இல்லையா?”

“உன் மேல் நான் எப்போது கோபப்பட்டு இருக்கிறேன்... இப்போது கோபப்பட...” என்று சொன் னவன், “நீ அன்று சொன்னது போல், வேறு யாரையாவது திருமணம் செய்து கொண்டு இருந்தால் கூட நிம்மதியான வாழ்வு வாழ்ந்து இருப்பாய். தேவையில்லாமல் நான் உன் வாழ்க்கையில் நுழைந்து, புயலைக் கிளப்பி விட்டு விட்டேன்,” என்றவனின் கண்கள் கலங்கின.

ஆறு வருடங்களுக்கு முன், அவனை அறியாமல், அவன் அன்பை உணராமல், தான் ஏதோ உளறியதை ஞாபகம் வைத்துப் பேசுபவனை என்ன சொல்வது என்று தெரியாமல் பார்த்துக் கொண்டு இருந்தாள். ஆனாலும் அவன் கண் கலங்குவதைக் காணச் சகிக்காமல்,

"ஸ்ரீ..." என்ற கூவலுடன் அவனை இழுத்துத் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டாள்.

கணவன் மன்னிப்புக் கேட்க, மனைவி ஆறுதல் சொல்ல... என்று நேரம்தான் சென்றது.

"போதும் ஸ்ரீ... போதும். மன்னிப்பு எல்லாம் வேண்டாம்..." என்று, ஜனனிதான் இந்தப் பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைத்தாள்.

"ஸ்ரீ... நானும் உங்களிடம் திவ்யாவைப் பற்றிச் சொல்லவில்லை. எப்படி உங்களுக்கு இதெல்லாம் தெரிய வந்தது?" கண்களில் ஆர்வம் பொங்கக் கேட்டவளை ஒரு கணம் கூர்ந்து பார்த்தவன், எழுந்து சென்று தன் மேஜை இழுப்பறையில் இருந்து அந்தப் புகைப்படத்தை எடுத்து வந்து அவளிடம் காட்டினான்.

"இந்தப் போட்டோ... இந்தப் போட்டோ..." திக்கித் திணறியவள் முகம் வெளிறிப் போனது.

"இது எப்படி உங்கள் கையில்...?"

"அன்று ஊருக்குச் செல்லும் போது, உன் உடைகளை எடுக்கும் போது கிடைத்தது."

புகைப்படம் அவன் கைக்குப் போனது எப்படி என்று அவளுக்குப் புரிந்து போனது.

அன்று முதன் முறையாகப் பார்த்த போது மனதில் எத்தனை மன வேதனைப் பட்டாளோ அந்த அளவுக்கு வேதனை இப்பொழுதும் அவள் முகத்தில் தெரிந்தது.



அதற்காக அவள் கணவனைச் சந்தேகப்பட்டாள் என்று இல்லை. நினைவால் கூட இன்னொருத்தியுடன் கணவனை நினைத்துப் பார்க்க முடியாதவளால், அந்தப் புகைப்படத்தைப் பார்க்க முடியாமல் வேதனையில் கண்களை மூடிக் கொண்டாள்.

ஸ்ரீரஞ்சன் அவள் அருகில் வந்து, அவளை அணைத்து ஆறுதல் படுத்தியவன், "மனதில் உள்ள வேதனை எல்லாவற்றையும் கொட்டி விடு, குட்டிம்மா. என்ன என்ன வேதனைப் படுத்தினார்கள்? என்ன வார்த்தை சொல்லி உன்னைக் காயப்படுத்தினார்கள்? சொல்லு குட்டிம்மா... எல்லாவற்றையும் சொல்லி அழுதுவிடு."

அவள் தலையை ஆறுதலாகக் கோதிக் கொடுத்தவன், அவள் தலை மேல் தாடையை வைத்து அமைதியாக இருந்தான், ஜனனியின் வார்த்தைக்காக.

மல்லிகா, திவ்யா இருவரும் நடந்து கொண்ட முறை எல்லாம் சொல்லியவள், நிமிர்ந்து கணவனின் முகத்தைப் பார்த்தாள். எல்லாவற்றையும் கேட்டவன் முகம், பாறையாக இறுகி இருந்தது.

"என்னிடம் ஏன் சொல்லவில்லை, குட்டிம்மா?" என்றவனின் குரலில் இருந்தது ஆதங்கமோ?

"எப்படிச் சொல்வேன் ஸ்ரீ? என்னால் உங்களைச் சந்தேகப்படக் கூட முடியாது. திவ்யா அத்தனை ஆதாரங்கள் காட்டியும், என்னால் உங்களைச் சந்தேகப்பட

முடியவில்லை. எனக்கு உங்கள் மேல் வருத்தம்தான் ஏற்பட்டதே ஒழிய, சந்தேகம் ஏற்படவில்லை.

"திவ்யாவின் மன நிலை தெரியாமல் நீங்கள் அவளுடன் பழகுவது கண்டு, என் மனதில் வேதனைதான் எழுந்ததே தவிர, சந்தேகம் இல்லை. இதை நீங்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும் ஸ்ரீ.

"என் மனதில் சந்தேகம் எழுந்து இருந்தால், உங்களிடம் நான் சண்டை போட்டு இருப்பேன். ஆனால், என் வருத்தத்தை நான் எப்படி உங்களிடம் காண்பிப் பேன்? என்னால் உங்களுக்கு இயன்றவரை சந்தோ ஷத்தை மட்டுமே கொடுக்க வேண்டும் என்று நினைப் பவள், எப்படி உங்களை வருத்தப்படும்படி நடந்து கொள்வேன்?

"இதில் எப்படி உங்களைக் குற்றவாளியாக நிறுத்திக் கேள்வி கேட்க முடியும்? என்னைப் பொறுத்தவரை நீங்கள் நல்லவர்."

"நான் வருத்தப்படக் கூடாதுன்னு இவ்வளவு சொல்றவ, நீ என்னை விட்டுப் போனால் நான் எவ்வளவு வருத்தப்படுவேன்... தவிப்பேன்னு உனக்குத் தெரியாதா என்ன? என்னை விட்டுப் பிரிந்து இருக்க வேண்டும்னு எப்படி நீ முடிவு பண்ணனே?"

"அது... வந்து... வந்து..."

ஜனனி இழுக்கையிலேயே விஷயம் பெரியது என்று ஸ்ரீரஞ்சனுக்குப் புரிந்து போனது.



"இன்னும் என்னென்ன என்னிடம் இருந்து மறைக்கிறாய்? உண்மையைச் சொல்லு..." அவனின் குரல் கொஞ்சம் உயர்ந்துதான் இருந்தது.

"மறைக்கணும்னு இல்லை ஸ்ரீ..." என்றவள், மல்லிகா, ஜனனியை நடத்தை கெட்டவள் என்று பட்டம் கட்டி, வீட்டை விட்டு அனுப்பி விடுவேன்னு சொன்னதைக் கணவனிடம் சொல்லியவள் முகம் வேதனையில் சுருங் கியது.

"நான் என்ன வேணும்னாலும் தாங்கிக் கொள்வேன் ஸ்ரீ... உங்க அம்மா சொல்லி, நீங்க என்னை ஏதாவது சொல்லி விட்டால்... அவ்வளவுதான்... அந்தக் கணம் நான் செத்து விடுவேன் ஸ்ரீ..." என்று கதறியவள், அதற்கு மேல் தாள முடியாதவளாய் அவன் மார்பில் முகம் புதைத்து அழுதாள்.

அவளின் அழுகையை உணர்ந்து, அவனின் அணைப்பும் இறுகியது.

"எத்தனை சாட்சிகள் கொண்டு நிருபித்தாலும் என் குட்டிம்மா சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவள். என்னைப் பெற்ற தாயாக இருந்தாலும் - ஏன் அந்தக் கடவுள் வந்து சொன்னாலும், என் குட்டிம்மா பற்றி எனக்குத் தெரியாதா என்ன? உன்னைச் சந்தேகப்பட்டால், நான் என்னையே சந்தேகப்படுவது போல... என்னைக் கூடச் சந்தேகப் படுவேன். ஆனால், உன்னை... ம்ஹூம்... ஒரு போதும் சந்தேகப்பட மாட்டேன்."

கணவனின் வார்த்தையில், அவன் மார்பில் புதைத்து இருந்த முகத்தை நிமிர்த்தி, அவனை இமை கொட்டாமல் பார்த்தாள்.

"ஸ்ரீ... நீங்க என் மேல் வெச்சு இருக்கிற காதல், என்னைப் பிரமிக்க வைக்கிறது. நான் அந்த அளவு உங்கள் மேல் காதல் வைக்க வில்லையோன்னு எனக்குத் தோணுது."

தான் அவனின் இத்தகைய அன்பிற்குத் தகுதி யானவளா என்ற எண்ணம் தோன்ற அவனைப் பார்த்த வளின் மனது, அவனுக்குமே புரிந்துதான் இருந்தது.

கண்களில் எல்லையற்ற காதல் தெரிய, அதற்கு நேர் மாறாக அவள் கண்கள் கண்ணீரைச் சொரிய, அசையாமல் இருந்தவளின் காதில் குனிந்து, "ஹேய்... என்ன, கண்ணுல டேம் வெச்சு இருக்கியா? எப்ப பாரு தண்ணியாக் கொட்டுது..." கிண்டலடித்தான்.

"ச்சு... போங்க ஸ்ரீ..."

சிணுங்கிய போதும், அவள் முகத்தில் புன்னகை தோன்றியது. தன் மனதை மாற்றவே அவன் பேச்சை மாற்றுகிறான் என்று அவளுக்கா புரியாது?

"ஆனால், அம்மா இந்த மாதிரிப் பேசி இருக்காங் கன்னு நினைக்கும் போது... ச்சே... வெறுப்பா இருக்கு."

"வேண்டாம் ஸ்ரீ. அப்படி எல்லாம் சொல்லாதீங்க. நீங்க இப்படிச் சொல்லுவீங்கன்னுதான் நான் உங்க கிட்டே சொல்லாம மறைச்சேன். என்னதான் இருந்தாலும் அவங்க உங்களைப் பெத்தவங்க..."



"ஆமாம், ஆமாம்... பெரிசாப் பெத்துட்டாங்க..." என்றவனின் குரலில் வெறுப்பு மண்டிக் கிடந்தது.

"பெத்தவங்களா இல்லை என்றாலும், அவங்க நம்மை விட வயதில் பெரியவங்க. அந்த மரியாதையை நாம் கொடுக்க வேண்டாமா?"

"வயதுக்கு ஏத்த மாதிரிச் செய்கை இருக்கணும். அது இல்லாதவங்களுக்கு எப்படி மரியாதை கொடுப்பது?"

"ஸ்ரீ... ப்ளீஸ்... எனக்காக..."

"அதெப்படி குட்டிம்மா... கெடுதல் செஞ்சவங் களையும் உன்னால் மன்னிக்க முடியுது."

"மன்னிப்போம்... மறப்போம். இதை ஃபாலோ பண்ணிப் பாருங்க."

கண் சிமிட்டிச் சிரித்தவளைக் கண்டு அவனுக்குமே சிரிப்பு வந்தது.

"எனக்கு உன் அளவு பரந்த மனப்பான்மை கிடையாது. என் அம்மா, திவ்யா மேல் எனக்கு ஏற்பட்ட வெறுப்பு, நெஞ்சில் அப்படியே இருக்கு. ஒரு வேளை அது மாறும் போது, நீ சொன்ன மாதிரி மன்னிக்க முயற்சிக்கிறேன்."

இந்த அளவிற்குக் கணவன் சொன்னதே போதும் என்று எண்ணியவள், அவன் மார்பில் மீண்டும் சாய்ந் தாள்.

"ஹேய்... என்ன, திரும்பவும் இப்படி வந்து சாய்ந் தால், மனுஷன் என்ன பண்ணுவான். நான் எத்தனை

கஷ்டப்பட்டு மனசைக் கண்ட்ரோல் பண்ணிக்கிட்டு உட்கார்ந்து இருக்கேன் தெரியுமா?”

“இன்னும் என்ன பேச இருக்கு...?” என்று சிணுங்கியவளின் கண்ணுக்குள் கண் வைத்துப் பார்த்தவன்,

“அந்த போட்டோ, எஸ்.எம்.எஸ். பத்தி எல்லாம் தெரிய வேண்டாமா?”

“ம்ஹும்... அதைப் பத்தி எனக்கு ஒண்ணும் தெரிய வேண்டாம். என் ஸ்ரீதான் என் கூட இருக்காங்களே... தேவை இல்லாமல் அதெல்லாம் எதுக்கு...?”

“நீ அப்படிச் சொன்னாலும், அதைப் பத்தித் தெளிவாக்க வேண்டியது என் கடமை...” என்றவன், அந்தப் புகைப்படத்தைத் தன் கையில் எடுத்தான். கணவன், சொன்னதைச் செய்யாமல் விட மாட்டான் என்பது அவளுக்குமே தெரியுமாதலால், அவளும் அவன் விளக்கம் கேட்கத் தயாரானாள்.

“இந்த போட்டோ எப்போ எடுத்தது தெரியுமா? நான், விது, அம்மா, மதி, திவ்யா எல்லோரும் ஷாப்பிங் போன போது எடுத்தது. நான் உன்னையும் கூப்பிட்டேன். நீ வரவில்லை என்று சொல்லி விட்டாய்... ஞாபகம் இருக்கா?” என்றவன், அன்று சென்ற நாளை அவளுக்கு ஞாபகப் படுத்தினான்.

அவளுக்கும் ஞாபகம் வந்தது. அவளுக்கு எப்பொழுதுமே திவ்யாவுடன் வெளியில் செல்லப் பிடிக்காததால், அன்றும் வரவில்லை என்று சொல்லி விட்டாள்.



“அன்று பக்கத்து மேஜையில் அமர்ந்து இருந்த குழந்தை ஒன்று அழகாக இருந்தது. அதை முத்தமிட்டுக் கொஞ்சிக் கொண்டிருந்தேன். நம்ம விதுவைப் பத்தித்தான் உனக்குத் தெரியுமே...”

மகளின் ஞாபகத்தில் அவள் முகத்தில் புன்னகை பூத்தது. விதுவின் இந்தக் குணம் அவளும் அறிந்ததே. ஆகாஷ், ஆஷிடம் விது எவ்வளவுதான் பிரியம் வைத்து இருந்தாலும் ஸ்ரீயோ, ஜனனியோ அவர்களைத் தூக்கிக் கொஞ்சி விட்டால், தன்னையும் அதே மாதிரிக் கொஞ்சச் சொல்லிப் படுத்தி எடுத்து விடுவாள்.

மனைவியின் புன்னகை பார்த்து, மகள் நினைவில் ஸ்ரீரஞ்சன் முகமும் புன்னகையில் மலர்ந்தது. அவன், தான் விட்ட இடத்தில் இருந்து பேச்சைத் தொடர்ந்தான்.

“நான் அந்தக் குழந்தையைக் கொஞ்சியதும், ‘அப்பா... எனக்கும் முத்தம் கொடுங்க...’ என்று ஒரே அடம். நான் சிரித்துக் கொண்டே விதுவின் கன்னம் நோக்கிக் குனிகையில், கண் சிமிட்டும் நேரத்தில் திவ்யா எங்கள் இருவருக்கும் இடையில் வந்து விட்டாள்.

நான் பதறிப் போய் விட்டேன். இருந்தாலும் சமாளித்துக் கொண்டு, அவளைத் திட்டினேன்.

“ஆனால், அவள் தட்டில் இருந்த உணவை எடுக்கத்தான் இடையில் புகுந்ததாகக் கூறவும், என்னாலும் ஒன்றும் சொல்ல இயலவில்லை. ஆனால், இதற்குப் பின் இவ்வளவு பெரிய சதி இருக்கும்னு நான் நினைக்கவே இல்லை. இந்த போட்டோ அம்மா இல்லை... மதிதான்

எடுத்து இருக்கணும். என்ன ஒரு கெட்ட எண்ணத்துடன் இதை எடுத்து இருக்காங்க பாரு..."

அவன் முகம் அருவருப்பில் சுருங்கியது. ஜனனியோ, இப்படியும் கூடச் செய்வார்களா? இதை வைத்துத் தன்னை எப்படி எல்லாம் அந்தத் திவ்யா நோக அடித்தாள் என்று எண்ணியவள், பிரமை பிடித்தது போல் அமர்ந்து இருந்தாள்.

"குட்டிம்மா... நீ என்னை நம்பவில்லையா? நம் விதுவிடம் கூடக் கேட்டுப் பார்..." அவளின் அசைவற்ற தன்மை கண்டு, ஸ்ரீரஞ்சன் தவிப்புடன் கேட்டான்.

அவனின் தவிப்பைக் கண்டு, அவன் வாய் மீது தன் கை வைத்து அவன் பேசுவதைத் தடை செய்தவள்,

"உங்களை நான் நம்பாமலா ஸ்ரீ... இதை எல்லாமா சிறு குழந்தையிடம் கேட்பது...? அந்த அளவுக்கு நம்பிக்கை இல்லாமல் இல்லை. இப்படிச் செய்வார்களா என்று ஒரு கணம் யோசித்தேன்."

"இதுக்கே இப்படிச் சொன்னா எப்படி? இன்னமும் இருக்கே..." என்றவன், தன் மடிக் கணினியை உயிர்ப்பித்து, அந்தக் குறிப்பிட்ட சமூக வலைத் தளத்துக்குள் நுழைந்தான். அவனும் திவ்யாவும் பேசிக் கொண்டதை அவள் முன் காட்டிப் படிக்கச் சொன்னான்.

"ரஞ்சி அத்தான்... உங்கள் தேவதை, நீங்கள் இல்லாமல் ரொம்பவும் தவித்துப் போய் விட்டாள்... உங்களுக்குத் தெரியுமா?"

"என் தேவதையைப் பற்றி எனக்குத் தெரியாதா?"



"இருந்தாலும் தேவதை போட்டோவை அனுப்புறேன்... பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள்."

அதன் கீழ் ஏதோ தரவிறக்கச் சுட்டி ஒன்று இணைக்கப்பட்டு இருந்தது.

"ஸ்ரீ... அது என்ன?" என்று திவ்யா அனுப்பி இருந்த அந்த இணைப்புச் சுட்டியைக் காட்டிக் கேட்டாள் ஜனனி.

"உன் போட்டோதான்..." என்றவன், அதைத் திறந்து காண்பித்தான்.

மாலையில் அவள் தோட்டத்தில் அமர்ந்து இருந்த போது எடுத்த புகைப்படம் அது. தனக்குத் தெரியாமல் திவ்யா தன்னைப் படம் எடுத்து அனுப்பி இருக்கிறாள். தன்னைத்தான் அவளுக்குப் பிடிக்காதே... ஏன் அவ்வாறு செய்தாள்? அதைக் கணவனிடமும் கேட்டாள்.

"அப்பத்தானே என்னிடம் பேச முடியும். நான் சாட்டில் அவளிடம் அதிகம் பேச மாட்டேன். அதைத் தெரிந்து கொண்டோ என்னவோதான் உன் போட்டோவைக் காண்பித்துப் பேச்சை இழுத்து இருப்பாள் என்று தோன்றுகிறது."

"ம்... ம்..."

"இன்னும் இருக்கு. படி..." என்றான் மடிக் கணினியைப் பார்த்து. ஜனனி, தான் விட்ட இடத்தில் இருந்து படிக்க ஆரம்பித்தாள்.

"ஐ லவ் குட்டிம்மா..."

ஸ்ரீரஞ்சன் அனுப்பி இருந்த வாசகம்தான் அடுத்து வந்தது. ஆனால், அன்று இருந்த பெரிய பாதிப்பு, இன்று அவளிடத்தில் இல்லை.

இந்தக் குட்டிம்மா என்ற சொல் தனக்காகச் சொல்லப்பட்டதே என்று புரிந்து கொண்டவள், மேலே படிக்க ஆரம்பித்தாள். அவள் எண்ணத்தை மெய்ப்பிக்கும் வகையில்தான் அந்த உரையாடலும் அமைந்து இருந்தது.

"அத்தான்... நான்தானே உங்கள் குட்டிம்மா...?"

"ஹேய்... என் குட்டிம்மா ஒரே ஒருத்திதான். அது என் மனைவி ஜனனி மட்டும்தான்."

"வெவ்வெவ்வே..."

எல்லாவற்றையும் படித்து முடித்தவள் மனதில் காதல், ஆழிப் பேரலையாய்ப் பொங்கி எழுந்தது. அன்று, தான் திவ்யா சொன்னதை மட்டும் படித்தது எவ்வளவு பெரிய பிசகு என்று நினைத்துக் கொண்டாள்.

அடுத்தவர் பேசியதை எட்டிப் பார்க்கும் அளவுக்கு அவளுக்குச் சின்னப் புத்தி இல்லை என்பதால், அதை எதையும் கவனிக்கவில்லை.

அன்று அப்படிக் கவனித்துப் பார்க்கும் மன நிலையில் அவளும்தான் இல்லையே. ஒரு வேளை கவனித்துப் பார்த்து இருக்க வேண்டுமோ?

"இது மட்டுமா அவள் சொன்னாள். அந்தச் சேலை... அப்புறம் நான் ரொம்பக் குண்டா இருக்கேனாம். உங்க அழகுக்கு முன் நான் நிற்கக் கூடத் தகுதி இல்லை என்று



வேறு சொன்னாள். அவ்வளவுதான்... சும்மாவே உங்க வசதிக்கு நான் தகுதி இல்லையோன்னு நினைத்துக் கொண்டு இருந்த நான், அதைக் கேட்டதும் அப்படியே மனசுக்குள் நொந்து போயிட்டேன்."

"எந்தச் சேலை?"

"அதான்... இந்தப் பர்த்டேக்கு நீங்க வாங்கித் தந்தீங்களே..." ஜனனி, ஸ்ரீக்கு ஞாபகப்படுத்தினாள்.

ஸ்ரீரஞ்சனால் அதை மறக்க முடியுமா என்ன? தனிப்பட்ட முறையில் நெசவு செய்யக் கொடுத்து வாங்கிய புடவை அல்லவா அது.

"ஹேய்... அது ஸ்பெஷலா செஞ்சு எடுத்த சாரி. அது எப்படி திவ்யா கிட்டே..." என்று யோசித்தவன், "ஹாங்... ஞாபகம் வந்திடுச்சு. அன்னைக்கு நீ கட்டி இருந்ததைப் பார்த்து, என்னிடம் எந்தக் கடையில் வாங்கியது என்று கேட்டுக் கொண்டு இருந்தாள். அவள் இவ்வளவு விஷத் துடன் கேட்பாள் என்று நான் நினைக்கவே இல்லை."

"சரி... சரி... விடுங்க. அவளுக்குத் தெரிந்தது அவ்வளவுதான்!" ஜனனி அவனைச் சமாதானப் படுத்தினாள்.

"எப்படி எல்லாம் பேசிக் குழப்பி இருக்காள் பாரு. அதுவும் உன்னைப் போய்க் குண்டா இருக்கேன்னு வேற சொல்லி இருக்கா. உன் அழகைப் பத்தி அவளுக்கு என்ன தெரியும்? என் மனைவியைப் பார்த்து அவளுக்குப் பொறாமை.

"நானே உன் அழகுக்கு எந்த அளவு ஈடாவேனோ என்று கலக்கத்தில் இருக்கேன். இதில் இவள் வேறு... நீ எனக்குக் கிடைப்பதற்கரிய பொக்கிஷம். நான் போன பிறவியில் செய்த தவத்தின் விளைவாக வந்த வரம் நீ. என் வாழ்க்கையில் கிடைத்த சந்தோஷம் நீ. என் உயிர் நீ..." என்றவனின் வார்த்தையில் மட்டும் காதல் இல்லை... கண்களிலும் காதல் பொங்கி வழிந்தது.

எத்தகைய அன்பு உடையவன் தன் கணவன். அதற்கு மேல் அவளால் தாங்க முடியவில்லை. ஸ்ரீரஞ்சனை அருகில் இழுத்து, ஆவேசமாக முத்த மழை பொழிந்தாள்.

அவளின் திடீர் செய்கையைச் சற்றும் எதிர்பார்க்காத ஸ்ரீரஞ்சன் திக்குமுக்காடித்தான் போனான்.

"சாரி ஸ்ரீ... நானாக எதை எதையோ நினைத்துக் கொண்டு உங்களை விட்டுப் போய் விட்டேன். சாரி ஸ்ரீ..." அவளின் வாய் முணுமுணுத்தது.

"ஹேய் குட்டிம்மா... சாரி எல்லாம் வேண்டாமே. இந்த விஷயத்தால் ஒரு நன்மை கிடைத்து இருக்கிறது."

என்ன என்பது போல் பார்த்தாள் ஜனனி.

"நீ என்னை விட்டுப் போனதால்தானே உன் கவிதை எழுதும் திறன் எனக்குத் தெரிந்தது. இப்போது நிர்வாகத் திறமையும் தெரிய வந்து இருக்கிறது. உன் திறமையை வெளிக் கொண்டு வந்தது இந்தப் பிரிவுதான்."

மறந்தும் அவளின் மனப் பாதிப்பைப் பற்றி அவன் பேசவில்லை. அதில் அவள் மனம் இன்னமும் நெகிழ்ந்து போனது.



"ஸ்ரீ... இப்போது நான் ஒரு கவிதை சொல்லவா?" என்றவளை ஆர்வத்துடன் பார்த்தான்.

"ம்... சொல்லு... சொல்லு..." அவளைக் கவிதை சொல்லச் சொல்லி ஊக்குவித்தான்.

"நீ வார்த்தையில் சொன்னால்தான்
உன் காதல் எனக்குப் புரியுமா?
என் கோபக் கண்களைச் சந்திக்கும்
உன் காதல் பார்வை...
என் முன் நெற்றியில் மென்மையாய்
உன் இதழ் கொடுக்கும் முத்தம்...
என் மனம் திக்குத் தெரியாத
குழந்தை போல் தவிக்கும் போது
உன் கைகள் கொடுக்கும் ஆதரவான அணைப்பு...
என் மனதை நீ மட்டுமே அறிவாய்
என்பதை உணர்த்தும்
என் கை மீது உன் கை வைத்து அழுத்தி
உன் காதல், அன்பைச் சொல்லும் அந்த ஸ்பரிசம்...
சொல்லாமல் சொல்கிறதே
என் மீதான உன் காதலை!
என்ன தவம் செய்தேன் என்னவனே...
என் காதலை எங்ஙனம் சொல்வேன்
என் தாயுமானவனே...
என் தாய்க்கும் மேலானவனே!"

இதை விடச் சிறப்பாக ஒரு பெண்ணால் தன் காதலைச் சொல்ல முடியுமோ! கணவனை, காதலனை,

தாயைக் காட்டிலும் மேலானவன் என்கிறாள் என்றால், அவன் மீது அவள் எத்தகைய காதலை வைத்து இருக்க வேண்டும்?

"குட்டிம்மா... உன் காதல் எவ்வளவு மேலானது!" உணர்ச்சி வசப்பட்ட அவனால் பேசவே முடியவில்லை.

அவன் கண்களில் இருந்த காதலை ஜனனி கண் டாள். அவனின் மனத் தவிப்பை அவள் உணர்ந்தாள்.

"ஸ்ரீ... இந்தக் காதலை நான் உணர வேண்டும் என்றால், எத்தகைய காதலை நீங்கள் என்னிடம் காட்டி இருக்க வேண்டும். அப்படிப் பார்த்தால் உங்கள் காதல்தான் மேலானது."

தன்னைச் சிறப்பித்த மனைவியைச் சிறப்பிக்க நினைத்தான், கணவனாகிய அந்தக் காதலன்.

"நம் இரண்டு பேரின் காதலும் மேலானதுதான்..." என்று அவள் முகம் நோக்கிக் குனிந்தான். அவனின் காதலுக்கு அவளும் கட்டுண்டாள்.

அவர்கள் இருவரும் ஒருவர் மீது ஒருவர் கொண்ட அன்பு வீண் போகவில்லை. அந்தக் காதல், அழிய இருந்த அவர்கள் வாழ்க்கையை மீட்டுக் கொடுத்தது.

ஒருவர் மீது நாம் வைக்கும் மாசிலா நேசம் என்றுமே தோற்பதில்லை. ஸ்ரீரஞ்சனின் ஜனனி மீதான மாசிலா நேசம், அவளையே மறு பிறவி எடுக்க வைத்து விட்டது.


ஸ்ரீகலாவின்
மாசிலா
நேசம்...